# திரும்பிப் பார்க்கிறேன்
# திகைத்து நிற்கிறேன்

அ. மு. பரமசிவானந்தம்

### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( **CC**0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (**CC**0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# திரும்பிப் பார்க்கிறேன்
# திகைத்து நிற்கிறேன்

—வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி

**பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்**
("தமிழ்க்கலை இல்லம்" சென்னை - 30)
*முன்னாள் துணை முதல்வர் - பச்சையப்பர் கல்லூரி*
*நிறுவனர் - வள்ளியம்மாள் கல்வி அறம்*
*சென்னை - 102*


**வள்ளியம்மாள் கல்வி அறம்**
*எப் - 40, முதல் பெருந் தெரு,*
*அண்ணா நகர் கிழக்கு,*
*சென்னை - 102.*

முதற் பதிப்பு - நவம்பர் 1985

—உரிமைப் பதிப்பு

விலை ரூ. 15-00 பதினைந்து

மாருதி பிரஸ்
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை-600 014



அன்னை வள்ளியம்மாள்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | — | 17 |
| 2. | பெற்றாள்! வளர்த்தாள்! பெயரிட்டாள்! | — | 30 |
| 3. | தோற்றமும் வளர்ச்சியும் | — | 69 |
| 4. | பிள்ளைகளும் நாமும் | — | 90 |
| 5. | ஆசிரியர்களும் நாமும் | — | 106 |
| 6. | பெற்றோரும் நாமும் | — | 120 |
| 7. | பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் நாமும் | — | 137 |
| 8. | வீட்டு வசதி வாரியமும் நாமும் | — | 148 |
| 9. | முடிவுரையன்று முற்றாத் தொடர்ச்சி | — | 161 |
| 10. | பின் இணைப்பு | — | 162 |

# முன்னுரை

என் வாழ்க்கை வரலாறு முறையாக எழுதப் பெற வில்லையாயினும், 'இளமையின் நினைவுகள்' என்ற நூலில் என் பள்ளிப் படிப்பு முடிந்த வரையிலும் (17 வயது) 'காஞ்சி வாழ்க்கை' என்ற நூலில் நான் காஞ்சியில் ஆசிரியனாக இருந்த வரையிலும் (30 வயது) ஓரளவு என் வாழ்க்கையினைக் குறித்துள்ளேன். 1944ல் சென்னை வந்த பிறகு - கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளின் வாழ்க்கை யினைப் பற்றிய குறிப்பு எத்தனையோ உள்ளன. எனினும் அவற்றைத் தொகுத்து நூலாக்கவில்லை. ஆனால் என் அன்னையின் பெயரால் அறம் நிறுவிப் பள்ளிகளைத் தொடங்கிக் கடந்த பதினெட்டு ஆண்டுகளில் நடந்த சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே இந்த நூலில் குறித்துள்ளேன். இங்கேயும் அனைத்தையும் குறித்து விட்டேன் என்று கூற முடியாது; ஒரு சிலவே இடம் பெற்றுள்ளன.

வள்ளியம்மாள் கல்வி அறம் தொடங்கிப் பதினெட்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த பதினெட்டு, வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஓர் எண் என்பதை நூலினுள் (பக் - 21, 22) குறித்துள்ளேன். குழவிப் பருவம் கடந்து தெளிந்த வயதடையும் பருவமும் இதுதான். எனவேதான் இந்த நூலின் பெரும் பகுதியினை நான்கு ஆண்டுகளுக்கு முன்னமே எழுதினேன் ஆயினும் இப்போது வெளியிடுகின்றேன்.

நூலில் சில பகுதிகள் ஒரிரு முறை திரும்பத் திரும்ப வந்திருக்கும். அது கூறியது கூறல் என்ற குற்றத்தின் பாற் படும் என்பதறிவேன். எனினும் அந்தந்த இடத்திற்கு அவை எழுதப் பெறாவிடின் தொடர்பும் பொருத்தமும் தவறும் என்ற காரணத்தாலேயே அவற்றை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் திரும்பத் திரும்ப எழுதியுள்ளேன்.

இந்நூலில் சிலவிடங்களில் நலம் செய்தாரைப் போற்றி வாழ்த்தியும் சிலவிடங்களில் அவலம் செய்தாரைச் சுட்டியும்

உள்ளேன். அவலம் செய்தாரைக் குறை கூற வேண்டும் என்று கருதினேன் அல்லேன். நடைபெற்றவைகளை அப்படியே குறிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே சுட்டியுள்ளேன். ஒரு வேளை அவர்கள் அவ்வாறு மாறுபட்டு நின்றில்லையானால் நான் 'தருக்கு' மிக்கவனாகி நிலை கெட்டிருப்பேனோ எனவும் அஞ்சுகிறேன். எனவே அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டவனாவேன்.

என் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியே இது எனச் சுட்டினேன். நான் சென்னைக்கு 1944ல் வந்து பச்சையப்பரில் பணி ஏற்றேன். வள்ளியம்மாள் கல்வி அறம் 1968ல் தொடங்கப் பெற்றது. எனவே இடையில் நின்ற கால் நூற்றாண்டில் அமைந்த என் வாழ்க்கை வரலாறு இடையில் தடைப்பட்டு நிற்கின்றது. இந்நூலிலேயே ஆங்காங்கே அந்த இடைவெளியில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளேனாயினும் அவை முற்றிய வரலாறு ஆகா. அக்காலம் பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தொகுத்து வைத்துள்ளேன். வாய்ப்பும் வசதியும் ஒய்வும் உழைக்கும் திறனும் ஒருங்கே அமையின் விரைவில் அந்த இடைவெளியினை நிரப்பும் வகையில் நூலை எழுதி முடிப்பேன். நல்லவர்தம் வாழ்த்து முற்றும் உடன் அமையும் எனும் துணிபுடையேன்.

நான் வெறும் தமிழாசிரியனாக இருந்ததோடு நின்றிருப்பின், ஓய்வு பெற்றபின் வேறு பதவிகள் நாடியோ வேறு வகையில் வல்லாரை நாடி வளம் பெறவோ நினைத்திருப்பேனாயின், இத்துணை பெரியவர்கள் தொடர்பும் பொது மக்கள் தொடர்பும் அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் எனக்குத் கிட்டியிருக்காது. 'தமிழாசிரியன் ஒருவன் இத்தகைய பள்ளியை நடத்துவதா?' என்று கேட்பார் ஒருபுறம் இருந்தபோதிலும், என் பணிக்குப் பலர் உடனிருந்து ஒல்லும் வகையில் செல்லும் வாயெல்லாம் உதவிய பெருந்தன்மையினை எண்ணி அவர்கள் அனைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வருங் காலத்தில் இன்னும் என்னென்னவோ செய்ய ஆசையும் ஆர்வமும் உண்டு. 'எண்பது கோடி நினைந்து எண்ணுவன' என்ற வாக்கியப்படி எண்ணிக் கொண்டே இருக்கின்றேன். எழுபத்து மூன்று வயதின் எல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நான், அந்த எண்ணங்களை யெல்லாம் செயலாக்க முடியுமா என்ற உள்ளுணர்வும் ஒரு பக்கம் உந்துகிறது. பெரியவர்கள் - நல்லவர்கள் உடன் துணையால் ஆவன காண முயல்வேன்.

இந்நூல் வெளி வரத் தூண்டிய அன்பர்கள், பெரியவர்கள், பள்ளியின் பெற்றோர்கள், மற்றவர்கள் அனைவருக்கும் என்ற நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வப் போது பள்ளி விழாக்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் எடுத்த புகைப்படங்களில் சில அட்டையிலும் சில உள்ளே எட்டு பக்கங்களிலும் இடம் பெற்றுள்ளன. அப்படியே அந்த நல்லவர்தம் பள்ளி பற்றிய கருத்துக்கள் சிலவும் கடைசியில் சேர்க்கையாகவுள்ளன. இவை எங்கள் பள்ளிப் பாதையின் மைல் கற்களாகும். என் அன்னையின் பெயரால் அமைந்த அறம் மேலும் சிறக்க வாழ்த்தியருளுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

குழந்தைகள் தினமாகிய நாட்டின் நல்ல தலைவர் நேரு அவர்கள் பிறந்த நன்னாளில் இந்த நூல் வெளிவருகின்றது. பள்ளிப் பிள்ளைகளையும் இளஞ் செல்வங்களையும் பாராட்டிப் போற்றும் அப் பெருமகனார் நாளில் இந்நூல் மக்கள் கையில் சேர்வது பொருத்தமாகும் என எண்ணுகிறேன்.

மீண்டும் அனைவருக்கும் என் வணக்கத்தையும் நன்றியினையும் தெரிவித்து அமைகின்றேன்.

வள்ளியம்மாள் கல்வி அறம் — பணிவுள்ள

சென்னை-102,
14. 11. 86.


**அ. மு. பரமசிவானந்தம்**


## திருவாசகம்


கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகைநீ! திகைப்பு நீ
தீமை நன்மை முழுதும் நீ
வேறோர் பரிசு இங்கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கின்
தேறும் வகை என் சிவலோகா!
திகைத்தால் தேற்ற வேண்டாவோ!

கோவே அருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆ! ஆ! என்னாவிடில் என்னை
அஞ்சேல் என்பார் ஆரோ தான்
சாவார் எல்லாம் என்னளவோ
தக்கவாறு அன்று என்னாவோ!
தேவே தில்லை நடமாட!
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே

—மணிவாசகர்








1. மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் பள்ளி விழாவில்
2. மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் பொங்கல் விழாவில்
3. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் பள்ளி விழாவில் உரையாற்றுகிறார்.



1. மாண்புமிகு தமிழகச் சட்ட அமைச்சர் திரு பொன்னையனும் அவர்தம் துணைவியாரும் ஆண்டு விழா நிகழ்ச்சியில்.
2. அமெரிக்கா பழநி பெரியசாமி அவர்கள் பள்ளியின் கணிப் பொறி (Computer) பகுதியினை பார்வையிட்டுப் பாரதி விழாவில் பாராட்டுகிறார்.
3. மாண்புமிகு உயர்நீதி மன்ற நடுவர் செங்கோட்டுவேலர்.



1. ரஷ்யத் தூதரகத்தைச் சார்ந்த திரு நிக்கோலாய் அவர்கள்
2. மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் பள்ளியின் விளையாட்டு விழாவில் பங்கேற்கிறார்.
3. மத்திய கல்விக் கழகத் தலைவர் திரு. குன்னன்கல் அவர்கள் புதிய வளாகத்தில் தென்னங்கன்றினை நடுகிறார்.





1. அருட்திரு குன்றக்குடி அடிகளாருக்கு முதல்வர் நிறுவனரின் நூல்களை அன்பு காணிக்கையாக அளிக்கிறார்.
2. குஜராத் முதன்மை நீதிபதி மாண்புமிகு கோகுலகிருஷ்ணன் அவர்கள் பள்ளி விழாவில் பங்கேற்றுப் பாராட்டுகிறார்.





1. பள்ளியில் வாரியாருடன் நிறுவனர்
2. திரு S. V. நரசிம்மன் (தயனா சுழல்மூடி நிறுவன உரிமையாளர்) பள்ளியின் குழந்தைகள் விழாவில் பரிசு வழங்குகிறார்.







1. பள்ளிப் பிள்ளைகள் அணிவகுப்பு
2 பள்ளிப் பிள்ளைகள் உடற்பயிற்சி வகுப்பு





1. மத்திய பள்ளியின் நான்கு மாடிக் கட்டடம்
2. சாரண மாணவர் உறுதிமொழி — திருமதி சரோசா பொன்னையன் அவர்கள் உறுதிமொழி ஏற்கின்றனர்





1 இலங்கை அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரையின் பள்ளி வருகை — நிறுவனர் முதல்வருடன்

2. மாண்புமிகு தமிழக அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்களுடன் பள்ளியின் சாரணர்

# திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன்

## 1. முன்னுரை

மதலைப் பருவத்தில் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவள் அன்னை. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றாள் ஔவை. ஆம்! பிறந்த குழந்தை முதல் முதல் அறிந்து கொள்வது பெற்ற தாயைத்தானே! அத் தாய் காட்டவே பிறகு தந்தை, உற்றார், மற்றார் அனைவரையும் மெல்லமெல்ல அறிந்து கொள்ள முடிகின்றது. தாயின்றிப் பிறப்பில்லை. எனவே தாயே ஒருவருக்கு - ஓர் உயிரின் பிறவிக்கு - முதலாவதாக அமைகின்றாள். அத்தாய் தன் குழவியைப் போற்றி வளர்த்துப் பொன்னே போல் பாதுகாத்து, வையத்து வாழவிடுகிறாள். அவ்வாறு வளர்க்கப் பெற்ற மகன் வளத்தால் சிறந்தால் - புகழுடைந்தால் - சான்றோனாகத் திகழ்ந்தால் அவனொடு மகிழ்ந்து உயர்ந்து, தானும் உயர்ந்த உள்ள நெறியில் நின்று பெருமைப்படுகிறாள். அன்றி, அந்த மகன் தவறி நிலை கெட்டால், தானும் உளத்தால் நைந்து வாடி, நலம் கெட்டு கூடுமாயின் விரைவில் உலகை விட்டுப் போகவே தன்னைத் தயார் செய்து கொள்ளுகின்றாள். அத்தகைய அன்னையை எண்ணிப் போற்றிப் பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடமையும் பொறுப்புமாகும். 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' என்ற உயர் நெறியில் வள்ளுவரால் போற்றப் பெறும் அந்த அன்னை, பிற அனைத்தினுக்கும் அனைவருக்கும் மேலாக வைத்து வாழ்த்தத் தக்கவளன்றோ!

என்னைப் பெற்ற தாய் வள்ளியம்மாள் எங்கோ கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். நாட்டுப்புறச் சூழலிலே

உழன்றவள். இளமையிலே திருமணம் செய்யப் பெற்றவள். என்னை - தன் ஒரு மகனைத் தன் பதினான்காம் வயதிலே - 1914லே பெற்றெடுத்தவள். ஆம்! இந்த நூற்றாண்டுடன் 1900ல் பிறந்தவள், என் ஒருவனையே பெற்றெடுத்தாள்; வேறு உடன் பிறந்தவர் எனக் கூறிக்கொள்ள ஒருவரும் பிறக்கவும் இல்லை; பிறந்து இறக்கவும் இல்லை. என் அன்னையோடு பிறந்த பெரிய அன்னை மீனாட்சி அம்மையாருக்கும் யாதொரு மகப்பேறும் இல்லை. என் பாட்டனார் மாணிக்க முதலியார் தன் உடைமை அனைத்தை யும் மூன்றாகப் பிரித்து ஒன்றை என் ஊரின் அம்பலவாணர் திருக்கோயிலுக்கும் பிற இரண்டு பகுதிகளை இரண்டு பெண் களுக்கும் தந்து மறைந்தனர். உடன் பிறந்தவர்கள் பல்வேறு சூழல்களுக்கிடையே தனித்தனியாகவே வாழ்ந்துவந்தனர். என் தந்தையாரோ என் இளம் வயதிலேயே மறைந்து விட்டார். பிறகு இரு அன்னையரும் இணைந்து வாழ்ந்த னர். அவர்களுடன் என் இளமைப் பருவத்தே, என்னைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்த்த என் பாட்டியார் (அம்மாவுக்கு அத்தை) காமாட்சி அம்மையாரை நான் மறக்க முடியாது. இவர்கள் யாவரும் என்னை வளர்த்த வகையினையும் என் பள்ளி இறுதி வகுப்பு வரையில் என்னைப் பாதுகாத்த சிறப்பினையும் என் 'இளமையின் நினைவுகள்' என்ற நூலில் விளக்கி எழுதியுள்ளேன்.

பள்ளியிறுதி வகுப்பிற்குப் பிறகு, தனியாகப் புலவர் வகுப்பில் பயின்று வெற்றி பெற்றுக் காஞ்சியில் (ஆந்திரசன் பள்ளியில்) ஆசிரியனாகப் பணியாற்றியபொழுது தான், என் வாழ்வைத் தம் வாழ்வாக எண்ணிய அன்னையர் இருவரும் ஒருவர் பின் ஒருவராக 1941-ல் மறைந்தனர். அவர்கள் வழி இருமணம் புரிந்து என்னுடன் என்றும் வாழ்ந்தவரும் விலகி நின்றவருமாகிய இரு மனைவியரும் இன்று உலகில் இல்லை. எனவே நான் இன்று என் முன்னோர், வாழ்க்கைத் துணை ஆகிய ஒரு பற்றுமற்றுத் தனியனாக வாழ்ந்து வருகிறேன், நான் எட்டு ஆண்டுகள் காஞ்சியில் வாழ்ந்த வகையினை

எல்லாம் 'காஞ்சி வாழ்க்கை' என்னும் நூலில் குறித்துள்ளேன்.

என்னைப் போற்றி வளர்த்த அன்னையின் சிறப்பினையெல்லாம் வெள்ளம் விடுதூது என்று நான் 1938-ல் எழுதிய என் சிற்றிலக்கியத்தில் தெளிவாகக் காட்டியுள்ளேன். ஐந்து பெரு குரவராகி நின்று - தாயாய் - தந்தையாய் - குருவாய் - வழிகாட்டியாய் - தெய்வமாய் நின்ற அன்னையின் பெயரை உலகில் எப்படியாயினும் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்திலே ஒரு கால் நூற்றாண்டு கழிந்தது.

சென்னைப் பச்சையப்பர் கல்லூரியில் முப்பதாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த நாட்களிலெல்லாம் என் அன்னையைப் பற்றிய எண்ணம் என் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டே இருந்தது. இடையில் ஓராண்டு என்னைத் தமிழக அரசாங்கத்தார் ஐதராபாத் உஸ்மானியப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை தலைவர் பதவி ஏற்றுப் பணி செய்ய ஆணையிட, அப்பணி வழியே தலை நின்று பச்சையப்பரை விட்டு ஓராண்டு பிரிந்து நின்றேன். 1967-ல் திரும்பி வந்தபொழுது, என் அன்னையைப் பற்றிய எண்ணம் மேலோங்கி நின்றது. ஐதராபாத்தில் கண்ட பல நிலையங்களும், அது போது அடிக்கடி தில்லி, ஆக்ரா, அலிகார், காசி முதலிய இடங்களுக்குச் சென்ற போது ஆங்காங்கே கண்ட அறச்சாலைகளும் கல்வி நிலையங்களும் என் எண்ணத்துக்கு உரமூட்டின. எனவே 1967-ல் எண்ணம் திண்ணிதாக உரம்பெற, 1968 ஜூன் திங்களில் வள்ளியம்மாள் கல்வி அறத்தை நிறுவத்துணிந்து - நிறுவி, சிறிய அளவிலே வீட்டிலேயே பள்ளியினைத் தொடங்கலானேன்.

இப்பள்ளித் தொடக்கத்துக்குக் காரணமாயமைந்த மற்றொருவர் - இன்று பள்ளியின் முதல்வராக உள்ளவரைப் பற்றியும் ஈண்டு குறிக்கக் கடமைப்பட்டுள்ளேன், தமிழ் 'எம். ஏ' தனித்த முறையில் பயிலுவதற்கெனவும், அப்பாடங்

களில் சில ஐயங்களைத் தெளிந்து கொள்வதற்கெனவும் எனை நாடி வந்த திருமதி. சண்பகம் அவர்கள் 'எம். ஏ' முடித்து ஆசிரியர் பயிற்சியினையும் (பி. இட்) அடுத்த ஆண்டு முடித்தார்கள். நான் அப்போது பச்சையப்பரில் பணிபுரிந்த காரணத்தாலும், என் மகன் மெய்கண்டான் மாணவராக இருந்தமையாலும் முழுப் பொறுப்பில் பள்ளியைப் பார்வையிட வேண்டிய நிலை உள்ளதாலும், தக்க ஒருவரை நாடிக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் அப்பொறுப்பைக் குறைந்த சம்பளத்தில் ஏற்றுக் கொள்ள வந்ததை குறிக்காமல் இருக்க முடியாது. அவர்தம் ஆசிரியர் பயிற்சி முடித்ததும் 1968-ல் இப்பள்ளியினைத் தொடங்க முடிவு செய்தேன்.

இடையில் நான் பெற்றெடுத்த மக்கள் மூவருக்கும் மண முதலிய வாழ்க்கை நெறிகளை ஒழுங்குபடுத்தி அவரவர் களுக்கு ஏற்ற வகையில் வருவாய் வரத்தக்க முறையில் தனித்தனி வீடுகளைக் கட்டித் தந்ததோடு, மகன் மெய்கண்டானிடம் முன்னோருடைய நிலன்களையும் பிற வற்றையும் ஒப்படைத்துவிட்டேன். எனவே என் மக்களுக்கு உரிய பணிகளை முறைப்படி செய்து முடித்த மகிழ்ச்சியில் என்னை மகனாய்ப் பெற்ற அன்னையின் பெயரில் ஆக்கப் பணிபுரிய முழுநேர ஊழியனாக என்னை உரிமையாக்கிக் கொள்ள முடிந்தது. எனவே கல்வி அறத்தை அமைத்தும் பள்ளிக்கென ஆட்சிக் குழுவினைப் பதிவு செய்தும் முறை யாகக் கல்விப் பணியினை ஆரம்பித்து வளர்க்கத் தொடங் கினேன். அன்று தொட்டு இன்று வரையில் அனைவரும் கண்டு மகிழ்ந்து வாழ்த்தும் வகையில் வள்ளியம்மாள் கல்விப் பணி வளர்ந்து கொண்டே வருகின்றது.

1968-ல் 5 பிள்ளைகளோடும் மூன்று ஆசிரியர்களோடும் தொடங்கப்பெற்ற இந்த அறத்துறையின் பள்ளிகளில்- இன்று மூன்று பள்ளிகளில் - இரண்டாயிரம் மாணவர்களுக்கு மேலாக, எண்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் கீழ், பயிலும் நிலையினைக் கண்டு நிற்கின்றேன். இடையிலே பல இலட்சக்

கணக்கில் மனைகள் வாங்கப்பெற்று - கட்டடங்கள் கட்டப் பெற்றுள்ளமையை அனைவரும் அறிவர். ஆக, இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் வள்ளியம்மாள் கல்வி அறம் வளர்ந்த நிலையினை எண்ணித் திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன்.

'பதினெட்டு' மக்கள் வாழ்வில் ஒரு திருப்பு மைய மாகும். இளமையோடு கலந்த பள்ளிப் படிப்பை முடித்து, மாணவப்பருவம் தாண்டி, முழுமனிதனாகும் (Major) வயது பதினெட்டு அன்றோ. அதற்கு முன் குழவிப் பருவத்திலும் இளமையிலும் எத்தனையோ இடர்கள் - இடர்ப்பாடுகள் - தொல்லைகள் - துயரங்கள் பலவற்றை ஏற்று, எதிர்த்துப் போரிட்டு வென்று, வளர்ச்சியுற்ற நிலைகள் ஒவ்வொருவர் வாழ்விலும் காணக்கூடியதே. இப்பள்ளியின் கடந்த பதினெட்டு ஆண்டுகளிலும் அத்தகைய இடர்கள் - இன்னல் கள் பல இடைப்பட்டன. எனினும் இறையருளாலும் அன்னையின் அருளாலும் நல்லவர் தம் உறுதுணையாலும் யாவும் நீங்க இன்று முழுமனித நிலையில் இக்கல்வி அறம் நிமிர்ந்து நிற்கிறது. (அவைபற்றியெல்லாம் நூலுள் குறித்துள்ளேன்.)

பதினெட்டு அறத்துக்கும் மறத்துக்கும் போராட்டக் காலமாகி, அறம் வெல்லும் எல்லையாகவும் அமைகின்றது. இளங்கோவடிகள் இந்த உண்மையினை நன்கு விளக்கு கிறார். சேரன் செங்குட்டுவன் கங்கைக் கரையில் கனக விசயரைப் பதினெட்டு நாழிகையில் வென்றான் எனக் கூற நினைத்தவர்,

'யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள'

பதினெட்டு நாழிகையில் வென்றான் என்கிறார். தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டுகளிலும் இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதங்களிலும் பாரத யுத்தம் பதினெட்டு நாட்களிலும் செங்குட்டுவன் கனகவிசயர்

யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிவுற்றது என்கிறார். ஆம்! இங்கே நானும் பதினெட்டு ஆண்டுகள் பல இன்னல்களுக்கு உட்பட்டு, உழன்று, உழைத்து, நல்லவர் உதவியொடு இன்று இதோ உங்கள் முன் இந்த நூலினைப் பத்தொன்பதாம் ஆண்டில் வைத்து வணங்குகிறேன்.

இந்த அறத்தினைத் தொடங்கும்போது இவ்வளவு பெரிதாக, இந்தக் குறைந்த காலத்தில் இது வளரும் என்று நான் நினைக்கவில்லை. ஏன்? - யாருமே நினைத்திருக்க மாட்டார்கள். நாங்கள் எப்போதும் தேர்வின் அடிப்படையிலே தக்க மாணவர்களை மட்டும் சேர்த்துக் கொள்ளும் கட்டுப்பாடு இல்லையானால் நாலாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இதில் சேர்ந்திருப்பார்கள். எனினும் தகுதி கருதி அனைத்தும் அமைக்கின்ற இந்த முறை எங்களுக்கு மட்டுமன்றி, உலகறிந்த அனைவருக்குமே ஏற்றதே என்பது நன்கு தெளிவாகின்றது. இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் எங்களைப் பலவகையில் கைதூக்கிவிட்டு, தேவையாயின் அறவுரைகூறி, வேண்டிய வகைகளிலெல்லாம் உதவி செய்த அறிஞர்கள் - ஆன்றோர்கள் - சான்றோர்கள் - ஆட்சிப் பொறுப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம், சில சான்றோர்கள் அந்தத் தொடக்க ஆண்டுகளிலேயே எங்கள் பள்ளியினைக் கண்டு வாழ்த்தி, தம் நற்கருத்துக்களை எழுத்திலும் பொறித்துள்ளனர். (அவற்றுள் சில பின் இணைப்பில் உள்ளன) அதே வேளையில் எங்கள் வளர்ச்சியினைக் கண்டு பொறுமை உளத்தோடு மறைமுகமாகவும் சில சமயங்களில் நேரிடையாகவும் தொல்லை கொடுக்கின்ற 'நல்லவர்களும்' இல்லாமல் இல்லை. அவர்களையும் நாங்கள் குறை கூறப் போவதில்லை. எண்ணிப் பார்ப்பின் 'சுடச்சுடரும் பொன் போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற் பவற்கு' என்ற வள்ளுவர் வாக்கின்படி, எங்கள் தொண்டு அவர்தம் இடையீட்டால் குறையாது ஓங்கித்தான் வருகிறது. எனவே 'சிவநேயம் தந்த சூலையே உனக்கு வணக்கம்' என்று

தன்னை வாழ்விக்க வழிகாட்டியாக அமைந்த நோய்க்கு வணக்கம் செலுத்திய திருநாவுக்கரசரைப் போன்று நாங்களும் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி, எங்கள் கடமை வழிச் செயலாற்றி முன்னேற்றங் கண்டு வருகிறோம்.

தொடக்க நாளில் நான் நின்று நின்று நினைத்தேன்—நெடிது நினைத்தேன். ஒரு பள்ளிக்கூடம் தொடங்குவதென்பது அவ்வளவு எளிதல்லவே! தொடங்கினாலும் அதற்கெனப் போதிய இடம், கட்டடம் முதலிய அமைக்கப் போதிய நிதி வசதி தேவையாயிற்றே எனச் சிந்தித்தேன், இந்தச் சிந்தனையில் உறங்காது கழிந்த இரவுகள் பல. பல நாட்கள் இறைவரிடத்தும், அன்னையிடத்தும் முறையிட்டேன். மறைந்த என் அன்னையார், இவ்வாறு செய்வதறியாது, 'திகைத்தால் தேற்ற வேண்டாவோ' என்று முறையீடு செய்து கொள்ளும் காலத்திலெல்லாம் கனவிடைத் தோன்றி வழி காட்டி, ஆற்றுப் படுத்துவார்கள். நான் சென்னைக்கு வந்ததும், பிற சிறப்புக்கள் பெற்றதும் மற்ற அனைத்தும் இறைவனும் அன்னையும் தந்தவைகளே எனக் கொள்ளுகின்றவன் நான். அப்படியே இன்னல்கள் வந்துற்ற போதும் அவைகளும் அவர்கள் தந்தவை எனவும் அடுத்து வரும் ஆக்கப்பணிக்கு இவை அடித்தளங்களாக அமைகின்றவையே எனவும் கொள்ளுகின்றவன் நான். இந்த அடிப்படையிலேயே 'துன்பப் பீடம் இன்பக் கோயில்'[1] என்ற பாடல்களைப் பல ஆண்டுகளுக்கு முன் எழுதியுள்ளேன். அறிவு அறிந்த அந்த நாள் தொட்டு இன்று வரையில் இந்த உண்மை என் வாழ்வைப் பொறுத்தவரையில் முற்றிலும் சரியாகவே அமைந்து வருகின்றது. எனவே இந்த ஆக்கப் பணிக்கும் அன்னையும் ஆண்டவனும் தொடங்கும் வழி அமைத்துத் தந்தார்கள்.

வீட்டில் பள்ளி தொடங்கியதோடு அமைந்திருக்கலாம். ஆயினும் இறையருள் அண்ணா நகரில் இப்பள்ளியினைத் தொடங்க வழி காட்டிற்று. அமைந்தகரையில் ஓரிடத்துள்ள என் நிலத்தை வீட்டு வசதி வாரியத்தார் (அன்று C.I.T.)

---

1. கவிதையுள்ளம்—பக்85

எடுத்துக் கொண்டதற்குப் பதிலாக '178' எண்ணுள்ள இரண்டு மனை அளவுள்ள நிலத்தை எனக்கு அளித்தனர். 'சமூக நலக்கூடம் - கடைகள்' முதலியன அமைப்பதற்கென ஒதுக்கிய பகுதிக்கு அடுத்தே என் நிலம் அமைந்திருந்ததை நான் நினைத்தபோது, இது எதிர் காலத்தில் ஏதோ ஒரு பெருவளர்ச்சிக்கு அறிகுறி என உணர்ந்து கொண்டேன். முதலில் அந்த எனக்கென ஒதுக்கப் பெற்ற அந்த இருமனை (2 grounds) இடத்திலேயே கட்டடத்தைக் கட்ட 1969ல் தொடங்கி அடித்தளம் மட்டும் அமைத்தேன். அதற்குப் பொருள் வருவாய்க்கு என் செய்வதென்று ஏங்கித் தவித்த நாட்கள் பலப்பல. எனக்கு அப்போது வயது ஐம்பத்தைந்து ஆனமையின், என் உயிர்ஒப்பந்தத்திலிருந்து சுமார் 25,000மும் தெய்வீக நிதியிலிருந்து (T.P.F) 15,000க்கு மேலும் நான் அந்த ஆண்டில் (1969) பெற முடிந்தது. மேலும் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றில் கண்டறியாத வகையில், எனது நூல் ஒன்று தொடர்ந்து இரு ஆண்டுகள் பாட நூலாக அமைய, அதிலிருந்து வந்த வருவாயும் கூடிற்று. மற்றும் ஊரில் சில நிலங்களை விற்று வந்த தொகையும் என் அமைந்தகரை நிலத்துக்கு என விற்று வந்த தொகையும் உதவின. மேலும் வங்கியிடத்தும் தனியாரிடத்தும் பெருந்தொகையும் சிறு தொகையும் கடன்கள் வாங்கி எப்படியோ இந்த முதல் கட்டடத்தை மூன்று ஆண்டுகளில் கட்டி முடித்தேன். 1969ல் அடித்தளத்தையும் 1971ல் முதல் இரண்டாம் மாடிகளையும் கட்டிமுடித்தேன். என்றாலும் இன்று நினைத்தாலும் அந்த வளர்ச்சியும் செயலும் எனக்குத் திகைப்பையே ஊட்டுகின்றன.

கட்டடம் கட்டும் துறை எனக்குப் புதியது அன்று. என்றாலும், 'R.C' என அமைக்கப்பெறும் இன்றைய கட்டட அமைப்பு எனக்குப் புதியதே. மேலும் அதற்கேற்ற சாமான்கள் என்னிடம் இல்லை. எனவே எல்லாச் சாமான்களும் உட்பட ஒப்பந்தக்காரரிடம் கட்டட வேலையினை ஒப்படைத்தேன். அவர்கள் நல்லவர்களேயாயினும் ஒப்பந்த மரபில் எங்கோ ஒளிந்து கிடக்கும் சில குறைபாடுகளால்

என் மன நிறைவுக்கு ஏற்றபடி அக் கட்டடம் அமைய வில்லை. கட்டடத் தரம், பலம், திண்மை முதலிய குறையாத வகையில் எப்போதும் நான் அருகிலேயே இருந்து கண்டு கொண்டு வந்தாலும், முழுக்கமுழுக்க நாமே கட்டுவது போன்ற மன நிறைவு எனக்கு ஏற்படவில்லை. எனவேதான் அடுத்து அமைத்த கட்டடங்களையெல்லாம் 'தொழில் ஒப்பந்த' (Labour Contract) அடிப்படையில் தேவையான பொருள்கள் அனைத்தையும் நானே கொடுத்துக் கட்டி முடித்தேன். எனினும் ஒவ்வொரு சமயத்திலும் சிமிட்டி, இரும்பு, ஜல்லி, கல், மணல், கூலியாள் பிற பொருள்கள் பெற நான் பட்ட கஷ்டங்கள் பலப்பல. ஆயினும் அவ்வப் போது உற்ற நண்பர்களும் பிறரும் பள்ளியின் பால் அன்புற்ற அரசாங்க அதிகாரிகளும் பெற்றோரும் உதவிய காரணத்தில் எதிர் பார்த்த அளவிலும் சீராகக் கட்டடங்கள் நிறைவுற்று வளர்ந்தன. முதல் கட்டட அடித்தளம் முடிக்கப் பெற்றபின் அப்பொழுதே - 1969லேயே சிலர் அண்ணா நகரில் பள்ளியினைத் தொடங்க வேண்டும் என வற்புறுத் தினர். ஆனால் கட்டடம் முற்றுப் பெறாத நிலையில் குழந்தைகளை உள்ளிருத்தி, வகுப்புகளைத் தொடங்குவ தென்பது அவ்வளவு பொருத்தமாகாது எனத் தெரிந்த காரணத்தால் அப்போதே தொடங்க முடியாது நின்ற நிலையினை உணர்த்தினேன். எனினும் பலர் வேண்டு கோளும் விருப்பமும் நல்லெண்ணமும் அமைந்த காரணத் தாலே, அவர்தம் விழைவின்படி 1969 அக்டோபரில் விசயதசமி நல்ல நாளில் குழந்தைகள் வகுப்பினைத் (L.K.G) தொடங்கினேன். பத்துப்பன்னிரண்டு குழந்தைகளுடனும் ஒரு ஆசிரியருடனும் L.K.G தொடங்கப்பெற்ற அப்பள்ளி 1970 ஜூனில் 5ம் வகுப்பு முடிய ஏழு வகுப்புகளோடு பதினைந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுடன் முழுப்பள்ளி யாகச் செயலாற்றத் தொடங்கியது.

பள்ளியைத் தொடங்கும் போது, அதை எந்த வகையில் எந்த முறையின் எந்த அடிப்படையில் அமைக்க வேண்டும்

என்ற எண்ணமே இல்லை. யாருமே அது பற்றி நினைக்கவும் இல்லை. எனினும் 1971ல் ஆறாம் வகுப்பினைத் தொடங்கும் போதுதான் இதனை எந்த முறையில். அமைப்பது என்ற எண்ணம் தோன்றிற்று. எட்டாம் வகுப்பு முடிவதற்குள் ஏதேனும் ஒரு முறையினைப் பின்பற்றி, அதற்குரிய இசைவினையும் தக்க வழியில் பெற்றாலன்றி மேல் வகுப்புகள் நடத்துவது இயலாத ஒன்றல்லவா! ஒரு சிலர் எவ்வித இணைப்புமின்றி ஐந்தாம் வகுப்புடன் பள்ளி அமைத்து, தக்க வருவாயும் பெற்று, ஐந்தாம் வகுப்பு முடிந்தவுடன் பிள்ளைகளை வேறு இடங்களுக்கு அனுப்பும் முறை இன்று நாடெங்கினும் - சிறப்பாகச் சென்னை நகரிலும் காணுகின்ற முறை என்பதை யாவரும் அறிவர்; சிலர் அந்த முறையினை இரண்டிடத்தும் (செனாய்நகர்-அண்ணாநகர்) பின்பற்றினால் எனக்கு நிறைய வருவாய் பெருகும் எனவும் பரிந்துரைத்தனர். எனினும் அன்னையின் பெயரால் நிலைத்த பணிபுரியும் திட உளத்தோடு செயல் புரிந்த எனக்கு அவர்கள் அறிவுரை ஏற்றதாகப் படவில்லை எனவே நிலைத்த அங்கீகாரம் பெறவேண்டிய வழித்துறைகளையெல்லாம் ஆராய்ந்தேன்.

முதலாவதாக, தமிழகத்தில் முறைப்படி இயங்கும் பள்ளியாக அமைக்க நினைத்தேன். அப்படியே முன் ஒரு முறை நினைத்து அமைத்து வளர்த்து ஒரு பள்ளியினை - திரு.வி.க. உயர்நிலைப்பள்ளியினை உருவாக்கி விட்டுள்ளேன். அதற்கு முன் வாலாஜாபாத் மேல்நிலைப்பள்ளியைச் செயலாளனாக இருந்து உருவாக்கினேன். இன்று அமைப்பதற்கு இக்கால நிலைக்கு ஏற்ப முன் பணமாகப் பெருந்தொகையும் பரந்த நிலப்பரப்பும் முதலில் தேவை. தனியனாகிய என்னால் அவற்றை எவ்வாறு செய்ய முடியும்? வாலாஜாபாத் பள்ளி, திரு.வி.க. பள்ளி ஆகியவை தொடங்கிய காலத்தில் இந்த வகையில் பெற்ற இடர்ப்பாடுகளை நினைந்தேன். வாலாஜாபாத் பள்ளிக்கு பேரறிஞர் அண்ணாவே முன்வந்து (1947) இருநாடகங்கள் நடத்தித் தந்தனர். அவ்வூர் பஞ்சாயத்துத் தலைவர் திரு. தேவராசன் உடன் உதவி

புரிந்தார். பின் திரு.வி.க. பள்ளிக்கு டாக்டர் சுந்தரவதனம், மு.வ. போன்றவர்கள் உடன்துணையும் நகராண்கழகத்தார் - சிறப்பாக அந்தநாள் தலைமைப் பொறியாளர் திரு. மீரான் அவர்கள் - இனாமாக அளித்த நில உதவியும் இடர்பாடுகளை நீக்கி, பள்ளியை அமைக்க உதவின. இது தனிப்பட்ட முறையில் என் அன்னையின் பெயரால் நானே முன்னின்று நடத்துவதனாலும் நான் 'சாதாரணத் தமிழாசிரியன்' ஆனதாலும் அந்த வகையில் எனக்கு யார் உதவக்கூடும்? எனவே அந்த எண்ணத்தைக் கைவிட்டுப் பல்கலைக்கழக உதவியை நாடினேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் அன்று 'மெட்ரிகுலேஷன்' என்ற ஆங்கில அமைப்பில் அமைந்த கல்வி முறையினைக் கைக்கொண்டிருந்தது. (இன்று அது அரசாங்கக் கல்வித் துறையில் நேர் அமைப்பில் இயங்குகிறது) அந்த அமைப்பில் இணைத்து எப்படியும் நல்ல வகையில் செயலாற்றலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டேன். எனினும் எனக்கு உதவுபவரோ கைகொடுப்பவரோ பல்கலைக்கழகத்தில் ஒருவரும் இல்லையாதலால் அந்த முயற்சி கைகூடவில்லை. சாதாரண உயர்நிலைப்பள்ளியினை அமைப்பதைக் காட்டிலும் மிகக் கடினமான சில கட்டுப்பாடுகளையும் திட்டங்களையும் எடுத்துக் கூறினர். (ஆயினும் வேறு சில பள்ளிகள் மிக எளிய முறையில் இக்கட்டுப்பாடுகள் நிறைவுறா வகையில் செயலாற்றி வந்ததையும் அவர்கள் அறிவர்) எனவே அந்த முயற்சியினையும் நான் கைக் கொள்ள இயலாது எனக் கை விட்டேன். ஆனால் இன்று அதே துறையில் ஒரு மேல்நிலைப்பள்ளி செயல்பட வாய்ப்பளித்த இன்றைய அரசினையும் கல்வித் துறையினையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

அந்த நாளில் தில்லியிலிருந்து இரு வேறுதாபனங்கள் இந்தியா முழுவதும் கல்விக் கூடங்களை இணைந்து செயற் படும் நிலை நாட்டில் வளர்ந்து வருவதை அறிந்தேன். இரண்டில் ஒன்றினைப் பற்றினால் அன்னையில் பெயரா

அமைக்கப்பெறும் பணி நிறைவேறும் என்ற உணர்வும் அன்னையார் உள்ளிருந்து ஊக்கும் செயலும் ஒருங்கிணைந்தன. தில்லியிலுள்ள இருவேறு தாபனங்களுடன் தொடர்பு கொண்டேன். இருவரும் என் வேண்டுகேளுக்குச் செவி சாய்த்து ஆவன உதவுவதாகச் சொன்னார்கள். திரு. 'பர்ரோ' என்பவர் I. S. C என்ற நிறுவனத்தோடு இணைப்பதற்காக ஆக்கக் கூறுகளை விளக்கிக் கடிதம் எழுதி என்னை ஊக்கினர். அதே வேளையில் தில்லி மத்திய கல்விக் குழுவிடத்திருந்தும் (Central Board of Secondary Education) விண்ணப்பத்தாள் முதலியனவும் வேறு விளக்கங்களும் அனுப்பப்பெற்றன. அத்துடன் அக் குழுவின் பின்னைய தலைவரும் அன்றைய செயலாளருமாகிய திரு. சிங்கேல் (Dr· Singhal) அவர்களும் இப்பிராந்திய மத்திய கல்வி·நிலைய மேற்பார்வையாளரும் பள்ளிக்கு நேரில் வந்து நடைமுறையினைப் பார்வையிட்டு, பள்ளியின் வளர்ச்சிக்கும் ஆக்கப் பணிக்கும் வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வதாகக் கூறினர். எனவே அந்த ஆண்டே (1972) நாங்கள் அவர்கள் குழுவிற்கு விண்ணப்பம் செய்தோம். அதற்கு முன் நாங்கள் (பள்ளி பதிவு செய்யப்பெற்றது) இதனோடு இணைவதால் மக்கள் பயன் பெறுவார்கள் எனத் தீர எண்ணியே முடிவு செய்தோம். இது மத்திய அரசாங்கத்தோடு இணைந்த ஒன்றானமையினாலும் மும்மொழித்திட்ட அடிப்படையில் அமைவதானமையிலும், அரசாங்க அலுவலர் தம் பிள்ளைகள், பெற்றோர் மாறி மாறி இடம் பெறும் போது, பயிலச் சௌகரியமாக இருக்கும் என்றமையினாலும் அந்தக் காலத்தில் பயின்ற (1973) நானூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் இந்தக் கல்வி முறையினையே விழைந்தமையாலும் நாங்களும் இதையே தேர்ந்தெடுத்தோம். இதன் பாடத் திட்டங்களும் மொழித் திட்டமும் பிள்ளைகளுக்குச் சற்று அதிகமாகவே-கடினமாகவே அமைகின்றதெனினும் பொது மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு ஆரம்பித்த பள்ளியானதால், அப்பெருமக்கள் விருப்பப்படியே மத்திய கல்விக்

குழுவில் இணைவதென்ற முடிவினைச் செயல் படுத்தத் தொடங்கினோம். எனினும் 1972ல் எங்களுக்கு எட்டாம் வகுப்பும் மேல் வகுப்பும் இல்லாத காரணத்தாலேயும் போது மான அறைகளும் அரங்கும் ஆய்வுகளங்களும் நூல் நிலையமும் இல்லாத காரணத்தினாலேயும் அந்த ஆண்டு எங்களுக்கு இசைவுதரப்பெறவில்லை. பின்பே '178'ல் மேல் இரண்டு மாடிகளையும் கட்டி முடித்தோம். இதற்குள் எங்கள் வளர்ச்சியினைக் கண்ட வீட்டு வசதிவாரியத்தார் தாமாகவே முன்வந்து, பக்கத்தில் கடைகளுக்கு ஒதுக்கிய மனையினை எங்களுக்குத் தந்து (உரிய விலையில் நிறைந்த தவணையில்) கடைகளை எதிர்ப்பக்கத்தில் அமைக்கத் திட்டமிட்டனர். (அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே இன்றைய சிந்தாமணி பின்னர் உருவாயிற்று) கூடிய இடமும் பெற்று (சுமார் ஒரு ஏக்கர்) மூன்று மாடிக் கட்டடங்களும் முடிவுற்று நின்றதோடு, ஒன்பதாம் வகுப்பும் தொடங்கப் பெற்றதால் 1974ல் மறுபடியும் இணைப்புக்கு மத்திய கல்விக் குழுவை அணுகி வேண்டினோம். அவர்களும் முறைப்படி தக்கதொரு ஆய்வுக் குழுவை அனுப்பி, பள்ளியின் தேவைகள் நடை முறைகள் ஆகியவற்றையும் பொருள் நிலை முதலியவற்றையும் பிறவற்றையும் பார்வையிட்டு, இசைவுதரலாம் எனப் பரிந்துரைத்தனர். எனவே மத்திய கல்விக்குழு தன் 5-10-74 நாளிட்ட ஆணைவழி இசைவுதர, அன்று தொட்டு அந்த அடிப்படையிலே எங்கள் பள்ளி முறை யாக இயங்கி வருவதோடு அடுத்து வந்த சில மத்திய கல்வி குழுக்களும் எங்கள் வளர்ச்சியினை வாழ்த்த, அவர்தம் வாழ்த்தின் பலத்தாலும் பெற்றோர் உறுதுணையாலும் நல்லவர்தம் உடன் துணையாலும் +2, என்ற வகுப்பினை யும் தொடங்கி நாளும் வளர்ந்து வருகின்றோம்.

மத்திய கல்விக் குழுவின் கீழ் மும்மொழித் திட்டத் தினைச் செயல் படுத்தத் தொடங்கினோம். அதனால் எப்போதும் இன்றேனும் முன்பெல்லாம் சில சில சமயங்களில் மாநில அரசின் சில அலுவலர்தம் நச்சரிப்பிற்கும் தொல்லைக்கும் நாங்கள் உட்பட்டோம். சில பற்றிப்

பின்னே விளக்கமாக எழுத இருக்கிறேன். ஒன்றை மட்டும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் செயல்படுகின்ற அந்த வேளையில் ஒருமுறை எங்கள் தொண்டினைப் பாராட்டி டாக்டர் மு. வ. அவர்கள் உடன் ஒரு சம்பவத்தையும் சொன்னார். அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தபோது, ஒரு முறை முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணநிதி அவர் களைக் காணச் சென்றாராம். பல்வேறு பொருள்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது என்னைப் பற்றிய பேச்சு இடையில் வந்ததுபோலும். முன்னாள் முதல்வர் அவர்கள், என்னைச் சுட்டி 'அவர் தமிழாசிரியராய் இருந்து கொண்டு இந்தியை வளர்க்கிறாரே; இது தகுமா?' என்று மு. வ. அவர்களைக் கேட்டாராம். ஆனால் 'மு. வ.' அவர் கள் உடன் தக்க பதில் சொன்னாராம். 'அவர் தமிழக்குச் செய்யும் வகையில் உங்களாலோ உங்கள் அரசாங்கத் தாலோ செய்ய முடியாது' என்றாராம், 'எப்படி' என்ற கேள்விக்கும் உடன் பதில் சொல்ல முதல்வர் 'அப்படியா! நல்லதுதான்' என்றாராம். அவர் சொன்ன பதில் இதுதான் 'வள்ளியம்மாள் பள்ளியில் பயிலும் மாணவர் அத்தனை பேரும் இந்தியைப் படிக்கிறார்கள் என்பது உண்மைதான், ஆனால் அங்கே பயில்கின்றவர்கள் அத்தனை பேரும்-பல தமிழர் அல்லாதவர் உட்பட-தமிழைக் கட்டாயம் பயில வேண்டும் என்ற விதி உண்டு. சில மத்திய கல்வி நிலையங் களில் தமிழே மொழிப் பாடமாகக் கற்க விரும்பினாலும் கற்க முடியாது; வசதி இல்லை. மும்மொழித் திட்டம் செயலில் இருப்பினும் தமிழ் இல்லாத வேறு மூன்று மொழி களைத் கட்டாயம் பயில்கின்றார்கள். இதுவும் எந்த மாநிலத்திலோ நடைபெறுகின்றன செயல் என்று நினைக்க வேண்டாம், நம் சொந்தத் தமிழ் மண்ணில்தான் இவ்வாறு நடக்கிறது. இந்த மாநிலத்தில் முதல்வராக உள்ள நீங்கள் அத்தகைய மத்திய கல்வி நிலையங்களில் தமிழை பிற மொழிகளோடு ஒரு மொழியாகவாவது வைக்க வேண்டும் என மத்திய அரசாங்கத்தோடு வாதிட்டு வெற்றி பெற்றுச்

செயல் பட முடியுமா? அது இல்லாவிட்டால் போகிறது. உங்கள் மாநிலத்தில் உங்கள் ஆணையின கீழ்ப்பட்ட பள்ளி களிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற அனைவரையும் தமிழைக் கட்டாயமாகப் பயில வேண்டும் என்று நீங்கள் சட்டம் செய்ய முடியுமா? முடியவில்லையே. தமிழ் பெயருக்கு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் 'இரண்டாம் மொழி என்ற பெயரிலிருந்து முதன் மொழி, பெயருக்கு மாற்றப்பட்டதே ஒழிய, அத்தமிழ் ஜெர்மன் முதலிய அன்னிய மொழிகளோடும் இந்தி, குஜராத்தி போன்ற பிற இந்திய மொழிகளோடும் பதினான்கு அல்லது பதினைந்தில் ஒன்றாகத்தானே இருக்கிறது. எனவே நீங்களோ உங்கள் அரசாங்கமோ செய்ய முடியாத ஒரு பெரிய தமிழ்த் தொண்டினை அவர் வள்ளியம்மாள் பள்ளி மூலம் செய்து வருகின்றார். அவர் தமிழுக்குத் தொண்டு செய்யவில்லை என்று குறை கூறமுடியுமா? நீங்கள் சொல்லுங்கள், என்று கேட்டாராம், அத்துடன் நில்லாது, தமிழ் நாட்டில் உள்ள அரசாங்கமே நடத்தும் மத்திய கல்விக் கூட்டங்களில் தமிழ் பயில விரும்புவாருக்குத் துணையாகத் தமிழைப் பல மொழிகளுள் ஒன்றாக கொண்டு வாருங்கள் என்று மத்திய அரசாங்கத்தோடு நீங்கள் தொடர்பு கொண்டு கேளுங்கள் என்று சொன்னாராம். ஆயினும் இன்னும் பல மத்திய தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்களில் தமிழ் பயில விரும்பும் மாணவருக்கு வழி இல்லாமல் இருக்கின்றது என்பதைப் பல பெற்றோர்கள் வருத்தத்தோடு சொல்வதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்.

எங்கள் வளர்ச்சி கருதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தார் பல நல்ல செயல்களைச் செய்தார்கள் என்று சொன்னேன். எனக்கெனத் தனியாக அளித்த மனையில் நான் பள்ளியினைத் தொடங்கியதை ஏற்றுக் கொண்ட தோடு, பக்கத்தில் இருந்த சுமார் 15 மனைப்பரப்புள்ள நிலத்தினை எங்களுக்கே தருவதற்கு அவர்களாகவே இசைந்து, ஆவன செய்துள்ளார். முதலில் எங்கள் பள்ளி யினை அடுத்துள்ள பகுதியினை '226 C' என்ற எண்ணில்

தனியாகப் பிரித்து எங்களுக்கு ஒதுக்கித் தந்தார்கள். விலையில் யாதொரு சலுகையும் எங்களுக்குத் தரவில்லையாயினும், எங்கள் வளர்ச்சி கருதி நாங்கள் கேட்டுக் கொண்ட உடனேயே அந்த இடத்தை யாதொரு தடையும் சொல்லாது ஒதுக்கித் தந்தனர். 80' அடி சாலையினை ஒட்டிய பகுதிக்கு ஏலவிலைப்படி மனை ரூ. 11,000 வீதமும் உள்ளடங்கிய மனைகளுக்கு 8000 வீதமும் விலையிட்டுத் தந்தார்கள். எனவே அந்த மனைகள் யாதொரு கட்டுப் பாட்டுக்கும் நிபந்தனைக்கும் உட்பட்டதாக இல்லாமல் தனியார் ஒருவருக்குக் கொடுக்கும் வகையிலே தரப் பெற்றது. அடுத்து அதன் பக்கத்திலுள்ள மற்றப் பகுதியினையும் (சுமார் 8 மனை) நாங்கள் கேளாமலே அவர்களே முன்னின்று எங்கள் வளர்ச்சி கருதி 'வலிய வந்து ஆட்கொள்ளும்' முறையில் உவந்து அளித்தார்கள், வீட்டு வசதிவாரியத்தின் 1-4-72 நாளிட்ட கூட்டத்தின் முதல் தீர்மானமாக இதை நிறைவேற்றி எங்களை 'ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?' எனக் கேட்டுக்கொண்டனர். நாங்கள் மிக்க மகிழ்வோடு அதை ஏற்றுக் கொண்டோம். அதனையும், முற்றும் 80 'அடிச் சாலையை ஒட்டி இருப்பதால், ஏலவிலைக்கே (ரூபாய் பதினோராயிரம்) நாங்கள் எடுத்துக்கொள்ள இசைந்தோம். முறைப்படி, இரண்டிற்கும் மேலே கூறியபடி யாதொரு நிபந்தனையோ கட்டுப்பாடோ இல்லை. (எனினும் இடைவந்த வாரியத்தின் அரசியல் சார்புடைய தலைவர்களும் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரும் நிபந்தனை இருப்பதாகக் கருதிப் பலவகையில் தொல்லை தந்தனர். அவைப்பற்றிப் பிறகு விளக்கமாக எழுத நினைக்கிறேன்.) இந்த இரண்டு இடங்களையும் அன்றைய வீட்டுவசதி வாரியத்தார் அன்புடன் எங்களுக்குக் கொடுக்க, முறைப்படி நாங்களும் நான்கில் ஒரு பகுதியை முன் பணமாகக் கட்டி விட்டு, எங்கள் பொறுப்பில் நிலத்தை எடுத்துக் கொண்டு கட்டடங்களைக் கட்டத் தொடங்கி விட்டோம். இந்நிலத்துக்கு நின்ற முக்கால் பாகத் தொகையினை மூன்று வருடங்களில் ஆறு தவணைகளாகக் கட்ட

ஆணையிட்டனர். எங்கள் பொருள் நிலை அதற்கு இடம் தராத நிலையினை விளக்கி வேண்டிக் கொண்டதன் பேரில் ஏழு ஆண்டுகளில் பதினான்கு தவணைகளாகக் கட்டுமாறு பரிந்துரைத்து உதவினர். அதன்படியே ஆறு திங்களுக்கு ஒருமுறை, அத் தொகையினைக் கட்டிக் கொண்டு வந்து 1980ல் முற்றும் அடைத்து விட்டோம். எனவே முறையாக இந்த நிலமும் உடன் பதிவு வழி எங்கள் வசம் முற்றும் உரிமை யாக்கப் பெற்றது.

இவ்வாறு பலவகையில் முயன்று பெற்ற இடங்களெல்லாம் கட்டடங்களால் நிறைவு செய்யப் பெறுவதை யாவரும் அறிவர். பள்ளி வளர வளர, அதன் தேவையும் வளர்ச்சி அடைந்து வருகின்றமையின் மறுபடியும் நாங்கள் 1977ல் வீட்டு வசதி வாரியத்தாரை வேண்ட, அன்றுள்ள வாரியக் குழுவின் வாரியத் தலைவர் 77 மனையினை எங்களுக்குத் தந்து உதவினர். அதற்குரிய நான்கில் ஒரு பகுதியினை-சுமார் இரண்டரை லட்சம் தொகையினை அப்போதே கட்டி, திங்கள்தோறும் தவணையும் கட்டி வந்தோம். இடையில் பல்வேறு காரணங்களால் பலர் பலவகையில் தொல்லை தந்தனர். எனினும் நாங்கள் முயற்சியாலும் நல்லவர் உதவியாலும் இறையருளாலும் வெற்றி பெற்று, 1981 சூன்முதல் அங்கே செயல்படத் தொடங்கிவிட்டோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மத்திய கல்விக்குழுவின் இணைப்பில் எங்கள் பள்ளி இணைந்த பிறகு எங்கள் பள்ளி அரசாங்க ஒப்புதல் பெற்றதாகிவிட்டது. எனினும் எங்கள் பள்ளிக்கு யாதொரு வகையிலும் அரசாங்க மானியமோ வேறு மானியங்களோ கிடையாது. முன் காட்டியபடி என் சொந்த வருமானங்கள் முற்றவும் இதில் ஈடுபடுத்திச் செயல் படுவதன்றி வேறு வகையில்லை. பள்ளியில் பிள்ளைகள் கட்டுகின்ற சம்பளம் ஆசிரியர்களுக்கும் பிற செலவுகளுக்கும் ஈடுகட்டவே முடியாத நிலையில் சில ஆண்டுகள் கழிந்தன. எனவே

இடையில் பல பெற்றோர்கள் வற்புறுத்தியதன் பேரில் 1974ல் ஒரு நாடகம் ஒன்று நடத்தினோம். (திரு. மேஜர் சுந்தரராஜன் குழுவினர்) பெரியார் திடலில் அந்த நாடகம் நடை பெற்றது. அதற்கென நுழைவுக் கட்டணம் இட்டு வசூல் செய்தோம். ஆனால், அந்த நாடகத்தில் 20,000 அளவு தொகை பெற்ற போதிலும் அதில் நாங்கள் பெற்ற அனுபவம், இனி எக் காலத்திலும் இத்தகைய செயலை மேற் கொள்ள வேண்டாம் என்ற முடிவினையே, எங்களுக்குத் தந்தது. எனவே அன்று முதல் அத்தகைய பெருநாடகங்கள் அமைக்கவே கூடாது என்று திட்டமாக முடிவு செய்து பின்னர் இரண்டொரு ஆண்டுகளில் பிள்ளைகள் ஆசிரியர்கள் அல்லது விரும்பி வரும் பெற்றோர்கள் ஆகியவர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் அமைத்தோம். ஐந்து அல்லது பத்து ரூபாய் எல்லைக்கு மேலே போகாமல் நுழைவுச் சீட்டு இட்டும், அதற்கும் பல வசதி உள்ள பெரியோர்களே சிக்கல்களை உண்டாக்கித் தொல்லை தந்தனர். சில ஆசிரியர்கள் ஒத்துழைப்பும் இல்லை எனலாம். ஒரு சில ஆசிரியர்கள் 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது போல்' மாற்றுப் பிரசாரம் மறைவாகச் செய்தனர். எனவே இனி இந்த வகையில்லாது வேறு தக்க வகையில் ஆவன செய்ய ஒருமுடிவு செய்தோம். எனவே பிறகு 'வளர்ச்சி நிதி என அமைத்துப் புதிதாகச் சேர்பவர்களுக்குத் தொடக்கத்தில் ஐம்பது ரூபாயும் பழைய மாணவர்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் இருபத்தைந்து ரூபாயும் எனக் கணக்கிட்டு வாங்கி வந்தோம்; பின் நூறும் ஐம்பதும் என நின்றன. இந்த வகையில் பெரும் இடர்ப்பாடு இல்லை என உணர்கின்றோம். மேலும் அவர்கள் தரும் ஒவ்வொரு பைசாவும் எங்கள் சொந்த பைசா ஒவ்வொன்றுடன் கூடி, கண் எதிரே பல இலட்சக்கணக்கான மதிப்புடைய கட்டடங் களாகவும் நிலங்களாகவும் காட்சித் தருவதை உணர்ந்து பெற்றோர்கள் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொள்ளு கின்றனர். இந்த வகையில் பகல் உணவு கொள்ள முடியிட்ட நல்ல இடம் இல்லை என்ற குறை சிலரிடம் இருந்தது

எங்களுக்கும் தெரியும். நாங்களும் பல சிக்கல்களை எழுப்பியுள்ள நகராண்மைக் கழகம், பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் இடர்ப்பாடுகளெல்லாம் விரைவில் நீங்கப் பெற்று அந்த குறையும் இல்லையாக நீண்ட உணவுக் கூடமும் அமைத்துள்ளோம்.

1974ல் மத்திய கல்விக் குழுவின் இசைவு பெற்ற பிறகு மெல்ல மெல்லத் தவழ்ந்த வள்ளியம்மாள் பள்ளி எனும் குழந்தை எழுந்து நின்று தளர் நடையிடத் தொடங்கியது. அது தவழும் போதெல்லாம் கைகொடுத்து நடத்திச் செல்லப் பலர் உடன் நின்று உதவினர் என்பதையும் இங்கே குறிக்கக் கடமைப்பட்டுள்ளேன். கொட்டகைகள் சரிவு, கொட்டகைகள் அக்கினி தேவனுக்கு இரை, கட்டடங்கள் மழையில் பிளவு, சரிவு, பக்கத்து மனைக்காரர்களின் தொல்லை இன்னபிற சிக்கல்களுக்கு இடையே இன்று உங்கள் முன் வானோங்கி நிற்கும் கட்டடங்கள்—நிலைத்த கட்டடங்கள் காட்சியளிக்கின்றன. ஆயினும் இவற்றைக் கண்டு பொறாமையால் சில உயர் வட்டங்களிலுள்ள 'பெரியவர்' தம் கொடுமையான தாக்குதல்களும் இல்லாமல் இல்லை.

மத்திய அரசாங்க இசைவு பெற்றபின் பிள்ளைகள் அதிகமாகச் சேர விரும்பினர். மேலும் எங்கள் பள்ளியின் தரம் அண்ணாநகரில் மட்டுமன்றி, சென்னையின் பிற பகுதி களிலும் வெளியூர்களிலும் கேட்கப் பெறுவதால் இங்கு இடம் மாறி வருகின்ற அனைவரும் முதலில் வள்ளியம்மாள் பள்ளியிலேயே இடம் தேடி வருகின்றனர். சில பெற்றோர் இங்கே வந்து 'இந்தப் பள்ளியில் இடம் கிடைத்த பிறகே அண்ணாநகரில் வீடு பிடிக்க உத்தேசித்துள்ளோம்' எனக் கூறுகின்றனர். இந்த நிலை எங்களுக்கு ஒருபுறம் பெருமகிழ்ச்சி தந்தாலும் இந்த நற்பெயரை என்றும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பினை எண்ணும் போது அச்சம் உண்டாகின்றது. பள்ளியின் முதல்வர் அவர் களும் ஆசிரியர்களும் ஒல்லும் வகையான் தரம் கெடாத

வகைக்கு அன்றாடம் வழிவகைகளை வகுத்துச் செயல் படுவது மனதுக்கு ஆறுதலாக அமைகின்றது.

... வகுப்பில் மாணவர்களைத் தேர்வின் அடிப்படையிலே சேர்க்கிறோம். குழந்தைகள் (L. K. G.) வகுப்பு ஒன்றைத் தவிர, மற்றைய வகுப்புகள் அனைத்துக்கும் நுழைவுத் தேர்வு உண்டு. சிலர் U.K.G.' I Std இவைகளுக்கெல்லாம் கூடத் தேர்வா எனக் கேட்பர். அவரவர் தகுதிக்கு ஏற்பத் தேர்வை அமைத்து, அவரவர் தகுதி தெரிந்து உரிய வகுப்பில் இடம் கொடுத்து—சிறப்பாக இந்த எல்லையில் உட்பட்டவர் களுக்கு இடங்கொடுத்து—ஆவனசெய்து வருகிறோம். இதனால் எங்களுக்கு ஆண்டு தோறும் சில சில பெற்றோர் கள் 'விரோதி'களோ என்னுமாறு இருக்கின்றனர். ஒரே குடும்பத்திலிருந்து மூவர் தேர்வு எழுதினால் இருவர் தகுதி கண்டு உரிய வகுப்பு தந்து மூன்றாமவர் தகுதியில்லாமையில் கீழ் வகுப்பில்தான் சேர்க்க வேண்டும் என்றால் மனம் வருந்த எங்களை 'வையும் நல்லவரும்' உள்ளனர். மற்ற இரண்டு பிள்ளைகளுக்கு இடம் தந்தவர்கள் இந்த ஒரு பிள்ளைக்கு இடம் தராத காரணத்தை இவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

இவ்வாறு பலவகையில் ஆண்டுத் தொடக்கத்தில் அல்லல் பட்டும், பிறகு முறையாக வகுப்பு நடக்கும் போதும் ஒரு சில பெற்றோர்களால் சில சிக்கல்கள் உண்டாகும் (இவை பற்றி எல்லாம் 'பெற்றோர்கள்' என்ற பகுதியில் தனியாக எழுத நினைக்கிறேன்) ஆயினும் அவற்றையெல்லாம் கடந்து, '10+2' எனப்பெறும் வகுப்புகள் அனைத்தையும் பெற்று, 12ம் வகுப்பு மாணவிகளைத் தேர்விக்கு அனுப்பினோம். முதல் ஐந்து ஆண்டுகளிலும் தேர்வுக்குச் சென்ற மாணவியர் அனைவரும் நல்ல நிலையில்—முதல் இரண்டாம் வகுப்பு நிலையிலேயே வெற்றி பெற்றுள்ளமையை ஈண்டு குறிப்பாக வேண்டியுள்ளது. பள்ளி உயர் பள்ளியாக (Junior College) வளர்ந்து விட்டமையின் அதற்கேற்ற வகையில் ஆய்வுகளம் முதலியவற்றையும் நூல் நிலையம் முதலியவற்றையும்

வகுப்பறைகளையும் அமைக்க வேண்டியுள்ளது. புதிய கட்டடம் முற்றும் ஏறக்குறைய அவர்களுக்கேதான் பயன் பட்டது. முதல் தளமாகிய பெரு மண்டபத்தில் பலப்பல கூட்டங்கள் நடைபெறுகின்றன. இரண்டாம் தளம் முற்றும் ஆய்வுக் கூடங்களாகும். ஆய்வுக் கூடங்களில் உள்ள பொருள்களில் மதிப்பு சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேலாகும். மேலுள்ள தளத்தில் வகுப்பறைகள் உள்ளன. நூல் நிலையமும், தொழிற் கூடமும் நல்ல முறையில் செயல்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளாக, புதிதாக வாங்கிய இடத்தில் கட்டடங்களைக் கட்டிமுடித்தபின், நம் தமிழக அரசின் முறையான இசைவுபெற்று 'மெட்ரிகுலேஷன்' (Matriculation) பள்ளியினை நடத்தி வருவதும் சென்ற ஆண்டில் (1986 மே) பத்தாம் வகுப்பில் 100க்கு 100 மாணவர் தேர்ச்சிபெற்று, அதற்கான கேடயத்தை அரசாங்கத்திடம் பெற்றதும் குறிக்கத்தக்கன. சென்ற ஆண்டே மேல் பதினோறாம் வகுப்பினைத் தொடங்க இசைவு பெற்ற போதிலும், காலம் தாழ்த்தமையின், இந்த ஆண்டே அங்கே 11-ம் வகுப்பு (+2ல் முதல் வருடம்) தொடங்கப் பெற்றது. கணிப்பொறி உட்பட-ஆசிரியர் பயிற்சி உட்பட பல பாடங்கள் சிறப்புப் பாடங்களாக இடம் பெற்றுள்ளன. அதே இடத்தில் மூன்றாண்டுகளுக்குமுன் தக்கவர் துணையுடன் பொறியியல் சார்புடை சான்றிதழ் வகுப்புகள் நடத்த நினைத்துத் தொடங்கிய போதிலும் அதை மேற்பார்வையிட்டு வளர்க்க தக்கவர் இன்மையின் அம் முயற்சி விடப் பெற்றது. அரசாங்கமும் பல்கலைக் கழகமும் இசைவுதரின் தொடர்ந்து கல்லூரியும் மேநிலை ஆய்வு களமும் அமைக்க விருப்பம். யாவும் இறையருளும் அன்னையின் அருளும் நல்லவர் வாழ்த்தும் உதவியும் அமையின் பயன் விளையும் எனும் துணிபுடையோம்.

சில பள்ளிகளில் பல்லாயிரக் கணக்கில் பணம்பெற்று மாணவர்களைச் சேர்க்கும் வகையில் நாங்கள் செயல்படுவு

தில்லை; பட நினைப்பதும் இல்லை. நேர்மைக்கு அது தேவையும் இல்லை. இரண்டு இரண்டரை ஆண்டு குழந்தை முதல் பன்னிரண்டாம் வகுப்பில் பயிலும் பெரிய மாணவர் வரையில் காலையில் கலந்து பாடி, இறைவனைப் பரவி, பின் பயின்று, கூடி விளையாடிச் செல்லும் அன்றாடக் காட்சியினைக் கண்டு கண்டு களித்து நான் என்னை மறந்து நிற்கின்றேன். சென்ற காலத்தைத் திரும்பிப் பார்க்கும் போது திகைப்பே உண்டாகிறது. என் அன்னையின் பெயர் என்றும் நிற்கும் என்ற உறுதி கண்டு மகிழ்கின்றேன்.

## 2. பெற்றாள் வளர்த்தாள்! பெயரிட்டாள்!

பச்சையப்பன் கல்லூரியில் 1944ல் என் பணியினைத் தொடங்கினேன். அது முதல் நான் பிள்ளைகளை வளர்த்த தோடு, என்னையும் வளர்த்துக் கொண்டேன். மாணவர் களுக்குக் கல்வி பயிற்றியதோடு, நானும் மேலும் பயின்றேன். என்னையும் என்னோடு பணியாற்றிய பிற ஆசிரியர்களையும் மேலும் முயன்று ஆராய்ச்சிப் பட்டம் பெற வேண்டும் என அப்போது தமிழ்த் துறைத் தலைவராய் இருந்த மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள் அடிக்கடி சொல்லி வற்புறுத்துவார்கள். டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் அந்த வகையில் ஆராய்ச்சி செய்து (M.O.L.) எம்.ஓ.எல். பட்டம் பெற முயன்று வெற்றியும் பெற்றனர். அடுத்திருந்த டாக்டர் மொ. அ. துரைஅரங்கனார் அவர் களும் அவ்வாறே ஆய்வுப் பட்டம் பெற ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். எனவே நான் அவர்களுக்கு அடுத்து அந்த வகையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் எனத் துறைத் தலைவர் வற்புறுத்தினார். எனவே நான் சேர்ந்த முதல் ஆண்டே 'எம். லிட்' ஆய்வுப் பட்டத்திற்கெனப் பதிவு செய்து கொண்டேன். அந்தக் காலத்தில் 'பீ.ஓ.எல்' பட்டம் பெற்றவர்கள் 'எம்.ஓ.எல்' ஆய்வுப் பட்டம்தான் பெறலாம் என்ற விதி இருந்தது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகம் அதைத் தளர்த்தி 'எம்.லிட்' பட்டமும் பெற வாய்ப்பு எனக்கு அளித்தது. அந்த மாற்றத்தின் வழியே முதன் முதலாக நான் பதிவு செய்து கொண்டேன். அப்போதெல் லாம் தமிழாசிரியராயினும் ஆய்வுப்பட்டங்கள் பெற

எழுதுவது ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்பது நியதி. சட்டம் அவ்வாறு திட்டமாகக் கூறாவிடினும் அது ஒரு வரன்முறையாக இருந்தது. பின்னால் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவரிடம் இந்த முறை பற்றி நான் விளக்கிக்கூற, இது பற்றிய கேள்வியை அவர் எழுப்பி அவர்கள் துணைவேந்தருடன் (டாக்டர் இலட்சுமணசாமி முதலியார்) கலந்த பிறகு தமிழிலும் எழுதலாம் என்ற நிலை உண்டாயிற்று. நான் என் ஆய்வுக்கு மூவர் தேவாரத்தை எடுத்துக் கொண்டேன். ('Historical Studies in Thevaram Hymns—தேவாரத்தில் வரலாற்று ஆய்வு). இந்தத் தலைப்பைத் தந்தவர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். அதன் படியே இரண்டு ஆண்டுகள் முயன்று 1947ல் ஆய்வினைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி 'எம்.லிட்' பட்டத்தையும் பெற்றேன்.

கல்லூரியில் அதற்குள் பலமாற்றங்கள் நடைபெற்றன. துறைத்தலைவர், முதல்வர் இருவரும் மாறினர். டாக்டர் மு.வ. துறைத்தலைமை ஏற்றார். நாங்கள் இருவரும் வேறுசிலரும் சேத்துப்பட்டில் ஒரே இடத்தில் குடியிருந்தோம். எங்கள் குடும்பங்கள் இரண்டும் இணைந்து ஒரே குடும்பம் என வாழ்ந்தன. மற்றும் திரு. துரை அரங்கனாரும் திரு. பாஷ்யராமானுஜம் என்ற கல்லூரி எழுத்தரும் எங்களுக்கு அடுத்து வாழ்ந்தனர். நாங்கள் நால்வரும் சில நாட்களில் இரவு நெடு நேரம் வரையில் திரு. பாஷ்யம் அவர்கள் தெருத் திண்ணையில் அமர்ந்து பலப்பல பொருள்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். கல்லூரி, அரசியல், சமூகப் பொருளாதார இயல் போன்ற பல பொருள்கள் பேசப்பெறும். அப்பொழுதெல்லாம் நினைத்திருந்தால் அங்கே பக்கத்திலே நல்ல இடங்களைக் குறைந்த விலைக்குப் பெற்றுப் பள்ளிக் கூடங்கள் தொடங்கி இருக்கலாம். ஆயினும் எனக்கு அப்போதெல்லாம் அந்த எண்ணம் தோன்றவில்லை. காரணம் என் மாதச் சம்பளம் 75 ரூபாய் படி 6-4-0 (6.25) என இருந்தமையே. மேலும் கிராமத்திலும்

என் அன்னையர் இருவரும் இல்லையாதலால், நில வருமானமும் நேரடிப் பார்வையில் இல்லாத காரணத்தால் ஓரளவு குறைந்து போயிற்று. எனவே அந்த எண்ணம் என் மனதில் எழுந்தாலும் செயலாற்றா நிலையில் அமைதியாக வாழ்ந்து வந்தேன்.

1947ல் வாலாஜாபாத்தில் (எங்க சொந்த ஊர் - பயின்ற இடம்) ஓர் உயர் நிலைப்பள்ளி அமைக்க வேண்டும் என்ற ஏற்பாடு இருந்து வந்தது. அதை எப்படித் தொடங்குவது? யார் நடத்துவது? போன்ற சர்ச்சைகள் எழ, அத்காலத்தில் மாவட்ட ஆட்சியின் தனி அலுவலராக இருந்த திரு. புருடோத்தம முதலியார் அவர்கள் வழி வகுத்துக் தந்தார்கள். ஐந்து ஏக்கர் நிலமும் இருபத்தையாயிரம் ரூபாயும் கொடுத்தால் மாவட்ட ஆட்சிப் பொறுப்பில் வாலாஜாபாத்தில் பள்ளி நடத்தலாம் என்றனர். எனினும் அங்கே உள்ளவர்தம் உட்பூசலால் ஓராண்டு வீணே கழிந்தது. அந்த ஆண்டில்தான் என் 'கடவுளர் போற்றும் தெய்வம் - கண்ணகி' என்பது பத்தாம் வகுப்புக்குப் பாடமாக அமைந்தது - பதிப்பாளர் பகுதிபோக எனக்கு ஐயாயிர ரூபாய் அதில் வந்து சேர்ந்தது. அதில் பெரும் பகுதியினைப் பள்ளிக்கு ஒதுக்கித் தந்தேன். அப்பள்ளி அமைப்பின் செயலாளனாக நான் பணியாற்றினேன். இந்து மதபாடசாலை நிறுவனர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் வேறுசிலரும் ஆயிரம் ஆயிரம் எனத் தந்தனர். ஆயினும் அவ்வூரில் ஏழையாய்ப் பிறந்து என்னோடு இளமையில் கல்வி பயின்று, பின் சென்னையில் வாணிபம் செய்து செல்வாரன தேவராச முதலியார் அவர்கள் பள்ளிக் குழுவின் தலைமை ஏற்ற பிறகுதான் பள்ளி உருவாகும் நிலை ஏற்பட்டது. அப்போது அவர் அப்பஞ்சாயத்தின் தலைவராகவும் இருந்தார். அது மட்டுமன்றி அவருக்கும் எனக்கும் நெருங்கிய நண்பராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தாமே முன் வந்து இரண்டு நாடகங்களை அவ்வூரில் நடத்தி அதில் வந்த தொகையினைப்

பள்ளி மூலதனத்துக்கென அளித்தார். அதில் மூவாயிரத்து ஐநூறுதான் வந்தது என்றாலும் அன்று அது பெரிய தொகையாகும். அப்படியே பொதுத்துறை அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் அக்காலத்திய கலெக்டர் வழியே எங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலத்தை இனாமாகப் பெற உதவினார். அண்ணாவும் அவர்களும் அரசியல் நெறியில் அன்றே இருதுருவங்களாக இருந்த போதிலும், எங்கள் பள்ளிக்கு இருவரும் இணைந்தே உதவினர். அப்படியே பள்ளியின் தொடக்கவிழா, கட்டிடக் கால்கோள் விழா போன்றவற்றுள் இருவருமே கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். இருவரும் உளத்தால் இணைந்தவர்களே என்று நாங்கள் பாராட்டுவோம்! என்றும் அவர்கள் இருவரைப்பொறுத்தவரையில் என்னிடம் பற்றும் பாசமும் கொண்டவர்கள் என்பதை என்னால் மறக்க முடியாது.

இங்கே எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. 1967ல் முதல்வர் பக்தவத்சலம் மாறி முதல்வர் அண்ணா ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தார். அவ்வாண்டு செப்டம்பரில் பக்தவத் சலம் அவர்களின் பிறந்தநாள்விழா நடைபெற்றது. அக் குழுவின் செயலாளனாக நான் பணியாற்றினேன். யாரைத் தலைவராக அழைப்பது என்ற கேள்வி எழ, முதல் அமைச்ச ராகிய அண்ணாவை அழைக்கலாம் என்றேன் நான். ஆனால் குழுவில் அனைவரும் அவர் வந்தால் நல்லதுதான், ஆனால் வரமாட்டார்; எனவே வேறு யாரையாவது தேர்ந்தெடுக்க லாம் என்றனர். நான் ஏதோ ஒரு துணிவில் அப்பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள் என்று சொல்ல, அனைவரும் இசைந்தனர். நான் நேரே நூங்கம்பாக்கம் அவின்யுரோடு, அண்ணாவின் இல்லத்தில் சென்று இந்தச் செய்தியைச் சொன்னவுடன் 'இதை விட எனக்கு வேறு என்ன வேலை; கட்டாயம் வருவேன்' என்று சொல்லி நாள், நேரம், இடம் முதலியவற்றைத் தனி அலுவலரிடம் சொல்லிக் குறித்துக் கொள்ளச் சொன்னார். அந்த விழா திருவல்லிக்கேணி நேஷனல் மகளிர் பள்ளி அரங்கத்தில் நடைபெற்றது.

இருவரும் இணைந்த அக்கூட்டத்தைக் காணப் பெருங் கூட்டம் கூடி இருந்தது. நான் 'இன்றே போல்க நும்புணர்ச்சி' என்று சங்ககாலப் புலவன் வாக்கில் இருவரையும் வாழ்த்தி வந்தவர் அனைவரையும் வரவேற்றேன். அந்த இணைந்த இரு உள்ளங்களும் பிறகு என் பணிகள் பலவகையில் விரிந்த போதும் உள்ளத்தாலும் உற்ற பல செயல்களாலும் ஆக்கம் தந்து உதவின என்பதை இங்கே காட்டக் கடமைப் பட்டுள்ளேன். அந்த அடிப்படையில் இன்றைய ஆட்சியினரும் நான் அண்ணாவின் நண்பன் என்ற காரணத்தால் எங்கள் கல்வி அறம் வளரப் பலவகையில் உதவுவதை எண்ணிப் போற்றுகின்றேன். (1938 நான் காஞ்சியில் தமிழாசிரியனாக இருந்து, மாவட்டக் கழகத் தேர்தல் களத்தில் இறங்கியபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னுடன் மாட்டு வண்டியில் வந்தும் பிறவகையிலும் என் தேர்தலுக்கு உதவி, வெற்றி காணச் செய்ததை என் காஞ்சி வாழ்க்கை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளேன்) உயர்திரு பக்தவத்சலம் அவர்கள் பள்ளிக்கு இருமுறை வந்து வாழ்த்தியதோடு அடிக்கடி நான் காணும்போதெல்லாம் பள்ளியின் வளர்ச்சி கேட்டு மகிழ்ந்து பாராட்டுவார்கள். எங்கோ சென்றுவிட்டேன். வாலாஜாபாத் பள்ளி இன்று மேநிலைப்பள்ளியாகச் சிறந்து வளர்ந்துள்ளது.

'எம். லிட்' பட்டம் பெற்றபின் பலர் என்னை டாக்டர் பட்டத்திற்குப் பதிவு செய்து கொள்ளச் சொன்னர்கள். சேதுப்பிள்ளை அவர்களும் வற்புறுத்தனர். எனவே பதிவு செய்து கொண்டேன். எனினும் மேலும் பயின்று பட்டம் பெறுவதில் என் மனம் செல்லவில்லை. 'கற்பனவும் இனி அமையும்', என்ற மாணிக்கவாசகர் மொழி என்னை ஆட்கொண்டது. எனவே இந்த டாக்டர் பட்ட முயற்சியைக் கைவிட்டேன். பின் நான் எழுதிய நூல்களுள் சில டாக்டர் பட்ட ஆய்வுக் கட்டுரைகளைக் காட்டிலும் சிறந்தமையின், அவற்றுள் ஒன்றை அனுப்பிவைக்கலாம் என அன்பர்கள் சொன்னார்கள். எனினும் அதையும் நான் செய்யவில்லை. கல்லூரிப் பணிகளுக்கு இடையில் சொந்த ஊரில்

சென்று நிலங்களைக் காண்பதும் வாலாஜாபாத் பள்ளியின் வளர்ச்சியினை நோக்குவதும் அப்படியே அங்கிருந்த இந்து மதபாடசாலையில் அப்பாவுடன் கலந்து உரையாடித் தங்குவதுமாக நாளைக் கழித்துவந்தேன். அதற்கிடையில் அமைந்தகரையில் முயன்று 1949ல் எனக்கென ஒரு தனிக் குடிலினையும் அமைத்துக் கொண்டேன். நான் நடத்திய 'தமிழ்க்கலை' யின் பெயரால் 'தமிழ்க்கலை இல்லம்' என அதற்குப் பெயரிட்டேன். சொந்தமாக, 1947ல் இடம் வாங்கி 1949ல் வீடு கட்டி, 1. 6. 49ல் குடியேறினேன். அவ் வீட்டினையும் திரு. பக்தவத்சலம் அவர்களே வந்து திறந்து வைத்தார்கள். அந்த வீட்டைக் கட்டி முடிந்த அனுபவமே பின் நான் சில வீடுகளைக் கட்டவும் பள்ளிக்கெனப் பல கட்டிடங்கள் கட்டவும் மிகவும் உதவிற்று. அதற்கு உதவியவர் அன்று முதலில் நான் குடியிருந்த வீட்டிற்கு உரியவரான முருகேச நாயகர் அவர்கள். அவர்கள் கட்டுமான நுணுக்கங்களையெல்லாம் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

என் புதிய வீட்டிற்கு வந்த பிறகு அமைந்தகரை, செனாய் நகர் பகுதியிலுள்ள பலர் எனக்கு அறிமுகமாயினர். அக் காலத்தில் புதிதாக அமைந்த அந்தச் செனாய்நகர்ப் பகுதியில் கல்விக்கூடம் இல்லை என்ற ஒரு நிலை என் உள்ளத்தில் உறுத்திற்று, உடனே அதுபற்றி அன்பர்களிடம் கலந்து ஆவன செய்ய மேற்கொண்டேன். எங்கள் பேட்டையிலேயே உள்ள 'கொன்னூர் ரெட்டியார்' எனப்பெயர் பெற்ற திரு. நாராயணசாமி ரெட்டியார் அவர்களை அணுகினேன். அவர் மகனார் நந்தகோபால் அவர்கள் உடனிருந்து உழைத்தார். விடுதலை ஆசிரியர் திரு. குருசாமி அவர்களும் உதவினார்கள். பிறகு நாங்கள் டாக்டர் சுந்தரவதனம் அவர்களை அணுகி, அக்குழுவிற்குத் தலைவராக இருக்க வேண்டினோம். அவர்களும் உளமுவந்து இசைந்தார்கள். பின் மற்றும் மூவரையும் உறுப்பினராகச் சேர்த்து 1860வது ஆண்டு சட்டப்படி பதிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டோம். அதுபோது பள்ளிக்குப் பெயர் வைப்பது பற்றிய பேச்சு

எழுந்தது டாக்டர் மு. வ. அவர்கள் திரு.வி.க. பெயரை வைக்கலாம் என்று சொல்லி, அவர் பெயரால் முன் வசூல் செய்திருந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொகையி னையும் கொடுத்து உதவினார்கள். அவர்தம் நூல்களுள் சிலவற்றின் வருவாயினைப் பள்ளிக்கு எழுதி வைப்பதாகவும் சொன்னார்கள். பிறகு அவர்களும் குழுவில் உறுப்பினரானார் கள். அந்த ஆண்டில் (1955) என் நூல் சீவகன் கதை, புதிதாக அமைந்த புகுமுக வகுப்பிற்குப் பாடநூலாக அமைந்தது. அதில் வந்த தொகையுள் பெரும்பகுதியாகிய ஐயாயிரத்தை யும் நான் பள்ளிக்குத் தந்தேன். டாக்டர் சுந்தரவதனம் அவர்கள் தம் பொருளை மிகுதியாகக் கொடுத்ததுடன் தம் உற்றார் உறவினரிடமிருந்தும் பெருந்தொகை வாங்கித் தந்தனர். (பின் தொடக்கப் பள்ளியினைத் தனியாகவே பிரித்து, அவர் பெயராலே நடத்தி வருகின்றோம்.) திரு. நந்தகோபால் அவர்களும் பொருள் உதவியதோடு, பலரிடமிருந்து பலவகையில் உதவி பெற உடன் நின்றார். இவ்வாறு நான் செயலாளனாகவும் டாக்டர் சுந்தரவதனம் தலைவராகவும் அமைய 'திரு. வி. க.' உயர் நிலைப்பள்ளிக் குழு உருவாகிப் பள்ளியும் தொடங்கப் பெற்றது; (அதில் முதல் மாணவனாக என் மகன் மெய்கண்டான் சேர்க்கப் பெற்றான்) இன்று இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுடன் அந்த இடத்திற்கே உயர்ந்த கட்டிடமாக வும் உயர் இடமாகவும் அமைந்து செயலாற்றி வருவதை யாவரும் அறிவர். அப்பள்ளி அமைத்த இடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடிசைகள் இருந்தன. எனவே அவற்றை அகற்றுவது கடினம் எனக் கருதியும் அன்று (1955) அப் பகுதியே ஊரின் கடைசியாக அமைந்ததாலும், அன்று நகராண் கழகத் தலைமைப் பொறியாளரும் செனாய் நகர் வாசியுமாகிய திரு. மீரான் அவர்களிடம் மாற்று இடம் தருமாறு வேண்டினேன். அவர் பலதிட்டங்களை அறிந்த வராதலாலே 'இது கடைசி இடமன்று, இன்னும் சில ஆண்டு களில் இதன் மேற்கிலும் வடக்கிலும் பலகல் தூரம் நகர் விரிவடையும். எனவே இந்தஇடம் நல்லது' எனக் கூறினார்.

அத்துடன் அந்தக் குடிசை வாழ் மக்களுக்கு மாற்றிடமும் தந்து உதவினார். நாங்கள் அக்குடிசைகளைப் பிரித்து அமைக்கப் பொருளுதவி செய்ய, அவர்கள் வேற்றிடம் சென்றார்கள்; பள்ளியும் உருவாயிற்று.

இந்தப் பணிக்கென நான் அடிக்கடி - ஏன் நாள்தோறும் ஆறு மாதங்களுக்கு மேலாக நகராண் கழகம் செல்வேன். அப்போது என்னிடம் சிறு 'கார்' இருந்தது என எண்ணு கிறேன். எனவே அதை நாடோறும் அங்கே காணும் நண்பர்கள் 'நீங்கள் பச்சையப்பர் கல்லூரியினை விட்டு, கார்ப்பரேஷனுக்கு வேலைக்கு வந்து விட்டீர்களா' எனக் கேட்பர்.

அப்படியே இந்த வள்ளியம்மாள் கல்வி அற மனைகளுக் காக அடிக்கடி வீட்டுவசதி வாரியத் தலைமை நிலையத்துக் குச் சென்றபோது (நந்தனம்) பல அன்பர்கள் கேட்டதும் நினைவுக்கு வருகிறது.

1955க்குப் பிறகு என் வாழ்க்கையில் எதிர்பாராத சில மாறுதல் நடைபெற்றன. 1958 தொடக்கத்தில் வாழ்க்கைத் துணையை இழந்தேன். மாற்றத்துக்காக ஓராண்டு மதுரைத் தியாகராஜர் கல்லூரியில் பணியாற்றினேன். மதுரை வாழ்க்கையைப் பற்றி என் 'வையைத் தமிழில்' ஓரளவு குறித்துள்ளேன். மறுபடியும் பச்சையப்பரில் பணி தொடர்ந்து நடைபெற்றது. இடையில் 1957ல் திரு. பக்தவத்சலம் அவர்கள் நடத்திய 'பாரதி தேவி' இதழ் நடத்துவதை நேரில் மேற்பார்வை செய்யச் சொன்னார்கள். கல்லூரிப் பணிகளுக்கிடையில் அவர் சொற்படி அந்தப் பணியினையும் ஓராண்டு செய்து முடித்தேன். அவர்களும் மறுபடி அமைச்சரவையில் இடம் பெற்றனர்; நானும் அந்தப் பணியினை விட்டுவிட்டேன்.

இவைகளுக்கு இடையில் பொங்கல்தொறும் எங்கள் ஊர் அங்கம்பக்கத்துக்குச் சென்று முறைப்படி பொங்கல் விழாவினைக் கொண்டாடி வழிபாடாற்றுவது வழக்கம். 1958ல் மனைவி மறைந்தபின் அந்த வழக்கத்தினையும்

கைவிட்டேன். எனினும் ஊருக்குச் செல்லும்தோறும் என்னை அன்புடன் வளர்த்து மனிதனாக்கிய அன்னைக்கு ஏதேனும் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்று என் மனது தூண்டிக் கொண்டே இருக்கும். ஆயினும் என் சூழலும் வாழ்வின் அமைப்பும் வருவாயும் அத்தகைய ஆக்கப் பணிக்கு வழி வகுக்கா நிலையில் என்னை எங்கோ ஈர்த்துச் சென்று கொண்டிருந்தன. அக் கால நிகழ்ச்சிகளையெல் லாம் இங்கே எழுதத் தேவை இல்லை என அமைகின்றேன். (என் சென்னை வாழ்க்கையைப் பற்றிய ஒரு வாழ்க்கை நூல் தனியாகவே வர இருக்கின்றது. இளமை வாழ்க்கை யினை இளமையின் நினைவுகள், என்ற நூலிலும், காஞ்சி யில் வாழ்ந்ததை 'காஞ்சி வாழ்க்கை' என்ற நூலிலும் தொட்டுக் காட்டியுள்ளேன்.) ஆயினும் 1967—68 ஒரு புதிய சூழல் உருவாயிற்று.

திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, என்னைக் கேளாமலேயே என்னை ஐதராபாத் உஸ்மானியப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவனாக இருக்கப் பரிந்துரை செய்தனர். அந்த இடம் தமிழக அரசு கொடுக்கும் மானியத்தாலேயே அமைக்கப் பெற்றது. எனவே இவர்கள் வழியாகவே அதற்குரியவரைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருந்தமையின், அவர்கள் என் பெயரை அதற்குப் பரிந்துரைத்தனர். அந்த முறை வகை களையெல்லாம் எங்கள் பள்ளி விழாவில் தலைமை வகித்த முன்னாள் தலைமைச் செயலர் - அக்காலத்திய (1967) கல்விச் செயலர் திரு. கார்த்திகேயன் அவர்கள் I.A.S. விழா வில் விளக்கிச் சொல்லியபோது நான் அறிந்தேன். எனக்கு அங்கிருந்து உத்தரவு வந்த பிறகுதான் யாவும் தெரியும், அரசாங்கப் பரிந்துரையின் பேரில் நியமனம் என்றிருந்ததால் உடனே முதல் அமைச்சர் அவர்களைக் கண்டேன். அவர்கள் 'நான் முதலிலேயே சொன்னால் போகமாட்டாய் என்று தெரியும்; அதனாலேயே சொல்லாமல் அனுப்பிவிட்டேன்' என்றார். மறுமொழி சொல்லாது உடன் ஐதராபாத் சென்றேன். அரசாங்க ஆணையாதலால் பச்சையப்பர்

அறநிலையத்தினரும் உடன் எனக்கு ஓராண்டு விடுப்பும் தந்து அனுப்பினர். என் ஒய்வு ஊதியம் முதலியவற்றினும் குறைபாடு இன்றி அமைந்தது.

1967-ல் நான் அங்கிருந்து திரும்பி வந்தபோது தமிழக நிலை முற்றும் மாறுபட்டிருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராயிருந்தனர். அவர் என்னை அழைத்து 'உங்களுக்கு இங்கே நிறைய வேலை இருக்கிறது! உடன் வந்துவிடுங்கள்' என்றார். எனவே மறுபடியும் பழையபடியே பச்சையப்பரில் பணியாற்றி அமைதியாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தேன்.

அண்ணா பச்சையப்பரில் பயின்றவர். அவர் முதலமைச்சரானபோது கல்லூரியில் பாராட்டுவிழா நடத்தினர். அதில் அவர் பலவற்றைப் பற்றிப் பேசியதோடு, ஒன்றைச் சுட்டிக் காட்டினார். (அப்போது நான் ஐதராபாத்தில் இருந்தேன்) அவர் சொன்னது இதுதான்.

'பச்சையப்பர் கல்லூரியின் வரலாற்றில் ஆங்கிலேயருக்குப் பின் பலர் கல்லூரி முதல்வர்களாக வந்துள்ளனர். அவர்கள் பலபலதுறையினைச் சார்ந்தவர்கள். எனினும் இதுவரைத் தமிழாசிரியர் ஒருவரைஅறநிலையம் தலைவராக நியமிக்கவில்லை. அடுத்தாயினும் அக் குறையைத் தீர்ப்பார்களாக' என்றார். நான் ஐதராபாத்திலிருந்து வந்ததும் அண்ணா என்னைக் கருத்தில் வைத்தே அப்படிச் சொன்னார் என்று பலர் கூறினர்.

பிறகு அண்ணாவின் கட்சியினைச் சேர்ந்தவர்கள் பச்சையப்பர் அறநிலையத்தைக் கைப்பற்றிய பிறகு, அண்ணாவின் சொல்லின்படி என்னை முதல்வராக்க முயன்றனர். ஆயினும் உள்ள முதல்வரும் துணை முதல்வரும் என்னினும் இளையவராதலின் அம்முயற்சி கூடவில்லை. ஆனால் புதியதாக ஒரு துணை முதல் பதவியினை அமைத்து எனக்கு அந்தப் பதவியைக் கொடுத்து,

தொடர்ந்து அறுபத்தொரு வயது வரை இருக்குமாறும் ஆணையிட்டு அறநிலையத்தார் அண்ணாவின் விழைவினை ஓரளவு நிறைவேற்றி நின்றனர். அதற்கு முன்பும், 1967ல் என நினைக்கிறேன் - ஒருமுறை துணை முதல்வர்-முதல்வர் பதவிக்கு என் பெயர் தேர்ந்தெடுத்த காலத்தில் நான் அப்பொறுப்பை வேண்டாமென்று கூறி விலகி நின்றேன். எனினும் இது மறைந்த அண்ணாவின் விழைவின்படி அமைந்ததாலும் பணியின் இறுதிக் கட்டமாதலாலும் அதை ஏற்றுக் கொண்டேன். நான் ஓய்வு பெற்றதும் எனக்கெனத் தோற்றுவிக்கப் பெற்ற அந்த புதிய பதவியும் இல்லையாயிற்று.

என்றும் அன்னையைப் பற்றிய எண்ணம் என்னை உந்திக் கொண்டே இருந்தது. அதற்கேற்றாற்போன்று 67, 68 இரண்டு ஆண்டுகளிலும் சென்னைப் பல்கலைக்கழக வரலாறு காணா வகையில் என் ‘வையைத் தமிழ்’ என்ற நூல் பல்கலைக்கழக வகுப்புகளுக்குப் பாட நூலாக அமைந்தது. அதனால் பெருந்தொகை பெற்றேன். அந்த ஆண்டில் இறுதியிலே என் உயிர் ஒப்பந்தத்திலிருந்தும் இருபத்தையாயிரத்துக்குமேல் வருமென அறிந்தேன். அப்படியே 1969ல் எனக்கு 55வயது ஆகின்றமையின் அப்போது என் தெய்வீக நிதியினை (Provident Fund) முடித்துப் பெருந்தொகை பெறலாம் என்றனர். எனவே எல்லாவற்றையும் சேர்த்தால் ஒரு இலட்சத்துக்குமேல் பெறலாம் என்ற துணிபிலே அன்னையின் பணியினை 1968ல் தொடங்கத் திட்டமிட்டேன். அதற்கேற்றாற்போல அண்ணா நகரில் எடுத்துக் கொண்ட என் மனைக்கு ஈடாக ஓர் இடம் (இரண்டுமனை) எனக்கு ஒதுக்கித் தந்தார்கள். அந்த இடத்தினைப் பயன்படுத்தியும் வரப் போகும் பெருந் தொகையினைக் கொண்டும், அங்கே அன்னையின் பெயரால் பள்ளியினைத் தொடங்கலாம் என்று 1968ல் முடிவு செய்தேன். அந்த முடிவே இன்று இந்த எல்லையில் வளர்ந்து சிறக்க நிற்கின்றது.

ஊரிலே இருந்த நிலங்கள், காஞ்சியில் இருந்த மனை முதலியவைகளை விற்றும் இடையில் வந்த உயிர் ஒப்பந்த நிதி முதலியன கொண்டும் என் பெண்கள் இருவருக்கும் பிள்ளைக்கும் தனித்தனியாக வீடுகள் கட்டி அவரவர்கள் பெயருக்கே 1961க்கு முன்பே கொடுத்து விட்டேன். பெண்கள் இருவருக்கும் மணம் முடிந்தது. அவரவர் வீடுகளின் வருவாயினை அவரவர்கள் பெறுகிறார்கள். மகனுக்கும் அப்படியே. அமைந்தகரை வீட்டின் வருவாயினை வாங்கிய கடன்களைத் திருப்புவதற்கும் பிற செலவுகளுக்கும் பயன்படுத்தினேன். ஊரில் பரம்பரை நன்செய் புன்செய் நிலங்கள் நூறு ஏக்கர் அளவில் இருந்தவற்றையும், மனைகள், மாந்தோப்பு, தென்னந்தோப்பு முதலியவற்றையும் விற்று அந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்தேன். (தற்போது ஒரு மனையும் சுமார் 6 ஏக்கர் நிலமும் எனக்கு ஊரில் உள்ளன) எனவே மற்றைய வருமானங்களை என்னை வளர்த்து ஆளாக்கிய அன்னையின் பணிக்குச் செலவிடுதல் என முடிவு செய்தேன். பிள்ளைகளுக்கு உரியவற்றைச் செய்து விட்டமையானும் அவர்கள் யார் சொல்லையும் கேளாவகையிலே நம் உணர்வோடு இருந்தமையானும் அனைத்தும் என் தந்தை வழிவந்த செல்வம் இன்மையானும் அன்னை வழியே வந்தமையாலும் என் பணியில் யாரும் குறுக்கிடவில்லை; ஒத்துழைத்தார்கள் என்றே சொல்லலாம்.

ஐந்து பிள்ளைகளோடும் மூன்று ஆசிரியர்களோடும் அன்று தொடங்கிய பள்ளி என் வீட்டின் (அன்று 4 ஐயாவு தெரு - இன்று 29) அடித்தளத்தில் தொடங்கப்பெற்றது. அப்போது வீட்டின் பின்புறத்தில் குடிஇருந்தவர் விரைவில் காலி செய்வதாக இல்லை; அதற்கென வழக்குமன்றம் செல்ல வேண்டியும் வந்தது; கடைசியில் காலி செய்தார். முதலாண்டில் அதிக மாணவர் இல்லையாதலின் அதிகத் தொல்லை இல்லை. அடுத்த ஆண்டிலே சற்றே மாணவர் தொகை கூடிற்று. அந்த ஆண்டிலேதான் முழுவீடும் பள்ளிக்

கெனப் பயன்படுத்தப்பெற்றது. அங்கே மூன்றாம் வகுப்பு வரையில்தான் நடத்த முடிவு செய்தோம். இன்றும் அங்கே மூன்றாம் வகுப்பு வரையில்தான் உள்ளது.

அதே வேளையில் அண்ணா நகரில் எனக்கென ஒதுக்கிய 178வது எண்ணுள்ள மனையில் கட்டடம் கட்ட நினைத்தேன். 1969ல் என் தெய்வீக நிதித் தொகையும் உயிர் ஒப்பந்த நிதித் தொகையும் நூல்விற்ற தொகையும் ஒரு சேர வந்தமையின் உடன் கட்டடம் கட்டல் எளிதாக அமைந்தது.

என் வீட்டினைக் கட்டிக் கொடுத்த அதே முருகேச நாயக்கர் மேற்பார்வையிலேயே ஓர் ஒப்பந்தக்காரர் வழியே அடித்தளத்தினைக் கட்டி முடித்தேன். இதுவரையில் 'சென்னைத் தளம்', என்ற அமைப்பில் மரம் இட்டுக்கட்டிப் பழக்கமான எனக்கு இந்த 'கான்கீரிட்' கட்டடம் சிறிது புதிதாகத்தான் இருந்தது. ஒப்பந்தக்காரர்தம் உடன் உதவியாலும் மற்றவர் துணையாலும் கட்டடம் ஓரளவு செம்மையாகக் கட்டி முடிக்கப் பெற்றது. அதற்குத் தேவையான மரங்களையெல்லாம் சேலம் ஏர்க்காட்டிலிருந்து மிகக் குறைந்த விலைக்குக் கொண்டு வந்தேன். எப்படியோ ஓரளவு மனநிறைவோடு அடித்தளத்தினை 1969ம் ஆண்டு கட்டி முடித்து நல்லநாளில் (விசயதசமி) வகுப்பினையும் தொடங்கி விட்டோம். அத்தொடக்க விழாவில் நாவலர் நெடுஞ்செழியன், திரு. பக்தவத்சலம், திரு. நெ. து. சுந்தரவடிவேலு ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதை அன்று நாட்டிய அடிக்கல் இரண்டும் சான்று கூறிக்கொண்டே இருக்கின்றன.

அண்ணாநகர் புதிதாக வளர்ந்து வரும் பகுதியாதலாலும் அன்று முறைப்படி நடத்தப் பெறுகின்ற பள்ளி இல்லையாதலாலும் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இதனைப் பெரிதும் வரவேற்றனர். இங்கே முதலில் 1970ல் தான் ஐந்தாம்வகுப்பு வரையில் தொடங்கினோம். '178

எண்ணுள்ள மனையில் அடித்தளத்தில் மட்டும் ஆறு அறைகள், அலுவலக அறை, முதல்வர் அறை என்ற அளவில் கட்டிடம் அமைய-பக்கத்திலேயே சிறு குடி ஒன்று வேய்ந்து கொண்டோம். எங்கள் கட்டடத்துக்குப் பக்கத்தில் உள்ள சுமார் 16மனை, வணிகமுறைக் கட்டிடத்துக்கென ஒதுக்கப் பெற்று, வீட்டுவசதி வாரியத்திடமே இருந்ததால், அந்தக் காலி இடத்தினை விளையாட்டிடமாகப் பயன்படுத்திக் கொண்டோம். ஆனால் இன்று, அந்த இடமும் எங்களுக்கு உரிமையாகி, அதில் பல லட்சங்களில் மாடிகள் அமைந்து ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட குழந்தைகள் கல்வி பயிலும் இடமாகும் என நான் நினைக்கவே இல்லை. முதல் கட்டிய கட்டிடத்திலே ஏதோ சிறிய அளவு என் அன்னையின் நினைவாக ஐந்தாவது வகுப்பு வரையில் பள்ளியை அமைத்தால் போதும் என்றுதான் நினைத்தேன். அதனாலேயே இந்தப் பள்ளியை எந்தக் கல்வித்துறையுடன் இணைப்பது என்ற எண்ணமே எனக்கு எழவில்லை. மேலும் அக்காலத்தில் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டையுமே பயிற்சி மொழியாக்க நினைத்துச் செயல்பட்டேன்.

'தமிழ்' 'தமிழ்' என்று விண்முட்டப் பேசும் இந்த நாளில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு வருங்காலம் இருட்டாக உள்ளது என்பதை நாடு அறியும். தமிழ் நாட்டில் தமிழ் பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம் தருவதில்லை; வெளிமாநிலங்களுக்கோ அவர்களால் செல்ல முடியாது. இதனாலேயே அரசாங்கப் பள்ளிகளிலும் அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக இருப்பினும் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கே அதிகமாக மாணவர் சேர விரும்புகின்றனர். 'தமிழ்' பற்றி மேடையில் முழங்கும் தலைவர்களும் பிறரும் கூடத் தத்தம் பிள்ளைகளை ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகளில் சேர்த்துப் பயில வழி காணுகின்றனர். பெருஞ் செல்வர்களோ, பெருந்தொகை கொடுத்து, ஆங்கிலப் பயிற்று மொழிப்பள்ளிகளில் இடம் வாங்குகின்றனர்.

எனவே, ஏழை மக்களும் அதிகார மற்றவர்களுமே வேறு வழி இன்றி, தமிழ் பயிற்று மொழி வகுப்புகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்புகின்றனர். தமிழ் தமிழ்நாட்டில் வளர்வதைக் காட்டிலும் அமெரிக்கா, இங்கிலாந்து, மலேயா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் சிறக்க வளர்ந்து வரும் தன்மையினையும் பிறவற்றையும் என் 'ஏழு நாடு களில் எழுபது நாட்கள்' என்ற நூலில் பலவிடங்களில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

எங்கள் பள்ளியில் தொடக்கத்தில் தமிழ்—ஆங்கிலம்—இரு மொழிகளையும் பயிற்று மொழி என்று அறிவித்தோம். விண்ணப்பங்கள் வந்தன. ஆயினும் ஐந்து வகுப்புகளுக்கும் தமிழிற்கு மூன்று விண்ணப்பங்கள்தாம் வந்தன. மற்றவை ஆங்கிலப் பயிற்று மொழிக்கே. எனவே அந்த ஆண்டு ஆங்கிலத்தை மட்டுமே பயிற்று மொழியாக்கினோம். அடுத்த ஆண்டு முயன்றபோதும் இதே நிலைதான். எனவே ஆங்கிலத்திலேயே பயிற்றுமொழி என்ற அமைப்பில் எங்கள் பள்ளி அமையலாயிற்று. எனினும் தமிழ் இங்கே பயிலும் மும்மொழிகளுள் ஒன்றாகக் கட்டாயமாக அமைந்துள்ளது. எங்கள் பள்ளியில் பயிலும் மாணவர் யாவராயினும் (தமிழரல்லாதார் ஏறக்குறைய பாதி அளவில் உள்ளனர், இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாகக் கட்டாயம் தமிழ் பயின்றாக வேண்டும் என்ற நியதி உள்ளது. எனினும் மத்திய கல்வி குழுவின் ஆணையின் கீழ் உள்ள பள்ளிகள் சிலவற்றுள்ளும்—மத்திய அரசாங்கமே நடத்தும் பள்ளிகளி லும்-சென்னையிலே மாணவர் தமிழைப் படிக்க விரும்பினா லும் அதற்கு வாய்ப்பு இல்லாமல் தமிழ் பயிலும் நிலை யில்லை. மும்மொழித் திட்டம் இருப்பினும், தமிழல்லாத வேறு மூன்று மொழிகளையே தமிழ்க் குழந்தைகள் பயில வேண்டியுள்ளது. (இதுபற்றித் தமிழக அரசாங்கத்துக்கும் மத்திய கல்விக்குழுவிற்கும் நான் முன்னரே பல கடிதங்கள் எழுதியும் பயனில்லை). எனவே எங்கள் பள்ளியில் மாநில மொழியும் இந்தியமொழியும் உலகமொழியும் கட்டாயம்

பயிற்றப்படுவதோடு, பாடங்கள் அனைத்தும் உலக மொழியாகிய ஆங்கிலத்திலேயே கற்றுத் தரப் பெறுகின்றன. இந்த நியதியில் சில உண்மைகளை நான் கண்டு கொண்டேன். தமிழரல்லாத பெண்கள் தமிழில் விஞ்சிநின்று தமிழில் சிறக்கப் பேசியும் எழுதியும் தமிழில் முதலிடம் பெற்றுப் பரிசுகள் பெறுகின்றனர். அப்படியே தமிழ்ப் பெண்கள் இந்தியில் சிறக்கப் பயின்று முதலிடமும் பரிசும் பெறுகின்றனர். எனவே குழந்தைகள் பயில்வதில் சளைப்புக் காட்டுவதில்லை என உணர்ந்தேன்.

இங்கே தமிழகத்தில் இருமொழித்திட்டம் இருப்பினும் தமிழ் கட்டாயம் இல்லை. கட்டாயம் ஆக்க நினைத்தாலும் முடிவதில்லை. தமிழ் நாட்டில் பாடதிட்டப்படி தமிழ் பிற இந்திய மொழிகளுடன் பிரஞ்சு, ஜெர்மன் போன்ற அந்நிய நாட்டு மொழிகளுள் ஒன்றாகவே உள்ளது. எனவே ஆங்கிலத்தோடு, பிரஞ்சோ, சர்மனோ, இந்தியோ— எதுவோ எடுத்துப் பயிலலாம். தமிழ் நாட்டில் தமிழைத் தொடாமலேயே உயர்கல்வி வரையில் செல்லலாம். நான் தற்போது ஆரம்பித்த தமிழக அரசு ஆணைக்குட்பட்ட கல்வி நிலையத்தில் (Matriculation School) தமிழைக் கட்டாயமாக்க முடியவில்லை. ஆங்கிலத்துடன் பிரஞ்சு, சர்மன், இந்தி என்று படிப் பவரைத் தடுக்க முடியாது. ஆனால் மத்திய கல்வி முறை வழி அவற்றோடு தமிழையும் கட்டாயமாக்கி இங்கே பயிலும் அனைவரும் தமிழைப் படித்தாக வேண்டும் என்ற முறையில் பள்ளியை நடத்தி வருகிறோம். பிற மாநிலங்களில் அவ்வந் நிலத்து மொழி ஓரளவு கட்டாயமாக்கப் பெற்றுள்ளமை போன்று இங்கே தமிழைக் கட்டாயமாக்கலாம். மனம் வேண்டும்.

திரு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபோது எங்களுடைய வேண்டுகோளையேற்று தமிழைப் பொது, சிறப்பாக்கி, பொதுவை அனைவரும் பயிலவும் சிறப்பிற்கு பதில் தாய் மொழி அல்லது வேற்றுமொழி பயிலவும் வழி செய்தனர். அதற்குரிய பாடநூல்களை

எழுதச் சிலர் தயங்கியபோது, அமைச்சர் ஆணையின்படி நானே எழுதித் தந்தேன். (மாக்மில்லன் கம்பெனியார் வெளியிட்டனர்.) அத்தகைய பாடநூல்களை பின் பலர் வெளியிட்டனர். சில ஆண்டுகள் அம்முறை நன்கு சிறந்தது. ஆனால் அதே காங்கிரஸ் அமைச்சரவையில் வேறொருவர் கல்வி அமைச்சராக வந்தபோது அந்த முறையை நீக்கினர். அன்று முதல் இன்று வரையில் தமிழ் நாட்டில் தமிழ் கட்டாயம் இல்லை என்ற நிலையே நிலவி வருகிறது. இந்த நிலைக்கு மாறாக மத்திய கல்வி முறைவழி நாங்கள் இங்கே தமிழைக் கட்டாயமாக்கி நடத்தி வருகிறோம். மறுபடியும் எங்கோ சென்றுவிட்டேன். மன்னியுங்கள்.

இவ்வாறு பல்வேறு வகையில் பள்ளிகளை ஆங்காங்கே வளர்த்து, கல்விப் பணியினை மேற்கொண்ட நான்—என் அன்னையின் பெயரால் இந்த அறத்தினையும் கல்விக் கூடத்தினையும் நிறுவி வளர்த்து வருகிறேன். எங்கோ கிராமத்தில் என்னைப் பெற்றெடுத்த அன்னையின் பெயரால் நான் இதை நடத்துவதற்குக் காரணம் அவளே என் பிறவிக்குக் காரணம் என்பது மட்டுமன்றி, என்னை பெற்று, வளர்த்துப் பேரிட்டு உலகில் மனிதனாக உலவச் செய்தவளே அவள் என்பதுமாகும். என் தந்தை இளமையிலேயே மறைந்தது மட்டுமன்றி, இருந்தபோதும் அவர் என் வளர்ச்சியில் அக்கறை காட்டாது இருந்தார். ஆனால் அதே வேளையில் தன் ஒரே மகன் வளர்ச்சியடைய வேண்டும் என்றும், அதே சமயத்தில் தன்னை விட்டு விலகி வேறு எங்காவது அரசாங்க அலுவலிலோ வேறு வகையிலோ செல்லாதிருக்கவேண்டும் என்றும் விரும்பினார்கள். அதன் படியே பள்ளியிறுதி வகுப்பினை முடித்து மேலே படிக்கச் செல்லாமல் அவர்கள் தனியாக இருந்தபோது நானும் உடன் கிராமத்தில் இருந்தேன். பின் தனியாகப் பயின்று புலவர் பட்டம் பெற்ற பிறகும், அவர்கள் விருப்பின்படியே அருகில் இருக்கும் காஞ்சியிலேயே பணியாற்றினேன். அக் காலத்தில்தான் (1941) அன்னையாரும் பெரிய அன்னை

யாரும் மறைந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகே நான் மேலே பட்டப்படிப்பு முதலியவற்றைத் தனியாகப் பயின்று தேர்ச்சி பெற்றேன். பிறகு சென்னைவந்து பச்சையப்பரில் பணி ஏற்று, வாலாஜாபாத் மேனிலைப்பள்ளியினையும் பின் திரு.வி.க. பள்ளிப் பணியினையும் இந்த வள்ளியம்மாள் அறப்பணியினையும் தொடங்க முடிந்தது. ஒரு வேளை அவர்கள் இன்றும் நெடுங்காலம் வாழ்ந்திருந்திருப்பார்களா யின், நான் மேலே படித்திருக்க மாட்டேன்; சென்னைக்கும் வந்திருக்க மாட்டேன். என் வாழ்வு எப்படி இருந்திருக்கும் என எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை. சென்னை வந்ததாலே ஊரிலே இருந்த நிலங்களுள் பெரும்பகுதியை விற்று, பிள்ளைகளுக்கு இங்கே தனித்தனி வீடுகள் கட்டி, அவர்கள் வாழ்க்கைக்கு வருவாயினைத் தேடித்தர முடிந்தது. இல்லையானால் அரசாங்கத்தின் புதிய சட்டங்களின்படி என் நிலங்கள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கும். இப்போது நான் கொண்டுள்ள ஆறு ஏக்கர் அளவுதான் அப்போதும் நிலைத்திருக்கும். அதிலும் இன்றைய சூழ்நிலையில் ஊரில் ஒழுங்காகப் பயிரிடமுடியாது நான் திண்டாட வேண்டி வந்திருக்கும். (ஊரில் உள்ள வற்றை யும் முற்றும் விற்றுவிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன) காஞ்சியிலோ, இன்றேல் வாலாஜாபாத்திலோ ஒரு வீடு வாங்கிக் கொண்டு அமைதியாக என் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்திருப்பேன். இத்தனைப் பெரியவர்களின் நல்ல கூட்டுறவும், கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பல் துறைகளில் பணியாற்றவும், இதுபோன்ற கல்வி அறங்களை நிறுவி ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குக் கல்விப் பணி ஆற்றவும் இயலாது கழிந்திருக்கும். எனவே என் அன்னையார் வாழ்ந்தபோது என் வளர்ச்சியினைக் கண்ணும் கருத்து மாகப் போற்றியமை போன்றே அவர்கள் மறைந்த பிறகும் என் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என எண்ணுகிறேன். ஆம்! இப்போதும்கூட எனக்குச் சில சமயங்கள் இடர் வந்துற்ற போதிலெல்லாம் அவர்கள் கனவின் மூலமும் தோன்றாத் துணையாகவும் இருந்து உதவி

வருவதை நான் ஒருவனே அறியமுடியும். ஒரு சிலர் இதைச் சொன்னால் எள்ளி நகையாடலும் செய்வர். ஆயினும் இறைவனும் அன்னையும் என் இரு பக்கலிலும் இருந்து 'இடரினும் தளரினும்' 'அஞ்சேல்' என்று ஆதரிக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் அருளாலேயே, எத்தனையோ கொடுமையாளர்கள் இழைக்கும் இன்னல் களைத் தகர்க்கும் முகத்தான், சில நல்லன்பர்கள் என் முயற்சிக்கு முற்றும் ஆதரவாக இருந்து என் வாழ்க்கை அன்று வளர்ந்ததற்கும் இன்று இந்த அறம் உயர்வதற்கும் உதவி னார்கள் - உதவுகிறார்கள் என்பது முற்றும் உண்மையாகும். ஒரு சிலர் என்னென்ன வகையில் தீங்கிழைக்கலாம் எனத் திட்டம் தீட்டிக் கொடுமை செய்யும் வேளைகளிலெல்லாம், சில நல்லவர்கள் இடையில் வந்து, அந்தக் கொடுமைகளை யெல்லாம் துடைத்து என் அறப்பணி ஒல்லும் வகையான் வளர உதவுகிறார்கள். அதுமட்டுமன்றி என்னைச் சூழ்ந்து, எனக்குக் கொடுமை இழைந்தவர்களெல்லாம் அவரவர் இருந்த பதவி நிலைமாறி, திசை கெட்டுப் போவதையும் காண்கின்றேன். எனினும் அவர்கள் நிலையைப் பற்றி நான் எண்ணி இரக்கப்படுவதோடு, இறைவனிடம் 'எனக்காக அவர்களை நலிவுறுத்த வேண்டாம்' என்ற வேண்டு கோளைத்தான் என்னால் விடுக்கமுடிகிறது. இவ்வாறு இருந்த போதும் மறைந்த பிறகும், என் அன்னை உடனிருந்து உற்றுழி எல்லாம் உதவுகின்ற காரணத்தினா லேயே ஓரளவு நான் எடுத்த பணி முட்டின்றி நலம் பெறுகிறது.

பள்ளி வரையறுத்த சட்டதிட்டங்களின்படியே நடை பெறுகின்றது. 1974ல்தான் எங்களுக்கு மத்திய கல்விக் குழுவின் ஒப்புதல் கிடைத்தது. முன்னமேயே எங்கள் கல்விக் குழுவினை 1971ம் ஆண்டு. அந்த ஆண்டின் 225வது எண்ணுள்ள குழுவாக 1860ம் ஆண்டின் சட்டப்படி பதிவு செய்து கொண்டோம். அதில் எழுவர் உறுப்பினராக உள்ளனர். இரண்டொருவர் தவிர்த்து மற்றவர்கள்

இன்றளவும் இதில் உறுப்பினர்களாக இருந்து செயலாற்றி ஒத்து உயர்வுக்கு வழி கோலி உதவுகின்றனர். எனவே இது சட்டப்படி இயங்கும் பள்ளியாகும். மேலும் தொடக்கத்தில் என் வருவாயின் பெரும் பகுதியினை இதன் வளர்ச்சிக்குச் செலவிட்டதோடு, பின் இதில் வளர்ச்சிக் கட்டணம் முதலிய வற்றின் வழியே வரும் வருவாயினையும் பிற வாடகை முதலியவற்றையும் மேலும் மேலும் இதன் வளர்ச்சிக் கெனவே செலவிடுகிறோம். அதனாலேயே தற்போது ஐம்பது லட்சத்துக்கு மேலான கட்டிடங்களும் அண்ணா நகரில் நூறு மனை நிலங்களும் பெற்றுத் திறம்படச் செயலாற்றமுடிகின்றது. இன்று இவற்றின் மதிப்பு பல மடங்கு அதிகமாகி உள்ள தன்மையினையும் யாவரும் அறிவர். ஆயினும் அவற்றைப் பெறுவதற்கும் கட்டடங் களைக் கட்டுவதற்கும் நாங்கள் பட்ட கஷ்டங்களை ஒரு சிலரே அறிந்திருக்கமுடியும். எப்படியோ ஒருவகையில் முயன்று பதினெட்டு ஆண்டுகள் கழிந்த பிறகே நான் திரும்பிப் பார்க்க நினைத்தேன்; திரும்பி பார்க்கும் போது திகைக்காமல் என்ன செய்ய முடியும்?

1974,75ல் வீட்டு வசதி வாரியத்தார் பக்கத்தில் உள்ள பதினான்கு மனைகளை விரும்பிக் கொடுத்து உதவினர். அப்படியே 1977ல் 77மனை கொண்ட - தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளி உள்ள இடத்தினையும் தந்தனர். ஆயினும் அந்த இடத்தினை நான்கு ஆண்டுகள் கழித்தே - 1981ல் உரிமையாக்கிக் கொள்ளமுடிந்தது. அதற்கிடையில் அன்றைய வீட்டு வசதி வாரியத் தலைவரும் பிறரும் இழைத்த செயல்களையும் பிற நிலைகளையும் உதவிய நல்லவர்தம் பண்புகளையும் இந்நூலிலே தனியாக எழுதி யுள்ளேன். அப்படியே மெட்ரிகுலேஷன் பள்ளியினைப் பற்றியும் தொழிற்கல்வி போன்ற பிறவற்றைப் பற்றியும் தனியாகச் சுட்டியுள்ளேன்.

ஆம்! பெற்றாள்! வளர்த்தாள்! பெயரிட்டாள் என் அன்னை வள்ளியம்மாள். அவளின்றி நான் இல்லை.

எனவே அவள் பெயரை என்றும் நிலவும்வண்ணம் ஏதேனும் செய்யவேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் என்றோ முகிழ்ந்தது. இன்று நல்லவர் உடன் துணையால் உருப்பெற்றது. அதிலும் இளமை முதல் என்னோடு பழகி நின்ற பெரியவர் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அமைந்த நகரில் இப்பணி இருப்பதை எண்ணி நான் மிகவும் அகமகிழ்கின்றேன். பெற்று வளர்த்துப் பெயரிட்ட அந்த அன்னையின் பெயரால் அமைந்த இப்பள்ளி ஆண்டுதோறும் வளர்ந்த வளர்ச்சியினைப் பற்றி இனி ஓரளவு காணலாம் என எண்ணுகிறேன். பிறகு முறையே இதில் பயின்ற மாணவர், பெற்றோர், ஆசிரியர், மற்றோர், வீட்டுவசதி வாரியம், அரசாங்கம் போன்ற மற்றவர்தம் பல்வேறு பணி களையும் பிறவற்றையும் விளக்க நினைக்கின்றேன். அவை பற்றியெல்லாம் நினைக்கும்போது உண்மையில் திகைப்பே உண்டாகின்றது. ஒருபுறம் இவ்வளவு நல்லவர்களா! என்ற வியப்பும், ஒருபுறம் இவ்வளவு பொறாமைக்காரர்களா? என்ற அச்சமும், மற்றொருபுறம் இப்படியும் சில மனிதர் களா? இப்படியும் வாழ எண்ணுகிறார்களா? என்ன அதிசயமும் பிறிதொருபுறம் இதுவும் உலகமா? என்ற கேள்வியும் எழுகின்றன. இத்தகைய எண்ணச் சூழல் களுக்கிடையே நான் அடுத்த பகுதிக்குள் நுழைகின்றேன்.

# 3. தோற்றமும் வளர்ச்சியும்

பெற்று வளர்த்துப் பெயரிட்டுப் பெரியவனாக்கி உலகில் மனிதனாக உலவச் செய்த அன்னை வள்ளியம் மாளுக்கு என நிலைத்த ஒரு பணியினைச் செய்ய என் உள்ளம் நெடு நாள் நீடு நினைந்தது எனக் கூறினேன் அல்லவா! என் அன்னையாரும் பெரிய தாயார் மீனாட்சி அம்மாளும் ஒருவர்பின் ஒருவராக 1941-ல் மறைய, அந்த எண்ணம் திண்ணிதின் வலுப்பெற்றது. அப்பொழுது நான் காஞ்சியில் ஆந்திரசன் பள்ளியில் தமிழாசிரியனாகப் பணி புரிந்துவந்தேன். அவர்கள் நினைவாக ஏதேனும் நிலைத்த பணி செய்ய எண்ணியபோது எங்கள் ஊர் அங்கம் பாக்கம் மறுகரையில்—பாலாற்றின் வடகரையில், எங்கள் வீட்டுக்கு நேர் வடக்கே புளியம்பாக்கம் கிராமத்தை ஒட்டி, சமுதாய நிலமாக சுமார் ஆறு ஏக்கர் நிலம் இருந்தது. பக்கத்தி லேயே நெடுஞ்சாலையும் புகைவண்டித்தடமும் சென்றன. எனவே அந்த இடத்தை விலைக்குப் பெற்று, அங்கே ஒரு தொழிற்சாலையோ பள்ளியோ நிறுவ நினைத்தேன். 1942-ல் அதற்கென ஏற்பாடுகளையும் செய்தேன். புளியம் பாக்கத்தில் இருந்த கிராம முனிசிப் இராகவ நாயக்கர் அவர் களும் கணக்கப்பிள்ளை அவர்களும் உதவினர். தங்களுக்குச் சொந்தமான நிலங்களை குறைந்த விலைக்கு (ஏக்கர் ரூபாய் 40/-) விரும்பித் தந்ததோடு மற்றவர்களையும் தர ஏற்பாடு செய்தனர். ஆனால் ஒரு சிலர் தர மறுத்த காரணத்தால் சுமார் நான்கு ஏக்கர் மனையே வாங்க முடிந்தது. எனினும் அதன் பக்கத்திலேயே உள்ள அரசாங்க உரிமையான ஆற்றுப்படுகைக்கு பக்கத்தில் இருந்த சுமார் ஆறு ஏக்கர் நிலத்தை அரசாங்கத்தின் மூலம் கேட்டு வாங்கலாம் எனத் திட்டமிட்டு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருக்கும் விண்ணப்பித்தேன். அதற்கு இடையில் நான் 'B.O.L.' பயில

அடிக்கடி சென்னையில் வந்து தங்கியதனாலும் தொடர்ந்து இடைநிலை, பட்டப்படிப்புகள் படிப்பதில் முனைந்திருந் தமையாலும் அந்த முயற்சியினைத் தொடர்ந்து மேற் கொள்ள முடியவில்லை. 1944-ல் B.O.L. பட்டப்படிப்பினை முடித்ததும் என் வாழ்க்கை நிலையே மாறிற்று. காஞ்சியில் புதிதாக வந்த தலைமை ஆசிரியரும் என் கீழாகத் தமிழ்த் துறையில் பணியாற்ற வந்த, எனது வாலாஜாபாத் பள்ளி ஆசிரியரும் சேர்ந்து செய்து வந்த செயல்களால் அப்பள்ளி யில் தொடர்ந்து பணியாற்றா நிலைகள் உண்டாயின. எனவே அப் பள்ளியில் இருந்து விலகினேன். அதே வேளை யில் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியர் தேவை என்ற விளம்பரத்தினைக் கண்டு விண்ணப்பித்தேன். முயன்று அப்பதவியினைப் பெற்று 27-6-44-ல் பச்சையப்ப ரில் பொறுப்பேற்றேன். இடையில் வாலாஜாபாத்தில் நான் பயின்ற இந்துமத பாடசாலை'யின் நிறுவனர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் என்னை அப்பள்ளியிலேயே இருந்து கொண்டு அதன் வளர்ச்சியைக் கவனிக்குமாறு கேட்டனர். பல்வேறு காரணங்களால் அது என்னால் இயலவில்லையாயினும், சென்னைக்கு வந்தபிறகு, அவர் விருப்பப்படி, அடிக்கடி வாலாஜாபாத் சென்று அப் பள்ளியின் வளர்ச்சியில் கருத்திருந்தி ஆவன செய்து வந்தேன். வாரத்திற்கு இருமுறையாயினும் சென்று மாணவர், மற்றவர் நலம் கண்டு வருவேன், அதற்கு இடையில் வாலாஜாபாத்தின் கிழக்கோடியில் உள்ள புளியம்பாக்கம் நிலத்தில் என்ன செய்யலாம் எனத் திட்ட மிட்டேன். எனினும் சென்னை வாழ்க்கையின் வேலை மிகுதியும் வேறு பல்வேறு சூழல்களும் அந்தப் பணியினைத் தொடரா வகையில் என்னை எங்கோ வேறு வழியில் ஈர்த்துச் சென்றன. எனினும் காலம் வரும் வரும் என்று காத்திருந்தேன். அக்காலம் வேறு வகையில் என்னை இங்கே சென்னையில் அண்ணா நகரில் அன்னைப் பணி யினைத் தொடங்க ஆணையிட்டமையால், இதன் முழு

வளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கியபின் 1980-ல் அப் புளியம்பாக்கம் நிலத்தினை வேறு அறச்செயல் தொடங்கு மாறு வேறு ஒருவருக்குத் தந்துவிட்டேன். எனினும் அங்கே தொடங்க நினைத்த பணியினை விட்டுவிட மனமில்லை.

வாலாஜாபாத்திலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கலாம் என்ற முயற்சி என் உள்ளத்தில் இருந்தது. ஆயினும் அதைப் போற்றி வளர்க்கக்கூடிய பெரும் பொருளோ வாய்ப்போ எனக்கு அப்போது இல்லை. எனினும் எப்படியும் முயன்று ஓர் உயர்நிலைப் பள்ளி அங்கே இல்லையாதலால், அதைக் கொண்டுவர வேண்டும் என முயன்றேன். நல்லவேளை அதற்கு அப்போது வாலாஜாபாத் பஞ்சாயத்துக் குழுவின் தலைவரும் என்னோடு பயின்றவருமான திரு. தேவராச முதலியார் அவர்கள் உதவ முன்வந்ததால் 1947-ல் தலைவராகவும் நான் செயலாளராகவும் இருந்து ஒரு குழு அமைத்து, இருபத்தையாயிரம் ரூபாய் வசூல் செய்து ஒரு பள்ளியினை அரசாங்கம் அளித்த ஆறு ஏக்கர் நிலத்தில் நிறுவினோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்பள்ளி நிதிக்கென வாலாஜாபாத்திலே இரண்டு நாடகங்களை நடத்தித் தந்தனர். அத்துடன் அப் பள்ளி தொடங்க எல்லா உதவி களையும் செய்தனர். அரசாங்கத்தின் சார்பிலும் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த திரு. மீ. பக்தவத்சலம் அவர்களும் ஆறு ஏக்கர் நிலம் பெறவும் பிற வகையிலும் உதவினர். பின் அவர்கள் கையாலேயே அப்பள்ளி தொடங்கி வைக்கப் பெற்றது. மாவட்டத் தனி அலுவலராக இருந்த T. புருஷோத்தமர் அவர்கள் பள்ளி அமைய உதவினர். என் அன்னையின் பேரில் இங்கொன்றும், என் எண்ணப்படி புளியம்பாக்கத்தில் இன்றேனும், அங்கே வாலாஜாபாத்தில் ஓர் பள்ளியை நிறுவிய நிலையினை எண்ணி என் மனம் அமைதியுற்றது. பின் அதனைச் செங்கற்பட்டு மாவட்டம் ஏற்க, இன்று அது அரசாங்கப் பள்ளியாய் வளர்ந்து, மேனிலைப் பள்ளியாகி,

ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்குக் கல்வி வழங்குகிற நிலை கண்டு மகிழ்கின்றேன். அதற்குத் துணையாய் அமைந்த அனைவரையும் எண்ணி வணங்குகின்றேன். இப் பணி அனைத்தும் என் கல்லூரிப் பணிக்கு இடையில் அப் பணிக்கு ஊறுநேரா வகையில் நிகழ்ந்தனவேயாம்.

இவ்வாறு சில ஆண்டுகள் கழிய நான் சென்னையில் அமைந்தகரை செனாய் நகர்ப் பகுதியில் எனக்கென வீடும் 'எம். லிட்.' போன்ற உயர் பட்டங்களும் பெற்ற பின்பும் அன்னையின் பெயரால் பணி தொடங்கும் எண்ணம் மட்டும் என் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. 1955-ல் மற்றொரு வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. ஆயினும் அப்போதும் எனக்குப் போதிய வசதி இல்லையாதலால், அப்போது எங்கள் துறைத் தலைவராக இருந்த டாக்டர் மு. வரதராசனார் அவர்களைக் கலந்தேன். வேறு சிலரும் செனாய் நகரில் பள்ளி அமைக்க உதவுவதாக வாக்களித் தனர். மு. வ. அவர்கள் திரு. வி. க. மறைவிற்குப் பின் அவர் பெயரால் சேர்த்து வைத்திருந்த பெருந்தொகை யினைத் தருவதாகவும் திரு. வி. க. பெயராலே பள்ளி அமைக்கலாம் என்றும் கூறினர். அத்தொகை சேர்ந்ததால் எனக்கும் சிறு பங்கு உண்டு. எனினும் எங்களிடம் பெரும் பொருள் வசதி இன்மையின் டாக்டர் சுந்தரவதனம் அவர் களை அணுகினோம். அவர்கள் தலைவராக இருக்க இசைந்ததோடு, பள்ளி வளர்ச்சிக்குப் பெரும் பொருள் தந்து உதவி, இன்றளவும் அப் பள்ளிக் குழுவின் தலைவராக இருந்து உதவி புரிகின்றனர். அன்று செயலாளனாக இருந்த நான், இன்றும் அதன் உறுப்பினனாக இருந்து அதன் வளர்ச்சி கண்டு மகிழ்கின்றேன். அன்னையின் பெயரில் இன்றேனும், அன்னையார் இறுதிச் சடங்கினை எங்கள் ஊர் அங்கம்பாக்கத்தில் தாமே வந்திருந்து நடத்திய திரு.வி.க. அவர்கள் பெயரால் பள்ளி அமைந்த நிலையினை எண்ணி எண்ணி மகிழ்கின்றேன்; இன்று மேனிலைப் பள்ளியாக உயர்ந்துள்ள இப்பள்ளியிலும் அதனோடு இணைந்த

ஆரம்பப் பள்ளியிலும் சுமார் இரண்டாயிரம் மாணவர் பயிலும் நிலைகண்டு திரு. வி. க. வின் அடி நினைந்து போற்றுகின்றேன். என் எண்ணச் சூழல் அத்துடன் நிற்காது மேலும் வேறு வழியில் சுழன்று கொண்டே இருந்தது இவை பற்றியெல்லாம் முன்னரே குறித்துள்ளேன்.

மேலும் ஒரு பத்தாண்டுகள் கழிந்தன. இதற்குள் என் வழியில் எத்தனையோ மாறுதல்கள். மனைவி மறைந்தாள். பெண்கள் இருவருக்கும் மணம் முடித்தேன். மகன் மெய்கண்டானுடன் நான் தனியாக வாழ்ந்து வந்தேன். 1965ல் நான் சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் ஓர் இடம் வாங்கினேன். கோடை நாட்களிலெல்லாம் அங்கே சென்று தங்குவேன். சில சமயம் பிள்ளைகளோடும் சில சமயம் சக ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் தங்குவது வழக்கம். அப்போது அங்கே ஓர் எண்ணம் உதித்தது. ஏன் இங்கேயே அன்னைக்கு ஒரு நிலைத்த பணி செய்யக் கூடாது என்ற எண்ணம் உண்டாயிற்று, நான் இருக்கும் இடத்தினைச் சுற்றி மலைச் சரிவுகளில் நிறைய இடங்கள் இருந்தமையின், ஓர் கல்லூரியே அன்னையின் பேரால் உருவாக்கலாமே என்ற எண்ணம் உண்டாயிற்று, இதற்கென ஏர்க்காடு நகரிய ஆணையர் வாயிலாக, அரசாங்கத்துக்கு இடம் தர வேண்டி விண்ணப்பம் அனுப்பினேன். அப்போது ஆணையர்களாக இருந்த திருவாளர்கள் அருணாசலம், காளிதாசர் ஆகியோர் என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஆவன செய்தனர். ஊரில் இருந்த ஓரிரு பெருஞ் செல்வர்களும் பெருந்தொகை தருவதாக வாக்களித்தனர். அவர்கள் எழுதிய கடிதங்கள் இன்னும் உள்ளன. நகரியம் அப்போது சுமார் 200 ஏக்கர் நிலத்தில் புதுநகர் அமைக்கத் திட்டம் தீட்டி, அதில் சுமார் 40 ஏக்கர் கல்லூரிக்கென ஒதுக்கி, அரசாங்க ஒப்புதலுக்கு அனுப்பினர். அது முறைப்படி சென்னை மேநிலைப் பொறியாளர், அரசாங்கப் பிற துறையினர் பார்வைகளி லெல்லாம் பட்டு, முடிவில் அதற்கென இசைவும் தரப் பெற்றது. 25.3.68 நாளிட்ட S.O.C. 104 6, 8 AC

எண்ணுள்ள நகரியக் கடிதத்தின் வழியே அனைத்தும் செயலாக்கப் பெற்றன. பின் ந. க. 4070/69 எண்ணுள்ள 10.9.69. நாளிட்ட நகரிய ஆணையர் கடித வழியும் சேலம் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் (District Revenue Officer) தம் Eudn. No. Dist - 31 - 474167 - 99833 எண்ணுள்ள 26.11.67 குறிப்பின் வழியும் ஆணையர் தம் 20.11.68 நாளிட்ட கடித வழியும் நில ஒதுக்கீடு உறுதி செய்யப் பெற்று, அதுபற்றி எனக்கு அறிவிக்கப் பெற்றது. அப்போது நான் முனைந்திருந்தால் அங்கே ஒரு மகளிர் கல்லூரி என் அன்னையின் பேரால் மலர்ந்து சிறந்திருக்கும். ஆயினும் அதற்குள் இங்கே வீட்டில் வள்ளியம்மாள் பள்ளியினைத் தொடங்கி விட்டேன். அண்ணா நகரிலும் கட்டடம் உருவாகி 1969 அக்டோபரில் பள்ளியும் தொடங்கப் பெற்றது.

பல ஆண்டுகள் கழித்து, சென்ற ஆண்டு ஏர்க்காட்டில் மறுபடியும் ஓர் உயர்தரமான கல்வி நிலையம்—ஆய்வுப் பட்டங்கள்—தொழில் பயிற்சிகள் கொண்ட நிலையில் தொடங்கலாமா எனத் திட்டமிட்டேன். நான் சென்ற ஆண்டு உலகப் பயணத்தை மேற்கொண்டபோது, அதற்கு முன் காஞ்சிப் பெரியவரை—இங்கே சென்னையில் கண்டு வணங்கி, என் கருத்தினைத் தெரிவித்தேன். அவர்கள் நம் வள்ளியம்மாள் பள்ளியில் புதிய கட்டிடங்கள் கட்டியபின் வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்து பள்ளியை வாழ்த்தி யருளினார்கள். ஏர்க்காடு பற்றிய என் கருத்தினைக் கூறியதும், என்னால் முடியாவிட்டாலும் மடத்தின் மூலமாக நடத்தலாம் என்றும் முயன்று இடத்தினைப் பெறுங்கள் என்றும் வாழ்த்து வழங்கினர். எனினும், நான் உடனே உலகப் பயணத்தை மேற் கொண்டமையின் இடையில் நான்கைந்து மாதங்கள் தடைப்பட்டன. பின் சேலம் சென்று அப்போது மாவட்ட ஆட்சியராக இருந்த திரு. பழநிச்சாமி அவர்களையும் ஏர்க்காடு நகரிய ஆணையரை யும் கண்டு விண்ணப்பித்தேன். ஆணையர்தம் ந.க. எண்

526/86 அ2 நாள் 15.5.86 எண்ணுள்ள கடிதப்படி எனக்கு நிலம் ஒதுக்கப் பெற்றதாகவும், அன்று இனாமாகக் கொடுக்க இருந்த நிலைமாறி, நல்ல விலைக்கே தருவதாக வும் தகவல் பெற்றேன். இடையில் கழிந்த இருபது ஆண்டு களில் அரசாங்கத்துறைகள் சிலவும், தனியார் சிலரும் (நான் வாளா இருந்தமையின்) அந்த நாற்பது ஏக்கரில் பெரும் பரப்பைக் கைப்பற்றினர். தற்போது பத்து ஏக்கருக்கு குறையாமல் பெற வாய்ப்பு உண்டு என நம்புகிறேன். அதை விரைவில் பெற்று அங்கே தக்க ஆய்வு, தொழிற்கூடம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இறைவன் திருவுளமும் அன்னையின் அருளும் கைகூடின் யாவும் எளிதாகும்!

இடையில் 1966—67ல் ஓராண்டு தமிழக அரசாங்க ஆணையின் பேரில் நான் ஐதராபாத் உஸ்மானியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பொறுப்பேற்கச் சென்று அங்கே 'Ph.D' என்ற டாக்டர் ஆய்வுப்பட்டத்திற்காக ஏற்பாடுகளை செய்ய நேர்ந்தமையின் என் ஏர்க்காடு முயற்சி இடையில் தடைப்பட்டது. ஒருவேளை அங்கே செல்லாதிருந்திருப்பின் 1967லேயே உறுதி செய்யப் பெற்று கல்லூரி தொடங்கப் பெற்றிருக்கும். எல்லாம் இறையருளும் காலத்தின் கோலமும் போலும்.

கல்லூரி தொடங்க இசைவு பெறுமுன் இங்கே பள்ளி தொடங்கியது மட்டும் அதற்குக் காரணம் என்று கூற முடியாது. கல்லூரி தொடங்குவதாயின் ஐந்துலட்சம் பல்கலைக்கழகத்துக்கு ஒப்புதல் நிதியாக ஒப்படைக்க வேண்டும். ஒதுக்கிய நாற்பது ஏக்கரில் உள்ள மேடு பள்ளங் களைத் திருத்திச் சமமாக்கி, காடு கொன்று நாடாக்கிச் சாலை அமைத்துச் சரி செய்ய வேண்டும். பின் கட்டடங்கள் ஆய்வு களம், விடுதி முதலியன அமைக்க வேண்டும். அவற்றுக்கெல்லாம் குறைந்தது பத்துப்பதினைந்து லட்சங் கள் தேவைப்படலாம். அந்தப் பெருந்தொகையை என்னால் அன்று நினைத்துக் கூடப் பார்க்க இயலவில்லை. ஓரிருவர்

தருவதாகச் சொல்லிய தொகையும் வரும் என்று நம்ப முடியாத வகையில் நிலைமாறின. எனவே இதனாலும் அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். சிலர் உயர்நிலைப் பள்ளியையாயினும் நல்ல விடுதியோடு தொடங்கலாம் என்றனர். ஆயினும் அங்கே பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் ஏசுவின் தொண்டர்களால் இருபள்ளிகள் விடுதிகளுடன் சிறக்க நடைபெறுவதால் அவர்களுக்குப் போட்டியாக நான் புதிதாக ஓர் பள்ளி தொடங்க விரும்பவில்லை. அதே கருத்தில்தான் இங்கே அண்ணாநகரில் இது வளருமோ வளர்ராதோ என்ற ஐயத்தில் யாரும் முன்வராத அந்த நாளில், ஒரு போட்டியும் இன்றி இந்த வள்ளியம்மாள் பள்ளியினை நான் முதலில் தொடங்கினேன். இந்த வகையில் தோன்றிய இப்பள்ளியின் வளர்ச்சியினை இனி எண்ணிப் பார்க்கலாமா!

இந்த வள்ளியம்மாள் பள்ளியினைத் தொடங்குமுன் பல வகையில் யோசனை செய்தேன். அன்று இருந்த விதிப்படி, இன்னும் ஓரிரு ஆண்டுகளில் (55ல் ஓய்வு) கல்லூரியிலிருந்து விடுதலை பெறுவேன் என்ற எண்ணத்திலே, பள்ளி வளர்ச்சி யில் முழு நேரம் செலுத்தலாம் என எண்ணினேன். மேலும் என் மக்கள் மூவருக்கும் மணம் முடித்து அவரவர் வாழ்க்கை அமைய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தேன். ஊரில் உள்ள நிலங்களில் பலவற்றை விற்று அவர்களுக்கு தனித் தனியே வாழ்வுக்குப் போதுமான வாடகை வரும் வகையில் வீடுகளும் கட்டித் தந்து விட்டேன். வாழ்க்கைத் துணைவியோ இல்லை. எனவே கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றபின் காலம் கழிப்பது கடினமல்லவா! எனவே அதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே இப்பள்ளியினைத் தொடங்கி வளர்த்து விட்டால் அதில் பயிலும் இளங் குழந்தைகளின் முகம் பார்த்து மீதி நாட்களையும் கழிக்கலாம் எனத் திட்ட மிட்டேன். அதேபோது எனக்கு அண்ணாநகர் 178 எண்ணுள்ள நிலத்தை, கடைகளுக்கென ஒதுக்கிய பழைய இடத்தின் பக்கத்திலேயே அமையுமாறு ஒதுக்கப்பெற்றேன். அந்த ஒதுக்கீட்டுக்குப்பின் அதிக நிலம் பெற எனக்கு வாய்ப்

பினைத் தந்தது. மேலும் நான் முன்னரே குறித்தபடி, என் நூல் ஒன்று கல்லூரி வகுப்பிற்குத் தொடர்ந்து இரண்டாண்டு பாடமாக இருந்தமையின் ஒரு பெருந்தொகையும் வந்தது. அத்துடன் என் உயர் ஒப்பந்த நிதியும் தெய்வீக நீதியும் (Provident Fund) சேர்ந்தன. எனவே இடமும் சற்றே பெருந்தொகையும் கிடைத்த காரணத்தாலேயே 1968ல் வீட்டில் தொடங்கிய பள்ளியினைப் பின் விரிவுபடுத்த, அண்ணா நகரில் 178ல் கட்டிடத்தைத் தொடங்கினேன், முதலில் 1969ல் முதல் கட்டிடத்தின் கீழ்த்தளம் (Ground floor) மட்டும் அமைத்து, நல்ல நாளில் (விசயதசமி) பள்ளியினைத் தொடங்கினேன். அத்துடன் கட்டிடத்திறப்பு விழாவும் நடைபெற்றது. இரண்டினைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் வாயிலின் இருபக்கங்களிலும் அணி செய்கின்றன.

1968 ஜுன் 21ல் வீட்டில் பள்ளி தொடங்கப் பெற்றது. முதல்வருடன் ஐந்து ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். ஆயினும் முதலில் மூன்று மாணவர்களே சேர்ந்தனர். அப்போது பள்ளிச் சம்பளம் பத்து ரூபாய்தான். L.K.G. U.K.G. முதல் வகுப்பு என்ற மூன்றையுமே முதலில் தொடங்கினேன். அப்போது வீட்டில் பக்கத்தில் வேறு சில சிறு பள்ளிகள் தோன்றின. ஆண்டின் இறுதியில் எங்கள் பள்ளியின் மாணவர் எண்ணிக்கை நாற்பத்தொன்பதாக அமைந்தது. ஆனால் ஆசிரியர்களுக்கு ஆயிரத்துக்குமேல் சம்பளம் தர வேண்டியிருந்தது. நான் கல்லூரியில் பெற்ற சம்பளத்தை அப்படியே கொண்டுவந்து கொடுத்துச் சரிக் கட்டுவேன். இவ்வாறு 1968ல் அமைந்தகரை ஐயாவு தெரு 18ல் தொடங்கப் பெற்ற பள்ளியே மெல்ல மெல்ல வளர்ந்து இன்று மூன்று இடங்களிலும் 2000 பிள்ளைகளுடன் 85 ஆசிரியர்களையும் கொண்டு பதிவு செய்யப் பெற்ற குழுவின் வழியும் வள்ளியம்மாள் கல்வி அறத்தின் கீழும் செயலுற்று வளர்கின்றது.

ஆண்டுதோறும் பள்ளியில் பல விழாக்களை அன்று தொட்டுத் தொடங்கி நடத்தி வருகிறோம். வள்ளியம்மாள்

மறைந்த நாளில் நாளில் விளையாட்டுவிழா (Sports) நடத்துவோம். தவிர்த்து ஆண்டு விழா, நாட்டு விழாக்களாகிய விடுதலை விழா, குடியரசு விழா, முதலியனவும் பிறவும் கொண்டாடப் பெறுகின்றன. ஆண்டுவிழாக்கள் தோறும் பல அறிஞர்களும் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்துப் பாராட்டி, எங்களுக்கு ஊக்கமூட்டி ஆக்கம் தந்தனர். அத்துடன் பெற்றோர் பலரும் அளித்த ஊக்கமும் எங்களுக்கு உணர்வூட்டின. நடைபெற்ற ஆண்டு விழாக்களையும் அதற்குத் தலைமை தாங்கிய பெரியோர்களையும் இங்கே குறித்தல் பொருத்தமாகும் என எண்ணுகிறேன்.

| விழா | தலைமை |
|---|---|
| 21-6-68 தொடக்கவிழா | —திரு நாவலர் நெடுஞ்செழியன் (அன்றைய கல்வி அமைச்சர்) |
| மார்ச்சு 69 முதல் ஆண்டு விழா | —திரு. நெ. து. சுந்தரவடிவேல் (அன்றைய சென்னைப் பல்கலைகழகத் துணை வேந்தர்) |
| ...ர்ச்சு 70 இரண்டாம் ஆண்டு விழா | —திரு. சு. வை. சிட்டிபாபு (அன்றைய கல்வி இயக்குநர்) |
| 29-3-71 மூன்றாம் ஆண்டு விழா | —மாண்புமிகு திரு.க. ராஜாராம் அன்றைய வீட்டு வசதி வாரிய அமைச்சர் |
| மார்ச்சு 72 நான்காம் ஆண்டு விழா | —டாக்டர் மு. வரதராசனார் (அன்றைய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.) |
| 4-3-73 ஐந்தாம் ஆண்டு விழா | —திரு. T.V. வாசுதேவன் I.A.S. (அன்றைய வீட்டு வசதி வாரியத் தலைவர்) |
| 21-4-74 ஆறாம் ஆண்டு விழா | —திரு. பெ. திருஞானசம்பந்தம் (அன்றைய பல்கலைக் கழகப் பதிவாளர்) |

| | |
|---|---|
| 15-3-75 ஏழாம் ஆண்டு விழா | —திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் (அன்றைய உயர் நீதி மன்ற நடுவர்) |
| 20-3-76 எட்டாம் ஆண்டு விழா | —திரு. அரங்கபாஷியம் அவர்கள் (அன்றைய தமிழகக் கல்விச் செயலர்) |
| 27-3-77 ஒன்பதாம் ஆண்டு விழா | —திரு. டாக்டர் பக்ஷீ (அன்றைய மத்திய கல்விக் குழுவின் தலைவர்) |
| 8-4-78 பத்தாம் ஆண்டு விழா | —திரு. பிரபுதாஸ் பட்வாரி (அன்றைய ஆளுநர்) |
| 23-8-79 பதினோராம் ஆண்டு விழா | —திரு. வே. கார்த்திகேயன் (அன்றைய தமிழக அரசுத் தலைமைச் செயலர்) |
| 28-2-80 பனிரெண்டாம் ஆண்டு விழா | —திரு. எம்.எம். இஸ்மாயில் (அன்றைய உயர் நீதி மன்றத் தலைவர்) |
| 16-9-81 பதின்மூன்றும் ஆண்டு விழா | —திருமதி இலட்சுமி பிரானேஷ் (மாவட்ட ஆட்சியர்) |
| 23-3-82 பதினான்காம் ஆண்டு விழா | —திரு. மாண்புமிகு காளிமுத்து அவர்கள் (அன்றைய வேளாண்மைத்துறை அமைச்சர்) |
| 28-2-83 பதினைந்தாம் ஆண்டு விழா | —திரு. மாண்புமிகு C. பொன்னையன் அவர்கள் (இன்றைய கல்வி அமைச்சர்) |
| 29-2-84 பதினாறாம் ஆண்டு விழா | —மாண்புமிகு திரு. S. இராமச்சந்திரன் அவர்கள் (தமிழக மின்சாரத்துறை அமைச்சர்) |
| 25-2-85 பதினேழாம் ஆண்டு விழா | —மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்கள் (அன்றைய தமிழகக் கல்வி அமைச்சர்) |
| 1-3-86 பதினெட்டாம் ஆண்டு விழா | —திரு. காசிராசன் I.A.S. அவர்கள் |

இவர்களேயன்றி ஆசிரியர் விழா, பாரதி விழா, பொங்கல் விழா, விளையாட்டு விழா, குழந்தைகள் விழா போன்றவற்றிற்குப் பல பேரறிஞர்களும், அரசாங்க அமைச்சர்களும் தொழிற் விற்பனர்களும், பேராசிரியர்களும் வந்து கலந்து கொண்டுள்ளனர். அவர்களுள் நாவலர் நெடுஞ்செழியன், டாக்டர் அண்டே, திருவாளர்கள் இராம. வீரப்பன். திரு K. A. கிருஷ்ணசாமி, திரு. டாக்டர் R. P. சிங்கேல் (மத்திய கல்விக் குழுத் தலைவர்) கற்கண்டு ஆசிரியர் தமிழ்யாணன், பல பத்திரிகை ஆசிரியர்கள், அமெரிக்கா பழநி பெரியசாமி திரு. குன்னுக்கல் (தலைவர் BSE) இராகவானந்தம், போன்றவர் குறிப்பிடத்தக்கவர்கள். காஞ்சி காமகோடிபீட சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் அப்புமலையின் அருள்மிகு அடிகளார், சின்மய மடத்தினைச் சேர்ந்த அருள்மிகு சின்மையானந்தர் போன்ற அறநெறியாளர்களும் பள்ளியை வந்து பார்வையிட்டு வாழ்த்தியுள்ளனர். முன்னைய பள்ளி கல்வித் துறைத் தலைவர் திரு. லாரன்ஸ், கல்வித்துறைத் தலைவர்கள் டாக்டர் வெங்கடசுப்பிரமணியம் பிள்ளை திரு. இராயன் இன்றைய தலைவர் திரு. கோபாலன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் டாக்டர் மு. வரதராசனார் டாக்டர் வ. சுப மாணிக்கம் போன்ற பெருமக்களும் பள்ளியினைப் பார்வையிட்டுள்ளனர்.

'ரோலிங் ஷட்டர்கள்' உரிமையாளர் திரு.S.V. நரசிம்மன் போன்ற தொழில் அதிபர்களும் திரு. R. கிருஷ்ணமூர்த்தி போன்ற பேராசிரியர்களும் பள்ளியினை வந்து கண்டு வாழ்த்தியுள்ளனர். இரஷ்ய நாட்டு தூதரக உறுப்பினர், ஆங்கில அமெரிக்க நாட்டினர் போன்ற மேலை நாட்டினரும் பள்ளியினைப் பார்வையிட்டுள்ளனர். இலங்கை அமைச்சர் இராசதுரை அவர்களும், சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை நகரமேயர், துணை மேயர்களும், பிறரும் பள்ளியினைப் பார்வையிட்டுள்ளனர். மத்திய கல்விக் குழுவினைச் சேர்ந்த தலைவர்கள், செயலர்கள் ஆகியோரும் அடிக்கடி

பார்வையிட்டுள்ளனர். இத்தகைய பெரியார்களுடைய நல்வாழ்த்தின் வளத்தாலும் நல்லன்பர் தம் ஆதரவினாலும் பள்ளி மேன்மேலும் வளர்ச்சியுற்று வந்துள்ளது. இவர்களின் வாழ்த்துகளையெல்லாம் தொகுத்துத் தனியாக இந் நூலில் மற்றோரிடத்தில் தந்துள்ளோம்.

இவ்வாறு பல்வேறு வல்லவரும் நல்லவரும் வாழ்த்த வளர்ந்து வரும் பள்ளியின் மாணவர் ஆசிரியர்தம் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டே வருகின்றது. பள்ளியில் சேர்வதற்குத் தகுதி ஒன்றே அடிப்படையாக அமைகின்ற காரணத்தால், வரையறுத்த அளவிலேயே ஆண்டுதோறும் பிள்ளைகள் சேர்க்கப் பெறுகின்றனர். தேர்வு இல்லாது, வந்தவர் அனைவரையும் சேர்த்திருந்தால் மொத்தத்தில் இன்று நாலாயிரம் பேர் இப்பள்ளிகளில் இடம் பெற்றிருப்பர். எனினும் 'தகுதியென ஒன்று நன்றே' என்ற ஆன்றோர் மொழிப்படியே தகுதியை மட்டும் கருத்தில் கொண்டு பிள்ளைகளை ஏற்று வருகிறோம். இதனால் பலருடைய விரோதத்தையும் சம்பாதிக்க நேருகிறது. என் செய்வது? நல்லது செய்தவர் யார் அல்லில் பட்டுழலாது நின்றார்? இதுதான் நியதி போலும்! பலர் நன்கொடை தருவதாகச் சொல்லித் தகுதியில்லா வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்கச் சொல்லுவர். நாங்கள் அறிக்கையில் குறிப்பிட்ட தொகையைத் தவிர்த்து வேறு பெறுவதில்லை என விளக்கி அனுப்பினோம்: சில சமயம் ஒரு சிலர் உயர் மட்டத்தில் அமைச்சர் போன்றாரிடம் சொல்லி இடம் பெற முயல்வர். அவர்களும் தொலைபேசி வழியும் கடிதங்கள் வழியும் எங்களுக்குச் செய்தி சொல்லுவார்கள். ஆயினும் நாங்கள் பின்பற்றும் முறையினையும் அவர்கள் பரிந்துரைப்பார் தகுதியினையும் தரத்தினையும் சொன்னால் நாங்கள் செய்வதே சரியெனக் கூறி எங்களை வாழ்த்துவர். எனவே அந்தத் தகுதி என ஒன்றின் அடிப்படையிலேயே பள்ளி வளர்கின்றது.

அவ்வாறே ஆசிரியர் நியமனங்களிலும் தகுதி கொண்டே நியமனம் செய்கிறோம், சில பரிந்துரைகள் வரும். அவற்றுள் சில இயல்பாகவே தகுதியுடையனவாக இருக்கும். இல்லாதனவற்றை நாங்கள் நேரடியாகச் சொல்லித் திருப்பி அனுப்பி விடுவோம். பள்ளிக்கூடம் பலராகிய பிள்ளைகளுக்காக இருக்கின்றதே ஒழிய ஒரு சிலராகிய ஆசிரியர்களுக்காக அன்று என்பதை விளக்குவோம். அப்படியும் சிலர் எங்களை மாற்றுப் பார்வையோடு நோக்கியே செல்வர். இவ்வாறு பிள்ளைகள் சேர்ப்பதிலும் ஆசிரியர் தேர்விலும் திட்டமாக இருப்பதால் எங்களுக்கு பகை வரும்; என் செய்வது?

ஆண்டுதோறும் பிள்ளைகளின் எண்ணிக்கை வளர்ந்து வருவதை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணை நன்கு காட்டும் என எண்ணுகிறேன்.

| அண்ணாநகர் | | | | மெட்ரிகுலேஷன் பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கம் | 1968 | — | 46 | 1984 | — | 129 |
| | 1969 | — | 100 | 1985 | — | 221 |
| | 1970 | — | 175 | 1985 | — | 314 |
| | 1971 | — | 360 | | | |
| | 1972 | — | 460 | | | |
| | 1973 | — | 639 | | | |
| | 1974 | — | 850 | | | |
| | 1975 | — | 950 | | | |
| | 1976 | — | 1000 | | | |
| | 1977 | — | 1045 | | | |
| | 1978 | — | 1125 | | | |
| | 1979 | — | 1278 | | | |
| | 1980 | — | 1319 | | | |
| | 1981 | — | 1268 | | | |
| | 1982 | — | 1342 | | | |
| | 1983 | — | 1359 | | | |

1984 — 1342
1985 — 1407
1986 — 1442

(நர்சரி வகுப்புகள் உட்பட செனாய் நகரில் (தனி) குழந்தைகள் பள்ளி தற்போது 242)

பிள்ளைகள் வளர வளரக் கட்டடங்களும் வளர வேண்டிய தேவை உண்டாயிற்று. 1969-ல் கீழ்த்தளம் மட்டுமே அமைத்த கட்டிடத்தில் 1971-1972-ல் மேல் இரண்டு தளங்களையும் கட்டி முடித்தோம். அதற்கு மேல் எங்களுக்கு அப்போது வேறு இடமில்லையாதலால் கட்டடம் அந்த அளவில் நிறுத்தப்பெற்றது. எனினும் பக்கத்தில் கடைகளுக்காக ஒதுக்கி இருந்த இடம் காலியாகவே இருந்தமையால் அதை விளையாடும் இடமாகக் கொண்டோம். அதற்கிடையில் எங்கள் வளர்ச்சிக்காக வீட்டு வசதி வாரியத்தாரைப் பக்கத்தில் உள்ள இடத்தினை ஒதுக்கித் தருமாறு வேண்டினோம். முதலிடம் (178) எனக்கெனத் தனியாக ஒதுக்கப் பெற்றதென்பதை முன்னரே குறித்துள்ளேன். அந்த இடத்தையும் வேறு பல பொருள்களையும் என் நூல் வருவாயினையும் பள்ளிக்கென நன்கொடையாக 1969லேயே ஆவணம் செய்து கொடுத்துவிட்டேன். எங்கள் வேண்டுகோளை வீட்டுவசதி வாரியத்தினரும் தமிழக அரசினரும் (Lr. No. 42267 (B) H. O. I. (3)/71/dt. 16-8-71) ஏற்றுக் கொண்டு வடக்குப் பக்கத்தில் உள்ள 6 மனை 2140 சதுர அடியினை ஒதுக்கித் தந்தனர். 10-12-71 அன்று அதை நாங்கள் எடுத்துக் கொண்டோம். எங்கள் வளர்ச்சியினையும் தளராத தொண்டினையும் கண்ட வீட்டு வசதி வாரியத்தார் தென்புறத்திலுள்ள மற்றொரு பாதியினையும் தாமே வலிய வந்து எங்களுக்குத் தர விரும்பினர். அவர்களுடைய 1-4-72-ல் நடைபெற்ற 'மார்க்கெட்டிங் குழு'வில் முதல் தீர்மானமாக இதை நிறைவேற்றி எங்களுக்குத் தரஇசைந்து, எங்கள் விருப்பத்தினையும் கேட்டனர். கரும்பு தின்னக் கசக்குமா? எங்கள் பொருளாதாரம் அதற்கு இடம் தரவில்லையாயினும் அதற்கும் இசைந்தோம். அந்த

இடம் எங்களுக்கு 10-2-73-ல் ஒப்படைக்கப் பெற்றது. அதுகாலை திரு. T. V. வாசுதேவன் அவர்கள் வாரியத் தலைவராகவும் அதே வேளையில் அரசாங்கச் செயலராக வும் இருந்தார். அவர்கள் நல் உதவியை எண்ணி இன்றும் அவருக்குத் திசை நோக்கி வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இங்கே அமைக்க இருந்த கடைகளை எதிர் பக்கத்துக்கு மாற்றி, அங்கே குறித்த வீட்டுமனைகளை வேறிடத்தில் இட்டு எங்கள் பள்ளிவர வழிகண்ட வீட்டுவசதி வாரியத்தை என்றும் மறக்க இயலாது. ஆயினும் அது போது, இந்த இடம் தரும் பணியைத் தாங்களே செய்த தாகச் சொல்லி அவ்வாரியத்தில் பணியாற்றிய இருவருக்குக் கையூட்டாகச் சில ஆயிரம்கள் தர வேண்டும் என ஒருவர் கேட்டார். நான் நடந்த செயல் அறிந்தவனாதலால் உள்ளத்தில் சிரித்துக் கொண்டே அவர் கேட்பது முறை யற்றது என்றும் தரஇயலாது என்றும் சொன்னேன். அதை மனத்தில் வைத்துக்கொண்டு பல ஆண்டுகள் அவர்கள் எனக்கு ஏதேனும் இடையூறுகள் செய்து கொண்டே வந்த னர். அவர்களைப் பற்றி ஓரளவு மேலிடத்துக்கும் தெரியும். நானும் அன்றாயினும் சரி இன்றாயினும் சரி அவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லுவதில்லை; இனியும் சொல்ல மாட்டேன், சொல்லவும் தெரியாது; மறந்துவிட்டேன். 'அதனை மறத்தல் அதனினும் நன்று' என்றாரே வள்ளுவர். அவர்கள் இடும் முட்டுக்கட்டைகளெல்லாம், எங்கள் செயலறிந்த மேலுள்ளவர்களாலும் இறையருளாலும் தீர்க்கப்பெற்று யாவும் செம்மையாக அமைகின்றன. எங்கோ சென்றுவிட்டேன்; மன்னிக்க.

நான்கில் ஒரு பகுதியினை (உரிய விலையில்) கட்டி இடத்தினை நாங்கள் எடுத்துக் கொண்டோம். என்றாலும் தொடர்ந்து கட்டவேண்டிய தொகையைத் தவணைதோறும் கட்ட இயலவில்லை. மொத்தத்தில் பெருந்தொகையாக அமைந்துவிட்டமையால் ஆறு திங்களுக்கு ஒருமுறை இருபதாயிரம் கட்ட வேண்டி இருந்தது. அதைக் கட்ட

முடியாது ஓரிரு ஆண்டுகள் நாங்கள் திகைத்தோம். அப்போது நான் மேலே காட்டிய ஓரிருவரால் கடும் நடவடிக்கை எடுக்கப்பெறும் என எச்சரிக்கப் பெற்றோம். எனினும் அதுபோது வீட்டுவசதி வாரியத் தலைவராய் இருந்த திரு. இலெட்சுமிகாந்தம் பாரதி அவர்கள் தவணை நிலையில் சலுகைக் காட்டி மூன்று வருடம் கட்ட வேண்டியிருந்ததை ஏழு வருடத் தவணையாகப் பதினான்கு முறையில் கட்ட ஆணை தந்தனர். அதன்படி முழுத் தொகையும் கட்டி அதற்குரிய ஆவணத்தினைப் பின்னர் பெற்றுவிட்டோம். முன்னே காட்டியவர்கள் இடும் முட்டுக்கட்டைகள் தகர்ந்து முற்றிய ஆவணம் பதிவு செய்யப் பெற்றது.

இதற்கு இடையில் எங்கள் பள்ளி எந்தத் தேர்வுக்குத் தகுதியாய் இருந்தது என்பதைப் பற்றி எண்ணி எண்ணித் திகைத்தோம். பள்ளிக்குழுவினையும் (எழுவர்) உரியமுறையில் 1860ஆம் ஆண்டு சட்டப்படி 1971ல் (225) பதிவு செய்துவிட்டோம். தமிழ் நாட்டு 'மெட்ரிகுலேஷன்' முறைப்படி பதிவு செய்ய முயன்றோம். நான் முன்னரே காட்டியபடி துணைவேந்தர் அவர்கள் முழுத்தொகையும் (இரண்டு லட்சம்) கட்டி, கட்டடம் முதலியனவும் காட்டினாலன்றி இசைவு தர முடியாது என்றனர். அதே வேளையில் 1972ல் மத்திய கல்விக் குழுவின் செயலர் (பின்னர் தலைவராயினர்) திரு. டாக்டர் சிங்கேல் (Dr. Singhal) அவர்கள் வேறு பணியின் பொருட்டுச் சென்னை வந்திருந்தார். அப்போது நாங்கள் ஏழாம் வகுப்பு வரையிலேயே வைத்திருந்தோம். அவர்களைப் பள்ளியினை வந்து பார்வையிட வேண்டினோம். அவர்களும் வந்து பார்வையிட கட்டிடம் பக்கத்து இடம் முதலியன போதுமென்றும் ஆய்வுகளம் நூல்நிலையம் நன்கு அமைய வேண்டும் என்றும் எட்டாம் வகுப்புத் தொடங்கிய உடனே விண்ணப்பிக்கலாம் என்றும் சொல்லி எங்களை ஊக்குவித்தனர். பத்தாயிரம் கட்ட வேண்டுமென்றும் இன்றேல் முதல் தவணையாக ஐயாயிரத்தையும் அடுத்த ஆண்டு மிகுதி ஐயாயிரத்தையும் கட்டலாம் என்றும்

கூறினர். பலவகையில் அறிமுகமானவர்க ளெல்லாம் செயல் கண்டு போற்றாது இசைவுதர மறுக்கும் அதே வேளையில் முன்பின் தெரியாது எங்கிருந்தோ வந்தவர் எம்செயலைப் போற்றி ஊக்கமும் ஆக்க உணர்வினையும் தந்ததை எண்ணி எண்ணி வியந்தேன். பின்பு அவர் தலைவர் பதவியிலிருந்து ஒய்வு பெற்ற பின்பும், உயர்ந்து உயர் பதவி யில் இருக்கிறார். சென்னை வந்தால் என்னைப் பார்க்காது அவர் செல்லமாட்டார். அப்படியே நான் தில்லி செல்லும் போதெல்லாம் அவர் வீட்டிற்குச் சென்று அவரை வணங்கி வருவேன். பின் அவர்கள் கூறியபடி 1974ல் விண்ணப்பம் செய்ய, அவர்கள் தேர்ந்தெடுத்தனுப்பிய குழுவினர் பள்ளி யினைப் பார்வையிட்டு, எல்லா வசதிகளும் நிறைந்திருந்த நிலைகளை நேரில் கண்டு பள்ளியினை அக்கல்விக்குழுவுடன் இணைப்பதாகவும் தொடர்ந்து மேல் வகுப்பினை நடத்த லாம் எனவும் பரிந்துரைத்தனர். அவ்வாறே முதல் எட்டு வகுப்பு வரையிலும், அடுத்த உயர்நிலை வகுப்பு வரையிலும் பின்னும் மேநிலை (+ 2) வகுப்புவரையும் இசைவு பெற்றுத் தொடர்ந்து நடத்தி வருகிறோம். விரைவில் நிலைத்த இணைப்பினைப் (Permanent affliation) பெறுவோம் என நம்புகிறோம்.

தமிழ் நாட்டில் மத்திய கல்விக் கூடங்கள் இன்று விரைந்து வளர்ந்தமைக்குக் காரணம் இதுவே. அன்றைய ஆட்சியும் சென்னைப் பல்கலைக்கழகமும் சற்றே தமிழர் செயல் கண்டு மனமிரங்கி, இசைவு தந்திருப்பின், மத்திய கல்விக் கூடங்கள் தமிழ் நாட்டில்—இந்தியாவில் தில்லி தவிர —பிற பகுதிகளில் காணாவகையில் வளர்ந்திருக்காது. இன்றைய ஆட்சியினர் அந்த இசைபு தரும் பொறுப்பைப் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கித் தாமே கொண்டு விதிகளைத் தளர்த்தின்மையினாலேயே இன்று தமிழக விதிகளுக்குட்பட்ட கல்வி நிலையங்கள் கணக்கற்று வளர் கின்றன.

மத்திய கல்விக் குழுவின் இசைவினைப் பெற்றபின் அவர்கள் பாடத்திட்டதினைப் பின்பற்ற வேண்டிய தேவை

ஏற்பட்டது. மும் மொழித்திட்டமும் உயரிய பாட அமைப்பு முறையும் செயலாக்கப் பெற்றன.'' பெற்றோர்களும் கவலையற்று, தங்கள் பிள்ளைகளுக்கு மேல் படிப்பிற்கும் வழி ஏற்பட்டமையின் மகிழ்ந்து எங்களை ஊக்கினர்.

இதற்கிடையில் மாணவர் எண்ணிக்கை பெருகவே புதிய கட்டடங்கள் தேவையாயின. போதிய பணவசதி இன்மையில் தென்னங்கீற்றால் அமைந்த குடில்கள் அமைத்து, அதில் சில வகுப்புகளை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. மழைக்காலங்களில் அவற்றிற்குச் செல்வதும், சாரல் வாராமல் பார்ப்பதும் மிகவும் கடினமாக இருந்தன. ஒரு கோடையில் ஒரு குடிசை பற்றிச் சாம்ப லானது. ஒரு மழையில் ஒரு பெருங்குடில் சரிந்து வீழ்ந்தது. அதனால் யாருக்கும் எந்தவித சேதமும் இல்லை. அவற்றுள் சாமான்கள், சிமிட்டி, மரச் சாமன்கள் முதலியன அகப் பட்டமையால் சில ஆயிரங்கள் நஷ்டத்துக்கு உள்ளானோம். எனினும் உளம் தளராது தொடர்ந்து கட்டடம் தொடங்கத் திட்ட மிட்டோம். அப்போது கையில் பணம் இல்லை. அந்தநாளில் ஓரளவு வரவுக்கும் அன்றாடச் செலவுக்கும் கணக்கு சரியாக இருந்தது. பள்ளியை நடத்த எனக்குப் வருவாய்க்கு வசதியற்ற பொருளில்லா நிலை உண்டாயிற்று. 178ல் முதல் கட்டிடத்துக்கு என் வருவாய் அனைத்தும் இட்டமையின் இதற்கு வேறு வழியில்லை. எதிர்பாராது எனக்கு அறுபத்திரண்டு வயது வரையில் பச்சையப்பரில் இடந்தந்தமையாலும் துணை முதல்வராக உயர்த்தப் பட்டமையாலும் அரசாங்கமே அனைவருக்கும் ஊதிய உயர்வு தந்தமையாலும் என் வருவாய் சற்று உயர்ந்தது. அதில் மிகுதி உள்ளதையும் ஊரில் உள்ள நிலங்கள் சில வற்றை விற்றுப் புதிய கட்டிடம் தொடங்க முயன்றும் இயலவில்லை. எனவேதான் நாடகம் நடத்திப் பொருள் ஈட்டலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று.

நாடகம் நடத்திப் பொருள் பெறுவது எனக்குப் புதிய அனுபவம். வாலாஜாபாத் பள்ளிக்கு அண்ணா நாடகத்தை

1947ல் நடத்திய போது இருந்த சூழல் வேறு. அது சொந்த ஊர்; அண்ணாவுக்கும் அப்படியே. மேலும் பசஞ்ாயத்துத் தலைவர் இருந்தார், எனவே ஓரளவு வெற்றி காண முடிந்தது. இங்கே 1973ல் நான் தனியாகச் செயல் பட நேர்ந்தது. மேஜர் சுந்தரஜாசன் அவர்களை நாடகம் நடத்தித் தருமாறு வேண்டினோம். அதற்குப் பள்ளியின் பெற்றோரும் பள்ளியின் அருகே இருப்பவருமான திரு. இராச சேகரன் அவர்கள் பெரிதும் உதவினர். மேஜர் சுந்தரராஜன் அவர்கள் நாடகம் பெரியார் திடலில் நன்கு நடைபெற்றது. அப்போது பெற்றோர் சங்கத் தலைவராக இருந்த திரு. கண்ணன் அவர்கள் வசூல் பெருக நன்கு உதவினர். செலவெல்லாம் போக இருப்பத்தைந்தாயிரத் துக்குக் குறையாது நின்றது. என்றாலும் அதனால் பல பெற்றோர்தம் வசவையும் பெற்றோம். வசதி உள்ளவர் களே பேசி வழக்காட வந்தனர். சாதாரண மக்கள் தாராள மாக உதவினர். ஆயினும் நாங்கள் யாரையும் கட்டுப்படுத்த வில்லை. சிலர் வலிய வந்து உதவினர்; சிலர் வாரி வழங் கினர். ஒரு சிலரால் பெற்ற இடர்ப்பாடுகளே அதிகம். இதை உணர்ந்த காரணத்தாலேயே அடுத்து அத்தகைய நாடக முயற்சியில் என்றும் தலையிட வேண்டாம் என முடிவு செய்தோம். அந்த ஆண்டிலேதான் மாணவர்தம் முதல் சம்பளத்தோடு வளர்ச்சிக்கென புதியவராய் இருந்தால் ஐம்பதும் பழையவராய் இருந்தால் இருபத்தைந்தும் ஆண்டு தோறும் வாங்க வேண்டும் என முடிவு செய்து அதன்படியே வசூல் செய்தும் வருகிறோம். அத்தொகையே கட்டடம் முதலியவற்றிற்கு உதவுகிறது. எங்கள் கட்டடங்களின் வளர்ச்சியினையும் பிற வளர்ச்சிகளையும் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெறும் தரத்தினையும் காணும் பெற்றவர்கள் இச்சிறு தொகையினை மனமுவந்து அளிக்கிறார்கள். புதிய இடம் பெற்று, கட்டிடம் அமைக்க வேண்டி ஆண்டில் 1981- அத்தொகைகளை 100, 50ஆக உயர்த்தியுள்ளோம் அதே நிலை ஆறு ஆண்டுகள் கழித்தும் இருந்து வருகிறது. வேறு நன்கொடைகள் வாங்குவதே இல்லை.

இவ்வாறு பலவகையில் அரிதில் முயன்ற பொருளைக் கொண்டு, வீட்டு வசதி வாரியம் அளித்த புதிய நிலத்தில் 1974ல் கட்டிடம் தொடங்னோம். ஒருபுறமாக அமைக்க ஏற்பாடு செய்த கட்டிடத்தினை, பக்கத்து நிலத்துக்காரர் வீணாகத் தலையிட்டு நீதிமன்றம் வரை சென்று வழக்காடிய தால் நிறுத்தினோம் (அவர் தற்போது அந்தமனியினை விற்க இன்று அதுவேறு ஒருவருக்குச் சொந்தமாகியுள்ளது. அந்த மனையினையும் எங்களுக்கு வாங்கித் தருமாறு அரசாங்கத்துக்கு முறையிட்டோம்; எனினும் அது கைகூட வில்லை) பிறகு வடக்குப் பக்கத்தில் இரு கட்டிடங்களை, இடையில் திறந்தவெளி அரங்கத்தோடு அமைக்கத் திட்ட மிட்டு 1975ல் கட்டிமுடித்தோம். அக்கட்டடம் முடிந்ததும் அந்த அரங்கத்தில் முதன்முதலாக காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் மூன்று நாள் தங்கி அன்பர்களுக்கு அருளாசி வழங்கியதோடு எங்கள் பள்ளியும் வளர வாழ்த்தினர். அந்த மூன்று மாடிக் கட்டிடத்தில் இன்று நூல் நிலையமும் பிறவகுப்பறைகளும் உள்ளன. திறந்த வெளியரங்கில் பல கூட்டங்களும் நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதை யாவரும் அறிவர்.

பள்ளி வளர வளர இடம் தேவை அதிகமாயிற்று, மேநிலைவகுப்பிற்கு 1977ல் இசைவு பெற்றபின் அதற்கென விரிந்த ஆய்வுகளங்களும் வகுப்பறைகளும் தேவைப்பட்டன. மாணவர் தொகையும் ஆயிரத்தைத் தாண்டி விட்டது. ஆசிரியர்கள் ஐம்பத்து ஐவருக்கு மேல் பணியாற்றினர். (அமைந்தகரை செனாய்நகர் எல்லையில் 1968ல் முதலில் தொடங்கிய பள்ளியோ அதே மூன்றாம் வகுப்பு அளவில் நின்றது. எனினும் அங்கும் மாணவர் 200 பேருக்கு மேலாக ஆசிரியர் பதின்மர் பணியாற்றத் தொடங்கினர்). எனவே வேறு புதிய கட்டடம் அமைக்க 1977ல் எண்ணினோம், அதே வேளையில் எங்களுக்குப் புதிய இடம் வேண்டி. வீட்டுவசதி வாரியத்தை அணுக அவர்கள் 77மனையினை ஒதுக்கி அதற் கென நான்கில் ஒருபகுதியாக இரண்டரைலட்சம் கட்டச்

சொன்னார்கள். அந்த இடத்துக்கு 1977ல் அத்தொகை கட்டிய போதிலும் 1981 ஏப்ரலிலேதான் அதில் செயல்பட முடிந்தது. அதுபற்றித் தனித் தலைப்பில் மற்றொரு பகுதி இந்நூலில் இடம் பெறுகின்றது. அந்த இடம் பெற, நாங்கள் பட்ட அல்லல் பெரிது; விரிவாகப் பின் வருகிறது.

1977ல் புதிய கட்டிடம் பற்றி நினைக்கும் போது நெஞ்சு நடுங்கிற்று. எனினும் நான்கு மாடிக் கட்டிடம் அமைக்க வரைப்படம் எழுதி நகாரண்கழக இசைவினையும் பெற்றோம். பணத்துக்கு எங்கே போவது? எனது நூல்களை விற்பனை உரிமைபெற்ற பாரி நிலையத்து உரிமையாளர் செல்லப்பர் அவர்கள் சிறிது முன்பணமாக கை கொடுத்து உதவினர். நல்லவேளை திருவாங்கூர் வங்கி அப்போது எங்கள் பள்ளியின் எதிரில் இருந்தது அவர்கள் உதவ வலிய முன் வந்தனர். எங்கள் மாணவர் சம்பளங்களையெல்லாம் வசூல் செய்து, ஆசிரியருக்கும் பகிர்ந்தளிக்கும் மற்றொரு பெரிய வங்கி நாங்கள் வேண்டியும் உதவ முன்வரவில்லை. ஆயினும் திருவாங்கூர் வங்கியின் மேலாளர் திரு. இராமநாதன் அவர்கள் தாமே வந்து உதவுவதாகவும் கட்டி முடிந்தபின் ஒருபகுதியினைத் தங்களுக்கு ஐந்து ஆண்டு களுக்குத் தரவேண்டுமெனவும் கேட்டனர். நாங்களும் இசைந்தோம். வீட்டு வசதி வாரியமும் அந்த நிலத்தின் மேல் கடன் வாங்க இசைவு தந்தது. எனவே திருவாங்கூர் வங்கி இலட்சத்துக்கு மேலாகக் கடன் கொடுத்தது. மற்றும் சில நண்பக்கள் கைமாறுதலாக அவ்வப்போது சிலசில ஆயிரங் களை என் பொறுப்பில் தந்தனர். அவற்றை முலமாக வைத்து எப்படியோ 1978 பிப்ரவரியில் புதிய நன்கு மாடிக் கட்டடத்தைத் தொடங்கினோம். இறையருளால் நல்ல படியே 1979 -80ல் அக்கட்டடம் முடிய, அதில் மூன்று பாடங்களுக்கும் (Physics, chemistry and biology) தனித் தனியே சிறந்த வகையில் ஆய்வுக்களங்களை அமைத்ததோடு ஒரு பெரிய மண்டபத்தையும் மேலே வகுப்பறைகளையும் அமைத்துக் கொண்டோம். கீழே பெரும் பகுதியைத்

திருவாங்கூர் வங்கிக்கு முன்கொடுத்த வாக்குப்படியே ஐந்தாண்டுகளுக்கு வாடகைக்கு விட்டோம். சில பகுதிகளில் எங்கள் பள்ளியின் கூட்டுறவுப் பண்டகசாலை, நூல்விற்பனை நிலையம், சிற்றுண்டிச்சாலை முதலிய அமைய, ஓர் இடம் சிக்கலை உண்டாக்கிவிட்டது. அதுவும் நீதிமன்றம் வரையில் சென்று பின் முடிந்துவிட்டது. எப்படியோ 'விழுந்து எழுந்து' அக்கட்டடத்தைக் கட்டி முடித்துப் பெருமூச்சு விட்டேன். பயிலும் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இது பெரும் மகிழ்வைத் தந்தது.

1977ல் புதிய இடம் பெற வாய்ப்பு இருந்தமையால், அடுத்த ஆண்டு முதல் (1978) ஆண்பிள்ளைகளையும் மேல் வகுப்பில் சேர்க்க முடிவு செய்தோம். வள்ளியம்மாள் பள்ளி பெண்களுக்கெனவே அமைந்த ஒன்று; ஆண்பிள்ளைகளை ஐந்தாம் வகுப்பு வரையில்தான் சேர்த்தோம். 1978ல் ஜூனில் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் தனியாக ஆறாம் வகுப்பில் ஆண் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு ஏற்பாடு உள்ளது என் முன்னரே பெற்றோருக்கு அறிக்கை விடுத்தோம். எனினும் எதிர்பாராத தேவையற்ற வகையில். தடங்கள் ஏற்பட்டமையின் புதிய இடத்தில் கட்டடம் தொடங்க இயலவில்லை. ஆனால் நாங்கள் பெற்றொருக்குக் கொடுத்த வாக்கை மீறுவதற்கில்லை. எனவே இங்கேயே ஆறாம் வகுப்பில் ஆண்பிள்ளைகளைச் சேர்த்தோம். ஆண்டுதோறும் புது இடத்தில் கட்டிடம் 'வரும் வரும்' என்ற நம்பிக்கையில் தொடர்ந்து மேல் வகுப்புகளிலும் ஆண் பிள்ளைகள் பயிலலாயினர். பத்தாம் வகுப்பு வரையில் அவர்கள் இடம் பெற்றனர். 1981ம் ஆண்டுத் தொடக்கத் திலேயும் அந்த இடத்தில் ப்ள்ளி தொடங்க நம் தமிழகக் கல்வித் துறையினரின் அனுமதி வேண்டினோம். அவர்கள் ஏதோதோ காரணம் காட்டி, அடுத்த ஆண்டு தொடங்கலாம் என்றனர். 1980ல் செய்தித் துறை அமைச்சர் திரு. R. M. வீரப்பன் அவர்கள் பொங்கல் விழாவிற்குத் தலைமையேற்ற போது, நாங்கள் மாநிலக் கல்வித் துறையில் இணைய

வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். அவர் வழியாகவே விண்ணப்பம் அனுப்பியும் எல்லா ஏற்பாடுகளையும் செய்தும் 'இல்லை' என்ற பதில்தான் வந்தது. இது எங்களுக்கு மூன்றாவதுமுறை அனுபவம். நம் தமிழகக் கல்வித்துறையினருக்கு நான் என்ன கெடுதி செய்தேனோ தெரியவில்லை. தகுதி, வசதி, குறைந்த இடங்களிலெல்லாம் பள்ளி நடத்த அனுமதி வழங்கும் துறையினர் எல்லாத் தகுதிகளும் அமைத்த எங்களுக்கு அன்று அனுமதி வழங்கமறுத்தது ஏனோ அறியேன். அடுத்த ஆண்டிலே அங்கே தொடங்க, கட்டடத்துக்கு விண்ணப்பம் இட்டு ஆறு திங்களாகியும் நகராண்கழக ஒப்புதல் பெறவில்லை. விரைவில் பெற்று கட்டிடம் தொடங்கி அடுத்த 1982 ஜூனில் ஆண்பிள்ளைகளுக்கு புதிய இடத்தில் வகுப்புகளைத் தொடக்க வாய்ப்பு இருக்கும் என நினைத்தோம். ஆயினும் மத்திய கல்விக் குழுவின் கீழ் உள்ள பள்ளியின் அங்கமாக அமைப்பதா அன்றி மாநிலக் கல்விக் குழுவோடு பொருந்துவதா என்பதை முடிவு செய்யவில்லை. மறுபடி விண்ணப்பித்தாலும் மாநிலக் கல்வித் துறை என்னபதில் தரும் என்பது ஐயமாக உள்ளது. எப்படியும் ஆண்களுக்குத் தனியாகப் புதிய இடத்தில் அடுத்த ஜூனில் வகுப்புகள் தொடங்கப் பெறும் என நம்பினோம்.

இத்துணை ஏற்பாடுகள் செய்தபோதிலும் குறைகள் இல்லாமல் இல்லை. பிள்ளைகள் பகலில் உண்பதற்கென ஓர் இடம் ஒதுக்கப் பல முயற்சிகள் செய்தும் பயனில்லை. பெற்றோர் அதற்கெனத் தனிக்கட்டணம் மாதம் ஐந்தோ பத்தோ கூடத் தருவதாகச் சொன்னார்கள். ஆயினும் அது இதுவரை அமையவில்லை. தென் மேற்கு கோடியில் அடித்தளம் அமைக்கப் பெற்ற இடத்திலாயினும் வடபக்கம் திறந்த நீண்ட வெளியிலாயினும் அமைக்க முயன்று வரைப் படங்களும் (Plan) அனுப்பினோம். விரைவில் இசைவு பெறுவோம் என நம்பினோம். எனினும் அப்போது பயன் விளையவில்லை. தற்போது இரண்டும் நிறைவுற்றுள்ளன.

பள்ளிக்கெனத் தேவையான நூல்கள் குறிப்பேடுகளைத் தனியாக வாங்கி மாணவர்களுக்கு அளித்து வந்தோம். 1980 - 81ல் அதற்கென மாணவர் கூட்டுறவு விற்பனைக் களம் அமைத்தோம். எனினும் அது நன்கு செயல்படாது நிற்கின்றது. பின் தக்க ஏற்பாடுகள் செய்து செயல்பட்டு, மாணவர் அதன் வழியே பயன்பெற வாய்ப்பினை அளிக்க ஏற்பாடுகள் செய்ய முயன்றும் பயன் இல்லை.

இளங்குழந்தைகளும், பெற்றோரும் ஆசிரியர்களும் பள்ளியில் உள்ளபோது, பசிக்கும் வேளையிலும் சோர்வுறும் இடைவேளையிலும் பயன்படும்படி ஒரு சிற்றுண்டிச் சாலையினை நிறுவத் திட்டமிட்டோம். புதுக் கட்டடம் கட்டத் தொடங்கிய நாளிலேயே அந்த முயற்சி மேற் கொள்ளப் பெற்றது. அதற்கெனப் பலர் முன்வந்தனர். ஒருவர் பலமுறை வந்து மன்றாடினார். நாங்கள் மறுத்தோம். எனினும் தான் முன் நிற்பதாக அறிமுகமான அரசாங்க உயர்பதவியில் இருந்த ஒரு 'பெரிய மனிதர்' கூறி அவருக்கு ஓரிடம் ஒதுக்கித் தருமாறு வேண்டினர். எனவே ஓரிடத்தை ஒதுக்கி 'வள்ளியம்மாள் பள்ளி டீகடை' அல்லது 'சிற்றுண்டிச்சாலை' என்ற பெயரில் பிள்ளை களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் அதை நடத்த வேண்டும் என்று ஒப்புதல் கடிதம் தந்தோம். மேலும் அதற்கு வீட்டு வசதி வாரியமும் நகராண்கழகமும் இசைவு தந்த பிறகே அதைத் தொடங்க வேண்டும் எனவும் கூறினோம். ஆனால் அவர் நேர்மாறாக வேறு பெயரில் பெரிய உணவுச் சாலையாகவே மாற்றி, பிள்ளைகளுக்குப் பயன்படாவகையில் பொது 'கேப்'பாக மாற்றிவிட்டார். உடனே நாங்கள் நகராண் கழகத்துக்கும் போலிசுக்கும் பல முறை விண்ணப்பித்தும் பயன் இல்லை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தோம். விரைவில் நல்ல முடிவினை எதிர் பார்த்தோம். அவருக்கும் நீரும் மின்சாரமும் வழங்க வேண்டும் என வழக்குத் தொடுத்தார். கீழ் மன்றத்திலும் மேல் மன்றத்திலும் அவர் வழக்கு தள்ளப் பெற்றது.

முடிவில் முன் ஒப்பந்தப்படியே, எங்கள் 'வள்ளியம்மாள்' பெயரிலேயே நடத்துவதாகவும் பிள்ளைகளுக்கும் ஆசிரியர் களுக்கும் சலுகை தருவதாகவும் கூறினர். அப்படியே அது இன்று நடைபெறுகிறது.

எங்களுக்கு உதவி செய்த திருவாங்கூர் வங்கியினைப் பள்ளியிலேயே நடத்த அரசாங்க நகராண்கழகம், பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வீட்டுவசதி வாரியம் அனைத்தும் இசை வளித்தன. எனவே 1979 நவம்பர் முதல் அது நம் பள்ளிக் கட்டத்திலே நடைபெறுகின்றது. மாணவர் அனைவரும் தங்கள் சம்பளத்தினை வங்கியிலேயே கட்டிவந்தனர். ஆசிரியர்களும் தங்கள் ஊதியத்தினை வங்கியிலேயே பெறு கின்றனர். எனவே வங்கி எங்கள் பள்ளியின் ஓர் அங்க மாகவே அமைகின்றது. மேலும் எங்கள் வளர்ச்சிக்குத் தேவையான கடன்களை வேண்டும்போது உதவி முன் நிற்கின்றது. பெற்றோர்கள் தங்கள் வேலைகளுக்கு இடையூறு இல்லாமல் காலை 8மணி முதல் சம்பளங்களைச் செலுத்தலாம். ஞாயிற்றுக்கிழமையிலும் வங்கி செயல்படுவ தால் அன்றும் சம்பளம் கட்ட வசதியுண்டு. சில பெற்றோர் கள் தங்கள் கணக்கினை வங்கியில் வைத்து கொண்டு தொடர்ந்து திங்கள்தொறும் முதல் நாளில், பிள்ளைகளின் பள்ளிச் சம்பளத்தைத் தங்கள் கணக்கில் இருந்து எடுத்துப் பள்ளிக்கணக்கில் மாற்ற நிரந்தர இசைவினைத் தந்துள்ள னர். இது மிக்க நன்மையுடையதாக உள்ளது. எனவே பலவகையிலும் நாங்கள் பெற்றோர் மற்றோர் உடன் துணையால் நாள்தொறும் வளர்ச்சியடைந்து வருவதை எண்ண மகிழ்ச்சி பிறக்கின்றது.

எனினும் திருவாங்கூர் வங்கியினர் ஐந்தாண்டுகள் கழித்து, தாங்கள் சொன்னபடி வாடகையை உயர்த்தித் தர மறுத்தனர். சுற்றுப்புற நிலைக்கேற்ப, உயர்ந்த வேண்டும் என்று ஒப்புதல் தந்தும், மறுத்து ஓரளவு உயர்வு தர நிற்கின்றனர். நாங்கள் குறித்தபடி உயர்த்த வேண்டும்

என வேண்டினோம், இன்றேல் ஒப்பந்தப்படி ஐந்தாண்டுகள் கழித்துக் காலி செய்யவேண்டும் என்றோம். இரண்டும் செய்யாது, காலம் கடத்தினர், எனவே நாங்கள் அவர்தம் தொடர்பை விட்டோம். தமிழகக் கூட்டுறவு வங்கியினர் பள்ளியிலேயே திங்கள்தொறும் முதல் பத்து நாட்கள் வந்து வசூல் செய்வதாகச் சொன்னார்கள்; அதை ஏற்றுக் கொண்டோம். இன்றுவரை அந்த முறையே மேற் கொள்ளப் பெறுகின்றது.

ஆண்டுதோறும் ஆசிரியர் நியமனங்கள் முறைப்படி நடக்கின்றன. எனினும் சிலர் அடிக்கடி வீட்டுச் செல்லுகின் றனர். (ஆசிரியர்களைப் பற்றித் தனித் தலைப்பில் ஓர் பகுதி இந்நூல் இடம் பெறுகிறது). நாங்கள் தமிழக அரசாங்க அடிப்படையில் சம்பளம் வழங்குகின்றோம். எனினும் சற்றே இங்கே வேலை கடுமையாக இருக்கும். 'பிள்ளைகளுக்காக நாம் வாழ்கின்றோம்' என்ற உணர்வை ஆசிரியர்கள் உள்ளங்களில் வளர்க்க முயல்கின்றோம். அதன் வழி சில ஆசிரியர்கள் உணர்ந்து செயலாற்றுகின் றார்கள். என்றாலும் சிலர் இங்கே பணி செய்வதை ஓர் 'இடைக்காலப்பணி'யாகவே எண்ணுகின்றனர். எங்கள் பள்ளியில் மட்டுமன்றி அரசாங்கம் மானியம் பெறாத தனியார் பள்ளிகள் அனைத்திலும் இதே நிலை என அறிய முடிகின்றது. இதற்குக் காரணங்கள் பல. ஒன்று அரசாங்கப் பள்ளிகளிலோ அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளிலோ சம்பளம் சரியாக இருந்தும் வேலை குறைவு; வசதி அதிகம் மேலும் ஓய்வு ஊதியம், இலவச வைத்திய வசதி, போன்ற நலங்கள் உள்ளன. இங்கே நாங்கள் தெய்வீக நிதிக்குப்பதில் உயிர் ஒப்பந் நீதி அமைத்து, அதில் மூன்றில் ஒரு பகுதி யினை நாங்கள் கட்டுகிறோம். தற்போது தெய்வீக நிதியும் உள்ளது. தொடர்ந்து பத்து ஆண்டுகள் இருப் பவருக்கு தனி ஊதியம் தருகிறோம். எனினும் சிலர் அடிக்கடி மாறுகின்றனர். ஆண்டு இறுதியில் மாறினாலும் தவறில்லை. இடையில் அக்டோபர்-நவம்பரில் பிறமாதங்

களில் திடீரென அரசாங்க உத்தியோகமோ வேறுபணியோ கிடைத்தால் அவர்கள் இதைவிட்டுச் செல்லுகின்றனர். விதிப்படி இரண்டுமாத சம்பளத்தைத் தந்து விடுகின்றனர். சட்டம் அப்படி? அவர்கள் தொடக்கத்தில் ஆண்டு முழுவதிலும் விடுவதில்லை எனத் திட்டமாக எழுதிக் கொடுத்திருந்த போதிலும் இவ்வாறு இடையில் செல்லுவது வழக்கமாகிவிட்டது. எனினும் நாங்கள் உடனுக்குடன் தக்க வசதி செய்து பிள்ளைகள் நலமும் பாடங்களும் கெடாத வகையில் பார்த்துக் கொள்ளுகிறோம். ஆண்டுதோறும் அதற்கென அதிகமாகவே நான்கு ஆசிரியர்களை நியமிக்கிறோம். எப்படியாயினும் 'பயிலும் பிள்ளைகள் நலமே எங்கள் நலம்' என்ற குறிக்கோளிலேயே நாங்கள் செயலாற்றி வருகின்றோம்.

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க வரும் பெற்றோர்களும் மாணவர்களும் பயிலும் மாணவர்தம் பெற்றோரும் எல்லாவகையிலும் எங்களுக்கு ஊக்கமூட்டி வருகின்றனர். எனினும் ஒரு சிலர் நடந்து கொள்ளும் முறை எங்களுக்கு வேதனையை மூட்டுகிறது. கூடியவரையில் அத்தகைய களைகளை அவ்வப்போது களைந்தெடுத்து, நற்பயிராகிய மாணவர் நலத்தினை உணர்ந்தே செயலாற்றி வருகின்றோம். இவ்வாறு பலவகையில் அன்னையின் பேரால் அமைந்த பள்ளியில் 'தக்க இன்ன தகாதன இன்னவேன்று ஒக்க ஆராய்ந்து' மாணவர் வாழ்வே எங்கள் வாழ்வாகக் கருதி நாங்கள் செயலாற்றி வருகின்றோம். பலர் இதை விரைவில் மகளிர் கல்லூரியாக்க வேண்டும் என விரும்புவர். பார்வையிட்ட பெரியவர்களும் இதன் நிலை, அமைப்பு ஆய்வுகளம் முதலியன கண்டு 'இது விரைவில் ஒரு கல்லூரியாகும்' என வாழ்த்திச் சென்றுள்ளனர். கடந்த நாட்களில் பள்ளியினைப் பார்வையிட்ட தமிழக அமைச்சர் பலரும் பிற பெரியவர்களும் பல அரசாங்கக் கல்லூரிகளில் இல்லா வகையில் இங்கே ஆயுவுகளங்களும் நூலகமும் அமைந்துள்ளமையைப் பாராட்டிப் பேசினார். அவர்தம் பேச்சுகள் பள்ளி மலரில் இடம் பெற்றுள்ளன.

ஆம்! பள்ளி மலரைக் குறிக்க மறந்து விட்டேன். பிள்ளைகள் பேச்சுத்திறனை அறிந்து வாரந்தோறும் கூட்டங்கள் அமைத்து அவர்கள் அறிவினை வளர்ப்பதைப் போன்று அவர் தம் எழுத்துத் திறனைக் காட்ட மலர் தொடங்க நினைத்தோம். கடந்த பதினொரு ஆண்டுக ளாக மலரினை ஆண்டுவிழாவின்போது வெளியிடுகிறோம். அதில் வரும் ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மும்மொழி யிலும் குழந்தைகள் எழுதும் கட்டுரைகள், பாட்டுகள், பிறபடங்கள் முதலியன அவர்தம் திறனையும் தெளிவையும் நன்கு காட்டுகின்றன. அம்மலரிலே ஆண்டின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம் பெறும். ஆண்டுதொறும் மலரினைத் தக்கவர் ஒருவர் வெளியிட்டு, அதில் பிள்ளைகளின் திறன் விளங்குவதையும் எடுத்துரைப்பார். பல்வேறு போட்டி களிலும் வெளியிடங்களில் எங்கள் குழந்தைகள் பங்கு கொண்டு வெற்றி பெறுவர் விளையாட்டிலும் சரி, கட்டுரை கதை கவிதையாயினும் சரி, வேறு ஓவியம் நொடி வினா முதலியனவாயினும் சரி, எங்கள் பிள்ளைகள் கலந்து கொண்டு பரிசு பெறாமல் வருவதில்லை. அவைபற்றியெல் லாம் மலரில் சுட்டுதல் மரபு. இவ்வாறு எல்லா வகையிலும் எங்கள் பள்ளி—நம் பள்ளி—வள்ளியம்மாள் பள்ளி வளர்ந்து வருகிறது.

1968-ல் நின்ற இடத்தையும் 1986-ல் நிற்கின்ற நிலை யினையும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்க்கிறேன். சாதாரணமாக வாழ்ந்த தனி ஒருவனால் எவ்வாறு இந்தப் பெரும் பணியைச் செய்ய முடிந்தது என எண்ணி எண்ணித் திகைத்து நிற்கின்றேன். என் அன்னையின் மறைந்தருளும் நல்வாசியும் இறைவனின் பேரருளும் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன. அத்துடன் பல பெரியவர்கள்—அறிஞர்கள்—தலைவர்கள் நல்வாழ்த்தும் இணைந்து நிற்கின்றது. பெற்றோர்கள் மாணவர்கள் பொதுமக்கள் இவர்கள் ஒத்துழைப்பும் உடன் கலந்து சிறக் கின்றது. ஆம்! இத்தகைய நல்ல துணையினாலேதான்

'மலைபோல் வந்த' பல எதிர்ப்புக்கள், மாறுபாடுகள் கொடுமைகள், முட்டுக்கட்டைகள் அனைத்தையும் கடந்து, இன்று நான் சற்றே தலை நிமிர்ந்து அன்னைப் பணியினை ஆற்ற முடிகின்றது. திரும்பிப் பார்த்து வந்த வழியினை எண்ணி எண்ணித் திகைக்கும் அதே வேளையில், வழியிடையிருந்த கல்லை முள்ளையும் அகற்றி மேடுபள்ளங்களைச் சரிசெய்து செம்மைப்படுத்தி என்னை நடத்திக்கொண்டு வந்த அனைவரையும் எண்ணி வணங்குகிறேன்! வாழ்த்துகிறேன். இனியும் தொடர்ந்து இக்கல்விப் பணி சற்றே விரிவடைந்து விள்க்கமுற்று ஓங்கும் என்பதையும் அதற்கு அனைவரும் ஆதரவாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்கள் என்பதையும் உணர்ந்து இவற்றையெல்லாம் ஆக்கி அளிக்கும் ஆண்டவன் பதமலர் பணிந்து அமைகின்றேன்.

# பிள்ளைகளும் நாமும்

பழங்காலத்தில் 'குரு குல வாசம்' என்ற முறை நம் நாட்டில் இருந்ததை யாவரும் அறிவோம். ஒரே ஆசிரியரின் கீழ் இருந்து ஐந்து வயது முதலோ அதற்கும் சற்றுப் பிந்தியோ இருந்து, தக்க வயது வரும் வரையில்—பதினாறு கடக்கும்வரை என்று கொள்ளலாம்—பயின்று எல்லாக் கலைகளையும் கற்று, வெளியேறுவது மரபு. ஆயினும் அந்த வகையில் எல்லாப் பிள்ளைகளும் பயின்றார்கள் என்று சொல்லுவதற்கில்லை. மேலும் பயின்றவர்கள் வெறும் பாடங்களை மட்டும் பயின்றதோடு அமையாது வாழ்க்கையின் எதிர் காலத்திற்கு வேண்டிய சகல கலைகளையும் கற்றார்கள் என அறிகிறோம். அரச குமரர்களாயின் யானையேற்றம், குதிரையேற்றம் போன்ற போர்ப் பயிற்சிகளையும் பயின்றார்கள் போலும். எனவே அக் காலத்தில் நல்லாசிரியர்கள் எல்லாத் துறையிலும் வல்லவர்களாகி இருந்ததோடு, ஒழுக்க சீலர்களாகவும் தெளிந்த அறிவும் தெய்வ பக்தியும் உடையவர்களாகவும் இருந்திருப்பர். அதனால் பயிலும் மாணவர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் பெற்றவர்களும்கூட அப் பேராசிரியர்களிடம் நன்மதிப்பு வைத்திருந்தார்கள் என அறிகிறோம். தன்னைப் பாடிய பரணரிடம் தன்மகன் குட்டுவன் சேரலையே ஒப்படைத்த செங்குட்டுவன் வரலாறு நாடறிந்த ஒன்று. அப்படியே பல செல்வர், அரசர் வீட்டுப் பிள்ளைகளும் ஏழைப்பிள்ளைகளும் தக்க குருவினிடம் இருந்து 'இருஎன இருந்து சொல்லெனச் சொல்லி' என் நன்னூல் கூறுவது போன்று பயின்று, அனைத்திலும் வல்லவர்களாக விளங்கினார்கள். பிள்ளைகளும் ஆசிரியர்களுக்குப் பயந்து பயின்று வந்தார்கள்.

ஆசிரியர் ஊருக்கு எப்படி குருவாய் வழிகாட்டியாய்-நல்லாசிரியனாய்—ஒழுக்கசீலனாய் இருந்தார் என்பதைக்

'கோல்டுஸ்மித்' என்ற ஆங்கில ஆசிரியர் 'Village School master' ஆகப் படம் பிடித்து காட்டுகிறாரே! அத்தகையவர் எங்கே இன்று? இக் காலத்திய நிலையே வேறு! நல்லாசிரியர் கள் நாட்டில் கிடைப்பதரிது. அங்கொன்றும் இங்கொன்று மெனத் தனித்தனியே வெவ்வேறு பாடங்களைப் படித்து-ஒரு சிலர் படிக்காமலேயும்கூட அதிலதில் வல்லவரெனப் பட்டம் பெற்று ஆசிரியர்கள் வருகிறார்கள். எனவே பல வற்றைப் பயில வேண்டிய மாணவர் பல ஆசிரியர்களிடம் பயில வேண்டியுள்ளது. அதற்கேற்றாப் போலவே பண்டைக் குருகுலவாச முறைமாறிப் பள்ளிக்கூடமுறை புகுத்தப்பட்டது போலும். இப்போதும் கிராமங்களிலும் - ஏன்-நகரங்களில் சில இடங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை ஒரே ஆசிரியர் ஒரு வகுப்பில் முழுக்கமுழுக்கக் கவனம் செலுத்துவதைக் காண்கிறோம். அப்போதும் ஆண்டுக்கொரு முறை ஆசிரியர் மாற வேண்டியுள்ளது. குழந்தை வகுப்பு முதல் கல்லூரியின் முன் வகுப்பு வரை(+2) சுமார் 14 ஆண்டுகள் பயிலும் பிள்ளைகள் பல ஆசிரியர்களைச் சந்திக்க நேரிடு கின்றது. அதனால் அவர்கள் எவருடைய சாயலாக எதிர் காலத்தில் விளங்குவார்கள் என்று சொல்ல இயலாது. பழங்காலத்தில்—ஏன் இந்த நூற்றாண்டின் தொடக்கத் திலேயே 'நான் இன்னார் மாணவன்' என்று பெருமையோடு சொல்லக் கூடிய பரம்பரை இருந்துதான் வந்தது. இன்று உயர்ந்து 'டாக்டர்' பட்டம் முதலிய ஆய்வுப்பட்டங்களைப் பெற ஓரிருவர் தம் மேல் ஆசிரியர் வழி காட்டப் பயில் கின்றார்கள் என்றாலும், அவர்களும் ஆசிரியரிடம் மதிப்பும் மரியாதையும் காட்டுவதில்லை. அக் காலத்தைக் காட்டிலும் இன்று அறிவியலும் பிறவும் வளர்ந் துள்ளன என மதிப்பிடும் இந்த நாளில், அக் காலத்தில் இருந்த அமைதியும் மன நிறைவும் எளிய வாழ்வும் அதற் கேற்ற சூழலும் இல்லையே. நாட்டுக் கல்வியை நாளுக் கொருமுறை மாற்றும் நாகரிகத்தில் வாழும் நமக்கு, பண்டைக் குருகுலவாசம் எங்கே விளங்கப் போகிறது! நானும் 'உலகத்தோடு ஒட்ட ஒழுக' வேண்டியிருந்தமையின்

இத்தகைய பள்ளிகளையே இன்று நடத்தி வருகிறேன். இன்றேல், பணம் இன்றேனும், அரசாங்க இசைவு இருக்காதே!

எங்கள் பள்ளி 1968 ஜூன் 26ல் எங்கள் வீட்டிலேயே தோன்றியது எனக் கூறினேன். அப்போது மூன்று பிள்ளைகளே சேர்ந்தார்கள். நாங்கள் தலைமையாசிரியர் உட்பட (இன்று உள்ளவர்களே) வேறு நான்கு பெயருடன் ஐந்து ஆசிரியர்களை நியமித்து அன்று இருந்த அரசாங்கச் சம்பள நிலையில் ஊதியமும் கொடுத்தோம். ஆண்டுக் கடைசியில் மாணவர் எண்ணிக்கை நாற்பத்தாறாகப் பெருகிய போதிலும் எங்களுக்கு அந்த ஆண்டும் தொடர்ந்து சில ஆண்டுகளும், ஆண்டுதொறும் பல ஆயிரம் நட்டத்தில் நடத்திச் சென்றன. எனினும் சளையா உள்ளத்தோடு அண்ணாநகரில் 1970 பள்ளி தொடங்கினோம். அன்று முதல் பிள்ளைகள் இரண்டிடங்களிலும் எண்ணிக்கையில் வளர்ச்சியுற்றே வருகின்றனர். (1981—82ல்+2 உயர் வகுப்புகளிலும் பிற மேல்வகுப்புகளிலும் மத்திய கல்வி முறையின் அதிகமான பாடங் கருதியும் உயர்ந்த மதிப்பெண் பெறு நிலையிலும் சிலர் இடையிலும்) பத்தாம் வகுப்புத் தேறிய பின்னும், சில ஆண்பிள்ளைகள் ஆறாம் வகுப்பிலும் விட்டுச் சென்ற காரணத்தால் சற்றே எண் குறைந்துள்ளமை மாணவர் தம் எண் பட்டியலில் காணலாம்) நாங்கள் தேர்வு முறையிலேயே மாணவர்களைச் சேர்ப்பதாலும் எந்த நன்கொடையையும் எதிர்ப்பார்த்துச் சேர்க்காததாலும் பிற கட்டுப்பாடுகளிலும் இந்த அளவில் மாணவர்கள் எண்ணிக்கையை (1500+350+250) நிறுத்த முடிகின்றது. இன்றேல் இன்னும் சில ஆயிரம் கூடி இருக்கலாம். இதனால் சில பெற்றோர்கள்—உயர் அதிகாரிகள் ஆகியோருடைய மனக் கசப்பையும் வேறுபட்ட செயல்களையும் நாங்கள் சந்திக்க நேரினும் சளைக்காது கொள்கை அளவில் நிற்பதில் நாங்கள் மகிழ்ச்சி கொள்ளுகிறோம். மேலும் மேல்வகுப்புகளில் -9க்கு மேல் - கூடியவரையில் வெளியிலிருந்து வரும்

பிள்ளைகளை நாங்கள் சேர்ப்பது இல்லை, மற்றும் இதைப் பெண்கள் பள்ளியாகவே கொண்டுவர நினைத்ததால் 1977 வரை ஆண்பிள்ளைகள் 5ம் வகுப்பிலே வேறு பள்ளிக்குச் செல்லுமாறு அனுப்பிவிடுவோம். 1980ல் நாங்கள் புதிய இடம் பெற்றபோது, அதில் ஆண்களுக்குத் தனியாக வகுப்புகளை அமைக்கலாம் என நினைத்தமை யால் அதுபோது தொடங்கி ஆண்பிள்ளைகள் 10வது வரை இன்று பயில்கின்றனர். எனினும் பலருக்கும் இது வெளிப் படையாகத் தெரியாததாலும் சில தமிழக அரசின் இலவசப் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவதாலும் ஐந்தாம் வகுப்பு முடிந்ததும் வெளியேறு கிறார்கள். உரிய முறையில் அவர்கள் உரிய காலத்தில் மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தால் மகிழ்ச்சியோடு விடைகொடுத்து அனுப்புவோம். ஆயினும் சில பெற்றோர் கள்—நன்றாகப் படித்தவர்கள் கூட—காலஎல்லை கடந்தும் வேறு காரணங்கருதியும் உரிய காலங் கடந்து, எங்களுக்குத் தொல்லை தருவது உண்டு. எனினும், நாங்கள் எங்கள் வரையறுத்த—அச்சிட்டு வழங்கியுள்ள கொள்கையில் நிலைத்து நிற்கும் முயற்சியில் தலை நின்று ஓரளவு வெற்றி யும் பெற்றுவருகிறோம். ஆயினும் அதனாலும் சில பெரிய வர்கள் தூற்றுதலுக்கும் கொடுமைக்கும் ஆளவதும் உண்டு. என்செய்வது? அவற்றையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்.

பள்ளியில் பயிலும் பிள்ளைகளுள் பெரும்பாலோர் தொடர்ந்து பள்ளி இறுதி வகுப்புவரையில் பயின்று வருகின்றனர், ஒரு வேளை வேறு ஊர்களுக்கு மாற்றப் பட்டோ, வேறு இடங்களுக்குக் குடியேறிச் செல்கிற போதோ பிள்ளைகளை மகிழ்வோடு வழி கூட்டி முறைப்படி அனுப்பிவைப்போம். சில பிள்ளைகள் எங்களைவிட்டுப் பிரிய மனமில்லாமல் திரும்ப இங்கேயே வந்து சேர்வதும் உண்டு. எல்லாப் பிள்ளைகளும் பிள்ளைப் பாசத்தோடு எங்கள் ஆசிரியர்களிடமும் முதல்வரிடமும் எங்களிடமும்

பழகும் போது நாங்கள் எங்களை மறக்கிறோம். இளங் குழந்தைகளின் இன்முகம் நோக்கி மகிழ்வதால் பிறக்கும் இன்பத்திற்கு ஈடு இணை உண்டோ!

எங்கள் பள்ளி தொடங்கி, சென்ற ஆண்டுடன் பதினெட்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே எங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் இப்போது பள்ளியில் சேர்ந்து பயில்வதைக் காண மகிழ்ச்சி பிறக்கிறது. சில பிள்ளை களுடைய மணவிழாவிற்குப் பெற்றோர்கள் நேரில் வந்து அழைப்பதும் நாங்களும் அத்தகைய மணவிழாக்களுக்குச் சென்று கண்டு வாழ்த்தி மகிழ்வதும் மறக்க முடியாத செயல்களாகும்.

இரண்டரை அல்லது மூன்று வயதில் இளங்குழந்தைகள் சேர்க்கப்பெறும் போது அக் குழந்தைகள் தாயாரை விட்டுப் பிரிய மனமில்லாமல் வருவதும் அழுவதும் எங்கள் குழந்தை கள் வகுப்பு ஆசிரியர்களுக்குப் பெரும் வேலைதரும். எனினும் ஒரு சில நாட்கள் அவ்வாசிரியர்களின் தாயன்பில் திளைக்கும் அக்குழந்தைகள், பெற்றோருக்கு 'டாடா' காட்டி வழியனுப்புவது கண்கொள்ளக் காட்சியாகும். பிள்ளைகளை ஆசிரியர்கள் அரவணைத்துப் போற்றுவதும் அவர்களை விளையாட விடுவதும் வேடிக்கைப் பாடல்களைப் பாடி மகிழ்ச்சி ஊட்டுவதும் மெல்ல மெல்லப் பல படங்களை யும் துணைக் கருவிகளையும் காட்டிப் பாடம் புகட்டுவதும் இங்கே குறிப்பிடத்தக்கன.

அக்குழந்தைகள் வகுப்பிற்கு நான் செல்லும் போதெல் லாம் நான் என்னை மறப்பேன். என்னைக் கண்டவுடன் ஒருங்கே எழுந்து நின்று 'குட்மார்னிங் சார்', குட்ஆப்டர் நூன் சார்' சொல்வதும் சில குழந்தைகள் வந்து கட்டிக் கொண்டு மகிழ்வதும் மழலை பேசுவதும் என்னை மறக்க வைக்கும் செயல்கள். அவர்களை வாரியணைத்து முத்தமிட்டு வாழ்த்தி வருவேன். அதே குழந்தைகள் மெல்ல மெல்லப்

பயின்று மேல் வகுப்புகளுக்கு வரும் போது தெளிவு பெற்ற சிறந்த முறையில் அனைவருடன் பழகும் முறையும் பயிலும் முறையும் சிறக்கப் போற்றத்தக்கன.

அவ்வாறே பள்ளி இறுதி வகுப்பில் பயின்று தேர்வு எழுதி, பள்ளியினை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளின் பரிவும் பாசமும் கூட மறக்கற்பாலன அல்ல. முதலாண்டு (1977 என எண்ணுகிறேன்) பத்து, பதினோராம் வகுப்பு ஆகிய இரண்டிலும் பயின்ற மாணவர்கள் முறையே புகுமுக வகுப்பினும் (P.U C.) பட்டவகுப்பிலும் இடம் பெற எங்களை விட்டுச் சென்றனர் அவர்களை அனுப்பிய விழாக் காட்சியும் அடுத்து ஆண்டு தோறும் பனிரண்டாம் வகுப்புப் பிள்ளைகளை அனுப்பும் நிகழ்ச்சிகளும் எண்ணத் தக்கன. பிள்ளைகள் தாங்கள் ஆசிரியர்களிடம் பயின்ற முறைபற்றியும் பள்ளியில் தாங்கள் நடத்தப் பெற்ற முறை பற்றியும் பேசி, வேடிக்கை விளையாட்டுக் காட்டி, சிற்றுண்டி கொண்டு மகிழ்ச்சியோடு செல்லும் காட்சியும் மறக்க முடியாதது. அத்துடன் ஆண்டுதோறும் பள்ளிக்கென ஏதையாவது நன்கொடை அளித்துச் செல்லும் முறையும் போற்றுதற்குரியது. மின்விசிறி, கடிகாரம், மின்மணி, இரும்பு அலமாரி ஆகியவை அவர்கள் அளித்தவையாகும். அப் பிள்ளைகளுள் சிலர் வெளியே கல்லூரிகளில் பயிலும் காலத்து அடிக்கடி வந்து ஆசிரியர்களையும் முதல்வரையும் கண்டு வாழ்த்துப் பெற்று செல்வதும் போற்றக் கூடிய ஒன்று. அவ்வாறு எங்கள் பள்ளியிலிருந்து சென்ற மாணவி யர் எல்லாப் பெண்கள் கல்லூரிகளிலும் எளிமையாக இடம் பெறுவதோடு, அவ்வக்கல்லூரிகள் முதல் இரண்டாவது மாணவியராகப் பயின்று வருவது எங்கள் பள்ளிக்குப் பெருமை தருகின்ற ஒன்றாகும். ஒரு சிலர் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழிற் பயிற்சி தரும் கல்லூரிகளிலும் சேர்ந்து அங்கும் சிறக்கக் கல்வி கற்று வருவதனையும் இங்கே காட்டுவது தவறில்லை என எண்ணுகிறேன்.

இங்கே பயிலும் பிள்ளைகளுள் பெரும்பாலோர் பெண்களே, காலையில் அனைத்து மாணவர்களும் (மூன்று பள்ளிகளிலும் தனித்தனி.) ஒன்று கூடி வழிபாடு ஆற்றுவது காண வேண்டிய ஒன்றாகும். பல பிள்ளைகள் உண்மையிலே கண்மூடி, கைகூப்பித் தம்மை மறந்து வாய்பாட, இறைவனைப் போற்றும் நிலை மெய்சிலிர்க்க வைக்கும் ஒன்றாகும். அவர்களுக்கிடையில் ஒரு சில பிள்ளைகள் விஷமங்கள் செய்வதும் அவர்கள் வழிபாட்டுக்கு இடையூறு செய்வதும் அவர்களைப் பக்கத்தில் இருக்கும் ஆசிரியர்கள் அடக்குவதும் இல்லாமல் இல்லை. (ஒரு சில ஆசிரியர்கள் கூட அந்த முறையில் வழிபாட்டில் கருத்திருத்தாது, மாறுபட்ட பிள்ளைகளை அடக்காது இருப்பதும் உண்டு) இத்தகைய வழிபாட்டுக் கூடங்களுக்கு முறையாக வருவதும் முடிந்தபின் முறையாகச் செல்வதும் அவர்களை வளர்ந்த மாணவர்களே வழியிடை நின்று செல்ல ஆற்றுப்படுத்துவதும் அன்றாட ஒழுங்கு முறையில் உயர்ந்தனவாகும். வகுப்புகளிலும் பெரும்பாலும் பிள்ளைகள் அமைதியுடனும் ஒழுங்குடனும் நடந்து கொள்வதைச் சொல்லவும் வேண்டும். எங்கோ ஒருசில ஆசிரியர்களின் கட்டுபாடற்ற தன்மையால் ஓரிரு வகுப்புகளில் சற்றே ஒலி கிளம்புமாயினும் பொதுவாகப் பாட நேரங்களில் முழு அமைதி நிலவும் வகையில் பிள்ளைகள் நடந்து கொள்வதை அனைவரும் பாராட்டுவர். வெளியேயிருந்து அடிக்கடி வரும் பெரியவர்கள் அமைதியைக் கண்டு 'பள்ளி விடுமுறையா' என்று கேட்பதும் உண்டு. 'இல்லை' எனில் அவர்கள் வியப்படைவார்கள்.

பிள்ளைகள் பல வகைப்படுவர். பல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். செல்வர், வறியர், இடைநிலையார் எனும் மூவகையினத்தவர் பிள்ளைகளும் இங்கே பயில்கிறார்கள். பெரிய வீட்டுப் பிள்ளைகளும், உயர் அதிகாரிகள் அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகளும் நடுத்தர வாழ்வில் வாழ்வோர் பிள்ளைகளும், நான்காம் வகை ஊழியர், பால்வியாபாரி, பூ வியாபாரி என வழங்கும் எளியநிலை வாழ்வில் உள்ளவர்

வீட்டுப் பிள்ளைகளும் இங்கே ஒன்றாகக் கலந்து ஒரு வேறுபாடுமின்றி உளத்தால் ஒன்றிப் பழகும் காட்சி, உண்மையிலேயே இவர்கள் வழியே வருங்காலப் பாரதத்தில்—சமுதாய வாழ்வில் இன்று உள்ள ஏற்றத்தாழ்வுகள் இல்லையாகும் என்ற எண்ணத்தை உண்டாக்காமல் போகாது. அப்படியே பல்வேறு மொழியினர், சமயத்தவர் வீட்டுப்பிள்ளைகளும் வேறுபாடற்று இங்கே பயின்று, விளையாடி, பண்பாடுற்று விளங்குவர். அதற்கேற்ற வகையிலே ஒரே வகையான உடையும் பிறவும் அவர்களை ஒன்றுசேர்க்க உதவுகின்றன. பிள்ளைகளிடம் உயர்வு தாழ்வு மனப்பான்மை காட்டக் கூடாத வகையில் பல விதிகள் அமைத்து, எழுத்தில் வடித்துத் தந்து செயல்படுத்தின போதிலும் சில செல்வர்கள் தங்கள் பிள்ளைகளிடம் காசும் பணமும் கொடுத்துக் கண்டதை வாங்க வழிகாட்டி விடுகிறார்கள். அப்படியே சிலர் நகைகளைப் பூட்டிஅனுப்பி, பின்காணாவிட்டால் எங்களை வந்து தொல்லைப்படுத்துகிறார்கள். எனினும் பிஞ்சு உள்ளங்களைப் பெற்ற இந்த இளஞ்செல்வங்கள் அந்த வேறுபாடுகளையெல்லாம் கடந்துசாதியால், சமயத்தால், பட்டத்தால், பதவியால், செல்வத்தால், பிறவற்றால் உண்டாகும் வேறுபாடுகளைக் கடந்து, ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள் போலப் பழகுவது எங்கள் மனத்துக்கு மகிழ்ச்சி அளிப்பதோடு, உண்மையிலேயே வருங்கால பாரதம் இவர்களால் வேறுபாடற்று ஒன்றிய உணர்வில் உயர்ச்சி பெறும் என்ற இன்பத்தையும் தருகிறது.

இளங்குழந்தைகளோடு குழந்தைகளுக்காக—குழந்தைகளாகவே நாமும் மாறி வாழ்வில் பெறும் இன்பம் வேறு எந்த வகையிலும் பெற முடியாததாகும். இயேசு 'குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது' எனக் கூறியதும் இதுபற்றித்தானோ 'என எண்ண வேண்டியுள்ளது. சைவசமயத் தலைவராகிய ஞானசம்பந்தரும் சிவஞானபோதம் கண்ட மெய்கண்டாரும் குழந்தைகளாகவே குழந்தை உள்ளத்தோடே இறைவனைக்

கண்டவர்கள் அல்லரோ! அந்த இளங்குழந்தைகளோடு பழகும் நான் என் முந்திய கல்லூரி நாட்களைக் காட்டிலும் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறேன் என்பது உண்மையாகும்.

குழந்தைகள் வகுப்பில் சேர்ந்த பிள்ளைகள் படிப்படியாகப் பயின்று, பத்து அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் பயில்வர். அவர்கள் வளரவளர அவர்தம் கல்வியும் அறிவும் செயல் திறனும் கூடவே வளர்ந்து வருதலைக் காண்பதும் நலம் பயப்பதாகும். 'தம்மில் தம்' மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது' என வள்ளுவர் உயிர்கள் அனைத்தின் பேரிலும் ஏற்றிச் சொல்லும் பண்பு நினைக்கத் தக்கது. 'தம் மக்கள்' என்ற தொடருக்கு 'எம் வள்ளியம்மாள் குழந்தைகள்' என்ற பொருள் அமைய, அந்த அடிப்படையில் இக்குழந்தைகள் படிப்படியாக முன்னேறும் திறன் கண்டு எங்களை நாங்கள் மறக்கிறோம்.

இத்தகைய நல்ல பிள்ளைகளுக்குள்ளே சில நஞ்சுத் துளிகளும் எப்படியோ கலந்து விடுகின்றன என்பதை எண்ணும்போது சற்றே வருத்தம் உண்டாகின்றது இயல்பு தானே. ஆம்! சில நேரங்களில் அத்தகைய பிள்ளைகளை நேரிய வழியில் கொண்டுவர பெருமுயற்சி செய்ய வேண்டியுள்ளது. சில வேளைகளில் குழந்தைகளின் பெற்றோர்களே அச் சிறு பிள்ளைகளின் செயல்களை மறைக்கப் பார்த்து அவர்களைக் கெடுக்கின்றனர். சிறுபிள்ளைகள் பக்கத்தில் உள்ள பிள்ளைகளின் எழுதுகோல் முதலியவற்றை எடுத்து வைத்துக் கொள்வது இயல்பு. அதை நாங்கள் அவ்வளவு பெரிதாக எண்ணுவதில்லை. மேலும் அத்தகைய பிள்ளைகளை அழைத்துத் திருத்தினால் திருந்திவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் சற்றே பெரிய குற்றங்களைச் செய்யும்போது பெற்றோர்களையும் அழைத்துவந்து உடன் வைத்து விசாரித்தால், பெற்றோர்களே அப்பிள்ளைகள் குற்றம் செய்யவில்லை என வாதிடுவர். மேலும் சிறு குழந்தைகள் அக் குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்

கேட்கும் வேளையில் பெற்றோர்கள் பேசுவது அக் குழந்தைகளுக்கே வியப்பூட்டுவதாக அமையும். சில சமயம் பெற்றோர்கள் இளங் குழந்தைகளுக்குக் காதில் பொன் நகைகளைப் பூட்டி அனுப்புவர். நாங்கள் அவையெல்லாம் போட்டுக்கொண்டு வரக்கூடாது என்று திட்டமாகக் கூறி, விதிகளையும் அச்சிட்டுக் கொடுத்த போதிலும் சிலர் அவற்றை மதிப்பதில்லை. நகையோடு வரும் சில பிள்ளைகளை அழைத்துவரும் வேலைக்காரிகளும் அவர்களோடு சேர்ந்த பிறரும் அக் குழந்தைகளின் நகைகளை மிட்டாய் முதலியன கொடுத்து ஏமாற்றிப் பறித்துக்கொண்டு சென்று விடுவர். பின்னர் பெற்றோர் எங்களிடம் சண்டைக்கு வருவர். நாங்கள் அவர்களை வன்மையாகக் கண்டித்து அனுப்புவதுண்டு.

சில வளர்ந்த பிள்ளைகள் செய்யும் செயல்களையும் இங்கே நினைத்துப் பார்க்கத் தோன்றுகின்றது. வகுப்புகளுக்கு முறையான உடையோடு வரவேண்டுமென்று திட்டமாக வற்புறுத்தினாலும் சிலர் கிழிந்த காலணிகளையும் வண்ணமாற்ற உடைகளையும் அணிந்து வருவார்கள். உண்மையிலேயே காசு பணம் செலவழித்து வாங்க முடியாத குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளானால் ஓரளவு இரண்டு நாள் கெடு தந்து மாற்றவோ புதுப்பிக்கவோ ஏற்பாடு செய்வோம். ஆயினும் எல்லா வசதிகளும் இருந்தும் வேண்டுமென்றே 'என்ன செய்து விடுவார்கள்?' என்ற நினைப்பில் ஒருசில பெற்றோர்கள் அவ்வாறு பள்ளிக்கு அனுப்புவதுண்டு. சிலர் நேரிலும் வந்து இன்னும் 'ஒருமாதந்தானே இருக்கிறது, வேறு வாங்கவேண்டுமா' என்று வாதிடும் நிலையும் உண்டு. அத்தகைய முறைதவறி நடப்பவர்களுக்கெல்லாம் ஆண்டின் இறுதியில் மாற்றுச் சான்றிதழை ஆண்டுத் தேர்வின் முடிவுடனேயே நாங்கள் அனுப்பி விடுவோம். பிள்ளை வெறும் ஏட்டுப்படிப்புக்காக மட்டும் பள்ளிக்கு வரவில்லை. ஒழுக்கம், மற்றவருடன் பழகும் முறை, பிறபண்பாடுகளும் கூட்டுவாழ்வும் பயிலவே பள்ளிக்கு

வருகின்றனர். இந்த அடிப்படையின்றி மாணவர் பயின்றுதான் என்ன பயன்? இதனாலேயே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்வேறு கலவரங்கள் நாட்டில் நடப்பதைக் காண்கிறோம். எனவேதான் நாங்கள் வெறும் படிப்பிற்காக மட்டுமன்றி இந்த எல்லா அடிப்படைகளுமே அமைந்துள்ள நல்ல பண்புடன் கல்வியும் உடைய சிறந்த மாணவர்களுக்கே ஆண்டுதோறும் அவ் வகுப்புகளுக்குரிய பரிசுகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

பிள்ளைகள் சிலரைப் பெற்றோர்களே கெடுக்கின்றனர். ஒரு உதாரணத்தை மேலே காட்டினேன். அப்படியே பலப்பல. இரண்டொன்றினை இங்கே காட்டுகிறேன். பள்ளிக்கு எந்தப் பிள்ளையிடமும் காசு கொடுத்து அனுப்பக் கூடாது என்பது விதி. ஆயினும் சில பெற்றோர் காசுகள் மட்டுமன்றி பத்து ரூபாய்நோட்டு வரையிலும் அதற்கு மேலும் கொடுத்தனுப்புகின்றனர். அவற்றைக் கொண்டு பிள்ளைகள் வெளியில் சென்று கண்டதை வாங்கித் தின்று வயிற்றைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர். மேலும் வேறுசில பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு போய்க் கெடுக்கின்றனர். இதனால் நாங்கள் பிள்ளைகள் ஒரு முறை உள்ளே வந்தால் மறுபடியும் வெளியே அனுப்புவதில்லை. உள்ளே பிள்ளைகளுக்குத் தேவையான குறிப்பேடு, எழுதுகோல், துடைப்பான் (Rubber) போன்றவற்றுடன் மிட்டாய்கள் பிஸ்கட்டு, சிற்றுண்டிகள் ஆகியவற்றையும் தர ஏற்பாடு செய்கின்றோம். சில ஆண் பிள்ளைகள் வாயிலில் உள்ள காவல்காரரிடம் 'லஞ்சம்' கொடுத்து வெளியே செல்லவும் முயல்வர். அது எப்படியும் எங்களுக்குத் தெரிந்துவிடும். எங்கள் பணியாளர்கள் அந்த 'லஞ்ச' ஊழலில் தலையிட மாட்டார்கள்; அவ்வாறிருந்த இரண்டொருவரையும் உடன் வெளியே அனுப்பிவிட்டோம்; இனியும் அனுப்பத் தவற மாட்டோம். மேலும் இவ்வாறு மிகச் சிலர்—விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் செய்வதால் உண்மையிலே காசு கொண்டு வராத—கொண்டு வர இயலாத சில பிள்ளைகளும் விதிக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பிள்ளைகளும் வருந்துவர்.

எனவே இந்த நிலை வளரக்கூடாது எனப் பெற்றோர்களைப் பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறோம். எனினும் அவ்வப் போது—சில சில தவறுகள் நேரும்போது வருத்தத்தோடு கண்டிக்கிறோம்.

ஒருசமயம் ஒரு பிள்ளை ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து இரண்டு மூன்று பேரை உடன் கூட்டிக் கொண்டு கண்டபடியே செலவு செய்து ஒரு சில ரூபாய்களைப் பிள்ளையார் உண்டியில் போட்டதை அறிந்தோம். உடனே அவன் பெற்றோரை வரவழைத்து விசாரித்தால், தாங்களே கொடுத்தனுப்பியதாகச் சொல்லி, அவனை மறைக்க முயன்றார்கள். ஆண்டின் இறுதியில் அவன் பள்ளியிலிருந்து நீக்கப் பெற்றான். (பெற்றோரோ பிள்ளைகளோ பெருந்தவறு செய்வார்களாயின் அவர்களை உடனே பள்ளியிலிருந்து நீக்க விதி இருப்பினும் நாங்கள் அவ்வாறு செய்வதில்லை. அப் பிள்ளையின் கல்வி இடையில் தடைப்படக் கூடாது என்ற கருத்தில், ஆண்டு முழுவதும் படிக்கச் செய்து தேர்வு எழுதிய பிறகே தேர்வு முடிவுடன் அவர்களை அனுப்பிவைப்போம்) ஒருமுறை மற்றோரு பையன் பதினைந்து ரூபாயினைக் கொண்டுவந்து உடன் சில பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் வருமுன்பே விளையாடிவிட்டான். அவன் தந்தையார் ஓர் உயர் உத்தியோகம் வகிப்பவர். எனினும் அவன் அவ்வாறு செய்ய மாட்டான் என எங்களிடம் வாதிட்டார். பிறகு எல்லா வற்றையும் தக்க வழியில் விளக்கிய பின்பு செய்வதறியாது மன்னிப்பு கேட்டுக்கொண்டு வெளியேறினார். ஒரு பையனு டைய தாயார் தன் மகன் என்ன செய்தாலும் கேட்காது, இவ்வாறு கையில் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு வந்து விடுகிறான் என்று முறையீட்டு அழுதார்கள். நாங்கள் அந்த அம்மையாருக்கு ஆறுதல் சொல்லி, அமைதிப்படுத்தி அனுப்பி அவனையும் திருத்த முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளோம். இப்படியே சில பிள்ளைகள் வேறு சில பொருள்களை—மற்றவர்தம் கடிகாரம் போன்றவற்றைத்

திருட அவற்றைக் கண்டுபிடித்து ஒப்படைக்கும் காவல் துறை வேலையினையும் எங்கள் ஆசிரியர்கள் செய்வதுண்டு. இன்னும் சில பிள்ளைகள் சம்பளம் கட்டாமலேயே கட்டி விட்டோம் என்று வாதிப்பர். அவர்கள் பெற்றோர்களும் அவர்களுடன் கூடிப் பேசுவர். நல்லவேளை வங்கியே சம்பளம் வசூல் செய்வதால், உரிய இரசீது கேட்டால் தடுமாறிப் பின் செல்வார்கள். ஒரு பையனுடைய பெற்றோர் கட்டியதாகச் சாதித்து, இரசிதும் காட்டாது தொலைந்து விட்டது என்று பொய்சொல்லி, வாதாடி கடைசியில் பாங்குக் கணக்கும் எங்கள் கணக்கும் காட்டி விளக்கிய பின் வாய்மூடி மௌனியாகச் சென்றனர். இப்படியே ஒவ்வொரு வகையில் பாலில் சிறு விடம் கலந்தது போன்று ஆங்காங்கே ஒரு சில பிள்ளைகள் இருந்தாலும் நாங்கள் அவற்றை களைந்து, கலந்து எல்லாப் பாலையும் கெடுப்பதற்குமுன், திருத்திச் செம்மைப்படுத்தும் நிலையில் ஓரளவு ஒழுக்கத் தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டி வருகின்றோம்.

வளர்ந்த பெண்களும் எங்கள் பள்ளியில் பயில்கின்றன அன்றோ! அவர்களை 'கண்ணினைக் காக்கின்ற' கருத்தோடு நாங்கள் காக்க வேண்டியுள்ளது. கூடுமானவரையில் மேல் வகுப்புகளில் பெரிய பிள்ளைகளை நாங்கள் புதிதாகச் சேர்ப்பது இல்லை. புதிய பதினோரம் வகுப்பு தொடங்கிய முதலில் சில பிள்ளைகளை அவ்வகுப்பில் சேர்த்தோம். அவர்களுள் ஓரிருவராலும் இங்கேயே பயின்று கட்டுப் பாடற்ற ஓரிருவராலும் சிறிதளவு நாங்கள் எங்கள் கட்டுக் காப்பை அதிகரிக்க வேண்டியிருந்தது. சிலசமயம் அவர்கள் பெற்றோர்களை அழைத்து விளக்குவோம். சில பெற்றோர் கள் உண்மை அறிந்து அவர்களே தம் பிள்ளைகளைக் கண்டிப்பர். ஒரு வயது வந்த பிள்ளையை அவர்தம் தந்தையார் எங்கள் முன்பே அடித்த அடியினைக் கண்டு நாங்களே தேற்றி அவர்களை அனுப்பி வைக்கவேண்டிய நிலை உண்டாயிற்று. இந்த சிறு குறையெல்லாம் நாங்கள் பதினோறாம் வகுப்பு தொடங்கி அந்த ஓராண்டில்—நாம்

மேலே கூறிய காரணத்தால் நேர்ந்தவையே. அதற்கு முன்போ பின்போ இத்தகைய குறைபாடுகள் ஒன்றும் இன்றி நாங்கள் வாழ்ந்து வருகிறோம். இந்தச் சிறு தவறுகளும் அவரவர் பெற்றோர்கள் சற்று கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டிருப்பார்களாயின் நேர்ந்திருக்க வழியில்லை.

வேறு வகையிலும் சில வளர்ந்த பெண்களால் சில தொந்தரவுகள் நிகழும். சில ஆண்டுகளுக்குமுன் ஒரு பிள்ளை ஒழுங்காகப் பள்ளிக்கு வராததுடன் பள்ளி வேலைகளைச் சரிவரச் செய்யாது சரியாகவும் நடந்து கொள்ளாமையால் தலைமை ஆசிரியர் சற்று வன்மையாகக் கண்டித்தார். அப் பெண்ணைத் தேடிக்கொண்டு புதுப்புது முறை கொண்டாடிக் கொண்டு, இரண்டொரு ஆண் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதும், பள்ளி வாயிலில் நிற்பதும் அப் பிள்ளையின் வருங்கால வாழ்விற்குக் களங்கமாகும் என்று எண்ணிய முதல்வர் அவரைச் சற்று வன்மையாகவே கண்டித்திருப்பார். எங்கள் பள்ளியின் கண்டிப்பும் கட்டுப் பாடும் யாவரும் அறிந்தனவே. ஆயினும் அந்தப் பெண் நடந்து கொண்டது சற்றே எங்களுக்கு விசித்திரமாகப் பட்டது. ஒரு நாள் பகல் இரண்டு மணி அளவில் என் வீட்டுத் தொலைபேசி மணி அடித்தது. நான் எடுத்துப் பார்த்த போது பெண் குரல் கேட்டது. என்ன வேண்டும் என்றேன். என்னிடம் பலவகையில் மாற்றுக் குரலுடன் பேசி, மறுநாள் பள்ளிக்கூடம் விடுமுறை விடவேண்டும் என்று ஆணைப் பிறந்தது. நான் காரணம் கேட்டேன். 'நாங்கள் அனைவரும் 'பிக்னிக்' செல்லப் போகிறோம். அதற்காக 'லீவ்' என்று சொல்லி மேலும் முதல்வரைக் குறைகூற நான் தொலைபேசியை வைத்துவிட்டேன். அப்படியே மற்றொரு நாள் அவர்தம் நெருக்கமான சில ஆண் பிள்ளைகளை வீட்டுத் தொலைபேசியில் பேச' வைக்க அதையும் உணர்ந்து கொண்டேன், அவ்வாறு பேசிய, பேசத்தூண்டிய பெண் யாரென்று எனக்கு நன்கு தெரியும். எனினும் நன்றாகக் குரல், முறை முதலியவற்றை அறிய அடுத்த சில நாட்களில், அப்பெண்ணோடு பள்ளியில்

பாடங்கள் பற்றிச் சில கேள்விகள் கேட்டு, பதிலாகிய அவர் பேச்சினால் உறுதி செய்துகொண்டேன். எனினும் நாங்கள் அப் பெண்மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக அப்பெண்ணின் மேல் இரக்கம்தான் பிறந்தது. 'Boy friend', 'Girl friend' என்று சுற்றுவது இக்காலத்தில் பெருவழக்காய் இருப்பதெனச் சிலர் கூறினாலும் நம் பள்ளிப் பிள்ளைகள் அந்தத் தவறான வழியில் செல்லக் கூடாதே என்ற காரணத்தால் உளம் நைந்தது. என்னை நேர்முகமாக எவ்வாறு வசைபாடினாலும் நான் பொறுத்துக் கொள்வேன். என்னைத் திருத்த என் அன்னையில்லா நிலையில் நான் தவறும் போதோ, தவறினேன் எனத் தவறாகச் சிலர் நினைக்கும்போதோ, அவர்கள் ஏசுவது இயற்கை; நல்லது என்றுகூடச் சிலசமயங்களில் நினைப்பேன். ஆனால் மறைமுகமாக ஆங்கிலத்தில் 'Black mail' என்று சொல்லும்வகையில் ஆள் மாறாட்டமாக நின்று பேச வேண்டாதவற்றை - பேசத் தகாதவற்றை அதிலும், ஒரு பெண்-படிக்கும் பெண்—பேசுவது என்பதைத்தான் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனினும் அந்தப் பெண்மீது நாங்கள் யாதொரு நடவடிக்கையும் எடுக்கு முன்பே 'தன் நெஞ்சே தன்னைச்சுட' தானாகவே அவர்கள் பள்ளியை விட்டுவிட்டார்களென எண்ணுகிறேன். இத் தகைய நிகழ்ச்சி எந்தப் பிள்ளையாலும் மறுபடி என்றும் தொடரவில்லை. அவர்கள் பெயர், செயல் அனைத்தையும் அன்றே மறந்தேன். முதல்வரும் அந்நிகழ்ச்சியினை முற்றும் மறந்தார்.

இவ்வாறு தூய வெள்ளைச் சுவற்றில் அங்கொன்று இங்கொன்றாகக் கரும்புள்ளி உண்டாக்கும் ஒருசில பிள்ளைகளைத் தவிர்த்து, ஆயிரக்கணகான பிள்ளைகள் முறை தவறாது, ஒழுங்கினைக் கடைபிடித்து, உண்மையாகப் பயின்றும், பழகியும், பண்பாட்டின் வழிநின்றும் நம் பள்ளியின் பெருமையை நிலைநாட்டுவது எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அப்படியே அப்பிள்ளைகளை

நேரிய வழியில் ஆற்றுப்படுத்தி, ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்பி, ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ளவும் தெளிந்த கல்வியைப் பயிலவும் செய்யும் பெற்றோர்களுக்கும் நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். சில பிள்ளைகள் பள்ளி வேளையில் வெளியே சென்றும் வேறு வினை விளைத்தும் உள்ள போதெல்லாம் சில பெற்றோர்கள் அவர்களை அழைத்து வந்துவிடுவதும் அவர்களைப் பற்றி உடன் எங்களிடம் சொல்லி, அவர்களை அழைத்துத் திருத்த வழிகாண்பதும் நாங்கள் நன்றியுணர்வோடு குறிப்பிட வேண்டிய செயல்களாகும். இவ்வாறாய—நல்ல பிள்ளைகள் நல்ல பெற்றோர்கள் நலங்காணும் மற்றவர்கள் ஆகியோர் இடையில் நாங்கள் நிமிர்ந்துநின்று செயலாற்றுகின்றோம். அவர்கள் அனைவரையும் இருகை கூப்பி வணங்கி மேலே செல்கின்றேன்.

## ஆசிரியர்களும் நாமும்

1968-ல் தொடக்க நாளில் செனாய்நகர் ஐயாவு தெருவில் மூன்று பிள்ளைகளுக்கு ஐந்து ஆசிரியர்கள் நியமித்துப் பள்ளிக்கூடம் தொடங்கினோம் என மேலே குறிப்பிட்டேன். அவருள் ஒருவர் தலைவர்; இன்றைய முதல்வர் திருமதி சண்பகம் அவர்கள். மற்றவரில் ஒருவர் ஆடவர். ஆசிரியப் பணியில் பலகாலம் இருந்து ஓய்வு பெற்றவர். அவருக்கும் அன்றைய செகண்டரி ஆசிரியர் சம்பள விகிதத்தில் இருநூற்று எழுபது (ரூ. 270/-) சம்பளம் தந்தோம். (மற்றவர்களுக்கும் அப்படியே; தலைமை ஆசிரியருக்குச் சற்றே அதிகம்) அந்த ஆடவர் முன்னரே பணி செய்த அரசாங்க ஊழியராதலில் ஓய்வு ஊதியமும் பெற்றிருந்தார். மேலும் எங்கள் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு ஒரு மாணவர் என்ற நிலை கூட இல்லாமல் இருந்த காரணத்தாலும் தம் சம்பளத்தில் நூற்று ஐம்பது எடுத்துக் கொண்டு, மிகுதியைப் பள்ளிக்கே நன்கொடையாகத் தந்துவந்தார். அப்போது மாணவர்களிடமும் 10 அல்லது 12 என்ற அளவில் குறைவாகவே கட்டணம் வசூலித்தோம். திங்கள் தோறும் முதல் தேதி தவறாது சம்பளம்கொடுக்கும் முறையினைத் தொடக்க நாளிலிருந்தே பின் பற்றி வருகிறோம் (இன்றும் அப்படியே). எனவே முதல் நாள் ஆசிரியர்களுக்கு தருவதற்குப் போதிய வருமானம் இருக்காது. அப்போது நான் பச்சையப்பனில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தேன். சம்பளம் சுமார் எண்ணூறு அளவில் இருக்கும். முதல்தேதி பிற்பகல் அப்பெரியவர் கல்லூரிக்கு வருவார். அவரிடம் என் சம்பளத்தை அப்படியே கொடுத்து, பிள்ளைகளிடம் வசூலான தொகையினையும் சேர்த்து எப்படியோ சரிகட்டித் தவறாது சம்பளம் தந்து வந்தோம். இந்த இக்கட்டான நிலையினைக் கண்டதாலும் அவர்தம் சம்பளத்தில் நன்கொடை தந்தாரோ என

எண்ண வேண்டியுள்ளது. அவர் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். பின் மறுவாண்டு மாணவர் எண்ணிக்கை சற்றே உயர்ந்த போதிலும் (46) அந்த ஆண்டும் அவ்வாறே நன்கொடை அளித்துவந்தார். ஆனால் அதே வேளையில் அப்போது பணியாற்றிய மற்றொரு ஆசிரியை, பெற்றோரிடத்திலும் பிற இடங்களிலும் கடன்கள் வாங்கி அனைவரையும் ஏமாற்றிச் சென்ற நிலையினையும் நினைக்க வேண்டியுள்ளது. பெற்றோருள் ஒருவர் அவர் பேச்சைக் கேட்டு, தானும் ஓர் பள்ளியை ஆரம்பித்தால் நிரம்பப் பிள்ளைகள் சேரும் என்று நம்பி, அதற்கு ஏற்பாடு செய்து அந்த ஆசிரியையைத் தலைமை ஆசிரியராக அமர்த்த முடிவு செய்து, அந்த ஏற்பாட்டில் அவருக்குச் சுமார் ஆயிரம்ரூபாய் அளித்திருந்ததாகப் பிறகு அறிந்தோம். ஆசிரியரிடம் நிரம்பக் குறைகள் கண்டபோது இரண்டாம் ஆண்டின் இறுதியில் அவர்களை நீக்கிய பிறகு தான், அந்தத் தந்தையார் தாம் பெரும் தொகை அவரிடம் தந்ததையும் அது திரும்பி வரா நிலையினையும் கூறி எங்களை வழி சொல்லுமாறு கேட்டார். நாங்கள் சொல்ல என்ன இருக்கிறது? பின் உடன் இருந்த ஆசிரியர்கள் வழியே அவர் வேறு பள்ளி தொடங்க ஏற்பாடு செய்திருந்ததையும் அதனாலேயே அவர் அத் தொகையினைக் கொடுத்தார் என்பதையும் அறிய முடிந்தது.

1970-ல் அண்ணா நகர் 178 எண்ணில் என் சொந்த மனையில் கட்டடம் கட்டத் தொடங்கி கீழ்த்தளத்தினை முடித்து குழந்தைகள் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் தொடங்கியபோது அதிகமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டி இருந்தது. அவ்வப்போது விளம்பரங்கள் கொடுப்போம். பல விண்ணப்பங்கள் குவியும். தேவையான வகையில் வரையறுத்த எண்ணிக்கையில் நேர்முகத் தேர்வுக்கு வரச் சொல்வோம். அவர்களுக்குச் சாதாரண வகையில் அவர்கள் பயின்ற பாடத்தில் கட்டுரைகள் எழுதச் சொல்வோம். அவர்களைப் பற்றிய முழுத்

த்தகவல்களைத் தருமாறு குறிப்பு எழுதச் சொல்லுவோம். பலர் பெருந் தவறுகள் செய்வார்கள். ஆங்கிலத்தில் உயர் பட்டம் (M.A.) பெற்றவர்கள்கூட ஓரிரண்டு வாக்கியங்கள் ஆங்கிலத்தில் எழுத இடர்ப்பட்டமை கண்டு, அவர்களிடம் பிள்ளைகளை ஒப்படைத்தால் வருங்காலச் சமுதாயம் என்னாவது என்று வருந்திய நாட்கள் உண்டு. ஒரு சிலர் நல்ல முறையில் தத்தம் பொருள் பற்றி விளக்கம் காட்டி, எழுதியதையும் ஈண்டு சுட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எந்தக் காலத்திலும் நாங்கள் 'சிபாரிசு' பேரில் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதோ மாணவர்களைச் சேர்ப்பதோ கிடையாது. அப்படியும் சிலர் எங்கிருந்தாவது சிபாரிசு கடிதங்களைக் கொண்டு வருவர்; சிலர் நேரே சிலரை அழைத்து வந்துவிடுவர், நாங்கள் 'உங்கள் சிபாரிசினைக் காட்டிலும் அவர்கள் தகுதியினையே போற்றுவோம்' என்று கூறி, உண்மையிலேயே அவர்கள் தகுதியுற்றவராக இருப்பின் தேர்ந்தெடுப்போம்; இல்லையெனில் வாய்ப்பில்லை என்று சொல்லி விடுவோம்.

தொடக்கத்தில் எங்கள் பள்ளி எந்த அரசாங்கக் கல்விக் குழுவோடும் இணைக்கப் பெறவில்லை என்பதும் 1974-ல் தான் மத்தியக் கல்விக்குழுவோடு இணைக்கப் பெற்றது என்பதும் முன்னரே கூறப்பட்டன. எனவே அதற்கு முன்பு வரையறுக்கப் பெற்ற திட்டமிட்ட சம்பள அமைப்பு இன்றேனும் நாங்கள் கூடியவரை தமிழக அரசு அமைக்கும் திட்ட அடிப்படையிலேயே சம்பளம் தந்துவந்தோம். எனினும் இது அங்கீகரிக்கப் பெறாத ஒன்றானமையாலும் அரசாங்கப் பள்ளிகளிலோ அரசாங்க உதவி பெறும் (Aids) பள்ளிகளிலோ பணியாற்றினால் ஒய்வு, ஓய்வு ஊதியம், வேறு பல சலுகைகள் கிடைக்கும் என்ற காரணத்தாலும் பலர் எங்கள் பள்ளியினை மட்டுமன்றி, இதுபோன்ற பள்ளிகள் அனைத்திலுமிருந்தும் அடிக்கடி வெளியே சென்று அத்தகைய அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளில் சேர்ந்துவிடுவர். எனவே

நாங்கள் சில சட்டதிட்டங்களை ஏற்பாடு செய்யவேண்டிய நிலை உண்டாயிற்று. குறைந்தது பணிஏற்ற, அந்த ஒரு ஆண்டிலேயாயினும் இடையில் விட்டுவிடாது தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று உறுதி மொழியினைப் பெற்றே ஆசிரியர்களுக்கு பணி உத்தரவு வழங்குவோம். மேலும் அரசாங்க விதிமுறைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும் எனவும் வற்புறுத்துவோம். ஆயினும் அரசாங்க விதிமுறையில் தற்காலிகப் பணியாற்றுபவர் இரண்டு மாத ஊதியமும் நிலைத்த பணியாளர் மூன்று மாத ஊதியமும் தந்து எப்போது வேண்டுமானாலும் விலகலாம் என்ற நிலை இருந்ததால் சில ஆசிரியர்கள் இடையிடையே இந்த வகையில் விட்டுச் செல்ல வாய்ப்பு இருந்தது. இதனால் எங்கள் பிள்ளைகள்—சில வகுப்புகள்—இடையிடையே மாற்று ஆசிரியர்களிடம் பயில வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த நிலை இன்னும் நீடிக்கின்றது. எங்கள் பள்ளிகள் தனித்த முறையில் மானியமின்றி இருப்பதால் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் வழியேதான் எங்கள் தேவைக்கு வேண்டியவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. அதுவும் இருந்திருக்குமாயின் இடையிடையே பல நாட்கள் பலபல வகுப்புகள் ஆசிரியர்கள் இல்லாமலே இருக்க நேரிட்டிருக்கும்.

மேல் வகுப்பு வரவர, எங்களுக்கு முதுகலை பயின்று பயிற்சி பெற்ற (M.A., M.Sc.) ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலை உண்டாயிற்று. அவ்ர்களுள் பெரும்பாலோர் கல்லூரியில் இடம் பிடிக்க நினைப்பவராதலாலும் மேலே காட்டியபடி அரசாங்கம் பள்ளிகளிலே நிறையச் சலுகைகள் இருந்தமையாலும் அவர்களும் நிலைத்து நிற்க வழியில்லை. தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம் போன்றவற்றைப் பயின்றவர்கள் அதிகமாக உள்ளனர். எனினும் பிற பாடங்களுக்குப் போதியவர் இல்லையாதலால் அவர்கள் அடிக்கடி உயரிடம் கிடைப்பின் இதை விட்டுச் சென்று விடுவர். இதனினும் வேடிக்கையான ஒன்று, பௌதிகத்தில் (Physics) எம். எஸ்சி. பட்டம் பெற்றவர் பாங்கிகளில்

எழுத்தர் உத்தியோகத்திற்குச் செல்வதாகும். இதற்கு அவர்கள் தங்கள் பணத்தையும் அரசாங்கப் பணத்தையும் ஆயிரக்கணக்கில் செலவிட்டு, நாட்டுக்கு உதவாத நிலை யிலே எதையோ படித்து எங்கோ எப்படியோ பணியாற்றும் நிலையில் செல்வானேன்? இந்தக் குறைபாட்டை அரசாங்கம் நீக்கக் கடமைப்பட்டுள்ளது. (இதுபற்றி எனது மற்றொரு நூலில்—புதிய கல்வி முறை +2 விளக்கமாக எழுதி யுள்ளேன்). இப்படியே பலவகைகளில் நிலைத்த ஆசிரியர் கள் கிடைக்காத குறை இன்னும் தொடர்ந்து உள்ளது. இந் நிலை இது போன்ற பள்ளிகள் அனைத்திற்கும் பொது வானதே.

அரசாங்கப் பள்ளிகளிலும் அரசாங்க உதவி பெறும் பள்ளிகளும் இந்த நிலை இல்லாமல் இல்லை. ஆண்டு முழுவ துக்கும் அறிவியல் பாடம் சொல்லித்தரும் உயர்ப்பட்டம் பெற்றவர் இல்லையாதலால் வேறும் நிலையிலோ அல்லது பி. எஸ்சி. போன்ற பட்டங்கள் பெற்றவரைக் கொண்டு பாடம் நடத்தும் நிலையிலோ பள்ளிகள் உள்ளதைப் பலரும் அறிவர். சில பள்ளிகளில் அறுபதும் எழுபதும் எண்பதும் என மாணவர்களை அடைத்து, ஒரே ஆசிரியரின் கீழ்ப் பயில வைப்பது எனக் கேள்விப்படுவதும் உண்டு. எங்கள் பள்ளி யில் அந்த விதமான நிலையில்லை. 35 அல்லது 40 என்னும் அளவில் பிள்ளைகளை அமைத்து அதற்கு ஓர் ஆசிரியர் என்ற விதியினை ஏற்படுத்திச் செயல் பெற்று வருகின்றோம். மேலும் ஓய்வு ஊதியம் பிற சலுகைகளும் இல்லாத நிலை யினைப் போக்க, 1975-லிருந்து உயிர் ஒப்பந்த நிதியினை இங்கே செயலாக்கியுள்ளோம். ஆசிரியர்கள் அவரவர் சம்பளத்திற்கேற்ப 3,000 முதல் ஒப்பந்தம் கொள்ள அதற்குரிய கட்டணத்தில் மூன்றில் ஒரு பகுதியினை (சம்பள அடிப்படையில்) பள்ளியேகட்டி மிகுதியினை ஆசிரியர்கள் கட்ட வேண்டுமென்ற முறையினை ஏற்படுத்தியுள்ளோம். மகப்பேறுக்கான விடுமுறை போன்றவற்றையும் நிலைத்த ஆசிரியர்களுக்கென அளித்து வருகின்றோம். மேலும் விடுமுறை (Casual leave) எடுக்காத ஆசிரியர்களுக்கு அந்த

எடாத நாட்களுக்கு ஏற்ற வகையில் சம்பளத்தை ஆண்டு விழாவின்போது தந்து பாராட்டுகிறோம். கடந்த சில ஆண்டுகளாக (1982 முதல்) மத்திய சேமிப்பு நிதியில் ஆசிரியர்களை உறுப்பினராக்கி, அவர்களை நூற்றுக்கு ஆறுவீதம் கட்டச் செய்து நாங்கள் 7.22 வீதம் கட்டி, ஓய்வுக்குப்பின் நிலைத்த வருமானத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதில் ஓரளவு உயிர்ப் பாதுக்காப்புத் திட்டமும் அடங்கியுள்ளது. மற்றும் பத்து வருடம் ஆனவர்களுக்கு 'போனஸ்' போன்று ஆயிரம் முதல் பத்தாயிரம் வரையில் (அவரவர் சம்பள அடிப்படையில்) தந்து விடுகிறோம். ஆனால் அத்தகைய தொகை பெற்றவர்களுள் ஓரிருவர் வெளியில் பத்து ரூபாய் மாத சம்பளம் கூட்டித் தந்தால் உடனே ஆண்டு நடுவில் இப் பள்ளியினை விட்டு, கொம்பு விட்டுக் கொம்பு தாவும் தன்மையினைப் போன்று செல்வதையும் வருத்தத்தோடு இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

இந்த ஆண்டில், 1986க்கு முன்—சேர்ந்தவர்களுக்கெல்லாம்— முன் போனஸ் பெற்றவர்களாயிருந்தாலும், ஒரு பெருந்தொகை அளித்து, அதை வங்கியில் இட்டு ஏழு ஆண்டுகளில் மும்மடங்காகப் பெருக வழி செய்துள்ளோம். இதனால் ஒன்பதுபேர் பயன் பெற்றுள்ளனர். மேற்கூறிய மத்திய சேமிப்பு நிதியில் (C.P.F.) ஐம்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துள்ளார். ஆசிரியர்கள் சேர்ந்து, இரண்டாண்டுகள் கழித்த பிறகே அவர்கள் இதில் சேர்வர். ஓரளவு அவர்தம் பணியும் உறுதி செய்யப்பெறும்.

இவ்வாறு பல சலுகைகள் அளித்த போதிலும், மேலே காட்டிய காரணங்களாலும் வேறு பல காரணங்களாலும் ஆண்டுதோறும் சில ஆசிரியர்கள் விலகுவதும் சிலர் புதிதாகச் சேருவதும் வழக்கமாகியுள்ளது. ஆயினும் சில ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றுகின்றனர். ஒருசிலர் மேற்கு ஆசிய நாடுகளில் தங்களுக்கோ தங்கள் கணவர்களுக்கோ உயர்ந்த உத்தியோகம் வந்தமையால் நம்

பள்ளியை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களுள் ஒருவர் தவிர்த்து மற்றவர் அனைவரும் முறையாக ஆண்டு இறுதி வரையில் இருந்தோ அன்றி மூன்று மாத முன் அறிவிப்பின் படியோ சென்றுள்ளனர். ஒருவர் தம் கணவருடன் வடக்கே எங்கோ சேர வேண்டியிருந்தும், பிள்ளைகளின் நலம் கருதி யும் முறை கருதியும் மூன்றுமாத அறிவிப்பின்படியே— அதற்குள் அந்த ஆண்டுக்கு முடிக்க வேண்டிய பாடங்களை முடித்தே, விலகிச் சென்றனர். அத்தகைய நல்லவர் களெல்லாம் இன்றும் பள்ளி முதல்வருக்கு அடிக்கடி கடிதம் எழுதிப் பள்ளியின் நலத்தையும் முன்னேற்றத்தையும் கேட்டு அறிவதோடு, தற்போதும் தாங்கள் வள்ளியம்மாள் பள்ளியிலே பணி செய்வதாகக் கருதுவதாகவும் திரும்பி வரின் இங்கேயே சேருவதாகவும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறே விட்டுச்சென்ற ஆசிரியர்களுள் ஒரு சிலர் திரும்ப வும் பள்ளியில் சேர்ந்து இன்றும் பணியாற்றுகின்றனர். ஒரு சிலர் கணவர் தம் உத்தியோக மாற்றுதலால் பிரியமுடியா நிலையில் வருந்திப் பிரிகின்றனர். ஒருசிலர் மணமானபின் கணவரோடு கலந்து வாழ வெளியூர்களுக்குச் செல்லுகின்ற னர். இவர்களெல்லாம் பள்ளியில் வாழ்ந்த கால எண்ணங் களை மறக்காததோடு, இப் பள்ளியில் பெற்ற நல்ல அனுபவங்கள் அவர்களை வேறு இடங்களில் பணியாற்றும் போது எவ்வெவ்வாறு உயர்த்தி விளக்கி உள்ளன என்பதை எழுதியுள்ளார்கள். எடுத்துக்காட்டுக்கென அண்மையில் வந்துள்ள கடிதத்தினை இங்கே இணைத்துள்ளேன்.* இவ்வாறு

My dear Madam,

Long five years have passed by. But still you are a sparkling star in my mind. Hope my wishes will cheer you to enter into a prosperous New year. My humble regards to Founder Sir.

Affly MARY
DUBAI
5. 12. '86.

வள்ளியம்மாள் குடும்பத்தில் பழகும் ஆசிரியர்கள் 'உவப்பத் தலை கூடி உள்ளம் பிரியும்' நிலையில் பணியாற்றுவதையும் அவர்கள் ஆர்வத்தையும் பார்வையிட்ட பல பெரியவர்கள் தங்கள் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளனர். (பின் இணைப்பு)

இவ்வாறு நலம் நிறைந்த பண்பாளர்கள் ஒருபுறம் இருக்க, மற்றொரு புறத்தினையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது, தொடக்க நாளிலேயே ஓராசிரியர் செய்ததை முன்னரே குறிப்பிட்டேன். ஒருசிலர் நேர்முகத் தேர்விற்கு வந்து, அவர்களைத் தேர்ந்தெடுத்த பின், உத்தரவும் பெற்றுக்கொண்டு, பணியில் சேராது திடீரென நின்றுவிடுவர். இத்தனைக்கும் நாங்கள் அவர்களது ஒப்பந்தத்தினைப் பெற்று வைத்திருந்தும், 'நாங்கள் சேர வில்லை, சேர்ந்த பிறகுதானே ஒப்பந்தம்' என்று வாதிடுவர். நீங்கள் பள்ளிக்கூடம் திறக்கும் நாளில் வருவீர்கள் என்ற நம்பிக்கையிலேதானே பாட நூல்களை உங்களிடம் தந்து, வகுப்புகளுக்கு உரிய பாட அட்டவணை முதலியவற்றையும் தயாரித்தோம் என்று சொன்னாலும் அவர்களுக்கு ஏற்ப தில்லை. சிலர் மட்டமாகக்கூடப் பேசுவர். சிலர் முறை யென ஒத்துக் கொண்டு தாங்கள் முன்னேற வேறு வங்கி யிலோ அன்றி அரசுத் துறையிலோ பணி பெற்றமையைச் சுட்டி விடுதலை வேண்டுவர். எப்படிச் சென்றாலும் இழப்பு எங்கள் பள்ளிக் குழந்தைகளுக்குத்தானே. அதிலும் தேர்விற்குச் செல்லும் வகுப்புகளுக்கு மட்டும் பாடம் எடுப்பவராயின் வேதனை இரட்டிப்பாகும். இந்த ஆண்டில் இவ்வாறு சில ஆசிரியர்கள் சென்றதை நினைக்க வேதனை மேலும் மேலும் அதிகமாகிறது.

ஒருசிலர் தெரிந்த அமைச்சர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினரிடமிருந்தோ அல்லது உயர் அதிகாரிகளிட மிருந்தோ கடிதம் பெற்றுவருவர். ஒருவர் 'போலீஸ்' போன்ற அதிகாரிகளைக் கொண்டு மிரட்டுவர். இவ்வாறு பலவகை யில் எங்களுக்குத் தொல்லை கொடுத்த ஆசிரியர் சிலர் என்

கண்முன் நின்றனர். அவர்கள் சென்ற இடத்தும் செம்மையாக இல்லாது அமைந்து நிற்பதையும் சிலர் உதைப்பந்து உருளுவது போல் அங்கும் இங்கும் உருளுவதையும்கூடக் கண்டு வருந்த வேண்டியுள்ளது. அதே சமயத்தில் தன்னைப் பற்றி மட்டும் நினைக்கும் இந்த தகைமையாளர்கள் கையிலிருந்து நல்ல பிள்ளைகள் வருங்காலச் சந்ததிகள் எங்கள் இளங் குழந்தைகள் விடுபட்டதை எண்ணி மகிழ்ச்சியும் பிறக்கின்றது.

நாட்டில் கல்வித்தரம் குறைந்து வருவதாகவும் மாணவர்களிடம் ஒழுக்கமின்மையும் கட்டுப்பாடற்ற நிலையும் அதிகமாகி வருவதாகவும், பல கல்விக் கூடங்கள் கால வரம்பின்றி மூடிக்கிடப்பதாகவும் அறிகிறோம். இவற்றிற்கெல்லாம் காரணம் மாணவர்கள் அல்லர் என்பதையும் அரசியல் இடையீடும் பல ஆசிரியர்தம் பொறுப்பற்ற நிலையும் என்பதைப் பல நல்லவர் நாட்டில் அறிந்து எழுதியுள்ளனர். (6-4-82-The Hindu) இதில் உண்மை இல்லாமலும் இல்லை. பிள்ளைகளின் முன்பு வாழ்ந்து காட்ட வேண்டிய ஆசிரியர்களே வழுக்கி விழுவார்களாயின் பிள்ளைகள் என்னாவது? பிள்ளைகள் காலம் தாழ்த்துவரின் கடுமையாகத் தண்டிக்கும் நிலையில் ஆசிரியர்களே காலம் தாழ்த்து வந்து உரிய காலத்தில் வந்ததாகப் பொய்யான கையொப்பமிடும் 'கயமை'யினை எண்ண நடுக்கமுண்டாகின்றது. எங்கள் பள்ளியிலேயே அவ்வாறு சில ஆசிரியைகள் செய்யும்போது நான் அவர்களை அழைத்து வன்மையாகக் கண்டிப்பதுண்டு. அப்படியே வகுப்புகளில் பாடம் நடத்தாது பிள்ளைகளை ஆடவிட்டுவிட்டு, வேறு கதைப் புத்தகங்ளையோ, அன்றித் தாங்கள் மேல் படிப்புக்கு உரிய பாடங்களையோ படித்துக் கொண்டிருப்பர். அன்றி அடுத்த வகுப்பிற்குச் சென்று, அந்த ஆசிரியரையும் பாடம் நடத்தவிடாது அவர்களோடு பேசிக் கொண்டிருப்பதும் உண்டு. இவ்வாறு ஆசிரியர்கள் இருந்தால் பிள்ளைகள் படிப்பது எங்கே! முன்னேறுவது எங்கே! அப்படியே சில

ஆசிரியர்கள் மாணவர்கள் குறிப்பேடுகளைத் திருத்துவது இல்லை. சிலருக்குத் திருத்தவும் தெரியாது. வாக்கிய அமைப்பு—வார்த்தை—சொல் அமைப்பு முதலிய அறியாது அலமரும் ஆசிரியர்களும் உண்டு. நாங்கள் அவற்றைக் கண்டு கண்டிப்பதோடு, அவர்கள் வகுப்புகளையும் பாடங்களையும் மாற்றி அமைப்பதுண்டு. ஒரு சில ஆசிரியர்கள் எங்கள் பள்ளியில் வேலை அதிகமாக இருப்பதாகவும் அதனால் இதை விட்டுச் செல்வதாகவும் கூறி விலகுவர். நாங்களும் தடை சொல்லுவதில்லை.

அரசாங்கமோ அதன் அடிப்படையில் அமைந்த மேலதிகாரிகளோ ஆசிரியர்தம் நன்மையில் கருத்திருத்துவது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் அதே வேளையில் அவர்கள் கடமைகளிலிருந்து வழுவி, பல பிள்ளைகளின் வருங்காலத்தினைப் பாழ் செய்யும் நிலையில் அவர்களைத் தக்கவாறு தண்டிக்க வேண்டாமா? கல்விக் கூடங்களில் கோடிக்கணக்காக உள்ள வருங்கால இளைஞர்களுக்காக இருப்பதன்றி, ஒருசில ஆசிரியர்களுக்கென இல்லையே. இதைச் சிலர் ஒத்துக் கொள்ளுவதில்லை. ஆசிரியனாக என் ஆயுள் முழுவதும் கழித்த நான், இன்று ஆசிரியர் சமூகம் செல்லும் நிலையினை எண்ணிப் பார்க்கிறேன். நான் துறைத் தலைவனாகவும் கல்லூரியின் துணை முதல்வனாகவும் இருந்த காலத்திலும் மிகவும் வன்மையாக இருந்து, மற்றவரிடம் வேலை வாங்கினேன் என்று குறைபட்டுக் கொள்பவர் உண்டு. ஆனால் அதே ஆசிரியர்கள் நான் கல்லூரியை விட்ட பிறகு 'ஐயா தாங்கள் இல்லாத குறையினை இப்போது உணர்ந்து தடுமாறுகிறோம்' என்று வந்து கூறிச் செல்வர். எனவே ஆசிரியர்தம் கட்டுப்பாடும் கடமை உணர்வும் செம்மையாக அமையுமானால் வருங்காலத் தமிழகம்—பாரதம் சிறக்க முன்னேற்றம் அடையாதா? இந்த அடிப்படையிலே தான் எங்கள் பள்ளி தொடக்க நாளில் இருந்து இயங்கி வருகிறது. அதனாலேயே பல கட்டுத் திட்டங்களுக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் உட்படவேண்டியுள்ளது.

இந்த நிலையின் ஆயுள் முழுவதும் ஆசிரியனாக இருந்த நான் வாழ்ந்த நாளை எண்ணிப்பார்க்கிறேன். நான் புலவர் பட்டம் பெற்றதும் காஞ்சியில் உயர் பள்ளியில் பொறுப் பேற்று எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தேன். பின் என் ஆசிரியர் ஒருவரே எனக்கு அடுத்து, கீழ்வகுப்புகளுடன் நிற்க, அவருக்குத் துணையாக வந்த புதிய தலைமை ஆசிரியருடன் நின்று, என் பொதுமக்கள் தொடர்பு, செல்வாக்கு பிற சிறப் பியல்புகள் கண்டு, என்னை விலக்க நினைக்க நானே விலகினேன். பின் முப்பத்திரண்டு ஆண்டுகள் பச்சையப்பரில் பணி செய்து ஓய்வு பெற்றேன். மலேயா, ஆப்பிரிக்கா, இலண்டன் போன்ற இடங்களிலிருந்து பெருந் தொகை வருவதாக அழைப்புவந்தும் நான் செல்லவில்லை. அரசாங் கமும் பல்கலைக் கழகமும் அனுப்பவே இரண்டாண்டுகள் விடுப்பில் வெளியே சென்று திரும்பிவந்தேன். இந்த நிலைத்த பணியே என்னை மனநிறைவொடு வாழச் செய்கிறது.

கடந்த பதினெட்டு ஆண்டுகளில் நாங்கள் அனுப்பிய ஆசிரியர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாகவே இருப்பர். சிலரை நாங்கள் அனுப்ப விரும்பும் நிலையில் அவர்களாகவே விலகிக் கொள்வதாகச் சொல்வர்; நாங்களும் மகிழ்ச்சியோடு வழி அனுப்புவோம். யாருக்கும் மூன்றுமாதம் அல்லது இரண்டுமாதச் சம்பளமோ முன்னறிவிப்போ கொடுத்து நாங்கள் அனுப்பவில்லை. எனினும் ஆண்டுதோறும் விலகிச் செல்வது நடைபெறும் நிகழ்ச்சியாக உள்ளது. ஆசிரியர் பயிற்சித் தகுதி அற்றவர் எனக் கண்டபோதும் கூடியவரையில் அவர்தம் பாடங்கள், வகுப்புகள் முதலியவற்றை மாற்றி, அந்த ஆண்டு முழுவது மாயினும் அவர்களை வைத்திருந்தே நாங்கள் அனுப்பு வோம். ஆயினும் சில ஆசிரியர்கள் செய்வதை நினைத் தால்தான்...?

வெளியில் அரசாங்கத்திலோ அரசாங்க மானியம் பெறும் பள்ளியிலோ உத்தியோகம் கிடைத்தால், சிலர் சம்பளம் வாங்கியதும் சொல்லாமல் நின்றுவிடுவதுண்டு.

அதன் கொடுமையினையும் விளையும் பயனையும் எண்ணியே பிறகு அவர்தம் தேர்வுச் சான்றிதழ்களையும் பிறவற்றையும் வாங்கி வைத்துக் கொண்டபிறகு நியமனம் செய்வது வழக்கமாயிற்று. ஆயினும் ஒருசிலர் விட்டுவிட்டு பிறகு யாரையாவது 'சிபாரிசு' பிடித்து வாங்கிக் கொள்ளலாம் என்று சென்றுவிடுவதுண்டு. ஆனால் எப்படியும் அவர்கள் முறைப்படி, இரண்டு அல்லது மூன்று திங்கள் ஊதியத்தினைத் தந்தாலன்றி அவற்றை நாங்கள் தருவதில்லை. ஒருசிலர் வெளிப்படையாகவே தாங்கள் செல்ல இருப்பதைக் கூறி, பணமும் கட்டி விடுதலை பெற்றுச் செல்வர். தனிமனிதர் உயர்வை மட்டும் கருதி, வருங்காலச் சமுதாய உயர்வை நினைத்துப் பார்க்காத இந்த அரசாங்கச் சட்டத்துக்கு நாங்கள் உட்படாதிருக்க முடியவில்லை. அதனாலேயே சமுதாயம் நாளுக்கு நாள் நலிவுற்று வருகின்றது. மாணவர் நிலை மங்கி வருகிறது.

ஒருசில ஆசிரியர்கள் கற்பனைக்கு எட்டாத வகையில் பொய்யினைச் சொல்லவும் தயங்குவதில்லை, ஒரு சிலரை நாங்கள் முழுக்க முழுக்க நம்புவோம். அவர்களோ பெரும் பாலும் பெரும் பொய்களைச் சொல்லி வஞ்சகம் செய்வர். 1981-82-ல் அவ்வாறு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியினை எண்ண உளம் வேகின்றது. மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலமே பேசத் தெரியாத ஒருவரை, திருத்த முடியும் என்ற நம்பிக்கையில் ஆசிரியராக்கி, ஓரளவு திருத்தவும் செய்து நல்லவகையில் அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தோம். அவர்களும் எப்போதும் இங்கேயே இருப்பதாக வாக்களித்தனர். எனினும் வெளியில் அவர்களுக்கு ஒரு வேலை கிடைத்தவுடன் அவர்கள் செய்த செயல்தான் எங்கள் நெஞ்சை வாட்டுகின்றது. இதுவரையில் யாரும் செய்யாத செயலைச் செய்தார்கள். ஒருநாள் திடீரென உறவினர் ஒருவருடன் வந்து, தனக்குத் திடீரென ஊரில் திருமணம் கூடிவிட்டதாகவும் இரண்டே நாளில் ஊரில் நடக்க ஏற்பாடு ஆகிவிட்டதெனவும் பத்திரிகை கூடப்

போட நேரமில்லை எனவும் எனவே இரண்டு மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டு, சர்டிபிகேட்டுகளைக் கொடுத்தால் உடன் புறப்பட ஏதுவாகும் என்றும் அழாத குறையாகக் கேட்டார்கள். நாங்கள் உண்மையிலேயே திருமணம் என்ற காரணத்தால் மகிழ்ந்தோம். ஒரு சிறிதளவும் ஐயம்கொள்ளவில்லை, எங்களிடமும் எங்கள் பள்ளி முதல்வரிடமும் அதிகமான சலுகை பெற்றவர் அவர். பிற ஆசிரியர்களும்—பாவம் உண்மையென்று நம்பி, தம் உடன் உழைத்தவர் திருமணம் என அறிந்து ஒரு 'எவர்சில்வர்' பாத்திரத்தை அப்போதே வாங்கி வந்து பரிசளித்தனர். நாங்களும் ஒருமாத சம்பளத்தைத் திரும்பிக் கொடுத்து திருமணத்திற்கு நல்ல புடைவையாக உடனடியாக வாங்கிக் கொள்ளுங்கள் என வாழ்த்தி அனுப்பினோம். ஆனால் அவர்கள் மறுநாளே நகரில் உள்ள வேறொரு பள்ளியில் சேர்ந்து பணிபுரிய ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு மணமும் இல்லை—ஒன்றும் இல்லை. இதை அறிந்த அனைவர் உள்ளங்களும் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்று நைந்து வாடின, அவர்கள் வாழ்வு செம்மையுறுமா? இது ஒரு எடுத்துக்காட்டு. இந்தக் கொடும் எல்லையில் இன்றேனும் வேறு சில வழிகளைக் கைப்பற்றி இடையிடையே நின்ற ஆசிரியர்களும் சிலர்.

ஆசிரியர்களுள் சிலர் பிள்ளைகளிடம் சற்றே கடினமாக நடந்து கொள்வதும் உண்டு. அவற்றையும் அவ்வப்போது கவனித்துத் திருத்தவேண்டிய பொறுப்பும் முதல்வரையே சேரும். நல்லவேளை பிள்ளைகளுக்கு இரகசியமாக மார்க்கு அளிப்பதும் அதற்கென கையூட்டு வாங்குவதும் போன்ற இழி செயல்களை இங்கே யாரும் செய்வதில்லை; செய்ய வாய்ப்பும் இல்லை. கடந்த பதினெட்டு ஆண்டுகளில், அவ்வாறு முயன்ற ஒரிரு ஆசிரியர்களை அந்த ஆண்டே விடை கொடுத்து அனுப்பிவிட்டோம்.

'தூக்கின் பெரியது மேன்மேல் எழச் செல்லச் செல்ல வலியதன்றோ தாழும் துலைக்கு' என்பது ஆன்றோர்

வாக்கு. ஆனால் சிலர் சற்றே அதிகம் படித்துவிட்டால் கீழ் வகுப்புகளுக்கு பாடம் எடுக்க மறுப்பர். 'முந்திரி மேல் காணி மிகினும் கீழ் தன்னை இந்திரனாப் போற்றி விடும்' என்ற வள்ளுவர் வாக்குத்தான் எனக்கு நினைவுக்குவரும், பாடம் நடத்த முடியாவிட்டாலும், வராத ஆசிரியருக்கு மாற்றாக இருந்து, பிள்ளைகளுக்கு பொதுவான அறிவுரைகளைச் சொல்லுங்கள் என்றாலும் அதற்கும் சுணங்குவர். எனினும் நாங்கள் யாருக்கும் தனிச் சலுகை கொடுப்பது இல்லையாதலால், எப்படியும் இட்ட பணியினை செய்யப் பணித்து விடுவோம்.

ஆசிரியர்களைப் பற்றி நினைக்கும்போது எத்தனையோ நல்ல நினைவுகளும் சில மாறுபட்ட நினைவுகளும் உள்ளத்தில் நிழலாடுகின்றன. இங்கே இந்த அளவில் போதும் என அமைகின்றேன். பெரும்பாலான ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் உடனிருந்து உதவும் மனப்பான்மையாலும் கடமை உணர்ந்து செயலாற்றும் தன்மையாலும் நம் பள்ளி வளர்பிறை என வளர்ந்து வருகின்றது என்பதை நன்கு உணர்வோம்—நாடு அறியும். பள்ளியின் முதுகெலும்பான இந்த நல்லாசிரியர்களைப் போற்றி அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். உடலில் அங்கங்கே தோன்றும் புண்களை மருந்திட்டு ஆற்றுவது போல் வேண்டாதவர்களை விருந்தோ மருந்தோ இட்டுப் புறம் போக்கி, தியாக உணர்வோடு செயலாற்றும் நல்லாசிரியர்கள்தம் கூட்டுறவாலும் உடன் உழைப்பினாலும் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து மேன்மேலும் பள்ளி பலவகையில் உயர்ந்தோங்கும் என்பது உறுதி. அத்தகைய நல்லாசிரியர்தம் வாழ்வும் வளமும் சிறக்க என வாழ்த்துகின்றேன்.

# பெற்றோர்

முன்பகுதியில் என் அன்னையின் பெயரால் அமைந்த பள்ளியின் வளர்ச்சியில் என்னுடன் கலந்து உதவிய பல பெற்றோர்களைச் சுட்டினேன். ஒருசிலர் தம் நற்பெயர்களையும் குறித்தேன். தொடங்கிய நாள்தொட்டு எங்கள் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து உதவியவர்களை இங்கே நினைக்காமல் இருக்க முடியாது. பள்ளியின் தொடக்கத்தில் முதல்முதலாக 21-6-68-ல் திரு. செயராமன் என்பவர் தம் மக்கள் மூவரை முதன் மூன்று மாணவராகக் கொண்டு வந்து சேர்ந்தார். அவர் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் பழைய மாணவர். நானும் அப் பள்ளியின் பழைய மாணவனன்றோ! என்னிடம் அன்பு கொண்டவர்; கட்டட ஒப்பந்தம் செய்து ஓரளவு பொருளும் ஈட்டியவர். அவர் நான் பள்ளிக்கூடம் தொடங்குகிறேன் என்றபோதே, வேறு யோசனை செய்யாது, பக்கத்திலே வளர்ந்துள்ள பெரும் பள்ளிகளையெல்லாம் நினையாது, முதல் பிள்ளைகளாகத் தங்கள் குழந்தைகளைக் கொண்டு வந்து, உடனிருந்து இறைவழிபாடு எல்லாம் முடித்துச் சேர்த்தது இன்றும் என் கண்முன் நிழலாடுகின்றது. முதல் பெண் பெயர் 'வசந்தி' என எண்ணுகிறேன். பின் அவள் பெரியவளாக வளர்ந்து, திருமணம் செய்துகொண்டபோது நான் சென்று அருகிலிருந்து வாழ்த்தி வந்தேன். இன்று அந்த முதல் மாணவி தாயாக இருந்து குடும்ப வாழ்வில் உற்று இருப்பதை எண்ணி மகிழ்கிறேன். இப்போது வேறு சில மாணவியரும் தத்தம் குழந்தைகளை மழலையர் வகுப்பில் சேர்த்துள்ளனர்.

அன்றுமுதல் நாள்தோறும் வளர்ந்துவரும் பள்ளியில் பலப்பல வகையான பெற்றோர்களைக் காண முடிகின்றது.

பள்ளியினைத் தங்களுடையதாகவே கருதித் தாமாகவே வலியவந்து வேண்டிய உதவிகளைச் செய்துள்ள பெற்றோர் பலர். அதே வேளையில் எங்களுக்கு மாறாகச் செயல்பட்ட ஒருசில பெற்றோர்களும் உளர். அண்ணாநகரில் பள்ளி வளர்ந்தபிறகு எதிர்பாராது சேரவரும் பெரும் எண்ணிக்கை உடைய மாணவரில் தேர்வு அடிப்படையில் ஒரு சிலரையே எடுக்க நேர்வதால் இடம் கிடைக்காத பலர் எங்களை வெறுக்கச் செய்தனர். 'பள்ளி வைத்ததால் எனக்கு விரோதிகள் அதிகமானார்கள்' என்று நான் என் நண்பர் களிடம் சொல்வதுண்டு. குழந்தை வகுப்பாகிய 'L.K.G.'-ல் ஜூன் மாதத்தில் நாங்கள் 90 (அல்லது) 100 மாணவர் களுக்கு மேல் சேர்ப்பதில்லை. வகுப்பிற்கு முப்பதாக மூன்று பிரிவுகள் பிரித்து அந்த இளஞ் செல்வங்களை நல்ல முறையில் பாதுகாத்து வருகின்றோம். அதனால் அந்த எண்ணுக்கு மேற்பட்டு வரும் குழந்தைகளை எங்களால் சேர்க்க முடிவதில்லை. (தற்போது 100-க்கு மேல் போவ தால் நான்கு பிரிவுகளாகத் தனியாக மழலையர் கோட்டத் தில் அவ்வகுப்புகளை- L.K.G..U.K.G.- நடத்தி வருகிறோம். அதனால் சில பெற்றோர்கள் எங்களை வசைபாடுகிறார் கள். சில பெற்றோர் தம் குழந்தைகள் மேல் வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும். அவர் தம் தம்பி தங்கையர் வரின் தாராளமாக இடம் கொடுப்போம். ஆனால் அவர் கள் காலம் கடந்து வருவார்களாயின் என்ன செய்ய முடியும்? நாங்கள் 'L.K.G.' வகுப்பிற்குச் சேர்ப்பதைப் பெரும்பாலும் ஏப்ரல் இறுதியிலேயே அந்தந்த ஆண்டில் முடிவு செய்துவிடுவோம். சிலர் ஜூன் இடையில் அல்லது இறுதியில் வந்து கேட்பர். என்ன செய்ய முடியும்? அப்படியே அவர்கள் மூத்தோர் பள்ளியில் பயில்வார்களா யின் எப்படியோ சரி செய்து இடம் கொடுக்க முயல்வோம். எனினும் இடம் பெறாதவர்கள் எங்களை மாற்றுக் கண்ணோடு நோக்குவதை ஆண்டுதோறும் உணர்ந்துதான் வருகிறோம். கூடுமானவரையில் ஒரு வகுப்பிற்கு மூன்று பிரிவு (5ஆவது வரையில்) என்றும் மேல் வகுப்பிற்கு இரு

பிரிவு என்றும் திட்டமிட்டு அதற்கேற்ப அறைகளையும் பிறவற்றையும் அமைத்துச் செயலாற்றும்போது, அதிக மாகச் சேர்த்து, அதிக பிரிவுகளை எப்படி ஏற்படுத்த இயலும் என்பதைச் சிலர் உணருவதில்லை. சேர்ப்பதற் கென்று பெருந்தொகையினை வஞ்சித்துப் பெறும் வழக்க மும் எங்களிடம் இல்லை.

மேல் வகுப்புகளுக்குப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, தேர்வு முறையினைக் கையாண்டு, உள்ள இடத்துக்கு ஏற்ப முதல் நிற்கும் பிள்ளைகளை எடுத்துக் கொள்வோம். ஒரு வகுப்பில் நான்கு இடம் இருந்தால், சுமார் இருபது பிள்ளைகள் தேர்வு எழுதுவர். அதில் முதல் நால்வரை நாங்கள் முறையாகத் தேர்ந்தெடுப்போம். மற்றவரை என் செய்வது? பதினைந்தாவது இடத்தில் உள்ள ஒருவர் எப்படியாவது இடம் பெற முயல்வர். இதற் காக அமைச்சர்கள் உதவியை நாடினவர்கள் உளர். அவர் களும் பரிந்துரைப்பர். எனினும் நான் தயங்காது நேரில் சென்று தேர்ந்தெடுப்பதில் கையாளும் முறையினையும் சேர்க்க அமைந்த விதிகளையும் விளக்கும்போது, அவர்கள் உணர்ந்து நாங்கள் செய்வது சரி என்றும் வேண்டுமானால் கீழ்வகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்லுவார் கள். அவ்வாறு பரிந்துரைக்கப் பெற்றவர்கள் மட்டுமன்றி, தேர்வு எழுதிய வகுப்பிற்குத் தகுதி இல்லாதவரை, இடமிருந்தால் கீழ் வகுப்பில் சேர்த்துக் கொள்ளும் முறை யினையும் நாங்கள் தொடக்கம் முதலே மேற் கொண்டிருக் கிறோம்.

ஒருசிலர் ஐநூறு அல்லது ஆயிரம் ரூபாய் தருகிறோம். எப்படியாவது அந்த வகுப்பிலேயே சேர்த்துக் கொள்ளுங்கள் என்று யாராவது ஒருவரை 'சிபாரிசு' கொண்டு வருவார்கள். எங்களை நன்கு அறிந்தவர்கள் அதைச் சொன்னால் கீழ் வகுப்பில் இடம் கிடைக்காததோடு, என்றும் பள்ளியில் சேர்க்க மாட்டார்கள் என்று சொல்லித் திருப்பி அனுப்பி விடுவார். அறியாதவர் வந்து சொல்லி, இடம் இல்லை

என்ற பதிலைப் பெற்று எங்களைக் கோபப் பார்வையோடு பார்த்துச் செல்வர். ஒருசிலர் 'பல பள்ளிகளில் அரசாங்க மானியம் பெறும் பள்ளிகளில் கூட ரூபாய் கொடுத்தால், தொகைக்கு ஏற்ப வகுப்பிலும் இடம் கிடைப்பதால் இங்கேயும் அப்படி இருக்குமோ எனக் கேட்டோம்' என வருத்தம் தெரிவித்துச் செல்வார்கள். நாங்கள் அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையினைத் தவிர அதிகம் வாங்குவது என்றும் வழக்கமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்து விடுவோம். எனினும் இடையில் சில ஆண்டுகளில் ஒருசிலர் இடம் கிடைக்காத காரணத்தால் நாங்கள் சேர்ப்பதற்குப் பெருந்தொகை கணக்கில் காட்டாமல் வாங்குகிறோம் என்று புரளியைக் கிளப்பிவிட்டனர். இரண்டு மூன்று ஆண்டுகளாக அத்தகைய புரட்டு அடங்கிவிட்டது என அறிகிறோம். சில ஆண்டுகளுக்கு முன் என்னுடன் பச்சையப்பரில் பணியாற்றிய ஆசிரியர் ஒருவர் தம் மகளைச் சேர்க்க வந்தபோது தனியாக என்னிடம் வந்து 'ஐயா, தங்கள் அறிக்கையில் குறித்ததோடு மேலும் எவ்வளவு கொண்டு வரவேண்டும், என்று கேட்டார். நான் சிரித்துக் கொண்டே', 'அப்படி ஒன்றும் தேவையில்லை' என்றேன். அவர் 'ஆம், அதை நான் அறிகிறேன். ஆயினும் சிலர் அவ்வாறு புரளி விடுகிறார்கள், எனவே கேட்டேன்' என்றார். பிறகு உரிய தொகை கட்டியே அவர்—தம் மகளைச் சேர்த்தார். இப்படி ஒருபக்கம் நல்ல உணர்வோடு உற்றவராய் உதவும் பெற்றோர்கள் ஒருபுறமும் மற்றார் புறமும் இருக்க எங்கள் பள்ளிப் பணி தடைக்கற்களைக் கடந்து ஓங்குகிறது.

எங்கள் பள்ளி நடுத்தர வகுப்பினருக்காகவும ஏழை எளியவர்களுக்காகவும் அமைந்த பள்ளியாகும். ஒருசில செல்வர் வீட்டுப் பிள்ளைகளும் உயர் அதிகாரிகள் வீட்டுப் பிள்ளைகளும் பயில்கின்றார்கள். ஆயினும் நாங்கள் எந்தவித வேறுபாடும் காட்டுவதில்லை. 'நான்காம் துறை உத்தியோகத்தர்' எனப்பெறும் அலுவலக ஊழியர்கள்,

பால்காரர், பூ விற்பவர், செருப்புத் தைப்பவர் போன்ற பலரும் எங்கள் பெற்றோராயுள்ளனர். ஒருசில வியாபாரி கள், ஆங்கிலம் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஆகியோரும் உள்ளனர். தொடக்கத்தில் ஒரு சிறுவன் எங்கள் பள்ளியில் பயின்றான். அவன் தந்தையார் ஓர் தனியார் அலுவலகத் தில் 'கடைநிலை' ஊதியராகப் பணியாற்றினார். அவருக்குச் சம்பளம் பத்தாம் தேதிதான் வரும். நாங்கள் சம்பளம் கட்டுவதற்குக் கடைசி நாள் அப் பத்தாம் தேதி எனவும் மறுநாள் (அக்காலத்தில்) ஐம்பது பைசா தண்டம் எனவும் அமைத்திருந்தோம். அந்த அரைரூபாய் கட்டமுடியாத நிலையில், அவர் பத்தாம் நாள் இரவு 7 அல்லது 8மணி அளவில்—சிலநாள் உறங்கிய பின் பத்துமணி அளவில் தட்டி எழுப்பி அந்தச் சம்பளத்தை என்னிடம் கொடுத்துக் செல்வார் (அப்போது பத்து அல்லது பன்னிரண்டு ரூபாய் சம்பளம் என எண்ணுகிறேன்) நான் அவர்நிலை எண்ணி மறுநாள் காலை அப் பையன் பெயரிட்டு 'இரசீது' எழுதி அவனிடம் கொடுத்தனுப்பிவிடுவேன். ஆனால் அதே வேளையில் உரிய காலத்திலும் கட்டாது, மறந்து விட்டதாகக் கூறிக்கொண்டு இருபதாம் தேதிக்கு மேல் யாதொரு தண்டமும் இல்லாது வாங்கிக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டு வற்புறுத்துவோரும் உண்டு. ஆயினும் அத்தகையோரெல்லாம் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் இல்லை என்பதையும் கூறிக் கொள்ளுகிறேன்.

ஒரு பெரியவர்—உயர்ந்த பதவியில் உள்ளவர் சம்பளம் காலம் கடந்து கட்டுவதற்கென வந்து பள்ளியின் முதல் வரைக் காணவிரும்பினார். அப்போது முதல்வர் ஆசிரியர் கள் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையால் காண முடியவில்லை என்று புற அலுவலர் சொன்னார்கள். பிறகு அவர் தண்டத்துடன் கட்டிச் சென்றார் என நினைக்கிறேன். ஒருசில மாதங்கள் கழித்து நான் ஏதோ ஒரு அலுவலாக ஒரு நண்பரைக் காணச் சென்றேன். அவர் இந்தப் பெற்றோர் வீட்டில் இருப்பதறிந்து அங்கே சென்றேன்.

நண்பர் அங்கே இருந்தார். வீட்டவர் தன்னை நான் காண வந்ததாக எண்ணி அழைத்து உட்கார வைத்தார். உடனே தான் பள்ளிக்கு வந்தபோது முதல்வரைக் காணமுடியாது திரும்பி வந்ததைக் கூறி, அப்போது என்னையும் அவ்வாறே வெளியில் உள்ள 'பியூன்' சொல்லி திருப்பி அனுப்பி இருக்கக் கூடும் என்றும் இதைச் சொல்லவே உள்ளே அழைத்த தாகவும் கூறினார். அது நல்ல 'தமிழ்ப்பண்பாடு; இந்தியப் பண்பாடு' என நினைந்தேன். நான் அவரைக் காணவர வில்லை எனவும் அங்கு உடனிருந்த நண்பரைக் காணவந்தேன் எனவும் கூறினேன். அவர் முகம் மாறிவிட்டது. ஆயினும் விடாது 'பத்தாம்தேதி சம்பளம் கட்டவில்லையானால் மறுநாள் ஐந்துரூபாய்கூட வாங்குவது எப்படிப் பொருந்தும்? ஒரு நாளைக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு ஐந்து ரூபாய் வட்டியா? ஐந்து ரூபாய் கட்டினால் தவறு சரியாகிவிடுமா?' என்று கேட்டார். அவர் நீதித்துறை யில் பணியாற்றியவராகையால் ஒன்றைச் சுட்ட நினைத் தேன்!. 'ஐயா' கொலையாளிக்கு மரணதண்டனை விதிக்கிறார்களே! அதனால் மாண்டவன் திரும்பி விடுவானா? அதற்கு இது சரியாகுமா? அன்றி கொடுமை களுக்குத் தண்டமாக ஒரு தொகை விதிக்கிறார்களே? அதனால் தவறு சரியாகிவிடுமா? எனக் கேட்க நினைத்தேன். எனினும் அதுபண்பாடு ஆகாது என விட்டுவிட்டேன். நண்பரோடு பேச வேண்டியதைப் பேசிவிட்டுவந்து விட்டேன். இப்படியும் ஒருசிலர்.

பிள்ளைகள் எந்தெந்த வகையில் நடந்து கொள்ள வேண்டும் எனவும் மீறி நடப்பது முறையற்றது எனவும் விளக்கங்கள் காட்டி, மாணவர் குறிப்பேட்டில் (Hand book) அச்சிட்டு ஒவ்வொருவருக்கும் தந்து வருகிறோம். அதைப் பெற்றோர் அனைவரும் தவறாது படிக்க வேண்டுமெனக் கேட்டு விண்ணப்பமும் செய்துள்ளோம். எனினும் சில பெற்றோர்கள் அவற்றைப் படிப்பதில்லையோ அன்றிப் படித்துச் செயலாக்க முடிவதில்லையோ அறியோம்.

அதனால் சில தவறுகள் உண்டாகின்றன. உதாரணத்துக்கு ஒன்றிரண்டு சொல்ல நினைக்கிறேன்.

விலையுயர்ந்த பொருள்களையும் நகைகளையும் அணிந்து கொண்டும் எடுத்துக் கொண்டும் வரக்கூடாது எனத் திட்டமாக அறிவித்திருக்கிறோம். எனினும் சில குழந்தைகள் நகைகளை அணிந்து வருகின்றனர். ஒரே வகையான சீருடையும், நகை முதலியன இல்லாமையும் பிறவும் குழந்தைகள் மனத்தில் வேறுபாடு உணர்ச்சி வளரா மைக்கு முதற்படியாக அமைய வேண்டும் என்பதே எங்கள் கருத்து. வெறும் புறத்தோற்றத்திற்கும் ஒரே வகைக் காட்சிக்கும் மட்டும் அமைந்தது சீருடையன்று. அகப் பொலிவை வளர்க்கவும் அது பயன்பட வேண்டும். பிள்ளை பருவத்தில் அந்த உணர்ச்சி வளருமானால் வருங்காலச் சமுதாயம் அனைவரும் விரும்பும்படியே சமதர்மச் சமுதாய மாக மலரும் என்பது எங்கள் உள்ளக்கிடக்கை. அப்படியே வளர்ச்சியடைந்த பெண்களின் நிலையைக் கட்டுபடுத்தி, இளங்குழந்தைகளென அவர்களைப் புறத்தே காட்டவும் இவ்வுடை பயன்படுவது. எனவே அகம் புறம் இரண்டும் தூய்மையாக நிலவச் செய்த ஏற்பாடே இது. ஆயினும் சில பெற்றோர்கள் நகைகளைத் தம் குழந்தை களுக்கு இட்டு அனுப்புவதும் அவை காணாமற்போவதும் அதுபற்றி விசாரிப்பதே ஆசிரியர்களுக்கும் முதல்வருக்கும் பெரும் பணியாவதும் சில சமயங்களில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள். அப்போதெல்லாம் பெரியவர்களைக் கூப்பிட்டுக் கேட்டால் தக்கபதில் சொல்வதில்லை. தாங்கள் குறிப்பேட்டினைப் படிப்பதில்லை எனவும் சொல்லுவர். எனினும் நாங்கள் நாள்தொறும் பிள்ளைகள் விட்டுச் செல்லும் பொருள்களை நன்கு பாதுகாத்து மறுநாள் வந்து கேட்பின் சிறு தண்டத்தொகை பெற்றுத் திருப்பித் தந்து விடுவோம். அந்தப் பொறுப்பினைத் தனியாக ஓர் ஆசிரியரிடமே ஒப்படைத்துள்ளோம். அப்படியும் சில பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படுவ

தில்லை. நாங்கள் பருவம்தோறும் (Term) உள்ள பொருள் களை வெளியில் வைத்து உரியவர்களை வந்து எடுத்துச் செல்லச் சொல்வோம். இரண்டொருவர் எடுத்துச் செல்வர். பல அப்படியே இருக்கும். ஆண்டின் இறுதியில் அவற்றை ஏலத்திலோ மொத்தமாகவோ விற்றுவிடுவோம். பொது வாகச் சில பெற்றோர் விதிக்களுக்குக் கட்டுப்படாது பின்வந்து தூற்றுவதைப் பெருமையாகவும் கொள்ளு கின்றனர்.

இவ்வாறே உடை முதலியவற்றிலும் பெரும்பாலான பெற்றோர்கள், விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்றாலும் ஒருசிலர் சற்றே மாறுபடுகின்றனர். அவ்வாறு விதி முறைகளை மாறுபவரைத் தண்டிக்க வழி உண்டேனும் கூடியவரையில் தண்டனையைக் குறைக்கவே நினைக் கிறோம். எதற்கும் கட்டுப்படவில்லையானால், ஆண்டின் இறுதித்தேர்வுக்குப் பிறகு, அந்தக் குழந்தை வெற்றி பெற்றாலும், இன்றேனும் அப்படியே மாற்றுச் சான்றதழை (Transfer Certificate) தேர்வுமுடிவுடன் அனுப்பி எங்கள் தொடர்பை நிறுத்திக் கொள்வோம் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.

குழந்தைகள் தவறு செய்வது இயற்கை. அதைத் திருத்த வேண்டுவது பெரியோர் செயல். அறியாத்தனமாக சிறுகுழந்தைகள் அடுத்த குழந்தைகளின் எழுதுகோல், நூல் பிற பொருள்களை எடுத்துக் கொள்வதுண்டு. சில பிள்ளை கள் மற்றவர் கொண்டுவந்திருக்கும் உணவுப் பாத்திரங் களைத் திறந்து அவற்றை ருசி பார்ப்பதும் உண்டு. அத்தகைய வேளைகளில் ஆசிரியர்களே கண்டித்துத் திருத்துவர். சிலமுறை முதல்வர் அவர்களும் கண்டித்துத் திருத்துவர். ஆனால் அப்பிழைதிரும்பத்திரும்ப நடந்தாலோ அன்றி பெரும்பிழையாக நின்றாலோ பெற்றோருக்குத் தெரிவித்து அவர்களை வரச்சொல்லி, அவர்களிடமும் சொல்லிக் குழந்தைகளைத் திருத்த முயல்வார் முதல்வர். பல பெற்றோர்கள் அவ்வாறு அவர் அழைப்பை ஏற்று

வந்து, குறைகேட்டுத் தத்தம் குழந்தைகளைத் திருத்த முயல்வர். ஓரிருவர் குழந்தைகள் செய்யும் குறைகளைக் கண்டதும் தாங்களே நேரில் அழைத்து வந்து முதல்வரைக் கண்டு, எப்படித் திருத்த தேண்டுமோ அந்த வகையில் ஆற்றுப்படுத்த, அறவுரைகேட்டுச் செல்வர். ஆயினும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் தங்கள் குழந்தைகள் ஒரு தவறும் செய்யாதது போலவும் ஆசிரியரும் முதல்வரும் வேண்டுமென்றே குழந்தைமேல் குற்றம் சாட்டுவதாகவும் மற்றக் குழந்தைகளின் பெற்றோர்களிடம் அபாண்டமாகப் பேசுவது போலவும் வாதிடுவர். குழந்தைகளே தாம் செய்த தவறுகளை ஒத்துக் கொள்ளும்போதுகூட, 'அது பயத்தால் அப்படி ஒத்துக்கொள்ளுகிறது' என்று சொல்லி தம் குழந்தைகளைக் குற்றமற்றவர் எனச் சொல்லி வாதிடுவர். அவர்களுக்கு இரக்கப் படாமல் என் செய்ய முடியும்? குழந்தைகள் எதிரிலேயே அவர்கள் குற்றங்களை மறைத்துக் காக்கும் பெற்றோர்களின் கீழ் அவை எப்படி வளரும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அப்படியே அதை விட்டுவிடாமல் நாங்கள் அக்குழந்தைகளைத் திருத்த முயல்வோம். பெற்றோர் தலையீடும் இடையீடும் அதிகமாயின் ஆண்டின் இறுதியில் அக்குழந்தைகளை நல்ல முறையில் அனுப்பிவிடுவோம். ஒரு அன்னையார் எங்கள் முதல்வரிடத்தில் தம் குழந்தையின் உடைபற்றிப் பெரிய வாதிட்டார். சரியாக உடை அணிந்து வரவில்லையாதலால், வெளியில் நிறுத்தி, வீட்டுக்கு அனுப்பினர். உடனே அப் பிள்ளையின் தந்தையும் தாயும் வந்து அவ்வாறு அனுப்பியது தவறு என வாதிட்டனர். ஆனால் அதே அன்னையார் தன் மற்றொரு மகள் வேறொரு பள்ளியில் படிப்பதையும் அங்கே அவள் நாடொறும் உடை அணிந்து ஒழுங்காகச் செல்ல இரவு பகல் தூக்கமில்லாமல் உடைகளைச் செப்பம் செய்து தருவதையும் முதல்வரிடம் சில நாட்களுக்கு முன் பெருமையோடு சொன்னார்களாம். அந்த நிலையினைச் சுட்டி முதல்வர் காட்ட, இருவரும் தலைகுனிந்து மௌனியாகித் திரும்பினர்.

ஏழை எளியவர் மட்டுமன்றி சில செல்வர் வீட்டுக் குழந்தைகளும் தக்க உடையில் வருவதில்லை. வேறு எதெதெற்கோ ஆயிரக் கணக்கில் அள்ளி வழங்கும் பெற்றோர் குழந்தைகள் விஷயத்தில் கருத்திருந்துவதில்லை. கண்டித்தால் சண்டைக்கு வருவர். அத்தகையவர்கள் தொடர்பையும் ஆண்டு இறுதியில் அறுத்துவிட்டு, நல்ல பிள்ளைகளின் நலம் காப்போம். சிலர் தம் குழந்தைகளை நன்கு கவனித்து ஒழுங்காக உடையளித்து அனுப்பும்போது, ஒருசிலர் கிழிந்த அழுக்கடைந்த—முறையற்ற ஆடை, காலணிகளை இட்டு அனுப்புவர். ஆசிரியர்கள் கண்டித்து வீட்டிற்குத் திருப்பி அனுப்பினாலோ பெற்றோர் வாதிட வந்து விடுவர். இவ்வாறு பல நல்லவர்களுக்கிடையே ஒருசில அல்லவர் இருப்பினும் அனைத்தும் பொறுமையோடு ஏற்று அன்னைப் பணியினை அட்டியின்றிச் செய்து வருகின்றோம்.

சில பெற்றோர்களை எண்ணும்போது அவர்கள் பெருந் தன்மையினையும் தளரா உதவியினையும் நினைவு கூர்ந்து போற்ற வேண்டியுள்ளது. முன்னமே ஓரிருவரைக் குறித் துள்ளேன். திருவாளர் கண்ணன் அவர்கள்தம் மூன்று பிள்ளைகள் இங்கே பயில்கின்றனர். (இருவர் தேர்ச்சி பெற்று வெளியே சென்றுவிட்டனர்) அவர் தற்போது எங்கோ வேறு இடத்தில் பணியாற்றினாலும் அவர் குடும்பம் இங்கே உள்ளமையின் தொடர்ந்து இங்கேயே பயில்கின்றனர். நாங்கள் நாடகம் நடத்திய அந்த ஆண்டில் அவர் முயன்று தனிமையில் ஏறக்குறைய நாலாயிரத்துக்கு மேல் 'டிக்கெட்' விற்று, நாடகம் நடப்பதற்கு முன்பே எங்களிடம் தந்தார். பின் '4648 B' நிலம் பற்றிய தகராறு உண்டான காலத்தில் அவர் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்தார். அப்போது அரசாங்கத்துக்கும் வீட்டுவசதி வாரியத்துக்கும் எழுதிய கடிதங்களில் பலவற்றை வரைந்து தந்தார். மேலும் வாரிய அலுவலகத்துக்கும் அரசாங்க அலுவலகத்துக்கும்

பலமுறை என்னுடன் வந்து பலவகையில் எங்கள் உரிமையினைக் காட்டித் தெருட்டினார். இன்றும் அவர் வெளியே இருந்தபோது—கல்கத்தா அல்லது அசாம் மாநிலத்திலிருந்து அடிக்கடி கடிதத்தில் பள்ளியின் வளர்ச்சி பற்றிக் கேட்டுக் கொண்டே இருந்தார். அவர் வாழ்வு சிறக்க என வாழ்த்துகின்றேன்.

அப்படியே பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பணியாற்றிய திருமதி சம்பா சீனிவாசன் அவர்களும் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி திரு. பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களும் பள்ளி வளர்ச்சியில் பல்வேறு வகையில் கருத்திருத்தி, கடிதங்கள் எழுதியும் விழாக்களில் தவறாமல் கலந்துகொண்டும் வேறு பலவகையிலும் உதவி செய்துள்ளனர். நான் முன்னரே குறித்தபடி, திரு. இராசசேகரன் என்னும் மற்றொரு பெற்றோர் எங்கள் நாடகம் நடத்த உடன் துணையாகவும் இன்னும் பலவகையிலும் உதவி செய்தவராவர். எங்கள் பள்ளியின் உறுப்பினர்களாகியும் பெற்றோர்களுமாகிய திருவாளர்கள் டாக்டர் அரசு அவர்களும் அஞ்சலகப் பணிபுரியும் திரு. சுந்தரவடிவேலு அவர்களும் பலவகையில் எங்களுக்கு உதவுவதோடு, அவ்வப்போது ஆக்கப்பணிகளுக்கு இணைய ஆதரவும் தந்து வருகிறார்கள்.

திருவாளர் வெங்கடகிருஷ்ணன் I. A. S.. அவர்கள் செய்த உதவிகளை என்றும் மறக்கமுடியாது. அரசாங்க உயர் அலுவலர்களிடத்தும் அமைச்சர் போன்றாரிடத்தும் நமது பள்ளியின் உண்மையான உயர்நிலையினை ஒரு பெற்றோராக இருந்து எடுத்துரைத்து 'வேண்டும் காலத்திலெல்லாம் ஆவன செய்து ஆதரித்தார்கள். மேலும் பள்ளி விழாக்களிலெல்லாம் குடும்பத்தோடு வந்து பங்கேற்றுச் சிறப்பித்தனர். அப்படியே திருமதி பொன்னையன் அவர்கள் (அமைச்சர் துணைவியாரும்) அமைச்சர் அவர்களும் பள்ளியின் பெற்றோர்களாக உள்ளமையின்

அவ்வப்போது பள்ளிக்கு வந்தும் விழாக்களில் பங்கு கொண்டும் அவர்கள் குழந்தைகளை எல்லா விழாக்களிலும் பங்கேற்கச் செய்தும் வேண்டும்போது வழிகாட்டியும் உதவியுள்ளார்கள்—உதவுகிறார்கள். ஒருமுறை மாண்புமிகு பொன்னையன் அவர்கள் நானும் முதல்வரும் இல்லாத வேளையில் தம் மகனைப் பார்க்கும் முகத்தான் பள்ளிக்கு வந்து சிறிது நேரம் தங்கிப் பள்ளியின் நடைமுறைகளைக் கவனித்துச் சென்றார்கள். பின் அடுத்தநாள், நான் அவர்களை வீட்டில் சென்று கண்டபோது நானும் முதல்வரும் இல்லாதபோதும் பள்ளி இருக்கும் நிலையினை, மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் முறையாகவும் நடப்பதைப் பாராட்டினார்கள்.

'உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி கரங்கு தெண்டிரை வையகம் காக்குமால்' என்ற திருத்தக்க தேவரின் அடிகளை நினைந்து அந்தவகையில் நடந்து கொண்ட ஆசிரியர்களையும் ஒழுகிய மாணவர்களையும் பாராட்டினேன். இவ்வாறே பல பெரியவர்கள்—பெற்றோர்கள் எங்கள் பள்ளியின் வாழ்விலும் வளர்ச்சியிலும் கருத்திருத்தி ஆவன செய்து வருவதை எண்ணி அவர்களை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாய்மார் சிலர் ஆற்றும் கடமையினைக் கடந்த சில ஆண்டுகளாக காணும் நான் அவர்களைப் பற்றிக் கூறாதிருக்கமுடியாது. சில ஆண்டுகளாக ஆசிரியர், பாரதி விழாவினைச் செப்டம்பரில் கொண்டாடி வருகின்றோம். அதில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பங்கு கொண்டு பாடுபடும் காட்சியினை என்னால் மறக்கமுடியாது. பல அன்னையர் தாமே வந்து அடிக்கடி முதல்வரைக்கண்டு, செய்ய வேண்டுவனவற்றைத் தெரிந்து, சொல்லி கேட்டு, தாமே பலவற்றிற்கும் செலவு செய்து சிறந்த முறையில் தாமே வேடமிட்டு, நாடகங்கள் நடத்தித் தரும் சிறப்பிப்பினை யாவரும் அறிவர். அதற்கெனப் பெற்றோருக்கு

ஒரு சிறு அளவில் நுழைவுக் கட்டணம் இட்டாலும் அதைப் பெரிதாக மறுத்துப் பேசியும் எழுதியும் காட்டும் ஒருசில பெற்றோர்களுக்கு இடையில் இத்தகைய நல்ல தாயர்தம் உதவியால் நாங்களும் எங்கள் கல்வி அறமும் செம்மையாகப் பணியாற்றுகிறோம் என்பதை மறக்க முடியுமா! இவ்வாறே இன்னும் எத்துணையோ பெற்றோர்கள் வேண்டுங் காலத்தி லெல்லாம் வேண்டும் வகைகளில் உதவிபுரிகின்றார்கள். ஒருசிலர்தம் நல்ல குழந்தைகள் பள்ளி உயர் வகுப்புகளை முடித்து மேநிலைகளுக்குச் சென்றுள்ளனர். இன்று அவர்கள் பள்ளியின் பெற்றோர் இல்லை என்றாலும் என்றும் அவர்கள் செய்த உதவிகளை மறக்க முடியும் கொல்!

பள்ளியின் குழந்தை ஒன்று சுற்றுப் பயணத்தின் போது விபத்தில் தாயுடனும் மற்றொரு குழந்தையுடனும் இறக்க அதன் தந்தையார் துன்பந் தோய்ந்த முகத்துடன் பள்ளிக்கு வந்து, அந்தக் குழந்தையின் பேரால் ஒரு நிலைத்த செயலைச் செய்ய விரும்பி, ஆயிரம் ரூபாய் 'செக்'கினைக் கொடுத்த காட்சி ஒரு சோகக் காட்சியாயினும் அவர் எங்கள் பள்ளியில் மற்றவர் செய்யாத வகையில் நிலைத்த அறக் கட்டளை அமைத்ததை எண்ணிப் பாராட்டாதிருக்க முடியுமா? அவர் தன் குழந்தையின் பெயரால், அவர் குறித்த அக் குழந்தை பயின்ற வகுப்பில் முதலில் தேர்ச்சி பெறும் முதல் மாணவருக்கு பரிசளித்து வருகின்றோம்.

இவ்வாறு சிலரைப் பற்றி எண்ணும் நான் முன்னே குறிப்பிட்ட வகையில் ஒருசிலர் வேறு வகையில் செயலாற்று வதை எண்ணின் வருத்தமின்றேனும் அவர்களின்பால் உள்ளம் கழிவிரக்கம் கொள்ளுகிறது. சேர்க்க எப்படி ஒரு சிலர் 'வம்பு' செய்கிறார்களோ அப்படியே சிலர் தம் பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து எடுத்துக்கொண்டு போகும் போதும் சில தொல்லைகள தருகின்றனர். பள்ளியின் விதி

களைத் திட்டமாக அச்சிட்டுக் கொடுத்திருந்தபோதிலும், வேறு இலவசப் பள்ளிகளிலோ மற்றப் பள்ளிகளிலோ பலவகைகளில் இடம் பிடித்து, ஆறாம் வகுப்பிற்கு மேல் உள்ள பிள்ளைகள் ஜூன், ஜூலை மாதங்களில் அழைத்துப்போக 'மாற்றுச்சான்று' கேட்டுத் தொந்தரவு செய்கின்றனர். தரவில்லை என்றால்—விதிகளின்படி நடக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டினால், யாரையாவது 'சிபார்சு' கொண்டு வருகிறார்கள். இவர்களில் பலர் படித்தவர்கள்; பலர் அரசாங்க உயர் உத்தியோகம் வகிப்பவர்; சிலர் பெருஞ் செல்வந்தர்கள்; இருந்தாலும் முறைப்படி நடக்க ஒருப்படுவதில்லை. ஆனால் இவர்களுக் கிடையிலே, நாங்கள் சொல்லாமலேயே, விதிகளைப் படித்து விதிகளின்படியே நடந்துகொள்ளும் நல்லவர்களும் உள்ளமையாலேதான், 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டியுள்ளது. ஓராண்டில் என்க்கு மிகத் தெரிந்தவராக உள்ள ஒருவர், இவ்வளவு கட்டணம் கட்ட வேண்டும் என்று சொல்ல, என்னைக் கட்டச் சொல்லி 'சான்றிதழ்' வாங்கிக் கொண்டு மறுநாள் காசு அனுப்புவதாகக் கூறிச் சென்றார். ஆண்டுகள் பல கழிந்தும் இன்னும் தரவில்லை; நானும் கேட்கவில்லை. பல முறை கண்டு பேசுகின்ற போதிலும் அதைப்பற்றி நான் கேட்பது இல்லை. இப்படியும் சிலர்!

பெற்றோர்களில் இன்னும் ஒருவகையானவர்களைக் குறிப்பிட வேண்டும். அவர்களால் எங்களுக்குத் தொல்லை யின்றேனும் குழந்தைகளை அவர்கள் போற்றுவதை எண்ண நெஞ்சம் துணுக்குறுகிறது. இளங் குழந்தைகள் வகுப்புகள் ஐந்தாம் வகுப்புவரை மாலை 3.45க்கு முடிவடையும். பல பெற்றோர்கள் உடன் வந்து தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வர். ஆனால் ஓரிருவர் மாலை ஆறு அல்லது ஏழு ஆனாலும் சில நாட்களில் வருவதில்லை. நாள் தோறும் நானோ முதல்வரோ இருந்து, எல்லாப் பிள்ளை களையும் வீட்டுக்கு அனுப்பி விட்டுத்தான் நாங்கள் வீடு

செல்வது வழக்கம். எனவே சில நாட்களில் அப்படிப் பெற்றோரும் வராத பிள்ளைகளை நாங்களே காரிலோ அல்லது ஆட்கள் மூலம் சைகிலிலோ அழைத்து விட்டுச் சென்றே பிறகு புறப்படுவோம். வயது வந்த பெண்கள் பள்ளியின் விழாக்கள் அல்லது ஆய்வுகளப் பணிகள் காரணமாக ஏழு அல்லது எட்டு மணிவரையில் தங்க நேர்ந்த போதும், பெற்றோர்கள் யாரையும் துணையாக அழைத்துப் போக அனுப்புவதில்லை. இரண்டு மூன்று முறைகள் பள்ளியின் காரிலேயே அப் பிள்ளைகள் அனுப்பப் பெற்றிருக்கிறார்கள். ஒருமுறை இரண்டாம் வகுப்பில் பயிலும் ஒரு குழந்தையை அழைத்துவர மாலை ஏழு மணி வரையிலும் யாரும் வரவில்லை. பிள்ளைகள் முகவரி அனைத்தும் எங்களிடம் இருப்பதாலும், அக் குழந்தைக்குக் சரியான முகவரியினை சொல்லமுடியாததாலும், முகவரியினைக் கண்டுபிடித்து ஏழுமணிக்கு மேல் காரில் நானே அழைத்துச் சென்று அவர்கள் வீடுவரை சென்றேன். வழியில் அவர்கள் வியாபார இடத்தில் குழந்தையின் பெற்றோர் இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். குழந்தையை காரிலிருந்து இறக்கிவிட்டதும் இருவரும் 'மறந்தே போய் விட்டோம்' என்றனர். தம் ஆறு வயதுக் குழந்தையை மறந்து என்னதான் அவர்கள் உலகில் சாதிக்கப் போகிறார்களோ என்ற எண்ணத்தோடு நான் வீடு சென்றேன்.

*1980—81*-ல் நடந்த ஒரு நிகழ்ச்சியினைக் காட்டாவிடின் இப் பகுதி நிறைவுறாது என எண்ணுகிறேன். பள்ளியின் விழாக்களுக்குப் பிள்ளைகள் அனைவரும் தவறாமல் வர வேண்டும் என்பதும் பெற்றோர்கள் விரும்பினால் கலந்து கொள்ளலாம் என்பதும் நியதி. பொதுவாக நம் பள்ளி விழாக்களில் பெரிதும் அதிகமாகப் பெற்றோர் கலந்து கொள்வர். பிள்ளைகள் வர இயலவில்லையானால் விடுப்புக் கடிதம் (leave letter) பெற்றோர் அனுப்புவர். இப்படி அமையும் நெறியிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஒருவிழாவில் கலந்து கொள்ளவில்லை. முதல்வர் மறுநாள்

அவர்களை கண்டித்து, ஒவ்வொருவரும் பத்து ரூபாய் தண்டம் செலுத்த வேண்டும் எனவும், செலுத்தாத வரையில் வகுப்புக்குச் செல்லலாகாது என்வும் விதித்தனர். பல பெற்றோர்கள் தண்டத் தொகையைத் தாங்களே கொண்டு வந்து செலுத்தி மன்னிப்பும் கூறிச் சென்றனர். எனினும் ஒருசிலர் சில வேண்டத்தகாதவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து பிள்ளைகளை வகுப்புக்கு அனுப்ப வேண்டுமெனவும் தண்டத் தொகை செலுத்த இயலாது எனவும் 'ரகளை' செய்தனர். பலர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தனர். எனினும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் வீண் "கலாட்டா' செய்யவே வந்திருந்தனர். அவருள் இரு பெண்கள் நடந்து கொண்டதை எண்ணியே நான் வேதனை அடைந்தேன். பெற்ற தாயார்; கணவரோடு குடும்பம் நடத்துகின்ற பெண்கள்; அவர்களை இன்று அடையாளமும் காட்ட முடியாது. அவர்கள் யாரென்று இன்றுவரையும் எனக்குத் தெரியாது; நான் தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை; அதை மறந்துவிட்டேன். 'அல்லதை அன்றே மறப்பது நன்றல்லவா'. ஆயினும் அந்த இருவரும் மகளிர் பண்பாடு கடந்து செய்த செயல்தான் வேதனையை விளைத்தது. தண்டத்தொகை கட்ட வரிசையில் நின்றிருக்கிற ஆடவர்களை மடக்கி அவர்கள்முன் நின்று அவர்கள் மேல் உராய்ந்து, அவர்கள் குறுக்கே நின்று கட்ட வேண்டாம் என்று தடுத்து, ஒருவர் ஓரிரு ஆண்களைக் கையைப்பிடித்து இழுக்கவும் செய்தனர். இந்தக் காட்சியினை கண்டு 'ஐயோ தமிழ்ப் பெண் சமுதாயமே; பத்து ரூபாய்க்கு இப்படியா சீரழிய வேண்டும்' என்று நைந்தேன். என்னால் வேறு என்ன முடியும்? இவ்வாறு இடர்ப்பட்ட நிலையில் அனைவரும் வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதி முதல்வருக்குக் கொடுத்த பிறகே, வகுப்பிற்குச் செல்ல அனுமதிக்கப் பெற்றனர். எங்கள் பள்ளியில் கட்டுப்பாடு சற்றே அதிகம்தான். அதைப் பலர் விரும்பவும் செய்கின்றனர். சிலர் மதிக்க மறுக்கின்றனர். அத்தகைய இவ்வாறு தொல்லை தரும் 'பெரியோர்'களின் தொடர்பு இல்லா

திருத்தல் நல்லதல்லவா! இவ்வாறு எங்கோ ஓரிருவர் மாறியிருந்தாலும் பெரும்பாலான பெற்றோர்கள் ஆதரவும் அன்பும் உதவும் மனப்பான்மையும் எங்களுக்கு முற்றும் இருக்கின்ற காரணத்தினாலேதான் நாங்கள் தலைநிமிர்ந்து பள்ளியினைச் சிறக்க நடத்த முடிகின்றது. அவர்கள் அனைவருக்கும் எங்கள் வணக்கத்தையும் வாழ்த்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

# பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (M. M. D. A.)

பள்ளியின் வளர்ச்சியினைக் கருதி இதை விரிவு செய்ய நினைத்தோம். பல பெற்றோர்கள் நாங்கள் மேன்மேலும் வளர்வதில் அக்கறை காட்டினார்கள். மேலும் இங்குள்ள பள்ளி, பெண்களுக்கெனவே அமைந்த காரணத்தாலும் எங்கள் பள்ளியில் பயிற்று முறை தேர்வில் நூற்றுக்குநூறு வெற்றி, மாணவர் தம் ஒழுக்கநெறி முதலியவற்றின் திறனும் தெளிவும் கண்டதாலும் நல்லவர்கள் ஆண்களுக்கும் இத்தகைய பள்ளி ஒன்று தொடங்கவேண்டும் என விரும்பினர். இறையருளும் முன்நின்றது. எனவே ஆண்பிள்ளைக்கு எனத் தனிப்பள்ளி நிறுவும் முயற்சியினை மேற்கொண்டோம். எங்களுக்கு அடுத்துள்ள சுமார் 3 மனையுள்ள நிலத்தை வாங்க முயன்றோம். அவர்கள் பெரும் விலை சொன்னதாலும் வேறு வகையில் எங்களுக்குத் தொல்லை கொடுக்க நினைத்தமையாலும் அந்த முயற்சியினைக் கைவிட்டோம். மேலும் தனியாக ஆண்கள் பள்ளி நிறுவ அந்த இடமும் போதாது, ஆகவே 19-1-77-ல் வீட்டு வசதி வாரியத்தாரை அணுகிக் கடிதம் தந்தோம். அவர்கள் தங்கள் 7291/G-VI-5/77 எண்ணுள்ள 28-3-77 நாளிட்ட கடித வழியே அண்ணா நகரிலே பள்ளிக்கு அடுத்துள்ள 140A அல்லது 633A உள்ள இடங்களைச் சுட்டி, இரண்டில் ஒன்றை எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள். நாங்களும் உடனே 5-4-77-23 மனையுள்ள 633A எண்ணுள்ள மனை பள்ளிக்கு அருகில் இருந்தமையாலும் அளவில் சற்றே பெரிதாக இருந்தமையாலும் அதை எடுத்துக் கொள்வதாக எழுதினோம். ஆயினும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்கு அமைந்த செயலர்—உறுப்பினர் தம் 11369/77 C 1எண்ணுள்ள 10-5-77 நாளிட்ட கடிதத்தில் அந்த இடம் விளையாட்டுக்கென ஒதுக்கப் பெற்றதெனவும், எனவே

அதை விட்டு, கல்விக்கெனவே ஒதுக்கப்பெற்ற 4648 எண்ணுள்ளதில் ஒரு பிரிவினை எடுத்துக்கொள்ளலாம் என வீட்டு வாரியத் தலைவருக்கு எழுதினர். அதன் படி ஒன்றும் எங்களுக்கும் அனுப்பப் பெற்றது. அதன் படியினைக் கண்டபின் நாங்களும் அதற்கும் இசைந்து, உடன் 18-5-77-ல் எங்கள் உடன்பாட்டினை வீட்டு வசதி வாரியத்துக்கு அனுப்பினோம். வீட்டுவசதி வாரியத்தாரும் தங்கள் C6/7291/77 எண்ணுள்ள 23-5-77 நாளிட்ட கடிதத்தில் முறைப்படி அந்த நிலத்தினைத் தனியாக்கி, 4648B என்ற எண் தந்து, சுமார் 76 மனையினை எங்களுக்கு தந்தனர். அதற்கும் எங்கள் இசைவினைத் தெரிவித்து 5-6-77-ல் கடிதம் எழுதினோம். பின் வீட்டுவசதி வாரியத் தலைவர் தம் 17-6-77 நாளிட்ட கடிதப்படி 25-9-77-ல் ஒன்றரை லட்சத்துக்கு உரிய காசோலையினை அனுப்பி, மீதமுள்ள பாதிப்பகுதியினை அந்த ஆண்டு இறுதிக்குள் கட்ட இசைவு தரவேண்டினோம். 9-7-77-ல் அவர்கள் இசைவு பெற்றுச் செயல்பட விரும்பி, கடிதம் எழுதினோம். அவர்களும் இசைந்து 15-7-77-ல் அந்த இடத்தை எங்களிடம் முறைப்படி ஒப்படைத்து விட்டனர்.

இதற்கிடையில் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செய்த செயல் எங்களைத் திடுக்கிட வைத்தது. 10-5-77-ல் இந்த இடத்தினை எங்களுக்கு ஒதுக்க வேண்டுமென ஆணையிட்ட அதே பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 11-7-77-ல் அந்த இடத்தை எங்களுக்கு ஒதுக்க வேண்டாம் எனவும் வேண்டுமானால் வேறு ஓர் இடத்தினை ஒதுக்கித் தரலாம் எனவும் கடிதம் எழுதிற்று. எந்த அடிப்படையில் இப்படி எழுதிற்று என்பதுதான் வேடிக்கையானது.

அண்ணாநகரில் விளையாட்டு இடங்கள் இல்லையாம். அதனால் இந்த இடம் விளையாட்டு இடமாக ஒதுக்கப்பெற வேண்டுமாம். மாற்று இடம் தரலாமாம். ஏன் அந்த மாற்று இடத்தினை விளையாட்டிடமாக அமைத்துக்கொள்ளக்

கூடாது? தானே முன் இதைப் பரிந்துரைத்து இப்போது அதை மாற்றிக்கொள்வானேன்? இத்தகைய வினாக்களுக்கு எனக்கு உடன் விடை கிடைக்கவில்லை. சில நாட்களுக்குப் பிறகே அதன் உட்கிடை எனக்குப் புரிந்தது. இந்த இடத்தை அக் குழுமத்தின் உயர் நிலையில் உள்ள ஒருவரால் அவரைச் சார்ந்த ஒருவருக்குத் தர ஏற்பாடு செய்யப் பெற்றதென்றும், எக்காரணத்தாலும் அந்த ஏற்பாடு நடைபெறவேண்டும் என்றும் எனவே இதைமாற்ற ஏற்பாடுகள் நடைபெற்றன எனவும் அறிந்தேன். 'இது முறையோ இது தகுமோ இது தருமந்தானோ' என நேரில் சென்று அவர்களிடம் முறையிட்டேன். அக் குழு மத்தின் நிருவாக உச்சியில் உள்ளவர் என்னை நேரில் வரச்சொல்லி, விட்டுக்கொடுக்குமாறு வேண்டினார்; நான் திட்டமாக மறுத்ததோடு, இந்த இடம் பற்றித் தில்லியிலுள்ள எங்கள் மன்றத்துக்குத் (Centnal Board of Secondary Education) தெரிவித்தாகிவிட்டது எனவும் கூறினேன். எனினும் அவர் என்னை மிரட்டி ஒன்றும் இல்லாமல் செய்து விடுவேன் என்றும் வேண்டுமானாலும் மூன்றில் ஒரு பகுதியினை எடுத்துக் கொள்ளுங்கள் எனவும் கூறினார். அவரிடம் வாதிடுவதில் பயனில்லை என்று கண்ட நான், நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என வெளி வந்துவிட்டேன். அவர் இதைச் சாதகமாக வைத்துக் கொண்டு சுமார் மூன்றில் ஒரு பகுதியினைத் (26 மனை 1765 ச. அடி) தரலாம் எனவும் அதற்கு நாங்களும் இசைவு தந்ததாகவும் வீட்டு வசதி வாரியத்துத் தலைவருக்கு 5.8.77-ல் ஒரு கடிதம் எழுத, அதற்கென ஒரு மறுப்பையும் நாங்கள் வாரியத்தலைவருக்கு 24.8.77-ல் எழுத நேர்ந்தது. அப்படியே 30.8.77-ல் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்துக்கும் கடிதம் எழுதினோம். ஆயினும் ஒரு திட்டமான முடிவுக்கு அவர்கள் வராமையாலும் எப்படியும் எங்களிடமிருந்து அந்த இடத்தினை எடுத்துக்கொள்வதே தங்கள் கருத்தாகச் செயலாற்றியமையாலும் நாங்கள் மேலிடத்துக்கு எழுத வேண்டிய கட்டமும் நேரில் சென்று விளக்கவேண்டிய

தேவையும் ஏற்பட்டன. வீட்டுவசதி வாரிய அமைச்சர் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) அவர்களுக்கும் தமிழகத் தலைமை அமைச்சர் அவர்களுக்கும் குழுமத்தின் போக்கினை விளக்கத் தெளிவாகக் கடிதம் எழுதினோம். அரசாங்கமும் இதை நன்கு பரிசீலனை செய்து, பெருநகர் வளர்ச்சிக் குழுமப்போக்கு முறையற்றதென்பதைச் சுட்டி, எங்களுக்குக் கொடுத்ததை மாற்ற இயலாது என்று 46384/A2/77—2 எண்ணுள்ள கடிதத்தை 27.12.77-ல் எழுதிற்று. எங்களுக்குப் படியும் வந்தது. அரசாங்க முடிவே ஆனமையின் இத்துடன் அதன் தொல்லை நீங்கிற்று என மகிழ்ந்தோம் நாங்கள். ஆயினும் அரசாங்கத்தில் இருந்த உயர் அதிகாரி ஒருவர் அவர்கள் எப்போதும் தொல்லை தந்து கொண்டிருப்பார்களென்றும், என்றும் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் எங்களை எச்சரித்தார். அவர்கள் சொல்லியதை அப்போது நாங்கள் பெரிதாக எண்ணவில்லை. ஆயினும் அடுத்துக் குழுமத்தார் செயல்கள் அப் பெரியவர் சொல்லை மெய்யாக்கின. இத்துடன் அவர்கள் 'தொண்டு' முடிந்திருந்தால் நான் இந்த நூலில் இப்பகுதியினை எழுதியிருக்கத் தேவையே இருந்திருக்காது. (இந்த மனை பற்றிப் பின்னால் எழுந்த சிக்கல்கள் பற்றியும் அதற்குத் துணைநின்ற நல்லவர்கள் பற்றியும் வீட்டுவசதி வாரியத்தார் விசித்திரச் செயல்கள் பற்றியும் தனியாக 'நாங்களும் வீட்டுவசதி வாரியமும்' என்ற தலைப்பில் எழுதியுள்ளதை இந்த நூலின் மற்றொரு பகுதியில் காணலாம்). மேலும் இந்தப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் மேலுள்ளவர்கள் எதேச்சதிகாரப் போக்கைக் கண்டுதானோ ஏனோ, அதுவரையில் இல்லாத வகையில் அவர்களுக்கெல்லாம் மேலாகத் துணைத் தலைவர் (Vice chairman) என்ற பதவியை ஏற்படுத்தி, அதற்கெனத் தக்கவர் ஒருவரையும் நியமித்து, குழுமத்தின் செயல்களைச் செம்மைப் படுத்தியுள்ளனர் என எண்ண வேண்டியுள்ளது. அத்தகைய துணைத்தலைவர் பின் அக் குழுமத்தால் எனக்கு உண்டான இடர்ப்பாடுகளை நீக்கிய வகைகளையெல்லாம் அடுத்துவரும் பக்கங்களில்

எழுதுகிறேன். எங்களுக்கு வீட்டுவசதி வாரியத்தாரால் முன்னரே ஒதுக்கப் பெற்ற மனையில் நான்கடுக்குக் கட்டடம் கட்ட நினைத்து, வரைப்படமும் வரைந்து நகராண் கழகம், பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ஆகிய இரண்டின் இசைவினைப் பெற்றுக் கட்டிடத்தையும் கட்டி முடித்தோம். விரைந்து நான்கைந்து மாத அளவில் அக் கட்டிடம் உயர்ந்து அதில் வகுப்புகள் செயல்பட ஆரம்பித்த போது அவர்கள் கண்ணையும் கருத்தையும் உறுத்திற்றோ என நினைக்கவேண்டியுள்ளது. எங்கள் கட்டிடத்துக்குப் பக்கத்திலேயே அரசாங்கத் துறைகளுள் சிலவும் தனியார் களும் நடைபாதைகளில் கடைகளை அமைத்துத் தொல்லை விளைக்கத் தொடங்கவும், அதே வேளையில் எதிரில் இருக்கும் வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான கட்டிடத்தில் எல்லா விதிகளையும் கடந்து சாலையை ஒட்டியே சிற்றுண்டிச் சாலை போன்ற கடைகளை அமைக்கவும், கீழே அடித்தளத்தில் நாங்கள் வரைப்படத்தில் குறித்தபடி அலுவலகங்களோ நூல்நிலையமோ வகுப்பு களோ அமைக்க முடியவில்லை. எனவே அவற்றுள் யாதொரு மாற்றமும் இன்றி உபயோகத்தை மாற்ற நினைத்தோம். அதுவும் பள்ளிக்குப் பயன்படும் வகையில் அமையும் முறையினையே மேற்கொண்டோம். எங்கள் பள்ளிக் குழந்தைகள் அனைவரும் 1976 முதலே வங்கியில் தான் சம்பளம் கட்டுவர்; அப்படியே ஆசிரியர்களும் வங்கியிலேயே சம்பளத்தைப் பெறுவர். குறைந்த சம்பளம் கொடுத்து அதிக கையெழுத்து வாங்கும் கொடுமை நீக்கவும் மாணவரிடம் அதிக தொகை வசூலிக்கின்றோம் என்ற பெயரில்லாதிருக்கவும் பள்ளியில் பணப்புழக்கத்தைத் தவிர்க் கவும் இந்த ஏற்பாடு செய்தோம். பல்கலைக் கழகங்களோ பிற அரசாங்க நிலையங்களோ பிறவோ இந்த ஏற்பாட்டினைச் செய்ய நினைக்கும் முன்பே நாங்கள் இவ்வழியில் செயல்பட்டோம். ஆயினும் அந்த வங்கி பள்ளியின் வெளியே வேறிடத்தில் அமைந்திருந்தமையால் பலர் தொல்லையுற்றனர். அதைத் தவிர்க்க எங்கள்

பள்ளிக் கட்டடத்திலேயே வங்கி அமைக்கத் திட்டமிட்டோம். அத்துடன் கட்டடத்துக்கு வேண்டிய தொகையை வங்கி கடனாகத் தரவேண்டினோம். இந்த இசைவினைத் திருவாங்கூர் ஸ்டேட் வங்கி நிறைவேற்ற முன்வந்தது. எனவே கீழ்த் தளத்தில் வங்கி அமைக்க முடிவு செய்தோம். அப்படியே ஆயிரத்து முந்நூறு பிள்ளைகளும் (பெரும்பாலும் பெண்கள்) ஐம்பது ஆசிரியர்களும் உள்ள பள்ளிக்குச் சிற்றுண்டிச் சாலையும் தேவைப்பட்டது. இவற்றை அமைக்க முயன்று அதற்கென இரும்புச் சட்டக் கதவுகளும் அமைத்தோம். இது தவறு என உடனே பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 30.10.78-ல் எங்களுக்கு ஓர் 'நோட்டீஸ்' அனுப்பி, நாங்கள் அவர்கள் இசைவு பெறாமலேயே அக் கட்டிடத்தைக் கட்டியதாகவும் அது உடனே நிறுத்தப்படவேண்டும் எனவும் இல்லையானால் எங்கள் மேல் குற்ற வழக்கு தொடரப்பெறுமெனவும் அச்சுறுத்தியது. அப்படியே 28.10.78-ல் வீட்டுவசதி வாரியத்தாரையும் கடிதம் எழுதவைத்தது. ஆயினும் உடனே அவர்களுக்கு இரண்டின் அவசியத்தையும் அவற்றொடு பள்ளிக்கு உரிய தொடர்பினையும் உதவியையும் சுட்டிக் கடிதம் (9.11.78) எழுதினோம். எனினும் மறுபடியும் 21.11.78 (எண் 22665/78/N2) குழுமம் கடிதம் எழுதிற்று. மறுபடியும் அவற்றின் அவசியம் பற்றியும், பெற்றோர் சங்கம் முதலிய பற்றித் தொடர்பான உறுப்புக்கள் இட்ட தீர்மானங்களையும் இணைத்தும் விளக்கி எழுதியும் அவர்கள் இசையவில்லை. நல்லவேளை, நான் முன்னே குறித்தபடி, இவர்களுக்கு மேலாகத் துணைத்தலைவர் அவர்கள் வர, அவர்களிடமும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடமும் விண்ணப்பித்தோம். அப்போதும் சிலசில நிபந்தனைகளை இட்டு, வங்கி அமைக்கக் குழுமம் இசைவு தந்து, வேறு வரைப்படம் வரையவேண்டும் என வற்புறுத்தி உத்தரவு பிறப்பித்தது. அப்படியே PPA552/79 எண்ணுள்ள வரைப்படத்தினை அனுப்பினோம். அதற்குக் குழுமம் எண் 15189/79/N2 எண்ணுள்ள கடிதத்தினை 5.11.79-ல்

அனுப்பியது. ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்தும் அது அனுப்பிய பதில் வியப்பாக இருக்கும்.

முதல் குறிப்பின்படி வங்கி பணி தொடங்கிவிட்டது. அடுத்து, பள்ளிகென பள்ளியின் பெயரால் அமைக்கத்தந்த சிற்றுண்டிச் சாலையினை அது வேறு பெயரில் அமைத்த காரணத்தால், அந்த நிலையினை நீக்க முன்னரே இருவழக்குகள் தொடங்கப் பெற்றுள்ளன. தண்ணீரும் மின்சாரமும் கேட்டு அவர்கள் தொடுத்த வழக்கு இரு நீதிமன்றங்களிலும் தள்ளப் பெற்றன. எனினும் முடிந்த முடிவு அவர்களுக்குச் சாதகமாக நின்றமையாலும் எங்கள் பள்ளிக்கும் சிற்றுண்டிச் சாலை தேவையானமையாலும், 'வள்ளியம்மாள் உணவு விடுதி' எனவே பெயர் வைக்க அவர்கள் இசைந்தமையாலும் நாங்கள் உணவு சாலை நடத்த இசைவு தந்தோம்.

கடிதத்தில் குறித்த முன்னர் காட்டிக் குறிக்கப்பெறாத மற்றையவற்றையும் நோக்க வேண்டுகிறோம். முன் பக்கம் வழியே இருக்கக் கூடாதாம். நாங்கள் புறச் சுற்றுச் சுவர் இட்டுப் பத்திரப் படுத்திய பிறகே, பிள்ளைகள் பெருவாரியாகப் புழங்க வேண்டியிருந்ததால் பெரும் வாயில்களுக்கு இரும்புக் கதவுகள் அமைத்தோம். அது தவறாம். மற்ற இரண்டும் இன்றும் வியப்பானவையே. முன்னே கார்கள் நிறுத்த இடம், பள்ளிக்கு வருகின்ற வண்டிகள் பள்ளியை ஒட்டி நிற்கக் கூடாத நிலை முதலிய யாவற்றையும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். எதிரிலே வீட்டுவசதி வாரியக் கட்டிடமாகிய சிந்தாமணிக்கு வரும் வண்டிகள் பெரும் லாரிகள்—டிரக்குகள் எங்கள் பள்ளியை ஒட்டிச் சாலையில் நிறுத்தப்படுவது அவர்கள் கண்ணில் படவில்லை. எங்களைச் சுற்றிப் புறச்சுவரும் இல்லாது கடைகள் கட்டி— வீட்டுக்கென ஒதுக்கப்பெற்ற மனைகளை மாற்றி வாணிபத் தலங்களாகிய இடங்கள் அவர்கள் கண்களுக்குப் படவில்லை. அண்ணாநகரில் மட்டுமன்றிப் பல இடங்கள் வீடுகள் கடைகளாகவும் வங்கிகளாகவும் மாற்றப்பட்டமை அவர்களுக்குத் தெரியவில்லை. அரசாங்கத்துறைகளே எங்கள் பள்ளிக்கு

எதிரிலே பிள்ளைகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் பெரும் கூண்டுகளை அமைத்து வாணிபம் நடத்திப் போக்குவரத்தைத் தடைசெய்வதோடு சுற்றுப்புறத் தூய்மையைக் கெடுப்பதும் அவர்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. எல்லாவற்றையும் முறையாக, வரைப்பட எல்லை கடவாது கட்டி, பள்ளிக்குத் தேவையான வங்கியும் சிற்றுண்டிச்சாலையும் அமைப்பதுதான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனினும் பிறகு மேலுள்ள அரசாங்க அதிகாரிகள் தலையீட்டால் நாங்கள் நல்ல முடிவினைப் பெற்றுச் செயல்பட்டு வருகின்றோம். கதை இத்துடன் முடியவில்லை. மேலும் தொடர்கிறது.

புதிதாக நாங்கள் வாங்கிய இடத்தில் உடன் கட்டடம் தொடங்க இயலவில்லை. பச்சையப்பன் அறநிலையத்தார் அந்த இடம் தங்களுக்கு வேண்டுமெனக்கூறி, எங்கள் இடத்தில் ஒரு பெயர்ப்பலகையினை நட்டுத் தொல்லை தந்தனர். (இதுபற்றியெல்லாம் பின் விளக்க இருக்கிறேன்) எப்படியோ 1977-ல் பல லட்சங்கள் கட்டப்பெற்று உரிமையாக்கப் பெற்ற அந்த நிலத்தில் 1981 ஏப்பிரலுக்குப் பிறகுதான் நாங்கள் செயல்பட முடிந்தது.

புதிய 4648B இடத்தில் கட்டடம் கட்டுவதற்கென வரைப்படம் வரைந்து உரிய முறைப்படி வீட்டுவசதி வாரியத்தின் இசைவினையும் பெற்று நகராண் கழகத்துக்கு அனுப்பினோம். அது 429/81 ஆக 6.7.81-ல் பதிவு செய்யப் பெற்று முறையான ஆய்வுக்குப்பின் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இசைவுக்கென அனுப்பப்பெற்றது. அங்கே உள்ள அதிகாரிகள் பழைய நினைவுகளையெல்லாம் கொண்டு அதை எப்படியும் தடுக்க வேண்டும் என முடிவு கட்டிவிட்டனர். அக் குழுமத்தின் மேலுள்ள இரு பேரதிகாரிகளும் மாற்றப்பெற்றுப் புதியவர்கள் வந்திருந்தனர். அவர்கள் இருவரும் நியாயமான நேரியமுறையில் எங்களுக்கு உதவி இராவிட்டால் நாங்கள் இசைவினைப் பெற்றிருக்கவே முடியாத நிலை உருவாகி இருக்கும்.

கீழே உள்ள சில உயர் அதிகாரிகளை நான் நேரில் சென்று கண்டபோது, அதில் ஒருபக்கம் இன்னும் அதிகமாக இடம் ஒதுக்க வேண்டும் எனவும் மாற்று வரைபடம் தர வேண்டும் எனவும் கேட்டனர். உடனே வேறு மாற்று வரைப்படம் தயாரித்து உரியமுறையில் அங்கே சேருமாறு செய்தோம். எனினும் ஒருமாதம் கழிந்தபிறகும் அவர்கள் உரிய நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. அத்துடன் நான் சென்று நேரில் கேட்டபோது இடையில் உள்ள ஓரிரு உயர் அதிகாரிகள் தரக்குறைவாகவும் இழிவாகவும் பேசியநிலை மிக இரங்கத் தக்கதாகும். 'எங்கள் இஷ்டம் போல்தான் நாங்கள் ஆராய்வோம்—இதில் நிறையக் குறைகள் உள்ளன. யார் சொன்னாலும் எங்களுக்கு அக்கறையில்லை; நீ வர வேண்டாம்' என்றும் உத்தரவிட்டார் ஓர் அதிகாரி. அவரை விட்டு சற்றே மேனிலையில் உள்ள மற்றொருவரை நேரில் கண்டேன். அவர் எனக்கு முன்னரே அறிமுகமானவராக இருந்தபோதிலும் என்னைக் கண்டதும் உட்காரக் கூடச் சொல்லவில்லை. என்னைப் பார்த்த நிலையே பயங்கரமாக இருந்தது. இராவணன்முன் அனுமன் நின்ற நிலையினை நான் எண்ணிக் கொண்டேன். எனினும் எனக்கு அத்தகைய ஆற்றல் இல்லையாதலால் நின்று கொண்டே பதில் சொன்னேன்; நான் இன்னார் என்றும் பள்ளியின் வரைப்படம் பற்றி வந்ததாகவும் சொன்னேன். உடனே அவர் 'அந்த இடம் உங்களுக்குச் சொந்தமில்லையே; அதில் எப்படிக் கட்டடம் கட்டலாம்' என்று வெடிகுண்டை எறிந்தார். நான் அமைதியாக 16.4.81-ல் வந்த அரசாங்க உத்தரவை காட்டி, அதன் படி ஒன்றும் விண்ணப்பத்துடன் இணைத்திருப்பதையும் சுட்டினேன். அவர் உடனே 'அதைப் பார்த்து, இதில் உங்களைக் கட்டடம் கட்டச் சொல்லி உத்தரவு இல்லையே; எப்படிக் கட்டலாம்' என்றார். பள்ளிக்கென வாங்கிய இந்த இடத்தில் பள்ளிக்கெனக் கட்டடம் கட்டாது வேறு எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்று மறுபடியும் தாழ்ந்து கேட்டேன். மேலும்

மன்னைக்குப் பொறுப்பான வீட்டுவசதி வாரியமே கட்டடம் கட்ட இசைவு தந்தமையைக் காட்டினேன். உடனே அவர் 'அதெல்லாம் எனக்குத் தெரியாது?' எங்கள் வரைப்படத்தின் மேலேயே அவர்கள் இசைவினைக் குறித்து வாங்கி வேறு வரைப் படங்களைக் கொண்டு வா' என்றார். நான் மறுபடியும் 'சென்ற ஏப்பிரல் திங்களிலிருந்து அந்தமுறை மாறி, வெறும் சான்றிதழ் (நிலப்படத்துடன்) தருவது முறையாக உள்ளதைத் தாங்கள் அறிவீர்களே! மறுபடி எப்படி அவர்களைக் கேட்பது, என்றேன். அவர் 'அதெல்லாம் எனக்குத் தெரியாது' அப்படி வாங்கி வர இல்லையானால் ஒன்றும் செய்யமுடியாது. போகலாம்' என்றார். நான் அவருடைய பழைய காழ்ப்புணர்ச்சியையும் கடுகடுப்பையும் எண்ணிக்கொண்டு 'இறைவனே இவரை மன்னியும், என்ற வேண்டுதலோடு வெளியே வந்தேன். பின் குழுமத்தின் மேல்நிலையில் உள்ளவரிடம் இது பற்றி முறையாக விளக்கி, நேரிய முறையில் வந்த இந்த விண்ணப்பத்தைத் தடுப்பது தக்காது என்பதையும் தக்கார் வழியில் எடுத்துக் காட்டினேன். அந்த மேனிலையாளர்கள் யாவும் சரியாக இருப்பதைக் கண்டு அவர்கள் மறுப்பதற்குக் காரணம் கேட்க, சரியான பதில் செல்லாமையால், அவர்கள் கையாலேயே ஆணையும் பிறப்பித்தார்கள். அப்படியும் அந்த ஆணை என் கைக்கு வருவதற்கு ஒருசில நாட்கள் இடையில் தடையாக நிற்கக் கீழ்உள்ளவர்கள் வழி செய்தார் கள். பிறகு வேறு வழிஇன்றி முறையாக ஆணை வழங்கினர். இவ்வாறு பழமையும் பகைமையும் பாராட்டும் ஓரிரு அலுவலர் தவிர்த்து, குழுமத்தின் மேனிலையிலும் இடையிலும் அடுத்த நிலையிலும் உள்ள அதிகாரிகளும் பிறரும் எங்களை ஏற்று அன்புடன் நடத்தி, உள்ளன விளக்கி ஆவனவற்றிற்கு வழி காட்டி உதவிய நிலையினையும் நாங்கள் என்றென்றும் மறக்க முடியாது. அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி வாழ்த்தக் கடமைப்பட்ட வனாகின்றேன்.

இவ்வாறு ஒவ்வோர் இடத்திலும் பல்வேறு முட்டுக் கட்டைகளைத் தகர்ந்தெறிந்து நல்லவர்தம் நேரிய உதவியினாலே இன்று புதுமனையில் கட்டடம் கட்டிப் புதுப்பள்ளியினைத் தொடங்கியுள்ளோம். பெற்றோர்களும் பொது மக்களும் மற்றவர்களும் எங்களுக்கு அளிக்கும் ஆதரவினாலும் ஊக்கத்தினாலும் மேலும் மேலும். நன்கு செயல் பெறலாம் என்ற நம்பிக்கையோடு இப்பகுதியினைத் தாண்டி அடுத்த பகுதிக்கு அடியெடுத்து வைக்கலாம் என எண்ணுகிறேன்.

# 8. வீட்டுவசதி வாரியமும் நாமும்

வீட்டுவசதி வாரியத்தைப் பற்றி நினைக்கும்போது நான் இருபது வருடங்களுக்கு முன் செல்லுகிறேன். இன்றைய அண்ணாநகரில் உலகக் கைத்தொழில் பொருட் காட்சி நடைபெற்ற அந்த நல்ல நாட்கள் என் முன் நிழலாடுகின்றன. எத்தனை பெருமுயற்சிகளுக்கிடையில் அந்த நாளில் நம்நாட்டுத் தொழில்கள் மட்டுமன்றிப் பிறநாட்டுத் தொழில்களையும் காட்டி, வருங்காலத் தொழில் யுகத்தில் நம்நாடு எந்தெந்த வகையில் முன்னேற வேண்டும் என்பதைக் கோடிட்டு விளக்கிய செயல்முறை களை மறக்கமுடியுமா? 'பொருட்காட்சி முடிந்தது; பின் பொட்டல் காடுதானே மிஞ்சும்' எனப் பலர் பேசினர். ஆயினும் அக்காலத்துத் தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு பக்தவச்சலம் அவர்கள் இதைப் பெருநகராக்கத் திட்டமிட்டு அதற்கு வேண்டியவற்றைச் செயலளவில் மேற்கொண்டார்கள் என்பதை அவருடன் நெருங்கி இருந்த நான் அன்றே நன்கு அறிவேன்.

அதற்கு முன்பே, நகர் வளர்ச்சிக் குழுமம் (City improvement trust) என்ற பெயரால் ஒரு நிறுவனத் தின் வழியே சென்னையில் வீடு அற்றோருக்கு இட ஒதுக்கீடு செய்து - தேவையானால் வீடும் கட்டிக் கொடுக்க ஏற்பாடு கள் அரசாங்கத்தால் செய்யப்பெற்றன. அயன்புரம் வெங்கடேசபுரம் பகுதி, செனாய் நகர் பகுதி, ஆர்க்காடு சாலை, தென்தியாகராய நகர், மயிலை போன்ற இடங் களில் இன்று அந்தப் பெயரிலேயே அமைந்த 'டிரஸ்டு புரங்க'ளாகிய இவை அந்த நாளை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. (அப்போது எனக்கு வெங்கடேச புரத்தில்—எண் 99 என எண்ணுகிறேன்—ஒரு மனை

ஒதுக்கித் தந்தனர். அதில் நான் குறித்தபடியே வீடும் கட்டித்தந்தனர். எனினும் அதற்குள் நான் அமைந்தகரையில் மனை வாங்கி வீடு கட்டத் தொடங்கியதாலும், நான் பணி செய்யும் பச்சையப்பருக்கு அது வெகுதொலைவில் இருந்ததாலும் நான் செலவு செய்த தொகையினை மட்டும் பெற்றுக்கொண்டு அன்று அரசாங்கத் துணைச் செயலராக இருந்த ஒருவருக்கு—திரு. கிருஷ்ணசாமிப் பிள்ளை என நினைவு—தந்துவிட்டேன். அப்படியே 1949-ல் நான் வீடு கட்டி முடித்தபிறகு சென்னை நகரில் எனக்கு ஒதுக்கிய வீட்டினையும் தந்துவிட்டேன்). ஆனால் வீடு கட்டும் பணி விரிவடைய விரிவடைய—நாடு முழுவதுக்கும் அதன் தேவை உண்டாக பல ஆக்கப் பணிகள் செய்யவேண்டிய நிலையில் அதுவே வீட்டு வசதி வாரியம் என 1968-ல் பெயர் பெற்றது என எண்ணுகிறேன். ஆயினும் அதற்குமுன்பே இன்றைய அண்ணாநகரில் மனைகள் ஒதுக்கீடு தொடங்கப் பெற்றது. சட்டப்படி எனக்கு ஒரு வீடு இருக்கின்ற காரணத்தால்—நான் மனையினைப் பெற உரிமையற்றவனே. எனினும் அமைந்தகரை எல்லையில் என் மூன்று மனைநிலத்தை அரசாங்கம் எடுத்து கொண்டமையால் அதற்குப் பதிலாக ஓர் இடம் அண்ணாநகரில் அவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவரானார்கள்.

அமைந்தகரை இடம் வந்ததையும் இங்கே காட்டல் தேவை எனக் கருதுகிறேன். நான் 1944-ல் சென்னைக்கு வந்து பச்சையப்பரில் பணி ஏற்றேன். அப்போது அங்கு வடமொழிப் பேராசிரியராகத் திரு. சண்முக முதலியார் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அமைந்தகரை ஏகாம்பர நாதர் திருக்கோயிலின் பரம்பரை தர்மகர்த்தராகவும் இருந்தார்கள். 1945-46-ல் அக்கோவிலுக்குரிய நிலங்களை வீட்டு மனைகளாகப் பிரித்துப் பலருக்கும் மாதவாடகை அடிப்படையில்—உரிமை கோயிலுக்கே உரியதாக—தந்து உதவினார்கள். ஒருநாள் அறையில் அவர்கள் தாமே வலிய வந்து 'நீங்கள் இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள்.

உங்களுக்கு இங்கே வீடுகட்ட மனை இல்லை. கோயில் நிலத்தில் ஒருபகுதியை உங்களுக்கு வாடகை உரிமைச் சீட்டு அடிப்படையில் தருகிறேன், பெற்றுக் கொள்ளுங்கள்' என்றார். என் முன்னோர்களோ—நானோ—கோயில் சொத்துக்கள் எதிலும் பங்குபெறாது அதுவரை வாழ்ந்து வந்தமையால் நான் தயங்கி நின்று, சிலநாள் கழித்து முடிவு செய்வதாகச் சொன்னேன். எனினும் அவர்கள் என்பேரில் கொண்ட அன்பின் காரணத்தாலே, நிலங்களைப் பிரிக்கும் போது எனக்கும் ஒன்றைப் பிரித்து வரைப்படங்கள் வாடகைப்பத்தரம் இவைகளைத் தயார் செய்து கொண்டு வந்தார்கள். அவர்கள் பெரியவர்; ஆண்டவன் பணிசெய் கின்றவர்; 'இறைவா; இது என்ன?' என விழித்தநேரத்தில் அவர்கள் 'நீங்கள் விரும்பினால் இதன் முழுத்தொகை யினையும் கட்டிப் பிறகு உங்கள் பேரிலே பதிவு செய்து கொள்ளலாம்' என்று கூறினர். 'தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும் வான்வார் கழல்' என்று மணிவாசகர் கூறியபடி, இதுவும் இறையருளே என ஏற்றுக் கொண்டேன். ஆயினும் அதில் ஒரு வீடும் கட்டவில்லை. பின் ஓரிரு ஆண்டுகள் கழித்து முறைப்படி, நாளிதழ், அரசாங்க இதழ் ஆகியவற்றில் விளம்பரம் செய்து, உரிய தொகையினைக் கோயிலுக்குக் கட்டி, அந்த இடத்தை முழு உரிமையுடன் பெற்றுக்கொண்டேன். அந்த நிலம் வந்திருக்கவில்லையானால் அதை குடிசைமாற்றுக் குடியிருப்புக்காக எடுத்துக்கொண்டு அண்ணாநகரில் இடம் தந்திருக்கமாட்டார்கள். இன்றைய வள்ளியம்மாள் கல்வி அறம் தோன்றியிருக்குமா என்பதே ஐயத்துக்குரியதாகும். எனவே திரு. சண்முகமுதலியாருக்கு நன்றியினையும், ஏகாம்பர நாதருக்கு வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். பின் அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டபோது கணிசமான தொகை தந்தனர். அதில் ஒரு பெருந்தொகையினைக் கோயிலுக்கென ஒதுக்கி, அரசாங்க 'ரிசீவர்' கையில் ஒப்படைத்து, அதன் வருவாயினைக் கொண்டு, ஆண்டுதோறும் கார்த்திகை விழாநடத்த

ஏற்பாடு செய்தேன். அண்ணாநகரிலும் சுற்றுப்புரங்களிலும் இவ்வாறு நிலங்களைப் பிரித்துக் கொண்டவர்களுக்கு மாற்று இடம் தந்தனர். அந்த இடங்களெல்லாம் எங்கெங்கோ தெருவின் நடுவில்—மூலையில்—முடுக்கில் அமைந்திருக்கும். எனக்கும் அப்படி ஏதேனும் தந்துவிடுவார்களோ என அஞ்சினேன். அப்போதே, முன் சிலவிடங்களில் நான் குறித்தபடி, என் அன்னையின் பெயரால் ஏதேனும் நிலைத்த கல்விப் பணி செய்ய முடிவு செய்தமையால் அதற்கேற்ற இடத்தினைத் தேடினேன். அப்போது அண்ணா நகரின் கீழ்ப்பகுதிக்கு மட்டுமே வரைப்படம் தயாரித்தனர். நான் அப்படத்தை முதலமைச்சர் வீட்டில் கண்டேன். அதைத் துருவி ஆராய்ந்தேன். தற்போதுள்ள இடம் 178வது மனை கடைகளுக்கு என ஒதுக்கிய பெரிய இடத்துக்குப் பக்கத்தில் மூன்று தெருக்களும் எல்லைகளாக அமைந்த இடத்தில் இருந்ததைக் கண்டேன். இதைப் பெற்றால், பின் வாய்ப்பும் வசதியும் கிடைத்தால், பக்கத்து மனைகளையும் வாங்கி அன்னையின் பெயரால் பள்ளி தொடங்கலாமே என எண்ணினேன்.

வரைப்படத்தையே ஊன்றிக் கவனித்ததைக் கண்ட முதல்வர் அவர்கள் 'அதில் என்ன அப்படி இருக்கிறது?' என்று கேட்டார். நான் எனக்கு மாற்று இடம் கொடுப்பதைப்பற்றியும் அது எங்கே அமைந்தால் என் அடிப்படைக்கு நன்றாக இருக்கும் என்பது பற்றியும் துருவிக் காண்பதைக் கூறினேன். உடனே அவர் 'சற்று நேரம் இரு, அங்கிருந்து ஓர் அதிகாரி வருவார். அவரிடம் சொல்லி விடுகிறேன். பின் நீ வேண்டியதை எடுத்துக் கொள்ளலாம்' என்றார். அவர் சொன்னபடியே அங்கே முக்கிய அலுவலராக இருந்த ஒருவர் (திரு. சந்திரன் என எண்ணுகிறேன்) வந்தார். அவரிடம் என்னைப்பற்றிக் கூறிப் பயன் படத்தக்க இடத்தினைத் தருமாறு சொன்னார். அந்த அலுவலரும் அங்கேயே ஆய்ந்து இந்த 178ஐ எனக்கு ஒதுக்கித்தந்தார். ஆம்! அன்றைய முதல்வரும் அந்த

அலுவலரும் உதவியிராவிட்டால், எனக்கு எங்கே அமைந்திருக்குமோ? எவ்வாறாகயிருக்குமோ என எண்ணின் திகைப்பே உண்டாகிறது. இவ்வாறு வீட்டுவசதி வாரியத்தின் முன் ஒதுக்கிடம் எனக்கு அமைந்த அந்த நாள் முதல் இன்று வரை, எங்கோ ஓரிரு அலுவலர் தவிர மற்றைய அனைவரும் எங்கள் வளர்ச்சிக்கு வேண்டுவன செய்து வாழ்த்தி வருகிறார்கள்.

இதற்கிடையேதான் நான் ஐதராபாத் செல்ல நேர்ந்தது. (1966-67) எனினும் 67ல் திரும்பிய பிறகு நான் திட்டமிட்டபடி செயலாற்ற 1968ல் வீட்டில் பள்ளியினைத் தொடங்கி, 1969ல் அண்ணாநகரிலும் ஆரம்பப் பள்ளியினைத் தொடங்கியதை எண்ணி, அனைத்துக்கும் மூலகாரணனான இறைவனை வணங்கி நிற்கின்றேன்.

பள்ளி தொடங்கியபின் பக்கத்தில் உள்ள சுமார் 14 மனைகள் கொண்ட இடத்தினை வீட்டுவசதி வாரியம் ஒதுக்கிய வகையினை முன்னமே குறித்துள்ளேன். வீட்டுவசதி வாரியத்தின் தலைவர்கள் மாறி மாறி வந்து கொண்டிருந்தனர். எங்கள் பள்ளியும் நாடொறும் வளர்ச்சியுற்றுக் கொண்டே வந்தது. 178ல் - 1969ல் கீழ்த்தளமும் 70-71ல் முதல், இரண்டாம் தளங்களும் கட்டி முடித்த பின், பிள்ளைகள் எண்ணிக்கை ஐநூறுக்கும் மேல் சென்ற பின் என்ன செய்வது எனத் திகைத்தேன். அப்போதுதான் பக்கத்து மனைகளைப் பெற எண்ணிய எண்ணம் செயல்படத் துவங்கியது. அப்போது திரு. வாசுதேவன் என்பார் வாரியத் தலைவராக இருந்தார் என எண்ணுகிறேன். நேரில் சென்று அவர்களிடம் விண்ணப்பித்தேன். அவர்கள் அரசாங்கத்துடன் கலந்து, எங்கள் பள்ளிக்கு ஒட்டிய 7 மனை கொண்ட இடத்தினை (226C) முதலில் தர இசைந்தனர். இங்கே அமைக்க இருந்த கடைகளுக்கென அமைந்த கட்டிடத்தினை எதிர்ப்புறமாக மாற்றி இந்த இடம் எங்களுக்குத் தரப்பெற்றது. பின் எங்கள் வளர்ச்சியினையும், செயல்திறனையும் கண்டு மறுபாதியினையும் நான்

முன்னரே குறித்தபடி வாரியமே வந்து தந்து உதவிற்று. அது வரை உதவிய அனைவருக்கும் நன்றியுடையேன்.

அவர்கள் தந்த இடத்தில் உடன் கட்டடங்கள் ஆரம்பித்தேன். எனினும் பண முட்டுப்பாடு அதிகமாக இருந்த காரணத்தால் திகைத்தேன். அப்போதுதான் திரு. மேஜர் சுந்தரராஜன் அவர்கள் நாடகம் நடத்தி வசூலினைப் பள்ளிக்கூடத்துக்குத் தர இசைந்தனர். கணிசமான தொகை வந்தது. எனினும் சில வசதியான பெற்றோர் தம் வசைமொழிகளையும் பெற்றோம். எதெதற்கோ கேளாதமுன் தாமாக வாரி வழங்கும் ஒரு சிலர் இதற்குப் பத்தும் இருபதும் தரத் தயங்கியதோடு, எங்கள்மேல் வசைபுராணம் பாடவும் ஆரம்பித்தனர். அதன் பிறகுதான் வளர்ச்சிநிதி (Improvement-Amenities Fund) என்று தொடங்கி, சேரும்போதும் ஆண்டுத் தொடக்கத்திலும் வசூல் செய்ய ஆரம்பித்தோம். அதில் கட்ட இயலாதவர்கள் பள்ளியில் சேர இயலாதல்லவா? அவர்தம் வசைமொழியும் எங்களுக்குக் கிடைக்காதே. இவ்வாறு ஒருசிலர் வசை பாடினாலும் பல பெற்றோர்கள் மனமுவந்து உதவுவதனாலேயே நாங்கள் நிமிர்ந்து வாழமுடிகிறது. நாங்கள் வேறு பள்ளிகளில் செய்வது போலச் சேரும்போது பத்தாயிரம் வரையிலும் அதற்கு மேலும் கையூட்டு வாங்குவதில்லை. இதனாலும் எங்களுக்கு இடர்ப்பாடும் நேருவதுண்டு. அரசாங்கத்திடம் ஏதேனும் உதவி கேட்கச் செல்லும்போது 'Stamp Daty exemption' போன்றவை - 'நீங்கள்தான் நிறையப் பணம் வாங்கிக் குவிக்கிறீர்களே; உங்களுக்கு ஏன் சலுகை?' என்று கேட்பர். நாங்கள் கையூட்டு ஒன்றும் வாங்குவது இல்லை என்றாலும் அவர்கள் நம்புவதில்லை. எங்கள் பள்ளிக்கு வந்து, நிலையினை நேரில் அறிந்த அமைச்சர்கள் முதல்வர்தம் தலையீட்டுகையால் பின் நாங்கள் சில சலுகைகளைப் பெற முடிந்தது.

226 C&D என்ற இருபகுதிகளையும் பெற்றபின் எங்கள் விரிவுக்கு ஆக்கவழி கோரினோம். எனினும் அதற்கு முறை

யாகக் கட்ட வேண்டிய தொகைக்கு என்ன செய்வது என்று ஏங்க வேண்டி வந்தது. எங்களுக்கு தனிச் சலுகை இன்றி, மற்றவர்களுக்குத் தந்த விலைக்கே தந்தனர். பெருஞ்சாலைகள் பக்கம் மனை 11,300/எனவும் மற்றப் பகுதி மனை 8,600/—எனவும் தந்தனர். நான்கில் ஒரு பகுதி உடன் கட்டியபிறகு மிகுதியை மூன்று ஆண்டுகளில் கட்டவேண்டும் என்ற ஏற்பாடு. முதன்முறையே கட்டத் தடைப்பட்டது. அதற்குள் அங்கிருந்த அலுவலர் ஒருவர் உடன் கட்டாவிட்டால் தந்தது எடுத்துக்கொள்ளப்படும் என்று 'நோட்டிஸ்' விடுத்தார். எங்கும் நல்லவர் பலருக்கிடையில் நஞ்சுடையார் ஒருசிலர் இருப்பதுதானே உலக இயற்கை. எனினும் அதுபோது வாரியத் தலைவராக இருந்தவர் திரு. இலக்குமிகாந்தம் பாரதி அவர்கள். அவர்களிடம் நேரில் சென்று எங்கள் இயலா நிலையினை முறையிட்டோம். அவரும் பலவற்றை ஆராய்ந்து இலட்சக்கணக்கில் கட்டாதவர்களும் இருக்க எங்களுக்கு இந்த நோட்டீஸ் விட்டது தக்கது அன்று என உணர்ந்து, மூன்றாண்டுகளுக்கு உரிய தவணையினை ஏழு ஆண்டுளுக்கென மாற்றித் தந்தனர். அதனால் நாங்கள் அதிக வட்டியினைக் கட்டவேண்டி வந்தபோதிலும் மாற்றித் தவணைத்தொகை குறைய, மகிழ்ந்து ஏற்றுக்கொண்டோம். அப்படியே முறையாகக் கட்டி முடித்தோம். இவ்வாறு கீழ் உள்ள ஓரிருவராலே இடர்ப்பாடுகள் அவ்வப்போது நேருகின்றதேனும் அதே நிலையில் உள்ள மற்றவர்களாலும் உயர்மட்ட அதிகாரிகளாலும் எங்கள் வேண்டுகோள்கள் நிறைவுப்பெற, எங்கள் பணி குறைவின்றி நடைபெறுகின்றது.

எங்கள் பணி விரிவடைந்தது. எனவே புது இடம் தேடினோம். அதுபற்றி விளக்கமாக முன் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பற்றி எழுதிய பகுதியில் எழுதி உள்ளேன். எனினும் அதுபற்றி வீட்டு வசதி வாரியமும் பிறரும் செய்த செயல்கள் இரண்டொன்றினை இங்கே குறிக்கக் கடமைப் பட்டுள்ளேன்,

முன் குறித்தபடி பல முட்டுப்பாட்டுக்கிடையில் 4648 B யின் பகுதி எங்களுக்கு முறைப்படி ஒதுக்கப் பெற்ற பின்பும், அரசாங்கமும் குழுமம் தலையீடும் பொருத்தமற்றது எனச் சுட்டியபின்பும் தொல்லை தீர்ந்தது என எண்ணியபோது, பச்சையப்பர் அறநிலையம் குறுக்கிட்டது. இந்த இடம் தங்களுக்கு முன்னரே ஒதுக்கப்பெற்றதென்வும் எனவே இது தங்களுக்குச் சொந்தமானதெனவும் உரிமை கொண்டாட ஆரம்பித்தது. அப்போது அறநிலையத்தின் தலைவரா யிருந்த சட்டங்களை நன்கு அறிந்து ஆண்ட ஒரு 'பெரியவர்' இந்த எல்லையில் ஒரு பலகையை நட்டு. அதில் 'இந்த இடம் பச்சையப்பருக்கு உரியது' என எழுதிவிட்டார். அப்போது வீட்டு வசதி வாரியத் தலைவரும் புதிதாக வந்திருந்தார். நான் உடனே அவரிடம் சென்று முறையிட்டு, அதை அப்புறப்படுத்தினாலன்றி நாங்கள் கட்ட வேண்டிய தவணைக்குரிய தொகையினைக் கட்டமாட்டோம் என்று திட்டமாகக் கூறி, எழுதியும் கொடுத்துவந்தேன். அதற்கிடையில் அந்த அறத்தைச் சேர்ந்த சிலர்—என் மாணவர் உட்பட எனக்கு எதிராக வசைச் சொற்களை வாரி வீசினர்; பழித்தும் இழித்தும் உரைத்தனர். நான் அவர்களுக்காக இரக்கப்படுவதன்றி வேறு என்ன செய்ய இயலும்?

நான் வீட்டு வசதி வாரியத்துக்கு எழுதியபடியே தவணை செலுத்தாது மேலே அமைச்சருக்கும் முதல்வருக்கும் விண்ணப்பங்கள் அனுப்பினேன். அப்போது வீட்டு வசதிச் செயலராக இருந்தவர் பச்சையப்பரில் பயின்றவர். அவர் ஆசிரியரைக் காட்டிலும் பயின்ற கல்லூரியிடம் பெருமதிப்பு வைத்தமையின் எங்களுக்கெனத் தந்த இடத்தினை எப்படி யும் எடுத்துப் பச்சையைப்பருக்குத் தர முயன்றார். பல்கலைக்கழகம் பத்து ஏக்கர் நிலமின்றேல், கல்லூரி நடத்த இசைவு தராது என்ற காரணம் காட்டி, இதையும் எடுத்துக்கொள்ள முயன்றனர். ஆயினும் முன் அவர்களுக்கு ஒதுக்கிய இடத்திற்கு ஆறு லட்சத்துக்குமேல் தவணைத்

தொகை கட்டாததை அரசாங்கம் சுட்டிக் காட்டிற்று. எனினும் செயலர் அவர்கள் எப்படியும் இதை அவர்களுக்குக் கொடுக்க முயன்றார். அது பற்றிய கடிதப் போக்குவரத்து களையெல்லாம் எடுத்துக் காட்டின் அது விரிவாகும் என அஞ்சுகிறேன்.

இதற்கிடையில் பச்சையப்பர் அறநிலையத்தின் அமைப்பில் மாற்றங்கள் வந்தன. பெருஞ்செல்வர் ஒருவர் தலைமைப்பதவி ஏற்றார். அவர் இந்த நிலத்தைப் பெறாது விடுவதில்லை என்று கூறிப் பலவகைகளில் முயன்றார். அக்காலத்தில்தான் வாரியத் தலைவர் இரு முறை ஒதுக்கிய உத்தரவை ரத்து செய்து, நாங்கள் கட்டிய பெரும் தொகையினைத் திரும்பப்பெற இரசீதும் உடன் இணைத்து அனுப்பினார். எனினும் மேலுள்ளவர் தலை யீட்டால் அது நிறுத்தப்பெற்றது என்பதை மேலே சுட்டினேன்.

இடையில் அரசாங்கம் ஓர் ஏற்பாடு செய்தது. பச்சை யப்பர் அறநிலையத்தவரையும் எங்களையும் கூட்டிவைத்து ஏதேனும் சமரசம் செய்ய முடியுமா என்ற முயற்சியே அது. அதற்கு முன்பே, வீட்டு வசதி வாரியத் தலைவர் அலுவலகத்தே அதுபோன்ற கூட்டம் நடந்து பயனளிக்கா மல் போகவே இந்த ஏற்பாடு. அதன்படி கல்வி அமைச்சர் அறையில் கூட்டம் நடைபெற்றது. வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களும் இருந்தனர். வாரிய உயர் அதிகாரி கள், பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உயர் அதிகாரிகள், கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்வி, வீட்டு வசதி துறைச் செயலர்கள், நகராண் கழகத்தவர் எனப் பல துறையினரும் அங்கே வந்திருந்தனர். பச்சையப்பர் அறநிறையத் தலைவரும் உறுப்பினர் சிலரும் வந்திருந்தனர். நாங்களும் பெற்றோர் சங்க உறுப்பினர் சிலருடன் சென்றிருந்தோம். அறை நிரம்பச் சுமார் ஐம்பது பேருக்கு மேல் கூடியிருந்தனர். காலை 10 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் பிற்பகல் 2-30 மணி அளவில்தான் முடிவுற்றது.

கூட்டத்தே பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் காழ்ப் பிணை உடையாரும் கல்வித் துறைச் செயலரும் வேறு இரண்டொருவரும் எப்படியும் எங்களிடமிருந்து இதை வாங்கிவிட வேண்டும் என முயன்றனர். அவர்களுள் ஒருவர் பச்சையப்பர் நிறுவனத்தினர் தரவேண்டிய ஆறரை இலட்சத்தினையும் இனாமாகத் தள்ளிவிட்டு இந்த இடத் தினையும் தரலாம் என்றார். ஆயினும் அமைச்சர் அவர் கள் அவரை வன்மையாகக் கண்டித்துப் புறம்போக்கினர். கல்லூரிக் கல்வி இயக்குநர் 'வள்ளியம்மாள் கல்வி நிறுவனத் துக்கு இந்த இடம் தரக் கூடாது' என்றனர். 'ஏன்?' என்று அமைச்சர் கேட்க, இவர்கள் 'இந்தி சொல்லிக் கொடுக் கிறார்கள்; எனவே கூடாது' என்றார். அவர்களே மத்திய ஆட்சி சிலகாலம் இங்கே நிலவிய காலத்தில் அவர்தம் கொள்கையினை ஏற்று இந்தியைப் போற்றியதை அறிந்த அங்கிருந்த சிலர் நகைத்தனர். நான் அமைதியாக 'அம்மா, நான் செய்வதை உங்கள் ஆணை வழியே உங்கள் கல்லூரி களில் செயல்படுத்த முடியுமா?' எனக் கேட்டேன். உடனே அவர்கள் 'என்ன? எப்படி?' என்று கேட்டார்கள். நான் அமைதியாக 'எங்கள் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் தமிழைக் கட்டாயம் பயில வேண்டும் என்ற விதி உண்டு. உங்கள் கல்லூரிகளில் தமிழைக் கட்டாயம் பயில உங்களால் ஆணையிட முடியுமா?' எனக் கேட்டேன். அவர்கள் முகம் கவிழ்ந்தார்கள். கல்வி அமைச்சர் 'அம்மா நீங்கள் சும்மா இருந்தாலே போதும்' என எச்சரித்தார். ஆம்! அவர்கள் அதை நிச்சயமாகச் செய்ய முடியாது, மத்திய கல்வித் திட்டத்தில் மும்மொழித் திட்டம் இருப்பி னும் எந்த மொழியும் கட்டாயம் இல்லை. இந்தி, ஆங்கிலம் இரண்டையும் விடுத்து வேறு எந்த மூன்று மொழிகளையும் மாணவர் எடுத்துப் பயிலலாம். தமிழ் மாணவர் ஒருவர் தமிழ், மலையாளம், கன்னடம் என்ற மொழிகளைப் பயிலத் தடையில்லை. மூன்றாவது மொழியும் இடைநிலை வகுப்புகளிலேயே கட்டாயமாக உள்ளது எனவே அத் திட்டப்படி ஆங்கிலம், இந்தியுடன், இரண்டாவது தமிழ்

அல்லது மூன்றாவது மொழியாக கட்டாயம் பயில வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் இருமொழிக் கொள் கையில் ஆங்கிலம் கட்டாயமாக்கப் பெறுகிறது. எஞ்சிய ஒரு மொழி தமிழ் அல்லது தெலுங்கு அல்லது இந்தி அல்லது பிரஞ்சு, ஜெர்மன் என எதை வேண்டுமானாலும் கொள்ள லாம். எனவே அவர்கள் தமிழைக் கல்லூரிகளிலோ உயர் நிலைப்பள்ளிகளிலோ கட்டாயமாகப் படிக்கச் சொல்ல முடியாது.

எங்கோ சென்றுவிட்டேன். மன்னியுங்கள். என் தமிழ்ப்பித்து அப்படி ஈர்த்துச் சென்றது. பச்சையப்பர் அறநிலையத்தலைவர் என்னைப் பலவகையில் அனைவர் எதிரிலும் மிரட்டினார். 'எங்கள் கல்லூரியில் நாங்கள் கொடுத்த சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டு, எங்களுக்கே துரோகம் செய்கிறார்' என்றார். 'அங்கே நீ பள்ளிக்கூடம் நடத்துவதைப் பார்க்கிறேன்' என்று மிரட்டினார். ஆனால் அவற்றிற்கெல்லாம் தக்க பதில் தரப்பெற்றன. என்னா லன்று; நல்லமைச்சர்களாலேயே. மற்றும் அடுத்த சில நாட்களில் பச்சையப்பர் அறநிலையக்குழுவே கலைக்கப் பெற்று, அரசாங்க நேரடி மேற்பார்வையிலேயே நடத்தப் பெறும் நிலையும் உருவாயிற்று.

அன்றைய கூட்டம் பிற்பகல் முடிந்தபிறகும் எந்த முடிவினை அரசாங்கம் எடுத்தது என்பதை யாரும் சொல்ல வில்லை. என்னாகும் என்று யாருக்கும் தெரியவில்லை. எல்லாவிதமான கடிதப் போக்குவரத்துகளையும் அன்றைய கூட்ட நிகழ்ச்சி நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்கள் எனப் பின்னர் அறிய முடிந்தது. அவரும் அதை அணுகி ஆராய்ந்து—காலம் நெடிதாயினும் 1981-ம் ஆண்டின் தொடக்கத்தில் எங்களுக்குத் தந்ததை மாற்ற முடியாது என அரசாங்க ஆணை பிறப்பிக்கச் செய்தார். ஆனால் எங்களுக்குக் கொடுக்க முடியாது என்று முயன்ற அரசாங்க அதிகாரிகளோ அறநிலையக் குழுவினர்களோ அந்த உத்தரவு வந்த காலத்தில்

அவரவர் பதவிகளில் இல்லை—அறிந்து கொள்ள. எனவே பெரும் பெரும் பதவியாளர்—செல்வர்—அதிகாரி கள் ஆகியவர்கள் எதிர்ப்புக்கிடையில் நல்லமைச்சர்—முதல்வர் ஆகியோர் நேரிய வழியினால் அந்த இடத்தினைப் பெற்ற உடன் எப்படியோ முழுத் தொகையினைக் கட்டிமுடித்தோம். அப்படியே முன் தந்த நிலங்களுக்கும் (226 CD) உரிய தொகை கட்டப்பெற்றது.

அதற்குள் வீட்டுவசதி வாரியத்தலைவர் பதவி நீங்கப் பெற்றார். திரு. வேலூர் நாராயணன் என்பவர் தலைவர் பதவி ஏற்றார். அவரை அந்த ஆண்டு பொங்கல் விழாவிற்குத் தலைமையேற்கச் சொன்னோம். அந்த விழாவிலே அவர் கையினாலேயே பத்திரங்கள் வழங்கப்பெற்ற அடுத்த இரண்டொரு நாட்களில் பதிவும் செய்து கொண்டோம். பதிவுக்குரிய முத்திரைக் கட்டணத்திற்கு (Stamp Duty) அரசாங்கம் விலக்களித்து எங்களை ஊக்கிய சிறப்பினையும் இங்குச் சுட்டாமல் இருக்கமுடியாது. அவர்களுக்கு நன்றியுடையோம்.

இதற்கிடையில் புதிய இடத்தில் நாங்கள் வேலியிட்டு, கிணறு எடுத்து, சுற்றிலும் தென்னங் கன்றுகளை நட்டுப் பயிராக்கினோம். அது தவறு என்று பச்சையப்பர் அறநிலையத்திலிருந்தும் அரசாங்க வீட்டு வசதித்துறை செயலரிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. நாங்கள் கட்டடம் கட்ட இருமுறை வரைப்படம் அனுப்பியும் வாரியம் திருப்பி அனுப்பியது. ஆயினும் அவற்றிற்கெல்லாம் 'மடுத்தவாயெல்லாம் பகடன்னனான்' என்ற வள்ளுவர் வாக்குப்படி, நான் பகடெனப் பாரம் சுமந்து மாற்றுப் பதில் உரைத்து வெற்றி காண முடிந்தது. அவர்கள் எங்களுக்கு மாற்று இடமாகக் காட்டிய நீர்தேங்கிய குட்டையினைக் கண்டு 'இறைவா! இதுவோ உன் இன்னருள்' என்று எண்ணி கலங்கியதுண்டு. ஆயினும் அனைத்தும் செம்மையாக்கப்பெற, இன்று இதில் நான்கு மாடிக் கட்டடத்து வள்ளியம்மாள் மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி சிறக்க நடைபெறுவதை அனைவரும்

உணர்வர். அதற்குப் பின்பு எங்கள் பணியும் இடையீடின்றி இனிது நடைபெற்று வருகிறது. திகைப்பு ஓரளவு நீங்கப் பெற்றுத் தெளிவும் பிறந்தது.

அண்மையில் மற்றொரு சிறு இடம் பள்ளிக்கு அருகிலேயே இருக்கின்றமையின் தக்க வகையில் பயன்படும் எனக் கருதி வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்தோம். அவர்களும் எங்கள் வேண்டுகோளை அன்புடன் ஏற்று உடனே செயல்முறைக்கு உரியவர்களுக்கு அனுப்பினர். அண்ணாநகர் கோட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பினார்.

அங்குள்ள ஓர் அதிகாரியின் சொந்தக்காரர் மகன் எங்கள் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். நன்கு பயிலவில்லையாதலால் தேர்ச்சி பெறவில்லை. ஒருநாள் நான் அந்தப் பக்கம் சென்றபோது, அந்த அதிகாரி என்னை மிகப் பரிவுடன் வரச் சொன்னார். அதைச் சொன்ன அவர் கீழுள்ள மற்றோர் அதிகாரியும் என் உடன் வந்தார். அவர் அறைக்குச் சென்றபின் அந்த அதிகாரி என்னை மிகவும் உபசரித்து காப்பி சாப்பிட வற்புறுத்தினார். நான் வேண்டாம் என ஒதுக்கி நின்றேன். உடனே ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அவர் உறவினர் பையன் ஆறாம் வகுப்பில் தேறவில்லை எனவும், அவன் தேறியதாகச் சான்றிதழ்தரின் அவனை வேறிடத்தில் சேர்த்துக் கொள்வதாகவும் சொன்னார். நான் அந்த முறையினை நாங்கள் எப்பொழுதும் கையாண்டதில்லை எனவும் இனியும் கையாள மாட்டோம் எனவும் என் சொந்தப் பெயர்த்தியே தேர்வு பெறாத போது நிறுத்தி வைக்கப்பெற்றாள் எனவும் கூறி முடியா நிலையை விளக்கினேன். ஆனால் வற்புறுத்தினார் நான் முடியாது என்று சொல்லி வெளி வந்தேன். அப்போது அவர் சொன்ன சொற்கள் என் காதில் விழுந்தன. 'எப்படி இந்த இடத்தை வாங்குகிறார் எனப் பார்க்கிறேன்' என்ற சொற்களே அவை. அதனாலோ அன்றி ஏனோ அந்த விண்ணப்பம் இன்னும் நிறைவேறவில்லை.

## முடிவுரை அன்று - முற்றாத் தொடர்ச்சி

கடந்த பதினெட்டு ஆண்டு நிகழ்ச்சிகளில் இன்னும் எழுத வேண்டுவன பல உள. இந்த நூலின் முந்திய பகுதியை எழுதி முடித்தபின்னர் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி எழுத வேண்டும். இந்த வரலாறு இத்துடன் முடிவதும் அன்று; முற்றுத் தொடர்ச்சியாக நீண்டு கொண்டே செல்வது. எழுதத் துடிக்கின்றது. எனினும் முன்னரே முடிவுசெய்த அளவிலும் காலத்திலும் நின்று குறித்த நாளில் நூலை வெளியிட வேண்டும் என்ற கொள்கையால் இந்த அளவோடு இப்போது அமைகின்றேன்.

முன்னுரையில் சுட்டியபடி இடையில் நின்ற இருபத்தைந்தாண்டின் என் வரலாற்றினையும் இப்பகுதியிலும் பின்பும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து எழுத முனைகின்றேன். இறையருள் கூட்டும் எனும் துணிபுடையேன்.

வருங்காலம் 'வையகமெலாம் துயர் தீர்கவே' என்ற பெரியோர் வாக்கு பலிக்கும் வகையில் நலம்பெற்றுத் திகழும் என்று அமைதிகொள்கின்றேன்.

வாழ்க! வளர்க!

# பிற்சேர்க்கை

## பார்வையிட்டோர் கருத்துக்கள்

### மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன்

*நிதி அமைச்சர்*

*வள்ளியம்மாள் கல்வி அற நிலையத்தின் சார்பாக 'வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளி ஒன்றினை நிறுவி, அதனைத் திறந்து வைக்கும்படியாக என்னை அன்பர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் பணித்தமை கண்டு பேருவகை கொண்டேன். சிறுவர்—சிறுமியர்களை மிகச் சிறு வயதிலிருந்தே நல்ல முறையில் பயிற்றுவித்து, அவர்களின் பண்பு நலன்களை வளர்த்து, அவர்களுக்கான சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளை உயர்த்தி, அவர்களை நல்ல மாணவ—மாணவியர்களாக உருவாக்கும் சீரிய பணியினை இந்தப் பள்ளி மேற்கொண்டிருப்பது பாராட்டி மகிழ்வதற்குரியதாகும். வாழ்க இந்தப் பள்ளி! வளர்க இதன் முயற்சி! வெல்க இதன் தொண்டு!! (தொடக்க நாள்) 21-6-68*

### டாக்டர் மு. வரதராசனார்

*மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்*

*வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளியைக் கண்டு மகிழ்ந்தேன். குழந்தைகளின் அறிவு வளர்ச்சியிலும் உடல் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டு மனப்பயிற்சிக் கருவிகளும் உடற்பயிற்சிக் கருவிகளும் பல அமைத்துக் குழந்தையுள்ளம் களித்திடும் வகையில் பள்ளியை நடத்தி வருதல் பாராட்டத் தக்கது. படிப்புக்கும் விளையாட்டுக்கும் பெரிய வேறுபாடு இல்லாத வகையில் குழந்தைகளின் கல்வி அமையவேண்டும் என்ற உளநூலாரின் கொள்கையை இப் பள்ளியில் தெளிவாகப் புலப்படுத்துகின்றனர். குழந்தைகளே வருங் காலத்தின் பெருஞ் செல்வம் என்ற உண்மையை உணர்ந்து பள்ளிப் பொறுப்பினர், ஷெனாய்நகர் வட்டாரத்திற்குச் சிறப்புத் தேடித் தந்துள்ளனர். அவர்களின் நன்முயற்சி வெல்க! 28-6-68*

**நெ. து. சுந்தரவடிவேலு**
*சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்*

வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளியைக் கண்டு மகிழும் பேறு பெற்றேன். குழந்தைகளின் உடலும் அறிவும் வளர்வதோடு உள்ளமும் பண்படக் கூடிய வகையில் பள்ளி நடைமுறைகள் அமைந்திருப்பதறிய மகிழ்கிறேன்.

வாழ்க இப்பள்ளி! வளர்க இதன் தொண்டு!! வளர்க சிறுவர் சிறுமியர்!!! 31-3-1969

## Swami Dakshnamurthi
American

To shape the minds of the children while they are yet in their most tender and impressionable stage is a task involving a serious and most vital responsibility towards our race and towards these children as individuals.

I have found in Valliammal Kindergarden an atmos--phere which seems to indicate that those who are running this institution possess an attitude which is equal to this responsibility. May God bless you and guide you in this sacred task. 24-4-70

**க. இராசாராம்**
*தொழில் அமைச்சர்*

வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளியின் மூன்றாம் ஆண்டு விழாவில் பங்குகொண்டு, பள்ளியினைக் காணும் நல்வாய்ப்பைப் பெற்றேன். பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தன்னை ஈன்ற அன்னையார் பெயரால் அமைந்த இப்பள்ளியைச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். குழந்தைகள் ஊக்கமும் உற்சாகமும் உள்ளவர்களாகவும், கல்விகேள்விகளில் சிறந்தும் விளங்குவதைக்

கண்டேன். இந்தக் கலைக்கூடம் மேலும் மேலும் வளர வேண்டும் என உளமார விரும்புகிறேன்.

*வாழ்க வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளி!* *29-3-71*

**கிருபானந்தவாரியார்**

அள்ளி வழங்கும் அறுமுகனார் தண்ணருளால்
வள்ளியம்மை பள்ளிமிக மாண்புடனே—உள்ளியன
எல்லாம் இனிதெய்தி என்றென்றும் ஓங்குகவே
எல்லா நலமும் இசைந்து.

*இப்பள்ளி மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தமிழ் அண்ணல் பரமசிவானந்தம் அவர்களின் அயர்ச்சியில்லாத முயற்சியால் உயர்ச்சி பெற்றுள்ளது.*

*வேல் அருளால் ஓங்குக.* *19-1-74*

## Sri Kanchi Kamakoti Peedam

His Holiness Sri Kanchi Kama Koti Peedathipathi Sri Jayendra Saraswathi Swamigal during his visit to Madras City and Suburbs camped at Valliammal School premises at Anna Nagar, on 28th & 29th December 1975. The entourage of Sri Madam was accommodated in the spacious accommodation of the School.

I have been entreated by his Holiness to convey his blessings in general to the children of the School and in particular to the founder Sri Prof. A. M. Paramasivanandam. His Holiness noted with appreciation the standard of discipline and well organised manner of the pupils. 20-1-76

## Nickolai
U. S. S. R.

I would like to express my deep gratitude to the organizers of this function who enable me to get acqua-

inted with your School. I was very much impressed by the performance made by the pupils, by labs, library.

May I wish your School every success in its noble activities 3-2-76

## C. G. Rengabashiyam
Commissioner and Secretary, Education Dept.

I am very happy to have had the opportunity of visiting this institution which is run so well by the efforts of the dedicated Founder Prof. Paramasivanandam ably assisted by the Principal and the Staff. I am particularly happy to note the excellent facilities created by the founder in so short a time. I wish the School all success. 20-3-76

## M. Bakthavatchalam
Formerly Chief Minister of Tamilnadu

Dear Prof. Paramasivanandam,

I am glad to hear from you that the Valliammal School organised by you has been growing from strength to strength This was originally started in 1968. The main feature about this institution is that you have been conducting the school adopting the Central School Syllabus.

The popularity of your institution would only demonstrate the appreciation of students and parents of the Central syllabus which you have provided in your institution Thanks to the devotions with which you have been nursing this institution, it is now a fully developed Secondary School attracting nearly one thou-sand pupils I express to you my appreciation for the sence of devotion with which you have been managing

the school and I offer to the pupils and staff my warmest felicitations. 21-6-1976

## Ruth Ellifter
American

My visit has been both most enjoyable and instructive. I truly leave richer in knowledge and friendship than when I came. Best wishes for continued prosperity for Valliammal Higher Secondary School.

7-7-76

## டாக்டர் வெங்கட சுப்பிரமணியம்
*துணைவேந்தர், புதுவைப் பல்கலைக் கழகம்*

*வள்ளியம்மாள் உயர்நிலைப் பள்ளியைப் பார்த்து மகிழும் பேறு இன்று பெற்றேன். பேராசிரியர் அ. மு. ப. அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இக் கல்விச்சாலை நின்று நிமிர்ந்து வானுற ஓங்கி வளரும் என்பது பற்றி எனக்கு ஐயமில்லை.*

*மாணவ மாணவியரின் ஒழுங்கும், கட்டுப்பாடும், ஆசிரியப் பெருமக்களின் ஊக்கமும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. வாழ்க இவ்வுயர் பள்ளி! வளர்க இவ்வுயர் கல்விச்சாலை.* *17-1-77*

## Dr. H. S. S. Lawrance
Director of School Education

I am happy to have presided over the Sports function to-day. The children took part in all their colourful dresses with smartness and interest. I appreciate very much the efforts of Prof. Paramasivanandam, the Principal and Staff members in providing good education to the children of this area.

My best wishes for progress of this School. 22-1-77

## Dr. G. L. Balkshi
Chairman, CBSE

It has been a pleasure to visit the Valliammal School again to see how rapidly this school is making progress not only in the matter of expansion of school building but also in the provision of additional facilities. The Science laboratories now are adiquate and well equipped. I was particularly impressed by the teaching aids prepared by the students and teachers. The cultural progress was excellent.

I wish the school all success. 10-1-76

## Hon. C. Ponnaiyan
Minister for Law & Education, Govt. of Tamil Nadu

Prof. Paramasivanandam has been doing yeoman service for the past ten years in the field of education by imparting discipline and good education for the people of Tamil Nadu. I have seen this for myself, for ten years. He realised that young, growing children should have sound and basic education and he worked tirelessly on these lines. The structures built on the strong foundation laid by him through his continuous efforts stand today as proof in the name of Valliammal Higher Secondary School and the people of the City of Madras shower their praises for this Institution.

The A.I.A.D.M.K. Government which has taken up the Administration of the state with the Hon'ble Chief Minister at the head of the administration, will spare no efforts in spreading this type of good education to other institutions in this State, which our respected Professor has started.

He has adopted the syllabus followed by the Central Board of Secondary Education. With so many hardships faced by him in implementing this syllabus, he has worked hard in bringing this to the reach of the students, which benefited to the society at large for the past ten years for which I have been an eye-witness. I sincerely appreciate and bless him in his efforts. With the efforts of the Professor, we all realise that this school had faced and overcome many hurdles, and come to the forefront.

The Professor said that he is going ahead with plans to start a Boy's School in this locality. He already has a good disciplined school for the girls, now this is going to be extended to the boys also. I appreciate his efforts in this venture. I hereby assure him that Tamilnadu Government will assist him and render help in this venture. 11-2-78

Prabhudas Patwari
Governor of Tamilnadu

I am very happy to see the good work of the instituti on. I saw various classes and was impressed by the excellent Exhibition. I wish the students and the institution God's blessings and bright future with best luck. 8-4-78

S. V. Narasimhan
Industrialist

I am really happy to be able to participate in the Children's Day Celebrations to-day.

This School can without exaggeration be a model one for many others to follow. The neat and well maintained labs, the good library with creditable volumes spacious class rooms and extra curricular

activities all explain the dedication and selfless work of all those connected with this institution. With a good Principal as its head the school is destined to milestones of progress.

Prof. Paramasivanandam, the Founder can be justifiably proud that his four decades of effort in the cause of education has taken deep roots in this illustrious institution. May the sacred name "Valliammal" and the institutions under its umbrella be ever on the onward march. May Divinity's blessings be ever with this temple of learning. 14-11-78

## Swami. Harinamananda
Chinmaya Mission

Very happy to see the school run so efficiently and with the spirit of dedication. The children were so receptive and disciplined. 4-1-79

## மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி
*உள்ளாட்சித்துறை அமைச்சர்*

*எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் என்றும் உரிய, ஐயா, பேராசிரியர் அ. மு. ப. அவர்களின் சீரிய அரவணைப்பில் வளர்ந்துவரும் வள்ளியம்மாள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொள்ளும் அரிய வாய்ப்புக் கிடைத்தது நான் பெற்ற அரிய பேறு!*

*எனது அன்பு வாழ்த்துக்கள்.* *17-1-79*

## மாண்புமிகு எஸ். இராகவானந்தம்
*தொழிலாளர் நலத்துறை அமைச்சர்*

*வாழ்க புரட்சித் தலைவர்.*

விளையாட்டு மிக முக்கியமான அம்சம். அதற்கு போதிய இடம் இங்கு இல்லை என்பதைக் காண வருந்து கிறேன்.

மாணவ மாணவிகளுக்கு நல்ல வகையில் பாடம் கற்பிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

விரைவில் நல்ல விளையாட்டு அரங்கமும் பெற்றுச் சிறப்பாகச் செயல்படும் என நம்புகிறேன். 31-1-79

**வே. கார்த்திகேயன்,** ஐ. ஏ. எஸ்.
*தமிழக அரசின் தலைமைச் செயலர்*

இன்று வள்ளியம்மாள் இளநிலைக் கல்லூரியின் 11-வது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கும் பெரும் வாய்ப்பைப் பெற்றேன். திரு. பரமசிவானந்தத்தின் நிர்வாகத் திறனும் ஆசிரியைகளின் தலைசிறந்த பணியும் இம்மாபெரும் பள்ளி யினை ஓர் உன்னத நிலைக்கு உயர்த்தியிருக்கின்றன. குழந்தைகளின் சாதனைகள் போற்றத்தக்கவை. பெற்றோர்கள் பள்ளியின்பால் பெருமதிப்பு வைத்திருக்கின் றனர். நல்ல விசாலமான விளையாட்டிடம் ஒன்றுதான் இதன் முக்கியத் தேவை. இதுவும் விரைவில் பூர்த்திபெறும் என்று நம்புகிறேன், வாழ்க இப்பள்ளி. 28-3-79

## Justice S. Mohan
**Judge, High Court**

A school master is like a hore in the course of sharpening many other blades, wears himself out. I am extremely happy to find so many such school masters in Valliammal Higher Secondary School. Prof. Parama-sivanandam with zeal has brought into existence this school which imparts education in the right sense. I wish the institution a very bright future. 28-3-79

**தாமரை மணாளன்**
*ஆசிரியர் இதயம்*

*இந்த இளங் கல்லூரிக்குள் கிட்டத்தட்ட ஒருமணிநேரம் மட்டுமே இருக்கும் வாய்ப்புத்தான் எனக்குக் கிடைத்தது. எனினும் இந்தக் கல்லூரி எல்லைக்குள் நான் சுவாசித்த அறிவின் மூச்சு—நான் அனுபவித்த கனியின் மணம் எல்லையற்றது.*

*இந்தக் கல்லூரி, அதன் தலைவர் பேராசிரியர் அ மு.ப. அவர்களால் கல்லாலும் செங்கல்லாலும் கட்டப்பட்டதாகத் தோன்றவில்லை. கனிந்த அன்பாலும் கடுமையான உழைப்பாலும் அவர்கள் இக் கல்வி நிலையத்தை வளர்த்திருக்கிறார்கள். அவர்களுடைய சீரிய எண்ணங்கள் சிறப்புற்று உயர்கவென வாழ்த்துகிறேன்.* 9-7-79

**செல்லையா இராசதுரை**
*இலங்கை அமைச்சர்*

*தமிழ் அறிஞர் அண்ணா பெயரில் உள்ள நகரில் நடைபெறும் வள்ளியம்மாள் கல்லூரிக்கு இன்று வருகை தந்தது வாழ்வில் மறக்கவொண்ணா நிகழ்ச்சியாகிவிட்டது. குழந்தைகள் ஆர்வத்துடன் படிப்பதைக் கண்டேன். ஆசிரியர்கள் "ஏனோ தானோ" என்றில்லாமல் கடமை உணர்வுடன் உழைப்பதைக் கண்ணுற்றேன். தெய்வீக அருள் இக் கல்லூரிக்குக் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.* 10-9-79

**M. M. Ismail**
Chief Justice, Madras High Court

I was extremely happy to preside over the XII Annual Day celebrations of the Valliammal School. It is always a pleasant experience to meet the young boys and girls and breath in their atmosphere of hope, joy, growth and friendliness.

I went round the school, its library and laboratories and was greatly impressed by the interest evinced by students and teachers alike. They aré kept neat and tidy and the students are taught to do many handicrafts and even articles like Transistor which compare very favourably with what we get in the market.

The standard of education is really high and my best wishes for the further growth of the complex. 20-2-80

## Hon. Dr. H. V. Hande
Health Minister

My hearty congratulations to the organisers of this great institution on this happy occasion of inaugurating the School Day functions.

My good wishes to Mr. Paramasivanandam and the Head Mistress Mrs. Shanbagam and her teammates in their efforts to upgrade this Institution into a College.

8-7-80

## Dr. R. P. Singhal
Chairman, CBSE

I have visited the school above nine years ago. I am delighted to visit this school again to day. The tremendous progress that it has made during these years is indeed commendable. It is now a full fledged Higher Secondary School and I wish it all success.

18-7-80

## Swamy Ishwarnathagiri
Mt. Abu. Rajasthan

My brief contact with the students and staff of the Valliammal Higher Secondary School—particularly with the Founder Prof. Paramasivanandam and the Principal

Shanbagam Ammal—has assured me that they will succeed in evolving a system of education that will harmonise the high and lasting ideals of our holy land with the needs of the modern times. Everyone seemed to go about their work in this institution with the conviction that God alone is the real teacher and life alone is the true test and we are all means of conveying that Voice and reflecting that Height. In the immense darkness that shrouds the educational field of India, this school is but a spark. But we are sure it will spread into a blazing fire. We pray, more such bon-fires be lit all over the Country.

With blessings to all those concerned with this undertaking. 9-8-80

**இரா. நெடுஞ்செழியன்**
*நிதி அமைச்சர்*

*வள்ளியம்மை உயர் மேல்நிலைப் பள்ளி பேராசிரியர் பரமசிவானந்தம் அவர்களின் பேருக்கத்தாலும் பெருமுயற்சியாலும் ஆண்டுக்கு ஆண்டு மிகச் சிறப்பாகவும் செம்மையாகவும் வளர்ந்து வந்திருப்பது கண்டு பெரு மகிழ்வுற்றேன். பள்ளி எல்லா வகையிலும் முழுமை பெற்று நிறைவெய்தி வளருகிறது. பள்ளி வளம் பல பெற்று வாழ்க! பல வகையிலும் வளர்க! என்றென்றும் வெல்க!* 9-9-80

**மாண்புமிகு இராம. வீரப்பன்**
*இந்து அறநிலைய அமைச்சர்*

*வள்ளியம்மை மேல்நிலைப் பள்ளியின் பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழாய்ந்த பேராசிரியர் உருவாக்கி, தமிழாசிரியை ஒருவரைத் தலைமை ஆசிரியையாகக் கொண்டு இயங்கும் இப்பள்ளியின் கட்டுப்பாடும், ஒழுங்கும், அறிவாற்றலும் போற்றுதற்குரியன.* 11-7-81

## Rev. Fr. T. V. Kunnunkal
Chairman, CBSE

The stress that the school is giving to all round development, combined with the good academic record makes this a progressive School. With the commitment and competence of the Correspondent and Principal and the staff, the school can look forward to continued progress. 29-7-81

## Prof. Fred. W. Clothey
University of Pittsbarge U.S.A

Thank you for your very kind hospitality upon the occasion of my visit to your school. I wish you and your staff the very best in your endeavours to provide a stimulating and versatile educational experience for your students. 13-8-81

## Lakshmi Pranesh, I.A.S.
Secretary, Law Dept.

I am extremely happy for having visited this institution. The Principal and the staff are fully dedicated and under their guidance, I am confident that the students of this institution will serve as models of discipline and knowledge. I am moved by the dedication and the nobility of the Correspondent. I wish the school a very bright future. 16-9-81

## Prof. Harsha
Prof. of Humanities, Jodhpur University

On sheer persuasion by the hon'ble Founder, Father of this Institution, I had agreed to come and talk to young ones of this centre of culture and education on Our Culture." I had seen the decorum and discipline of

the students and love of teachers for their students and was deeply impressed.

I am sure, this institution, which stands as a glorious gift of the living educationist, its Founder, will make a mark in the educational and creative realm of artistic and aesthetic significance and value. 17-12-81

**R. Shanmuga Sigamani, I.A.S.**
Inspector General of Registration, Madras

I was delighted to participate in the Annual Sports day of the school, to-day. May the institution help in turning our bright young men and women in the service of the country in large numbers and thus flourish.

29-1-82

**மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன்**
*தமிழக முதலமைச்சர்*

*அன்பு திரு. பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களுக்கு*

*தான் கற்றது தனக்கல்ல பிறரை உயர்த்த-வாழவைக்க என்று கருதுபவர் குறைவுபடும் இக்காலத்தில்...குழந்தைகளாக இன்று கருதப்படும் நாளைய இந்நாட்டின் நன் மக்களை உறுதிகொண்ட தமிழர்களாக்க முயன்று வரும் தங்களது கல்வித் தொண்டினை உளமாரப் பாராட்டு கிறேன்.*

*சொல்பவர் அநேகர்; செய்பவரோ மிகச் சிலர்.*

*தங்களது அன்புத்தாயான திருமதி வள்ளியம்மாள் அவர்களின் பெயரில்—கல்வி அறம் அமைத்து, கல்விக் கூடங்கள் நிறுவி நாட்டுத் தொண்டாற்றுகின்ற தங்களது தமிழ்த் தொண்டு, கல்வித் தகுதி பெற்றோர் பலரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.*

"...ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்" என்ற தேசிய மகாகவி பாரதியின் கனவை நனவாக்கும் தங்களைப் போன்றோர்தான் தமிழகத்தையும் தமிழர்களையும் தமிழையும் வாழவைக்கும் பணியினைச் செய்கிறீர்கள்.

ஐந்து மாணவர்களுடன் தொடங்கி இன்று ஆயிரத்து ஐந்நூறு மாணவர்களுடனும் அறுபது ஆசிரியர்களுடனும் தங்கள் கல்விக் கூடம் நடைபெறுவதை அறிய மனம் மகிழுகிறது.

அதிலும் அமரர் அண்ணாவின் பெயரால் அமைந்த அண்ணாநகரில் தங்களது கல்விக்கூடம் நடைபெறுவது சாலப்பொருத்த முடையதே!

மேலும் வளர்க! தொடர்க தங்களின் கல்வித்தொண்டு! வாழ்க பல்லாண்டெடன வாழ்த்துக் கூறி வணங்குகிறேன்.

24-4-82

**மாண்புமிகு பு.ரா. கோகுலகிருஷ்ணன்**
*தலைமை நீதிபதி, உயர்நீதி மன்றம், குஜராத் மாநிலம்*

பண்பிற்கும் அன்பிற்கும் உரிய பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் நடத்தும் இக்கல்லூரி சிறப்புற்று விளங்குவதில் ஆச்சரியமில்லை. பெற்றோர்கள் இக்கல்லூரியினிடத்து காட்டுகின்ற அன்பினை இன்றைய கலை நிகழ்ச்சிகளின் மூலம் கண்டு மகிழ்ந்தேன். மாணவிகள் அமைத்துள்ள கண்காட்சி அவர்களின் அறிவினையும் ஆற்றலையும் பெரிதும் பறை சாற்றி நிற்கின்றன. ஆசிரியர்கள் ஆர்வமும் இக் கல்லூரியினை நடத்திச்செல்லும் அறங்காவலர்கள் உணர்வும் என்னை மிகவும் கவர்ந்தன. இக்கல்லூரி மேலும் வளர்ந்து கல்வித் துறைக்குப் பேருதவியாக அமையும் என்பது உறுதி.

4-9-82

**மாண்புமிகு கா. காளிமுத்து**
*வேளாண்மைத் துறை அமைச்சர், தமிழ்நாடு.*

அண்ணாநகருக்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ள வள்ளியம்மாள் மேல் நிலைப்பள்ளி வானத்தைத்

தொடுமளவுக்கு உயர்ந்த கட்டிடங்களைக் கொண்டது. உயர்ந்த கட்டிடங்கள் போலவே, அதை உருவாக்கிய பேராசிரியர் அ.மு.ப. அவர்கள் உள்ளமும் உயர்ந்தது என்பதை உணர்ந்தேன்.

தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்றபின், தாயின் பெயரிலேயே ஒரு கல்விச்சாலையைத் துவக்கியுள்ள கல்விப் பணியைப் பாராட்டுகிறேன்.

இக்கல்வி நிலையம், குழந்தைகள் பள்ளியில் துவங்கி இன்று இளநிலைக் கல்லூரியாக வளர்ந்து இருப்பது, இதனை வளர்க்கப் பாடுபட்டு உழைத்த பேராசியர் அ.மு.ப. அவர்களின் விடா முயற்சியை எடுத்துக் காட்டுகிறது.

இவ் வள்ளியம்மாள் மேல்நிலைப் பள்ளி நூலக வசதி, விஞ்ஞான ஆய்வுக்கூட வசதி—வங்கி வசதி—பெற்றிருப் பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

இக் கல்விநிலைய முதல்வரும், பிற துணை ஆசிரியப் பெருமக்களும், இப்பள்ளி நிறுவனரின் கல்வித் தொண் டுள்ளம் அறிந்து இப்போது செயல்படுவது போல எப்போதும் செயல்பட அன்புடன் வேண்டுகிறேன். 23-11-82

**டாக்டர் வி. அய். சுப்பிரமணியம்**
*துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.*

சென்னை மாநகரின் சிறப்பாகக் கல்விப் பணியாற்றும் இந்த நிறுவனத்தின் ஆசிரியர்களையும் நிறுவிய தமிழ்ப் பேராசிரியரையும் எல்வளவு புகழ்ந்தாலும் தகும். கல்விப் பணியில் தெய்வப்பணி செய்து முழுமை பெறும் முயற்சி. இதனை வாழ்த்துகிறேன். 7-7-83

**Hon. S. Nayana Sundaram**
**Judge, High Court, Madras.**

When Educational Institutions are manned by involved and dedicated souls, they become Tamples.

Such an Institution is Valliammal School. Prof. Paramasivanandam and Mrs S. Shanbagam are really great souls. They have prestige to this school. The Former is the Founder, the later the renouned Principal.

5-2-1984

**மாண்புமிகு ச. இராமச்சந்திரன்**
*மின்துறை அமைச்சர்*

*கொடைகளில் சிறந்தது அறிவுக் கொடை. பெற்றெடுத்த தாயின் பெயரால் பெரியவர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் வள்ளியம்மை கல்வி அறநிலையம் மூலம் இக்கல்வி நிறுவனத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரே உலகை உய்விப்பர். அத்தகு சிறந்த தொண்டுள்ளம் கொண்டு தமிழக மக்களுக்கு ஆற்றும் இச் சமூகக் கடமை சாலச் சிறந்தது. ஒரு நிறுவனத்தைத் தோற்றுவிப்பது எளிது; செம்மையுறச் செயல் படுத்துவது அரிது. ஆனால் இந்நிறுவனம் சிறந்த முறையில் செயல்பட்டு சென்னைமாநகருக்குப் பெருமைதேடி வருவது இங்கு பணியாற்றும் பள்ளி முதல்வரையும், ஆசிரியப் பெருமக்களையும் சார்ந்தது. அவர்களுக்கும் என் வாழ்த்துக்கள்.*

*29-2-84*

**Tiru. Sundarraj**, I.A.S.,
Commissioner & Secretary to Govt. of Tamil Nadu, Education

I was very heppy to visit this good educational institution in the new housing neighbourhood. The school by the great Tamil Scholar A. M P. has grown from strength & strength & also shows very bright promise in the future. I wish the school a very very bright future.

4-9-84

## Mr. P. G. Periasamy,
Washington D. C.

பேராசிரியர் பரமசிவானந்தம் ஒரு கர்மயோகி; அவரது தலைமையில் நடக்கும் இப்பள்ளியை நான் காணும் வாய்ப்பு பெற்றமை என் மனதில் எப்பொழுதும் இணைந்து நிற்கும். சிறுவர் சிறுமியர்கள் கற்கும் கல்வி, அவற்றை செவ்வையாக புகட்டும் ஆசிரியர் பெருமக்கள், சிறந்த பள்ளி நிர்வாகம் அனைத்தும் என்னைக் கவர்ந்து விட்டது. இந்த நிறுவனம் மேலும் சிறந்து, பெருகி நம் நாட்டுக்கு ஒரு புதிய ஊக்கத்தையும், அடித்தளத்தையும் அளிக்குமாறு என் மனப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

21-3-86

## Dr. Palani G. Periasamy
Batlimore (U.S.A.)

My visit to your institution and my encounter with your teachers and students and administrator made me feel very good. I found a great sense of dedication and commitment for excellence. Indeed, only people like you are keeping the state and the country a better place to live. Eventhough you are all working silently, you are contributing significantly to the establishment of a better society. I am indeed honoured to have been there and I thank you for your kindness.

21-4-86

## குன்றக்குடி அடிகளார்,

தமிழக வரலாற்றில் புலவர்கள் புரவலர்களாக இருந்த உண்மையை இன்று முது பெரும் புலவர் பேராசிரியர் அ.மு.ப. அவர்கள் உறுதிப்படுத்தி உள்ளார்கள். தமது பணியின் மூலம் மேற்கும்-கிழக்கும் கலக்கும் ஒரு நாகரிகத்தினை வளர்க்கும் பள்ளியாக இது நடைபெறுகிறது. அ.மு.ப என்ற ஒரு மகனுக்குத் தாயான வள்ளியம்மாள் இன்று ஆயிரம்

ஆயிரம் பெயருக்கு அறிவு நல்கும் தாயாக விளங்குவது நினைந்து மகிழ்தலுக்குரியது. ஒரு நல்ல பணி—நல்ல வண்ணம் நடை பெறுவதைப் பாராட்டச் சொற்கள் கிடைக்காத தவிப்பில் தத்தளிக்கின்றோம். தலை சிறந்த ஆசிரிய ஆசிரியைகளுக்கு வாழ்த்துக்கள்! வளர்க! வாழ்க!

22-7-86

## Prof. V. B. Krishna
Educational Officer, CBSE. NEW DELHI.

I am very happy to express my observation about the Valliammal Higher Secondary School. This school is really doing good work in the field of scholastic and Non Scholastic field. It is really a great pleasure to see that the school run so efficiently and with spirit of dedication and hard work. The Headmistress and the staff deserves our praise. I congratulate all concerned and my best wishes for the further growth of this institution.

29-11-86

## Mr. M. S. Sinha
Vice-Principal, Cambridge School, New Delhi.

A Visit to valliammal School this morning has been both a privilege and an experience. The spontaneous warmth with which the students and the staff welcomed our group will be long remembered by me as a moment to cherish for ever.

After going round the school buildings and various classrooms and activity rooms, it was clearly revealed that the school's Principal has functioned well as a leader, since she has managed to inspire both the staff and students to work hard in their various academic and extra-academic endeavours.

Amongst other classroom activities or situations which impressed me very well may be cited the following:—

a) The Computer-cum-SUPW activities Hall.

b) The three science laboratories-Biology-Chemistry -Physics.

c) Music and Dance classes, Specially the Instrumental Music section.

d) Library - Which was well equipped with literature / books for students age group.

e) Permanent stage designed as a platform for Open Air performances

f) The Craft Section.

The Various kinds of maps, charts, models, illustrations all were of a very exceptional quality. Models prepared by students showed great originality.

I personally questioned many students of Class IX, and I have found them very intelligent and keen for working even better.

My sincere congratulations to the Lady principal, her staff and students 29-11-86

Mr. S. C. Gupta,
Professor, Department of Hindi, University of Delhi.

It was a privilege and great honour to visit the school and after meeting the students, seeing the paintings, hand-made articles and displays in different laboratories, I can say that the school authorities and dedicated teachers have been able to arouse full interest in the students of different disciplines. I was much impressed

to see the students in the Music and Dance class practising Vocal and instrumental under the able guidance of the Teacher. The Library of the school is well maintained and a number of students from different classes were taking keen interest in reading books and magazines. It was very good on the part of the authorities to have open-shelf system for the students of this age-group. The school is also imparting Computer training which is creditable on the part of the students of IX & X the classes to be so keen in learning all this. Being a teacher of Hindi I was very much impressed to find that Hindi is a compulsory subject here. I congratulate the administrators, Principal, Staff and Students for their brilliant achievements in the academic and extra-curricular activities. 29-11-86

## S. Natarajan,
New Delhi. (CBSE)

Hats off to Prof. Paramasivanandam a versatile scholar and seasoned educationist for having translated his vision into a reality in the establishment of Valliammal Higher Sec. School, Madras. I had the unique privilege of visiting the school today and talking to the Principal, staff and students. The Principal is a gracious lady, quite competent and dedicated leading a team of staff full of devotion for the profession. No wonder the children exhibited their talents and culture which touched the hearts of one and all. In brief it is a model institutions for others to emulate.

May everything go well with the affairs of the school in their future ventures. 29-11-1986

Prof. E. Balagurusamy M.E. (Hons.,) Ph. D.
Chairman Computers and Information Technology Division
Institute of Public Enterprise
University Campus, Hyderabad-500 007.

I had a privilege to visit Valliammal Senior Secondary School and enjoyed my visit to computer section. The skill displaced by the young girls was remarkable. I was happy to see the 8th, 9th and 11th class students running programmes involving complex logic. The model of bouncing ball problem involving the motion of particles in two dimensions was the most impressive among all.

I am sure, given the right environment and direction, the students can solve any complex problems using computers. I would like to congratulate the management for providing such an environment. 17-12-86

Dr. A. Panneerselvam,
Professor of Physical Science, Teachers' College,
Saidapet, Madras-15.

I had the pleasure of visiting the Valliammal Higher Secondary School at Anna nagar, Madras along with a group of professors from about 19 Colleges of Education on 17-12-1986. We were attending a Seminar on Computer Education at the University of Madras. We wanted to see a school where the programme of Computer Science is being organised in a Higher Secondary School and hence the visit was arranged. We could see how the children of VIII standard onwards and higher secondary sections could prepare a programme for the Computer, operate it with the computer to find the solution. We were very much impressed by the way that

the children could work out the programmes in Mathematics and Physics with the Computer. The children are very brilliant and they are all well taken care of by the talented teachers. We could very well see the keen interest and enthusiasm evinced by the Founder of the school Prof. A. M. Paramasivanandam, an erudite scholor in Tamil, in developing this institution into a great centre of learning in the years to come. 17-12-86

Dr. S.P. Aaluwalia
Professor of Education, Head and Dean
University of Sagar, SAGAR (M.P.)

I have great Pleasure in Writing that it was a real Pleasure to Visit Valliammal Higher Secondary School, Madras on 17-12-1986 and observe the performance of students who had offered Computer Education. The young learners were devoted and dedicated to learning and they were very good at programming and allied acts.

The Founder of the School professor A.M. PARAMASIVANANDAM and the guest educator Professor S.K. Ekambaram deserve appreciation and applause for doing a fascinating job. The students of Class VIII could do things which were really imaginative and innovative.

The School teachers and students of different classes who gave a lively demonstration on Computers deserve all Credit and recognition. 17-12-86.